தொல்காப்பியம்

உரைவளம்

எழுத்ததிகாரம்

மொழி மரபு

யாதும் ஊரே யாவரும் கேளிர்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

பதிப்பாசிரியர் :

ஆ. சிவலிங்கனார்

தொல்காப்பியம் - எழுத்ததிகாரம்

(உரைவளம்)

மொழிமரபு

பதிப்பாசிரியர் :

ஆ. சிவலிங்கனார்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

அடையாறு—சென்னை-600 020

தொல்காப்பிய நூல் உரைவள வெளியீட்டுத் திட்டம்
வெளியீடு 3

Bibliographical Data

Title of the book	—	**Tolkappiam Molimarapu**
Editor	—	**A. Sivalinganar** International Institute of Tamil Studies, Madras-600 020.
Publisher & Copy Right	—	**International Institute of Tamil Studies, Madras-600020**
Publication Number	—	**36**
Language	—	**Tamil**
Edition	—	**First**
Date of Publication	—	**June 1981.**
Paper used	—	**16 Kg. D/Demy**
Size of the book	-	**21 × 18 cms.**
Printing types used	—	**10 point Tamil Roman**
Number of pages	—	**XVI + 208 = 224**
Number of copies	—	**1200**
Price	—	**Rs. 9/-**
Printers	—	**Sri Gomathy Achagam,** (Lloyds Road) Madras-600 C05.
Binding	—	**Card Board**
Artist	—	**Eswary Arts**
Subject	—	**Garmmar**
Summary	—	**Compilation of Commentaries on Moḻi Marapu of Tolkāppiam.**

முன்னுரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத் தொல்காப்பிய நூல் உரைவளம் வெளியீட்டுத் திட்டத்தின்கீழ் மூன்றாவது வெளியீடாக மொழிமரபு என்னும் இந்நூல் வெளியிடப் பெறுகிறது.

இதில், தொல்காப்பிய எழுத்ததிகாரத்துக்கு உரை எழுதிய இளம்பூரணர், நச்சினார்க்கினியர், சுப்பிரமணிய சாஸ்திரியார், வேங்கடராசுலு ரெட்டியார், வெள்ளை வாரணனார் ஆகியோர் உரைகளும், தற்கால ஆராய்ச்சியாளர் கருத்துரைகளும், பதிப்பாசிரியர் கருத்துரைகளும் அடங்கியுள்ளன.

நூற்பாக்களுக்கு இலக்குவனார், டாக்டர் கமில் சுவலபில் ஆகியோர் ஆங்கில மொழிபெயர்ப்புகளும். தொல்காப்பியத்துக்குப் பிற்பட்ட இலக்கண நூல்களில் ஒப்புமை நூற்பாக்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

தொல்காப்பிய சிறப்புப் பாயிரம், நூன்மரபு ஆகிய நூல்களுக்கு ஆங்கில முன்னுரை யெழுதியுதவிய டாக்டர் வை. இரத்தினசபாபதி அவர்களே இதற்கும் ஆங்கில முன்னுரை வழங்கியுள்ளார்கள்.

நூன்மரபை வெளியிட்டு முன்னுரையில் யான் கேட்டுக் கொண்டதற்கிணங்கச் சில அறிஞர் பெருமக்கள், பதிப்பு அமையவேண்டியது குறித்த தங்கள் கருத்துரைகளை வழங்கியுள்ளார்கள். அவர்கள் கருத்துக்களும் நன்றியுடன் மேற்கொள்ளப்பட்டு இந்நூல் பதிப்பிக்கப் பட்டுள்ளது.

இந்நூலை நன்முயற்சியுடன் உருவாக்கியுள்ள திரு. ஆ. சிவலிங்கனார் அவர்களைப் பாராட்டுகிறேன்.

நூலினைச் சிறப்புற அச்சிட்டுத் தந்த ஸ்ரீகோமதி அச்சக உரிமையாளர் திரு. சி. சரவணகுமார் அவர்களுக்கு நன்றி.

அன்புடன்,

ச. வே. சுப்பிரமணியன்

பதிப்புரை

உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் தொடங்கியுள்ள தொல்காப்பிய நூல் உரைவள வெளியீட்டுத் திட்டத்தின்கீழ் மொழி மரபு என்னும் இந்நூல் மூன்றாவதாக வெளியிடப்படுகிறது.

முதல் இரண்டு நூல்கள் தொல்காப்பியம் சிறப்புப் பாயிரம், நூன்மரபு என்பன.

இந்நூலில் இளம்பூரணர் நச்சினார்க்கினியர் உரைகளும், சுப்பிரமணியசாஸ்திரியார், வேங்கடராசுலு ரெட்டியார், வெள்ளைவாரணனார் ஆகியோரின் உரைகளுள் தேவைப் பட்டனவும், தற்கால மரபிலக்கண ஆய்வாளர், மொழியியலாய் வாளர், பதிப்பாசிரியர் கருத்துரைகளும் சேர்க்கப்பட்டுள்ளன. உரையாளர்களின் வரிசையமைப்பு அவரவர் நூல்கள் வெளி வந்த காலங்களுக்கு ஏற்ப அமைக்கப்பட்டது.

இலக்குவனார், கமீல் சுவலபில் ஆகியோரின் ஆங்கில மொழிபெயர்ப்பும், பிற்கால இலக்கண நூலாரின் ஒப்புமை நூற்பாக்களும் ஆங்காங்கே நூற்பாக்களை ஒட்டியே தரப் பட்டுள்ளன.

இன்றியமையாத இடங்களில் விளக்கங்களும் அடிக்குறிப்பில் தரப்பட்டுள்ளன.

ஞானத் தமிழாகரர், ஞானமணி, டாக்டர் வை. இரத்தின சபாபதி அவர்கள், முன் இரண்டு நூல்களுக்கு ஆங்கில முன்னுரை தந்துதவியதுபோலவே இந்நூலுக்கும் வழங்கிய ஆங்கில முன்னுரையும் நன்றியுடன் சேர்க்கப்பட்டுள்ளது.

எம்நிறுவன இயக்குநர், நூன்மரபு உரைவளப் பதிப்பின் முன்னுரையில், அறிஞர் பெருமக்களைக் கேட்டுக் கொண்டதற் கிணங்க, டாக்டர் தி. முருகரத்தினம், டாக்டர் கொ. இலட்சுமணசாமி, டாக்டர் இ. சுந்தரமூர்த்தி,

தெ. முருகசாமி எம். ஏ., சாந்தலிங்க-இராமசாமி அடிகளார், மகாவித்துவான் ச. தண்டபாணிதேசிகர், ஆபிரகாம் அருளப்பன் பி. ஏ. ஆகியோர் மொழிமரபுப்பதிப்பு அமைய வேண்டியவகை குறித்து வழங்கிய கருத்துகளும் நன்றியுடன் மேற்கொள்ளப் பட்டன.

இந்நூல் பதிப்புக்குப் பல்வகையிலும் உதவிய எம்நிறுவன அன்பர்கள் டாக்டர் ந. கடிகாசலம், டாக்டர் க. காந்தி, டாக்டர் கே. பகவதி, செல்வி ச. சிவகாமி திரு. பூ. சுப்பிரமணியம், திரு. ஆர். ஆளவந்தார் ஆகியோர்ச்கும், தொல்காப்பியப் பதிப்புகள் சில தந்துதவிய புலவர் க. வா. சச்சிதானந்தம் அவர்கட்கும் என் உளமார்ந்த நன்றி. அழகுற அச்சேற்றிய ஸ்ரீகோமதி அச்சக உரிமையாளர் திரு. சி. சரவணகுமார் அவர்கட்கும் நன்றி.

வழக்கம்போல என் பணியினுக்கு ஊக்கம் அளித்து உயர்த்தி வருகின்ற வணக்கத்துக்குரிய நிறுவன இயக்குநர், டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் அவர்கட்கு என்றும் நன்றிக் கடப்பாடுடையேன்.

இந்நூலைக் கண்ணுறும் அறிஞர் பெருமக்களின் கருத்துரைகள் மேலும் வரஇருக்கும் பதிப்புகளுக்குப் பயனுடையவாகும்.

சென்னை-20
26—6—81

ஆ. சிவலிங்கம்

பொருளடக்கம்

	பக்கம்
முன்னுரை	III
பதிப்புரை	IV—V
பொருளடக்கம்	VI—VII
Foreword	VIII—XII
சுருக்க விளக்கம்	XIII—XIV
System of Transliteration	XV
மொழிமரபு (விளக்கம்)	1—3
இளம்பூரணர்—நச்சினார்க்கினியர்—சிவ ஞானமுனிவர்—சுப்பிரமணிய சாஸ்திரியார்—வேங்கடராசுலு ரெட்டியார்—வெள்ளைவாரணனார், இலக்குவனார், கமீல் சுவலபில்	
1. சார்பெழுத்துகள் மொழிகளிற் பயிலுமாறு. (4—36)	
குற்றியலிகரத்திற்கு இடனும் பற்றுக் கோடும்	4—7
புணர்மொழிக் குற்றியலிகரம்	7—12
தனிமொழிக் குற்றியலுகரத்துக்கு இடனும் பற்றுக்கோடும்	13—16
புணர்மொழிக்குற்றியலுகரம்	16—22
ஆய்தம் தனிமொழியுள் வருமாறு	22—27
ஆய்தம் புணர்மொழியுள்ளும் வருமாறு	28—29
ஆய்தத்தின் இயல்பு.	30—36
2. அளபெடை (37—57)	
அளபெடையின் நிலை	37—55
ஐகார ஔகார அளபெடை	56—57
3. எழுத்துகள் தொடர்ந்து மொழியாதல் (57—72)	
ஓரெழுத் தொருமொழி	57—59
குற்றெழுத்தின் இயல்பு	60—62
மொழியின் பெயர் முறை தொகை.	63—72
4. எழுத்துகளின் இயக்கம் (72—108)	
தனிமெய் இயக்கம்	72—76
மெய்ம்மயக்கப் புறனடை	77—80
ஈரொற்றுடனிலை	81—86
குறிற்கீழ் ஒற்றாகா மெய்கள்	86—89
தொடர்மொழியியல்பு	89—98
செய்யுளில் ஈரொற்று இலக்கணம்	98—100

	மகரம் குறுகும் இடம்	101—102
	மொழிக்கண் மாத்திரை வேறுபடாமை	102—108
5.	போலி (108—132)	
	(போலி எழுத்துகள்.	108—121
	அ இ—ஐ, அ உ—ஔ, அய்—ஐ)	
	ஐ குறுகுதல்	121—126
	போலியில் மற்றொருவகை (நாய்—நாஇ)	126—132
6.	மொழிமுதல் எழுத்துகள் (133—154)	
	மொழிமுதலாகும் உயிர்கள்	133—134
	தனிமெய் மொழிமுதலாகாமை	134—136
	பன்னீருயிருடன் மொழிமுதலாதல்	136—138
	சகரமெய் ஒன்பதுயிருடன் மொழிமுதலாதல்	138—141
	வகரமெய் எட்டுயிருடன் மொழிமுதலாதல்	142—143
	ஒகர மெய் மூன்றுயிருடன் மொழிமுதலாதல்	143—145
	யகரம் ஆகாரத்துடனே மொழிமுதலாதல்	145—147
	எல்லா எழுத்தும் முதலாம் இடம்	147—149
	குற்றியலுகரம் மொழிமுதல் ஆமாறு	149—152
	மொழிமுதல் குற்றியலுகரப் பொருள் நிலை	152—154
7.	மொழியிறுதி எழுத்துகள் (154—182)	
	மொழியிறுதி உயிர் எழுத்துகள்	145—156
	ஔ ஈறாகும் இடம்	156—157
	எகர உயிர் மெய்யுடன் ஈறு ஆகாமை	158—
	ஒகரம் நகரமெய் ஒன்றுடன் ஈறு ஆதல்.	158—159
	ஒ ஞகரமெய்யுடன் ஈறு ஆகாமை	129—160
	உ ஊ நகரவகரங்களுடன் ஈறு ஆகாமை	160—163
	சகர உகரம் இரு மொழிக்கு ஈறாதல்	163—164
	பகர உகரம் ஒரு மொழிக்கே ஈறாதல்	164—166
	ஈறு ஆகா உயிர் மெய் ஈறு ஆமாறு	166—170
	மொழியீறு ஆம் மெய்கள்	170—172
	நகரமெய் இருமொழிக்கு ஈறு ஆதல்	172—173
	ஞகரமெய் ஒரு மொழிக்கு ஈறு ஆதல்	173—174
	வகரமெய் நான்மொழிக்கு ஈறு ஆதல்	174—175
	அஃறிணைக்கண் னகர ஈற்றுமொழிகள்	176—182
	பின் இணைப்பு	183—188
	பயன் படுத்தப்பெற்ற நூல்கள்	189 —
	மொழிமரபுத் தொடர்பாகக் இடைக்கப் பெற்ற கட்டுரைகள்	189—195
	சொல்லகராதி	197—207
	நூற்பா முதற்குறிப்பு	208 —

FOREWORD

Dr. V. RATHINASABAPATHY
The Dr. S. Radhakrishnan
Institute for Advanced
Study in Philosophy
University of Madras.

I must express my deep indebtedness to the Director and the members of the International Institute of Tamil Studies, Adayaru, Madras-20, for so kindly giving me an opportunity to write a forword for this volume.

Best of all I owe a great deal to the scholars concerned for their constant help and brilliant suggestions made the editor during the period of writing and the publication of this volume.

I owe a deep debt of gratitude to my teacher, professor. A. Sivalinganar, Rtd. principal, S. S. B. S. Tamil College, Mailam, for his inherent genius in synthesising various constituent elements of scholars to the present research. It is only after a vast amount of research along these lines that we shall be able to assess the contributions of the ideas of the editor who brings to the task a very sympathatic out look, deep scholarship and assiduous industry. As it happens in all such attempts, some of his views may not be acceptable to all scholars, bnt I am sure they will immensly provoke thoughts and thus make way for discovery of truth which is the ultimate object of all inquiry.

In editing this work, the editor has endeavoured to incorporate all the available meterials into a comprehensive account of the grammatical thought in Tamil, from the earliest times to the present day. The editor has chosan to follow an objective method in criticism and has confined himself to giving an accurate expositions of the views of the scholars, together

with fair and reasonable criticism of their views from various stand points.

This is the third volume in the series, dealing with Tholkappiyam–Uraivalam–Mozhi Marapu. The following points enrich the value of this present volume.

1. "குன்றிசை மொழிவயின்" என்னும் நூற்பாவின் இளம்பூரணர் உரைக்குக் கீழ்க்குறிப்பில் தரப்படும் விளக்கம் (பக். 38, 39)
2. அளபெடை எழுத்து எனத் தனியாக உண்டு என இளம் பூரணர் கொண்டதற்குத் தரப்படும் விளக்கம் (பக். 45—47)
3. குற்றெழுத்தும் அளபெடுக்கும் என்பதற்குத் தரப்படும் காரணம் (பக். 47, 48)
4. ஐ என்பதற்கு அஇ என்பது போலியன்று; ஒலி வடிவத்துக்குரியது என்பதும், அய் என்பது வரிவடிவத்துக் குரியது என்பதும் (பக். 119—121)
5. நாய்—நாஇ பற்றிய விளக்கம் (பக். 126—128)
6. நுந்தை—குற்றியலுகர முற்றியலுகர வேறுபாடு (பக். 153, 154)
7. ஆங்காங்கு பிறர்கருத்துகளுக்குத் தரப்படும் மறுப்புகள் (பக். 76, 80, 85, 89, 185)

I would like to invite the attention of the scholars to reconsider some important points related to Mozhi Marapu. I owe a debt of gratitude to Dr. S. V. Subramaniam, Director of the institute and to my teacher prof. A. Sivalinganar for allowing me to write the same.

In Tholkappiyam, there are five chapters which are ending with the word-Marapu. In Ezhuthathikaram, we have three chapters namly Nūl-Marapu, Mozhi-Marapu and Thohai-Marapu. Of the three, Mozhi-Marapu, according to the traditional explanations, is a chapter providing rules which are unchanging and are adopted by the ancestors.

In Mozhi-Marapu, the word Mozhi is one which has meaning or denotes a thing. According to this interpretation

the stanzas 43, 44 and 45 are irrelevant to this chapter and they must be placed in Collathikaram. By 'Mozhi-Marapu, scholars mean that the collection of rules of letters which occur in Mozhi. But this interpretation is not supported by many stanzas of Mozhi-Marapu. In Mozhi-Marapu, Tholkappiar, often emphasizes the idea of 'இசை நிறைவு' adjustment of sound. He also admits the fact that the completeness of Mozhi-'மொழி நிறைவு' is caused by 'இசை நிறைவு'— the adjusment of sound.

In stanza 53 of Mozhi-Marapu, Tholkappiar states two kinds of speach sound—மொழிப்படுத்திசைத்தல் and தெரிந்து வேறு இசைத்தல். These two methods of sound speaking are very important for getting a completeness on sound by which we get a completeness of word—இசைநிறைவு and மொழி நிறைவு.

As mentioned by *Panamparanar* in his *Cirappuppayiram* the first chapter Nūl-Marapu is 'மயங்காமரபின் எழுத்துமுறை'. Similar to this method, Tholkappiar admits two other methods which are மொழிப்படுத்தும் முறை and தொகைப்படுத்தும் முறை. These three methods of sound are related to the three divisions of substances Mudhal, Karu and Uri. According to this plan we must compare the rules as expounded in Mozhi-Marapu with the rules of கருப்பொருள் in *Ahathinai iyal.*

First substance or independent substance does not give room for change. Changes are allowed only in the complex substances. Time and space come under the first category of snbstance. But they are able to produce the complex substances. In Mozhi-Marapu, Tholkappiyar establishes five short vowels which are independent and they come under the category of first substance. The seven long vowels are dependents which are the products by their nature. Therefore,'மொழிப் படுத்தல் is the process of producing complex substances which are similar to கருப்பொருள். Through the process of தொகைப்படுத்து மரபு, we get the third kind of substance-Uripporul.

My objcct of this study is to codify a central theme of Tholkappiyam and to discuss its contents fully with the special

reference to physics and to the studies of spanda sastra–the process of sound vibrations. It is a detailed study of Tholkappiyam with a new perspective. In the course of my writings the forword of the remaining chapters I can establish a constructive theory based on modern scientific studies.

The concept of Dhvani is the life spirit of each and every language. Dhvani is neither a mystical syllable nor a transcendental concept beyond the reach of human thinking. We can compare the concept of Dhvani with the sound process adopted by Tholkappiyar. I am not a prescriber of the rules for the study of Tholkappiyam. Tholkappiyar himself made a clue to find out the central theme of Tholkappiyam through the 90th stanza of Marapiyal.

The study of language is scientific in nature and it is admitted as positive or descriptive science. The physical and biological method, the historical or genetic method, the psychological method and the metaphysical method have been adopted by the scholars of both east and west. On the contrary, Tholkappiyar establishes the study of languages as a normative scientific study. The study of language, according to him, is a normative or regulative science. It is a science of the *Ought* or *Ideal*. The Ought cannot be evolved from the *IS*, the ideal from actual, value from facts. He is the only person who achieves the norm or ideal of language. It is Tholkappiyar who changes the nature of study from descriptive or natural to normative or ideal. Therefore the method adopted by Tholkāppiyar for the study of language is different from the method adopted by others.

It is also my duty to express the fact that some scholars are always bent upon finding parallalism in Tholkappiyam and Sanskrit works and such parallalisms are assumed by them to imply borrowings by Tholkappiyar from sanskrit works. I can boldly assert that my critical study on Tholkappiyom is different from that of others. The method which I can claim unique in my way of critical approch was already admitted by Tholkappiyar. Therefore such finding of a research study cannot

be set a side by simply stating either mystical or transemprical by nature.

In Ezhuthathikaram of Tholkappiyam, the three chapters—Nul-Marapu, Mozhi-Marapu, and Thohai-Marapu- establish the fact that the study of language is scientific as well as normative.

There are a few great personalities whose speculations have something of permanent value. They probed so deep in to the nature of associated life. To follow the development of the study of language, with this historical perspective has a great educative value. It trains the mind to think to criticise and to construct.

It is a welcome sign of the times that Indian scholarship is now making up the lag and embarking on the grammatical study of language with the human life, in a spirit of constructive criticosm.

This volume is a monument of industry and learning and should prove very useful to the further research.

Madras-5 **V. RATHINASABAPATHY**
16—6—81.

சுருக்க விளக்கம்

அகத்-அகத்திணையியல்
அகம்-அகநானூறு
அவி-அவிநயம்
ஆ. மொ.-ஆங்கில மொழிபெயர்ப்பு
இடை-இடையியல்
இ. ப. க. த. ஆ. மன்றம்-இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம்
இல-இலக்குவனார்
இல. வி. – இலக்கண விளக்கம்
இ-ள். - இதன் பொருள்
இளம்-இளம்பூரணர், இளம்பூரணம்
உயிர், உயிர்மயங் - உயிர்மயங்கியல்
உரி-உரியியல்
உருபி-உருபியல்
உவம-உவமவியல்
எச்ச-எச்சவியல்
எ-டு - எடுத்துக்காட்டு
எழு, எழுத், எழுத்து-எழுத்ததிகாரம்
எ-று. - என்றவாறு
க. சு. - கமில் சுவலபில்
கலி, கலித்-கலித்தொகை
களவியல்-களவியல்
கற்பு-கற்பியல்
கிளவி-கிளவியாக்கம்
குறள்-திருக்குறள்
குற்றிய, குற். புண-குற்றியலுகரம் புணரியல்
சந்திப்-சந்திப்படலம்
சப்தமணி-சப்தமணிதருப்பணம்
சாமி-சாமிநாதம்
சி. பதி. - சிதம்பரம்பிள்ளை பதிப்பு
சிலப், சிலம்பு-சிலப்பதிகாரம்
சு. வே. – சுவடி வேறுபாடு
செய்-செய்யுளியல்
சொல்-சொல்லதிகாரம்

தைத்-ப்ரா-தைத்ரீய ப்ராதிசாக்யம்
தொகை-தொகைமரபு
தொல்-தொல்காப்பியம்
தொல்-பொருள்-தொல்காப்பியப் பொருளதிகாரம்
தொன்-தொன்னூல் விளக்கம்
நச்-நச்சினார்க்கினியம், நச்சினார்க்கினியர்
நன்-நன்னூல்
நாலடி-நாலடியார்
நூன்-நூன்மரபு
நேமி-நேமிநாதம்
பக்-பக்கம்
பத-பதவியல்
பி. இ. நூ. - பிற்கால இலக்கண நூல்
பிர. வி. - பிரயோக விவேகம்
பிறப்-பிறப்பியல்
புணரி-புணரியல்
புள்ளி-புள்ளிமயங்கியல்
புறத்-புறத்திணையியல்
புறம்-புறநானூறு
பெயர்-பெயரியல்
பேரா-பேராசிரியர்
பொருள்—பொருள்-பொருளதிகாரம் பொருளியல்
மரபு-மரபியல்
மாறன்-மாறனலங்காரம்
முத்து-முத்துவீரியம்
மெய்-மெய்ப்பாட்டியல்
மொழி-மொழிமரபு
யா-கா—யாப்பருங்கலக்காரிகை
யா. வி. – யாப்பருங்கலவிருத்தி
வேற்றுமை-வேற்றுமையியல்
வேற்று-மய—வேற்றுமை மயங்கியல்
விளி-விளிமரபு
வினை-வினையியல்
வீர-வீரசோழியம்

System of Transliteration

உயிர் எழுத்துகள்—Vowels

	இலக்குவனார்	கமீல்சுவலபில்
அ	a	a
ஆ	ā	ā
இ	i	i
ஈ	ī	ī
உ	u	u
ஊ	ū	ū
எ	e	ē
ஏ	ē	e
ஐ	ai	ai
ஒ	o	o
ஓ	ō	ō
ஔ	au	au

மெய்யெழுத்துகள்—Consonants

வல்லினம்—Hard

	இலக்குவனார்	கமீல்சுவலபில்
க்	k	k
ச்	s	c
ட்	t	ṭ
த்	th	t
ப்	p	p
ற்	ṛ	ṛ

மெல்லினம்—Soft

	இலக்குவனார்	கமீல்சுவலபில்
ங்	ṅ	ṅ
ஞ்	ñ	ñ
ண்	ṇ	ṇ
ந்	n̲	n
ம்	m	m
ன்	n̲	n̲

இடையினம்—Medium

	இலக்குவனார்	கமீல்சுவலபில்
ய்	y	y
ர்	r	r
ல்	l	l
வ்	v	v
ழ்	ḻ	ḻ
ள்	ḷ	ḷ

தொல்காப்பியம் - எழுத்ததிகாரம்

உரைவளம்

மொழி மரபு

இளம்பூரணர்

இவ்வோத்து என்ன பெயர்த்தோ வெனின், மொழிகளுக்கு எழுத்தான் வரும் மரபு உணர்த்தினமையின் மொழிமரபு எனப் பட்டது. இதனுள் கூறுகின்றது தனிநின்ற எழுத்திற்கு அன்றி மொழியிடை (நின்ற) எழுத்திற்கென உணர்க.

நச்சினார்க்கினியர்

மேல் எழுத்து உணர்த்திய பின்னர், அவை தம்முள் தொடருமாறும் உணர்த்தி அவ்வெழுத்தானாம் மொழியது மரபு உணர்த்துகின்றமையின் இவ்வோத்து மொழி மரபு எனக் காரணப் பெயர்த்து ஆயிற்று.

சிவஞான முனிவர்

மொழிமரபிற் கூறும் விதிகள் நூன்மரபின் ஒழிபு ஆமாறு :—

குற்றியலிகரம் நிற்றல் வேண்டும் (எழு. 34) என்பது முதல் உருவினு மிசையினும் (எழு. 40) என்னுஞ் சூத்திரங்காறும் அவைதாம் (எழு. 2) என்பதன் ஒழிபு. குன்றிசை (எழு. 41) ஐ ஒள் (எழு. 42) இரண்டும் நீட்டம் (எழு. 6) என்பதன் ஒழிபு.

நெட்டெழுத்தேழே (எழு. 43) என்பது, அவற்று அ இ உ எ (எழு. 3) ஆ ஈ ஊ ஏ (எழு. 4) என்பவற்றின் ஒழிபு, மொழி யாக்கம் அதிகாரப் பட்டமையின் ஓரெழுத் தொருமொழி என்பதும் உடன் கூறினார்.

மெய்யின் இயக்கம் (எழு. 46) என்பது னகார விறுவாய் (எழு. 9) என்பதன் ஒழிபு. தம்மியல் கிளப்பின் (எழு. 47) என்பது முதல் மகரத் தொடர்மொழி (எழு. 82) என்னுஞ் சூத்திரங்காறும் மயக்கச் சூத்திர (எழு. 22—30) ஒழிபு எனக் காண்க. இதனை விரிப்பிற் பெருகும்; உய்த்துணர்ந்து அமைத்துக் கொள்க. (முதற்சூத்திரவிருத்தி).

சுப்பிரமணிய சாஸ்திரியார்

எழுத்துக்களின் குறியையும், வகையையும், மயக்கத்தையும் உணர்த்தும் நூன்மரபின் பின்னர் அவற்றின் பிறப்பிடத்தைப் பற்றிக் கூறும் பிறப்பியலை வையாது மொழி மரபினை வைத்ததற்குக் காரணம் ஒன்றுண்டு. அஃதாவது—நூல்மரபின் கண் அகர முதல் னகர இறுவாய் உள்ள எழுத்துக்களையும் அவற்றின் குறி முதலியவற்றையும் கூறியதுடன் ஆசிரியர் குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தம் என்பன சார்ந்து வரும் என்றும் கூறினர். அவற்றின் இலக்கணத்தையும் வருமிடத்தை யும் கூறாது அவற்றின் பிறப்பிடத்தைப் பற்றிக் கூறுதல் பொருந்தாததாகும். அவை மொழிகளின்கண் வருமேயன்றித் தனித்துவாரா. ஆதலின் மொழிகளின் வகையை உணர்த்த வேண்டியது இன்றியமையாததாயிற்று. அம்மொழிகள் எழுத்துக் களான் ஆக்கப்பட்டமையின், மொழிமரபிலே மொழிகளின் தொடக்கத்திலும் இறுதியிலும் வரும் எழுத்துக்களைப் பற்றி யும் கூறினர். மரபு பற்றிச் சொற்கள் வழங்கப்படுகின்றமையின் அவற்றைப் பற்றிக் கூறும் இயலுக்கு மொழிமரபு எனப் பெயரிட்டனர் ஆசிரியர்.

வேங்கடராசுலு ரெட்டியார்

மொழியின் மரபினை யுணர்த்தினமையின், இவ்வியல், மொழி மரபு எனப் பெயர் பெற்றது. ஈண்டு உணர்த்திய மரபு யாதோ எனின், மொழிகளில் நிற்கும் எழுத்துக்களின் மரபே யென்க. ஆதலின், இவ்வியலிற் கூறும் இலக்கணம் தனிநின்ற எழுத்திற்கன்றி மொழிக்கட்பட்ட எழுத்துக்கட்கேயாதல் பெறப் படும். இவ்வியல் முழுவதும் மொழிக்கட்பட்ட எழுத்திற்கே இலக்கணங் கூறியவாறு என்னையோ வெனின், முதற் சூத்திர

முதல் ஏழு சூத்திரங்களில் மேல் நூன் மரபின் முதலில் கூறப் பட்ட சார்பெழுத்துக்களை உணர்த்தினார். எட்டு ஒன்பாதாஞ் சூத்திரங்களில், மேல் நூன் மரபில், 'நீட்டம் வேண்டின்' என்ற சூத்திரத்திற்காவதொரு விதி கூறினார். பத்து பதினொன்று பன்னிரண்டாஞ் சூத்திரங்களில் மொழிகளின் வகையையுணர்த் தினார். அதன் மேல் இரண்டு சூத்திரங்களால் மெய்யெழுத்துக் கள் ஒலிக்கும் முறைமையையும் அவை மொழித்தன்மைப்பட்டு மயங்கும் மயக்க நிலையையும் உணர்த்தினார். பதினைந்து முதல் பத்தொன்பதாஞ் சூத்திரம் வரையும் ஒரு மொழிக்கண் மயங்கும் ஈரொற்றுக்களையும் அவற்றின் அளபினையும் கூறினார். இருபதாஞ் சூத்திரத்தில், எழுத்துக்கள் மொழிக்கண் நிற்பினும் தம்மியல்பு திரியாது என்றார். பின்னர் நான்கு சூத்திரங்களில் மொழிக்கண் நிற்கும் ஐ ஔ எழுத்துக்களிற் படுவதொரு வேறுபாடும் அளபும் உணர்த்தினார். இருபத்தைந் தாம் சூத்திரத்தில் மொழியின் இறுதியில் நிற்கும் இகரத்தின் வேறுபாடு கூறினார். அதன்பின், பத்துச் சூத்திரங்களில் (26—35) மொழியின் முதற்கண் நிற்கும் எழுத்துக்களைக் கூறினார். பின்னர்ப் பதின்மூன்று சூத்திரங்களில் (36—48) மொழியின் ஈற்றில் நிற்கும் எழுத்துக்களைக் கூறினார். இறுதிச் சூத்திரத்தில், சில மொழிகளின் ஈற்றில் நிற்கும் ணகரத்தின் மாற்றத்தைக் குறித்து ஓதினார். இவற்றால், இவ்வியல் முழுவதும் தனிமொழிக்கண் நிற்கும் எழுத்துக்களின் இலக்கணமே கூறியிருப்பது அறியப்படும். அஃதேல், புணர் மொழிக்கட் படுங்குற்றியலிகரம் குற்றியலுகரம் முதலியன இருமொழிக் கண்ணவாகலின், அவற்றை, ஈண்டுக் கூறியது என்னையோ எனின், அதற்குக் காரணம் அவ்வச் சூத்திரங் களைப் பற்றிக் கூறும் வழிக் கூறப்படும்.

வெள்ளை வாரணனார்

எழுத்துக்களுக்கு மொழியிடையுளதாம் அடிப்பட்ட இயல்பினை ஆசிரியர் இவ்வியலான் உணர்த்துகின்றார் என்பது கொள்ளத்தகும்.

இலக்குவனார்

This chapter deals with the letters when they form part of the words. So, it is called Mo<u>l</u>imarapu which means 'word-usage.'

கமில் சுவலபில்

Rules (on the occurrence phonemes in) words.

1. சார்பெழுத்துகள் மொழிகளிற் பயிலுமாறு

குற்றியலிகரத்திற்கு இடனும் பற்றுக் கோடும்

34. *குற்றிய லிகரம் நிற்றல் வேண்டும்
யாவென் சினைமிசை உரையசைக் கிளவிக்கு
ஆவயின் வருஉம் மகரம் ஊர்ந்தே. (1)*

ஆங்கில மொழி பெயர்ப்பு

இலக்குவனார்

The shortened 'I' will stand upon 'm' before 'yā' which forms part of 'Miyā'

கமீல் சுவலபில்

The overshort 'i' will stand before the Component 'yā' after 'm', occurring in that position with the expletive word used in inviting attention.

பிற இலக்கண நூல்கள்

நன்னூல் : 93. *அசைச் சொல் மியாவின் இகரமும் குறிய.*

இலக்கண விளக்கம் : 15. *மியாவின் இகரமும் குறிய.*

தொன்னூல் விளக்கம் : 14. *இ......அற்றாம் அசைச்சொல் மியாவே.*

முத்து வீரியம் : 35. *அசைச்சொல் மியாவின் இகரமும் அற்றே.*

சாமிநாதம் : 8. *மியாவின் இகரம் குறுகும்.*

இளம்பூரணர்

இத்தலைச் சூத்திரம் என் நுதலிற்றோவெனின், சார்பின் தோற்றத்து எழுத்துக்களிற் குற்றியலிகரத்தில் ஒரு மொழிக் குற்றியலிகரத்திற்கு இடமும் பற்றுக் கோடும் உணர்த்துதல் நுதலிற்று.

(இதன் பொருள்) குற்றியலிகரம்—ஒருமொழிக் குற்றிய லிகரம், உரையசைக் கிளவிக்கு—உரையசைச் சொல்லாகிய

*நூற்பாவின் முன் உள்ள எண் எழுத்திகாரத் தொடர்எண்; பின் உள்ள எண் மொழிமரபுத் தொடர்எண்.

மியா[1]வென் முதற்கு, ஆவயின் வருஉம்—([2]சினையாக) அச்சொல் தன்னிடத்து வருகின்ற, யா என் சினைமிசை—யா என் சினை மிசை, மகரம் ஊர்ந்து நிற்றல் வேண்டும்—மகர ஒற்றினை யூர்ந்து நிற்றலை வேண்டும் (ஆசிரியன்).

எடுத்துக் காட்டு: கேண்மியா என வரும். மியா என்னும் சொல் இடம்; மகரம் பற்றுக்கோடு. யா என்னும் சினையும் மகரம் போலக் குறுகுதற்கு ஒரு சார்பு. *

நச்சினார்க்கினியர்

இச் சூத்திரம் முன்னர்ச் சார்ந்து வருமென்ற மூன்றனுள் குற்றியலிகரத்திற்கு இடனும் பற்றுச்கோடும் கூறுகின்றது.

(இ—ள்.) தான் கூறும் பொருளைக் கோடற்கு ஒருவனை எதிர்முகமாக்கும் சொல்லிற்குப் பொருந்த வரும், அம்மியா என்னும் இடைச் சொல்லைச் சொல்லுமிடத்து, யாவென்னும் உறுப்பின் மேலதாய் முதலாய் நின்ற மகர வொற்றினையேறிக் குற்றியலிகரம் நிற்றலை விரும்பும் ஆசிரியன்; என்றவாறு.

எ—டு. கேண்மியா, சென்மியா என வரும். 'கேள்' என்றது உரையசைக்கிளவி†; அதனைச் சார்ந்து தனக்கு இயல் பின்றி நின்றது 'மியா' என்னும் இடைச் சொல். அவ்விடைச் சொல் முதலும், அதனிற் பிரியும் 'யா' அதற்கு உறுப்பும் ஆம் என்று கருதி 'யாவென் சினை' என்றார். மியா இடம்; மகரம் பற்றுக்கோடு. யாவும் இகரம் அரை மாத்திரையாதற்குச் சார்பு. இவ்விடைச் சொல் தனித்து நிற்றல் ஆற்றாமையிற் கேள் என்பதனோடு சார்ந்து ஒரு சொல்லாயே நின்றுழி இடை

சுவடிவேறுபாடு : 1. மியாவின்
2. சினையாகிய

* யா என்ற எழுத்தும் இகரம் குறுகுதற்கு மகர ஒற்றுச் சார்பாயி னாற்போல ஒரு சார்பாம். சினை—உறுப்பு. கேண்மியா என்னும் நான்கெழுத்துச் சொல்லில் 'யா' என்பதும் ஓர் எழுத்தாதலின் அதனை உறுப்பு என்றார். நச். விளக்கமும் பார்க்க.

† உரையசைக்கிளவி என்பதற்குத் தான் கூறும் பொருளைக் கோடற்கு ஒருவனை எதிர்முகமாக்குஞ் சொல் என்றும், அது கேள் என்பதாகும் என்றும் நச்சினார்க்கினியர் கூறுகின்றார். அசைத்தல்—எதிர்முகமாக்கல். அங்ஙனமாயின் சென்மியா என்புழிச் செல் என்பதற்கு அது பொருந்தாமல் வருகின்றது. ஆதலின் 'உரையசைக்கிளவி' என்பதற்கு 'உரையசைச் சொல்லாகிய 'மியா' என்று உரையாசிரியர் கொள்ளும் பொருளே பொருத்த மாகின்றது.'' —சி. கணேசய்யர்.

நின்ற இகரம் ஒரு மொழியிடத்துக் குற்றியலிகரமாய் வருதலானும் ஆண்டு (நூன்மரபு) உணர்த்தற்குச் சிறப்பின்மையானும் ஈண்டுப் போதந்து கூறினார். ஊர்ந்தெனவே குற்றியலிகரமும் உயிர் என்பது பெற்றாம்; உயிர்க்கல்லது ஏறுதல் இன்மையின்.

சுப்பிரமணிய சாஸ்திரியார்

நிற்றல் என்றதனை இரண்டாம் வேற்றுமையாகவும் ஆசிரியன் என்ற சொல்லை வருவித்து அதனை வேண்டும் என்பதற்கு எழுவாயாகவும் கொண்டனர் இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும். முற்சூத்திரத்துள்ள 'புலவர்' என்றதனை வருவித்து அதனை எழுவாயாகவும் கொள்ளல் தகும்*. வரூஉம் என்ற பெயரெச்சத்தை, 'யாவென் சினைமிசை' என்பதைத் தழுவுவதாக இளம்பூரணரும், 'ஆவயின்' என்பதைத் தழுவுவதாக நச்சினார்க்கினியரும் கூறினர். சூத்திரத்துச் சொற்களின் முறையை நோக்கின் 'வரூஉம்' என்றது 'மகரம்' என்பதைத் தழுவுவதாகக் கொள்ளல் பொருந்தும் எனத் தோன்றுகின்றது.

வேங்கடராசுலு ரெட்டியார்

மேல் நூல்மரபிற் கூறிய சார்பெழுத்துக்கள் மூன்றும் உயிரெழுத்துப் போன்று தனித்தாயினும், மெய்யெழுத்துப் போன்று உயிருடன் கூடியாயினும் வாராமையின், மொழிக்கண் வைத்து உணர்த்துதல் வேண்டுதலான், அவற்றை மொழி மரபிற் கூறுவாராயினார். அவை சார்பெழுத்தாகலின் தனியெழுத்தோடு ஒருசார் ஒப்புமை யிருத்தல் பற்றித் தனியெழுத்தின் இலக்கணம் உணர்த்திய நூன்மரபினைச் சார வைத்தார். சார்பெழுத்துக்கள் தனி மொழிக்கண்ணும் புணர்மொழிக் கண்ணும் வருதலின், அவற்றுள் ஒரொன்றனையும் இரண்டிரண்டு சூத்திரங்களான் உணர்த்துகின்றார். அம்முறையின், தனி மொழிக்கண் வருங் குற்றியலிகரத்தை இம்முதற் சூத்திரத்திற் கூறுகின்றார்.

உரையசைச் சொல்லாகிய மியா என்னும் முதற் சொற்குச் சினையாகிய 'யா' என்பதிற்குமேல், அவ்விடத்து வருகின்ற மகர மெய்யினை ஊர்ந்து குற்றியலிகரம் நிற்றல் வேண்டும் என்பது இச்சூத்திரத்தின் பொருள்.

---

*இது பொருந்தாது. 'புலவர்' என்ற பலர்பாற்பெயர் 'வேண்டும்' என்ற செய்யும் என் முற்றைக் கொண்டு முடியாது.

இந்நூலில் 'மிசை' என்பது 'மேல்' என்னும் பொருளது. அஃதாவது காலமுன்; இடமுன் ஆக ஓரிடத்தும் வந்ிலது. மேல் 25 ஆம் சூத்திரத்திலும், முன்னர் 38, 311, 330 முதலாய சூத்திரங்களிலும் இச்சொல்லின் பொருளைக் காண்க.

உரையசைக்கிளவி என்றது 'மியா' என்னும் சொல்லினை... நச்சினார்க்கினியர், 'கேள் என்றது உரையசைக்கிளவி' யென்றாரால் எனின், ஆசிரியர், முன்னர், 'உரையசைமியாவும்' (224) என்றும், மியா...முன்னிலையசைச்சொல் (சொல். இடை. 26) என்றும் கூறுகின்றாராதலின் அது பொருந்தாதென்க. நன்னூலாரும் 'அசைச் சொல்மியாவின்' (நன். 38) என்றே கூறியுள்ளார்.

இனி, கேண்மியா என்பதின் உண்மை நிலையை ஆராயுமிடத்து, 'கேண்ம்' என்னும் சொல்லொடு 'யா' என்னும் அசைச் சொல் சேர (யாவினால்) இகரந் தோன்றப்பெற்று, கேண்மியா என்றாகியுளது எனத் தெரிகின்றது.

புணர்மொழிக் குற்றியலிகரம்

35. ***புணரியல் நிலையிடைக் குறுகலும் உரித்தே**
உணரக் கூறின் முன்னர்த் தோன்றும். (2)

ஆ. மொ :

இல.

It will come in the conjunction of two words also. I twill be explained later.

க. சு.

The shortening [of i] is also proper between [two words] in junction. It will be discussed and explained later.

---

*தொல். பொருள். 665இல் மொழிவாம் என்பதற்கு பேராசிரியரின், மேற்கோள்.

இலக்கணக் கொத்து 108. உரையில் ஆளப்பட்டுள்ளது.

இளம்பூரணர்

இது, குற்றியலிகரம் புணர்மொழியுள்ளும் வரும் என்று உணர்த்துதல் நுதலிற்று.

(இ—ள்.) புணர்இயல் நிலையிடையும்—இருமொழி தம்மிற் புணர்தல் இயன்ற நிலைமைக் கண்ணும், குறுகல் உரித்து—அவ்விகரம் குறுகுதல் [1]'உடைத்து, உணரக் கூறின்—(ஆண்டை யிடத்தினையும் பற்றுக் கோட்டினையும் [2]ஈண்டு) உணரக் கூறப்புகின், முன்னர் தோன்றும்—(அதுவேண்டுவதில்லை.) குற்றியலுகரப் புணரியலுள் (அவ்விடனும் பற்றுக் கோடும்) தோன்றும்.

'புணரியல் நிலையிடையும்' என மொழிமாற்றி யுரைக்க. முன்னர்த் தோன்றுமாறு,

யகரம் வரும்வழி யிகரங் குறுகும்

உகரக் கிளவி துவரத் தோன்றாது (குற்றி. புண. 5) என்பதனுள் அறிக்.

உகரம் சார்ந்த வல்லெழுத்துப் பற்றுக் கோடு.

எ—டு: நாகியாது, வரகியாது, தெள்கியாது, எஃகியாது, கொக்கியாது, குரங்கியாதுஎன வரும்.

நச்சினார்க்கினியர்

இது குற்றியலிகரம் புணர்மொழியகத்தும் வரும் என்கின்றது.

இ—ள் : அக்குற்றியலிகரம் புணரியலுள் ஒருமொழிக்கண் அன்றி இருமொழி தம்மிற் புணர்தலியன்ற நிலைமைக் கண்ணும் குறுகுதல் உரித்து; அதற்கு இடமும் பற்றுக்கோடும் உணரக் கூறத் தொடங்கின அவை குற்றியலுகரப் புணரியலுள்ளே கூறப்படும்; எ—று.

குறுகலும் என்னுமிடத்து உம்மையை நிலையிடையும் என மாறிக் கூட்டுக. ''யகரம் வரும் வழி'' (எழு. 410) என்னும் சூத்திரத்து யகரம் இடம்; உகரம் சார்ந்த வல்லெழுத்துப் பற்றுக் கோடு.

சு. வே. 1. உரித்து

2. ஈண்டுக் கூறப்புகின்

எ—டு : நாகியாது, வரகியாது, தெள்கியாது, எஃகியாது, கொக்கியாது, குரங்கியாது என வரும். இது மொழிவாம் என்னும் உத்தி.

சுப்பிரமணிய சாஸ்திரியார்

பொருள் : அக்குற்றியலிகரம் புணர்ச்சி நிகழும் இடத்துக் குறுகுதலும் உரித்து. அஃதாவது கால் மாத்திரை பெறும். அதனை அறியுமாறு கூறப்புகின், முன்னர் (குற்றியலுகரப் புணரியலின் கண்) தோன்றும். உம்மையான குறுகாதிருத்தலும் உரித்து.

உதாரணம் : நாகு + யாது = நாகியாது. குற்றியலிகரம் என்பது அதிகரித்தது.

ஆங்கு "யகரம் வருவழி யிகரம் குறுகும்" (எழுத். 411) எனக் கூறப்பட்டது காண்க.

உம்மை யெச்சவும்மையாகலான் "புணரியல் நிலையிடையும்" என மொழிமாற்றியுரைத்தல் வேண்டும் என்பர் உரைகாரர்கள். முன் சூத்திரத்தில் அரை மாத்திரையுள்ள குற்றியலிகரத்தைப் பற்றியும், ஈண்டு அதன் குறுக்கத்தைப் பற்றியும் கூறப்படுகின்றது எனக்கொண்ட நச்சினார்க்கினியரது கொள்கையில் அது பொருந்தாது. "குறுகல்" என்பதற்கு எழுவாயாக 'அவ்விகரம்' என இளம்பூரணரும், 'அக்குற்றிய லிகரம்' என நச்சினார்க்கினியரும் கொண்டனர். 'குற்றியலிகரம்' என்பதே முன் சூத்திரத்திலிருந்து அதிகரித்து வருதற்கு உரித்தே யன்றி, இகரம் இவ்வாறு வருதற்கு உரித்தன்மையான் நச்சினார்க்கினியர் கொள்கையே சிறக்கும்.

வேங்கடராசுலு ரெட்டியார்

இவ்வியலில், தனிமொழிக்கட்படும் இலக்கணமே கூறுவாராயினும், குற்றியலிகரம் தனிமொழியில் வருதலைக் கூறியதனையடுத்து, அது புணர்மொழிக்கண்ணும் வருதலை ஒருங்கு கூறுதல் முறையாகலின், அதனையும் ஈண்டே கூறினார். இவ்வாறு கூறாக்கால், குற்றியலிகரத்தின் இலக்கணம் ஒருங்கு அறியப்படுதலின்று. முன்னர்க் கூறப்படும் புணர்மொழிக் குற்றுகரம், புணர்மொழியாய்தம் ஆகியவற்றிற்கும் இந்நியாயமே கொள்க.

புணர்மொழிக்கண் வருங் குற்றியலிகரம் கால் மாத்திரை யளவினது என்பது நச்சினார்க்கினியர் கருத்தென்று 'எழுத்ததி

காரக்குறிப்பு'க்* கூறுகின்றது. நச்சினார்க்கினியர் கருத்து அது வாயின், அவர், புணர்மொழிக் குற்றியலுகரத்தைக் கூறும் சூத்திரத்தின் கருத்துரையாக 'இது; குற்றியலுகரம் புணர் மொழிக்கண் தன் அரைமாத்திரையிற் குறுகிவரும் என்கின்றது' என்று எழுதியது போன்று, ஈண்டும், 'இது குற்றியலிகரம் புணர்மொழிக்கண் தன் அரை மாத்திரையிற் குறுகி வரும் என்கின்றது' என்று எழுதியிருப்பர். அவ்வாறு எழுதிற்றிலர் ஆகலானும், முன்னர், 'யகரம் வருவழி'' என்னும் சூத்திரத்தின் உரையில், 'இது குற்றியலிகரம் புணர்மொழியகத்து வருமாறு கூறுகின்றது' என்று கருத்துக்கூறி, 'இகரம் குறுகும்' என்பதற்கு, 'ஆண்டு ஓர் இகரம் வந்து அரை மாத்திரை பெற்று நிற்கும்' என்றே உரை கூறினாராகலானும், அவர், புணர்மொழியகத்துக் குற்றியலிகரம் அரை மாத்திரை பெறும் என்னும் கொள்கையரே என்பது வெளிப்படை. மேலும், தனிமொழியில் வரும் குற்றிய லிகரம் குற்றியலுகரம் ஆய்தம் இவற்றை முறையே ஒவ்வொரு சூத்திரத்தாலும், அவற்றை யடுத்து, முறையே, புணர்மொழியில் வரும் குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தம் இவற்றை ஒவ்வொரு சூத்திரத்தாலும் ஆசிரியர் கூறியுள்ளார். அம் முறையில் இச்சூத்திரம் குற்றியலிகரம் புணர் மொழிக்கண் வருதலைக் கூறுவதேயாகும்.

ச. வே. சுப்பிரமணியன்

முதல் எழுத்து சார்பெழுத்து என்ற பாகுபாட்டை நன்னூல்தான் முதன் முதலில் வெளிப்படையாகக் கூறுகின்றது. தொல்காப்பியம் முதற் சூத்திரத்திலுள்ள 'சார்ந்துவரல் மரபின் மூன்றலங் கடையே' என்ற சொற்றொடரை வைத்துத் தான், அது முதலெழுத்து சார்பெழுத்து எனக் கொண்டதாகக் கருதுகிறோம். வீரசோழியமும் நேமிநாதமும் இவ்வாறு முதல் எழுத்து சார்பெழுத்து என வெளிப்படையாகப் பகுத்துக் கொள்ளவில்லை. 'நண்ணுமுதல் வைப்பாகும் நான்கு' என்ற நேமிநாதச் சொற்றொடரைக் கொண்டு முதல், சார்பு என்ற நிலையில் அவர் அமைத்ததாகக் கூறலாமே யன்றித் தனியாகச் சார்பெழுத்து என்று கூறவில்லை. வீரசோழியம் முதல், சார்பு என்ற எண்ணத்தைப்பற்றிச் சிறிதும் பேசவில்லை. 'ஆயின் நன்னூல் கண்கொண்டு பார்க்கும்போது வீரசோழியத்தில் கூறப்படுகின்ற உயிர் அளபெடை, குற்றியலுகரம், குற்றிய லிகரம் இவைகளையும் மாத்திரை நிலையில் பேசும்போது ஐகார

*சுப்பிரமணிய சாஸ்திரியார்

ஔகாரத்திற்கு 1½ மாத்திரை என்று பேசுவதால் ஐகார ஔகாரக் குறுக்கங்களையும் கூறியதாகவும் கொள்ளுகின்றனர். அவ்வாறே நேமிநாதமும் 'உயிர்மெய் அளபெடைகள், குற்றிய லுகரம், குற்றியலிகரம், ஐகார ஔகாரக் குறுக்கங்கள் ஆகிய வற்றைக் கூறுகின்றது. மாத்திரைபற்றிப் பேசும் போது மகரக்குறுக்கத்திற்கும் ஆய்தக் குறுக்கத்திற்கும் கால் மாத்திரை என்று கூறுவதால் அவைகளையும் சார்பெழுத்தெனக் கருதிய தாகக் கொள்ள வேண்டியிருக்கிறது. வீரசோழியம் 'பிணைந்த வர்க்கம் மறுவறு வல்லொற்று மெல்லொற்றுமாம்' எனவும், 'பாங்குடைய வல்லொற்று மெல்லொற்று வர்க்கம்' என நேமி நாதமும் வர்க்கம் பற்றிப் பேசுகின்றன. வர்க்கம் பற்றிய குறிப்பை, சார்பெழுத்தோடு பேசுவதற்குரிய தேவை தெளிவாகப் புலப்படவில்லை. இலக்கண விளக்கம், ஆய்தக் குறுக்கத்தை நீக்கிச் சார்பெழுத்துகள் ஒன்பது என்று பேசுகிறது. தொன்னூல் விளக்கம் நன்னூலைப் பின்பற்றுகிறது. ஆயின் விரிபற்றிச் சூத்திரத்தில் பேசவில்லை. முத்துவீரியம் உயிர் மெய்யும் தனிநிலையும் என இரண்டே சார்பெழுத்தெனப் பேசுகின்றது. முத்துவீரியம் சார்பெழுத்தை வரிவடிவ நிலை யிலும் ஏனைய இலக்கண நூல்கள் ஒலியெழுத்து முறையிலும் பார்க்கின்றன என்று கொள்ளலாம்—(இலக்கணத்தொகை—எழுத்து பக். 20, 21 (1967).

பிற குறிப்புகள்

டாக்டர் **ச. வே. சுப்பிரமணியன்** அவர்கள் தாம் தொகுத்த இலக்கணத் தொகை நூலில் குற்றியலிகரம் பற்றிய இலக்கண நூல்களின் நூற்பாக்களைத் தொகுத்து முடிவில்,

> "யகரம் ஒழிந்த ஏனைய மெய்களின் முன் யகரம் வரின் இகரம் தோன்றுகிறது. அதுவும் குறுகி ஒலிப்பதால் இங்குக் குற்றியலிகரம் எனக் கூறப்பட்டுள்ளது."

என்றெழுதி,

> **தன்னொழி மெய்முன் யவ்வரின் இகரம்**
> **துன்னு மென்று துணிநரு முளரே**

என்னும் நன்னூல் (206) நூற்பாவையும், இந்நூற்பாவையே மேற்கோளாகக் கொண்ட இலக்கண விளக்க நூற்பாவையும் (67) எடுத்தெழுதி,

பண்—யாழ்—பண்ணியாழ்	சிலம்பு.	5—185
தாலும்—யாழ்—தாலுமியாழ்	,,	22— 81
பேர்—யாக்கை—பேரியாக்கை	,,	28—172
நல்—யாழ்—நல்லியாழ்	,,	6—172
இருள்—யாமத்து—இருளியாமத்து	,,	27— 78
போக்குவன்—யான்—போக்குவனியான்	,,	16—129

என எடுத்துக்காட்டும் தந்தனர்—(இலக்கணத் தொகை—எழுத்து. பக்கம் 37)

இக்காட்டிய இகரம் குற்றியலிகரம் அன்று; சாரியை இகரமாம் என்பது சங்கரநமச்சிவாயர், சிவஞான முனிவர் கொள்கையாம். இகரம் என்பதற்கு 'இகரச்சாரியை' என்றே பொருள் எழுதினர்.

'துணிநரும் உளர்' எனப் பவணந்தியார் கூறியதிலிருந்து துணியாதாரே பலர் என்பது அவர் துணிபு என்பதும், தாமும் அவருள் ஒருவரே என்பதை, மெய்ம்முன் + யவ்வரின் என்பதை 'மெய்ம்முனியவ்வரின்' எனக் கூறாமையே சான்று என்பதும் அறியலாம். (முனியவ் எனப்பாடபேதமும் இல்லை)

தான் யான் நான் நீ (நன் 287), யான் யாம் நீ நீர் (247) எனப் பிற இடங்களிலும் இகரம் இன்றியே நூற்பாக்கள் அமைந்துள.

இவ்விகரத்தைக் குற்றியலிகரமாகக் கருதியிருப்பரேல் "அஃகிய இ முப்பானேழ்" (நன்.61) என்னாமல் 'அஃகிய இ முப்பானெட்டு' என்று கூறியிருப்பர்.

பண் + யாழ் = பண்ணியாழ் எனத் தொடர்மொழியில் வரும் இகரம் முற்றியலிகரம் குற்றியலிகரம் என்ற இரண்டனுள் எதில் அடங்கும் எனக் கூற வேண்டி அதன் ஒலிக் குறைவு காரணமாகக் குற்றுயலிகரத்தில் மொழியியல் அடிப்படையில் வைத்துக் கூறினார் இலக்கணத் தொகைத் தொகுப்பாசிரியர்.

தனிமொழிக் குற்றியலுகரத்துக்கு இடனும் பற்றுக்கோடும்.

**36. *நெட்டெழுத்து இம்பரும் தொடர்மொழி யீற்றும்
குற்றிய லுகரம் வல்லா றூர்ந்தே.** (3)

ஆ. மொ:

இல.

The shortened 'u' will appear with (upon the) hard consonants which follow long letters and stand at the end of words which have more than two letters.

க. சு.

The overshort 'u' will appear following an occulsive which occurs after long vowel, and in the final position of a toṭarmoḻi.

பி. இ. நூ.

வீர: 2. வன்மைமேல் உகரம் உறுவது நையும் தொடர் மொழிப் பின்னும் நெடிற்பின் னும்மே.

நேமி: 4. தொடர் நெடிற்கீழ் வன்மைமேல் உகரம்... குன்றும்.

நன்: 94. நெடிலோ டாய்தம் உயிர்வலி மெலியிடைத் தொடர்மொழி யிறுதி வன்மையூர் உகரம் அஃகும் பிறமேல் தொடரவும் பெறுமே.

இல. வி: 16. நெடிலோ டாய்தம் உயிர்வலி மெலியிடைத் தொடர்மொழி யிறுதி வன்மையூர் உகரம் அஃகும் என்மனார் ஆயுங் காலே.

தொன்: 15. தனிக்குறில் அல்லவற் றிறுதி வன்மை ஊர்ந்துளிக் குறுகும் உகரம் என்ப.

முத்து: 36. நெட்டெழுத் திம்பரும் தொடர்மொழி யீற்றும் குற்றிய லுகரம் வல்லா றூர்ந்தே.

சுவாமி: 8. தனிக்குறில் நீங்கு• உயிர்க்கணம் மூன்று ஆய்தம் என்று ஐந் தொடர்க்கீழ்ச் சார்வலியூர் உக்குறுகும்.

---

* அதிகார முறைமை, உயத்துக் கொண்டுணர்தல் ஆகிய உத்திகளுக்கு எடுத்துக்காட்டு. தொல். பொருள். 665 பேராசிரியர்.

இளம்பூரணர்

இது ஒரு மொழிக் குற்றியலுகரத்திற்கு இடமும் பற்றுக் கோடும் உணர்த்துதல் நுதலிற்று.

(இ — ள்.) நெட்டெழுத்திம்பரும் — நெட்டெழுத்தினது பின்னும், தொடர்மொழியீற்றும்—,தொடர் மொழியது இறுதி யினும், குற்றியலுகரம் வல்லாறு ஊர்ந்து (நிற்றல் வேண்டும்) —குற்றியலுகரம் வல்லெழுத்து ஆறினையும் ஊர்ந்து ([1] நிற்றலை வேண்டும் ஆசிரியன்.)

தந்து புணர்ந் துரைத்தல் (மரபு. 110) என்னும் தந்திர உத்தியான் முன்னின்ற [2]'நிற்றல் வேண்டும்' என்பது ஈண்டும் புணர்க்கப்பட்டது.

எ—டு; நாகு, வரகு எனவரும்.

நெட்டெழுத்திம்பரும் தொடர்மொழி யீறும் இடம்; வல்லெழுத்துப் பற்றுக்கோடு. இவ்வாறு இடமும் பற்றுக் கோடும் கூறவே, மொழிக்கு ஈறாதலும் கூறியவாறாயிற்று.*

நச்சினார்க்கினியர்

இஃது ஒரு மொழிக்குற்றியலுகரத்திற்கு இடனும் பற்றுக் கோடும் உணர்த்துகின்றது.

இ—ள்: குற்றியலுகரம் வல்லெழுத்துக்கள் ஆறினையும் ஊர்ந்து, நெட்டெழுத்தின் பின்னும் ஐவகைத் தொடர் மொழியின் இறுதியினும் நிற்றல் வேண்டும் ஆசிரியன்; எ—று.

நெட்டெழுத்தினது பின் தொடர்மொழியினது ஈறு என நிலத்ததகலம் போல ஒன்றியற்கிழமைப்பட்டு நின்றது.

சு. வே: 1. நிற்றல்

2. நிற்றல் என்பது

*குற்றியலுகரம் மொழிக்கு இறுதியில் வரும் எனயாண்டும் கூறாமையின் இவ்வாறு எழுதினார்.

அம்மொழியிற்றீர்ந்து குற்றியலிகரம் நில்லாமையின்*. வல்லாறு: பண்புத்தொகை; முற்றும்மை தொக்கு நின்றது. அதிகார முறைமை என்னும் உத்தியான் நிற்றல் வேண்டும் என்பது வருவிக்க.

எ—டு: நாகு, வரகு, தெள்கு, எஃகு, கொக்கு. குரங்கு என வரும். இவ்வாறு வகையும் இடம்; வல்லெழுத்துப் பற்றுக்கோடு. எனவே, மொழிக்கு ஈறாதலும் பெற்றாம். பெருமுரசு, திருமுரசு, என்பன இரு மொழிக்கண் வந்த[1] முற்றுகரம். பரசு, இங்கு, ஏது[2] என்னும்[3] முற்றுகரங்கள் வடமொழிச் சிதைவு. தருக்கு, அணுக்கு என்பன வினைக்கண் வந்த முற்றுகரம். குற்றுகரத்திற்கு முன்னர் வந்த உயிர் ஏறிமுடிய அரை மாத்திரையாய் நிற்றலும், முற்றுகரத்திற்கு முன்னர் வந்த உயிர் ஏறி முடியாமையும் தம்முள் வேற்றுமை.

சுப்பிரமணிய சாஸ்திரியார்

மொழிகள் ஓரெழுத்தொருமொழி, ஈரெழுத்தொருமொழி தொடர்மொழியென மூவகைப்பட்டன எனவும், நெட்டெழுத்தேமே ஓரெழுத்தொருமொழியாக வருதல் கூடும் எனவும் 45, 43 ஆவது சூத்திரங்களில் கூறப்பட்டமையான் "நெட்டெழுத்திம்பர்" என்றதற்குக் கருத்து வகையான் 'நெட்டெழுத்தைக் கொண்ட ஈரெழுத்தொருமொழியின் இறுதியின்கண்' எனப் பொருள் கொள்ளல் வேண்டும். இவ்வாறே "நெட்டெழுத்திம்பர் ஒற்று மிகத் தோன்றும்" (எழுத்-196) என்ற இடத்தும் கொள்ளல் வேண்டும்.

---

*இரு பொருள் போலக் கூறப்படினும் ஒரு பொருளாகவே இயலும் உரிமை ஒன்றியற்கிழமை எனப்படும். இது ஆறாம் வேற்றுமைக்குரியது. நிலத்தது அகலம் என்ற விடத்து நிலம் அகலம் என இரணடு பொருள் போலக் கூறினும்; நிலத்திலேயே அகலம் பிரிக்க முடியாதபடி ஒன்றியிருத்தலின் அதுஒன்றியற் கிழமையாயிற்று. அதுபோல நெட்டெழுத்தினது பின்னும் என்ற இடத்தில் நெட்டெழுத்தைவிட்டு விலகிப் பின்னால் குற்றியலுகரம் உண்டு என்ற பொருள் படாமலும், தொடர்மொழியீற்றில் குற்றியலுகரம் உண்டு என்றால் தொடர்மொழி வேறு இறுதி வேறு என்று பொருள் படாமலும் நெட்டெழுத்தைச் சார்ந்து பின் என்றும் தொடர்மொழியினைச் சார்ந்து இறுதி என்றும் கொள்ளுதல் வேண்டும். நாகு என்பது நெடில் தொடர்க் குற்றுகரம். நெடில் தொடர்வேறு இறுதிக் குற்றுகரம் வேறு என்பதில்லை. வரகு என்ற விடத்துத் தொடர் மொழி வேறு; அதன் இறுதிக் குற்றுகரம் வேறு இல்லை.

சு. வே.: 1. குற்றுகரம் 2. என்பன. 3. முற்றுகர வீறாகிய

குற்றியலுகரம் குற்றெழுத்தைக் கொண்ட ஈரெழுத்தொரு மொழியில் தோன்றாதெனவும், நெட்டெழுத்தைக் கொண்ட ஈரெழுத்தொருமொழியில் தோன்றுமெனவும், தொடர் மொழியில் எங்கும் வல்லெழுத்தைச் சார்ந்து ஈற்றில் தோன்றும் எனவும் கூறுவதற்காகவே மொழியை மூவகையாக வகுத்தனரே யன்றி வடமொழியைப் பின்பற்றி அவ்வாறு வகுத்தனரல்லர், வடமொழியில் மொழி அவ்வாறு வகுக்கப்படாமையின். நன்னூலார் மொழியை இருவகையாகப் பிரிப்பினும், ''நெடிலோடு''(நன் 94, 183)என்று அவர் கூறுமிடத்து நெடிலைக் கொண்ட ஈரெழுத்தொருமொழியையே நாம் கொள்ள வேண்டி யுள்ளது.

இச்சூத்திரவுரையில், 'பரசு, இங்கு, ஏது என்பன முற்றுகர வீறாகிய வடமொழிச்சிதைவு' என நச்சினார்க்கினியர் கூறு கின்றனர். அவ்வாறு கூறுதற்குக் காரணம் புலப்படவில்லை. சொற்களை இயற்சொல் திரிசொல், திசைச்சொல், வடசொல் என நான்கு வகையாகப் பிரித்து

''வடசொற்கிளவி.........சொல்லாகும்மே'' (சொல் 401)

''சிதைந்தன...........வரையார்'' (சொல் 402)

எனக் கூறுகின்ற ஆசிரியரது கொள்கையில் 'பரசு' முதலிய சொற்கள் செய்யுளீட்டச் சொற்களுள் ஒன்றாகிய வடசொல் லாதலின், அவையும் தமிழ் இலக்கணத்தடங்கியவாகலின், அவற்றின் ஈற்றிலுள்ள உகரம் முற்றுகரம் என்பது எவ்வாறு பொருந்தும்?

புணர் மொழிக் குற்றியலுகரம்

37.* இடைப்படிற் குறுகும் இடனுமார் உண்டே
கடப்பாடு அறிந்த புணரிய லான. **(4)**

ஆ. மொ:

இல.

There is place to have it shortened still in the conjunction of two words.

That will be explained in the chapter on conjuntion of shortened 'u'

க. சு.

There is also place for the shortening [of u] in word combination; it will be properly explained in the section on conjunction.

---

* மொழிவாம் என்னும் உத்திக்கு மேற்கோள்—தொல்—பொருள் 665, பேராசிரியர்.

இளம்பூரணர்

இது குற்றியலுகரம் 'புணர்மொழியுள்ளும் வரும் என்பது உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள் : இடைப்படினும் குறுகும் இடன் உண்டு—(அவ்வுகரம்) புணர்மொழி இடைப்படினும் குறுகும் இடம் உண்டு, (அதன் இடமும் பற்றுக்கோடும் யாண்டோ பெறுவ தெனின்) கடப்பாடு அறிந்த புணரியலான—அதன் புணர்ச்சி முறைமை அறியும் குற்றியலுகரப் புணரியலின் கண்ணே.

'இடைப்படினும் குறுகும்' என மொழி மாற்றி உரைக்க. அக் குற்றியலுகரப் புணரியலுள்,

வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து வருவழித்
தொல்லை யியற்கை நிலையலும் உரித்தே (குற். புண. 4)

என்பதனுள் வல்லொற்றுத் தொடர் மொழியும் வல்லெழுத்து வருவழியும் இடம். அவ்வல்லொற்றுத் தொடர்மொழி யீற்று வல்லெழுத்துப் பற்றுக்கோடு.

எ—டு : செக்குக் கணை, சுக்குக் கோடு எனவரும்.

இடன் என்றதனால் இக்குறுக்கம் சிறுபான்மை என்றுணர்க.

நச்சினார்க்கினியர்

இது குற்றியலுகரம் புணர்மொழிக்கண் தன் அரை மாத்திரையிற் குறுகி வரும் என்கின்றது.

இ—ள் : அவ்வுகரம் ஒரு மொழியுளன்றிப் புணர்மொழி யிடைப்படின் தன் அரை மாத்திரையினும் குறுகும் இடனும் உண்டு; அதற்கு இடனும் பற்றுக்கோடும் யாண்டுப் பெறுவ தெனின், அதன் புணர்ச்சி முறைமை அறியும் குற்றியலுகரப் புணரியலுள்; எ. று.

"வல்லொற்றுத் தொடர்மொழி" (எழு. 409) என்பதனுள் வல்லெழுத்துத் தொடர்மொழியும் வல்லெழுத்து வரும் வழியும் இடம்; ஈற்று வல்லெழுத்துப் பற்றுக்கோடு.

எ—டு : செக்குக் கணை, சுக்குக் கோடு என வரும். இவை அரை மாத்திரையிற் குறுகியவாறு ஏனையவற்றோடு படுத்து உணர்க. இடனும் எனவே இது சிறுபான்மையாயிற்று.

வேங்கடராசுலு ரெட்டியார்

"இது குற்றியலுகரம் புணர்மொழிக்கண் தன் அரை மாத்திரையிற் குறுகிவரும் என்கின்றது" என்று கருத்துக் கூறி, 'இடைப்படிற்....உண்டே' என்பதற்கு, 'அவ்வுகரம் ஒருமொழி யுளன்றிப் புணர்மொழியிடைப்படின், தன் அரை மாத்திரை யினும் குறுகும் இடனும் உண்டு' என்று பொருள் கூறி, 'வல்லொற்றுத் தொடர்மொழி' என்னும் சூத்திரத்தால், அரை மாத்திரையிற் குறுகுதலை விதித்தாரால் ஆசிரியர் நச்சினார்க் கினியர் எனின், அது பொருந்துவதன்று. என்னையெனின், ஆசிரியர், சார்பெழுத்துக்களை யுணர்த்தத் தொடங்கி. முறையே இவ்வியலின் முதற் சூத்திரத்தால் தனிமொழியில் உள்ள குற்றியலிகரத்தைக் கூறி, இரண்டாஞ் சூத்திரத்தால் புணர்மொழியகத்துத் தோன்றும் குற்றியலிகரத்தை உணர்த் தினார். அவ்வாறே தனி மொழியில் உள்ள ஆய்தவெழுத்தினை முதற்சூத்திரத்தால் (மொழி. 5) உணர்த்தி, புணர்மொழி யகத்துத் தோன்றும் ஆய்த எழுத்தினை இரண்டாஞ் சூத்திரத் தால் (மொழி. 6) முன்னர் உணர்த்துகின்றார். ஆதலின், அம் முறைப்படியே குற்றியலுகரத்தையும் கூறுவார், முதற் சூத்திரத் தால் (மொழி. 3) தனி மொழியிலுள்ள குற்றியலுகரத்தை யுணர்த்தி, இரண்டாஞ் சூத்திரத்தால் (மொழி. 4) புணர் மொழி யகத்துத்தோன்றுங் குற்றுகரத்தை உணர்த்துவதே நியாயமாத லின் என்க. இது கருதியே இளம்பூரணவடிகள் 'குற்றியலுகரம் புணர் மொழியுள்ளும் வரும் என்பது உணர்த்துதல் நுதலிற்று' என்றுகருத்துரைத்து, அவ்வாறே உரைகூறினார். வல்லொற்றுத் தொடர்மொழி' என்னுஞ் சூத்திரத்திற்கு ஆசிரியர் நச்சினார்க் கினியர் கூறும் பொருள் பொருந்தாமை ஆண்டு விளக்கப்படும்.

வெள்ளை வாரணனார்

இங்ஙனம் (நச்சினார்க்கினியர் பொருள் கொண்டவாறு) கொண்டாலன்றி இச்சூத்திரம் புணர்மொழிக் குற்றியலுகரத்தை யுணர்த்திற் றென்றல் பொருந்தாது. உகரம் குறுகும் இடம் ஈரெழுத்தொருமொழி முதல் அறுவகையிடம் எனக் கூறிப் போந்த ஆசிரியர், அது புணர்மொழியிடைப்படின் தன் அரை மாத்திரையினும் குறைந்து ஒலிக்குமிடத்தைப் புணர்மொழிக் குற்றியலுகரமாகவுரைத்துச் செல்லுதலே பொருத்தமுடைத்து.

"அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்
எல்லா இறுதியும் உகரம் நிறையும்" (குற்றி. புண. 4)

எனப் பாடங் கொண்டு, ஆறு தொடரின் கண்ணும் குற்றிய லுகரம் வரும் எனப் பொருள் கொள்ளாது, ஒரு மாத்திரையில் குறுகாது நிற்கும் எனப் பொருள் கொண்டு, அவ்வாற்றான் எல்லா இறுதிக் குற்றியலுகரமும் தன் அரை மாத்திரையின் மிக்கொலிக்கும் எனவும், வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து முதன்மொழி வருமிடத்து முற்கூறிய அரை மாத்திரையாகிய பழைய இயல்பின் கண்ணே நிற்றலும் உரித்து எனவும் கூறி, இச்சூத்திரம் தன்னியல்பாகிய அரை மாத்திரை பெற்றுச் சிறுபான்மையாய் வருமிடத்தையே சுட்டிற்றெனவும் கொள்வர் இளம்பூரணர். ஒரு மொழிக் கண்ணுந் தம் அரை மாத்திரையியல்பினவாய் வரும் குற்றியலுகரங்களை அரை மாத்திரையின் மிக்கொலிப்பன எனக் கோடலும், வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து வருமிடத்து அரை மாத்திரையிற் சிறிது குறைந்தொலிப்பனவற்றை அரை மாத்திரையியல்பாக ஒலிக்கும் எனக் கோடலும் வழக்கிற்கும் விதிக்கும் பொருந்தாவாம். ஆசிரியர் 'அவ்வியல் நிலையும் ஏனை மூன்றே' என்பதனால் குற்றியலுகரத்திற்கு அரை மாத்திரையியபெனக் கூறினார். வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து வரு வழியல்லது அரை மாத்திரை பெறாது மிக்கொலிப்பனவாயின் ஆசிரியர் அரை மாத்திரை பெறுமென விதிப்பதற்கு இன்றியமையாமை ஏதும் இல்லை. அதனால் ஆசிரியர் கருத்துப் படி ஆறீற்றுக் குற்றியலுகரமும் தன் அரை மாத்திரையின் மிகாது இசைக்கும் என்பதே பொருத்தமுடைத்து. இச்சூத்திரத் தில் இடைப்படிற் குறுகுமிடத்தைச் சிறுவரவிற் றெனச் சுட்டினமையாலும் ஒருமொழி யிடத்தே அரை மாத்திரை பெற்று நிற்பன வல்லெழுத்து முதன்மொழி வருவழிக் குறுகு மெனக் குற்றியலுகரப் புணரியலுள் கூறினமையான் அவ்வரை மாத்திரையிற் குறுகும் என்பதே அச்சூத்திரக் கருத்தாகலானும் நச்சினார்க்கினியர் உரைத்த உரையே பொருந்தும் என்க.

சிவலிங்கனார்

'கொக்குக் கடிது' என்பதில் 'கொக்கு' என்பதின் இறுதி உகரம் குற்றியலுகர நிலையிலும் முற்றியலுகர நிலையிலும் இளம்பூரணர் காலத்தில் ஒலிக்கப் •பெற்றிருத்தல் வேண்டும்; எழுத்தின் ஒலி கால இடங்களால் மாறுபடுதல் உண்டு. 'ழ' என்ற எழுத்தின் ஒலி தமிழகத்தின் தென்பகுதியில் 'ள' ஆகவும் வடபகுதியில் 'ய' ஆகவும் ஒலிக்கப் பெறக் காணலாம் (பழம்—பளம்—பயம்) அவ்வாறே நுணுகி யறியும் நிலையில் வன் தொடர்க்குற்றியலுகரங்கள், வல்லெழுத்து முதல்மொழி வரும்

போது முற்றுகரங்களாகப் பெரும்பான்மையிலும், குற்றுகரங்களாகச் சிறுபான்மையிலும் மக்களிடையே ஒலிக்கப் பெற்றிருக்கலாம்.

நச்சினார்க்கினியர் தாம் ஒலித்துக் கண்ட முறைக்கேற்பக் கொக்குக்கடிது என்பதில் 'கொக்கு' என்பதன் உகரத்துக்குக் கால்மாத்திரை யிருப்பதாகக் கண்டமையால் தம்போக்கில், 'புணர்மொழியிடத்துச் சிறுபான்மை' குற்றியலுகரம் தன் அரை மாத்திரையை விட்டுக் கால்மாத்திரை பெறும்' என்றார்.

முற்றுகரத்தையும் குற்றுகரமாகவே ஒலிக்கும் இக்காலத்தில் உரையாசிரியர் இருவருள் எவர் உரை சிறந்தது எனக் கூற இயலாது.

தேவநேயப் பாவாணர்

குற்றியலுகரந் தனிமொழி யிறுதியில் நிற்கும்போது அரை மாத்திரைபெறும்.

அது மெய்யீறுபோல் புள்ளிபெற்றும் வருமொழி உயிரேற இடங் கொடுத்தும் நிற்கும்.

அரைமாத்திரையளவுள்ள குற்றியலுகரம் இயல்பானதே.

ஒருமாத்திரையளவுள்ள முற்றுகரம் அரை மாத்திரையாக விகாரப்பட்டு நின்றதன்று.

அஃது உயிரீறும் அன்று; மெய்யீறும் அன்று. அவ்விரண்டின் வேறுபட்டதான சார்புஈறு

தனிமொழியிறுதியில் அரைமாத்திரை பெற்று நிற்கும் குற்றுகரம் தொடர்மொழியிடைப்படும்போது ஒருமாத்திரை பெறுகின்ற முற்றுகரமாக மாறிவிடும். விதிவிலக்காக வருமொழி முதலில் உயிர்வரும்போது நிலைமொழி யிறுதியில் நின்ற ஆறு தொடர்க் குற்றியலுகரமும் வருமொழிமுதலில் வன்கணம் வருகிறபோது நிலைமொழியிறுதியில் நின்ற வன்றொடர்க் குற்றியலுகரமும் மட்டும் அரைமாத்திரை பெறும் முற்றுகரமாகவே நிற்கும். இவை தொல்காப்பியர் கருத்து.

குற்றியலுகரம் என்பதற்குக் குறிதாகிய இயல்பினையுடைய உகரம் என்று பொருள். எவ்வாறு அகரம் தன்இயல்பில் நிற்பினும் தன்னைக் காட்டிலும் நெடிய ஓசையையுடைய ஆகாரத்தை நோக்கக் குறுகிய ஓசையுடைமையால் குற்றெழுத் தெனப்பட்டதோ அவ்வாறே அரைமாத்திரை அளவுள்ள

விகாரப்படாத இயல்பான குற்றியலுகரமும் தன்னின் நெடிதாகிய முற்றுகரத்தை நோக்கக் குறுகிய ஓசையுடைமையால் குற்றியலுகரம் எனப்பட்டதே தவிர இடமும் பற்றுக் கோடும் காரணமாகக் குறுகி ஒலித்ததால் அன்று.

—(தென்மொழி-சுவடி 3. ஓலை 12. பக்கம் 14. 1966 சனவரி)

காது, கட்டு, கத்து முதலியன ஏவல் வினையும் தொழிற் பெயருமாய்ப் பொருள் வேறுபடுவது முற்றுகர குற்றுகர வேறு பாட்டினாலன்று; ஒலியழுத்த (Accant) இடவேறுபாட்டி னாலேயே. ஏவல் வினையாய் நிற்கும்போது ஈற்றசையிலும், தொழிற்பெயராய் நிற்கும்போது முதலசையிலும் ஒலியழுத்தம் விழும். இதைக் கட்டு என்று ஏவல் வினையாய் ஆளும்பொழுது டுகரத்தின் மேலும், கட்டு கட்டாய்க் கட்டினான் என்று வினைப் பெயராய் ஆளும்பொழுது ககரத்தின்மேலும் ஒலியழுத்தம் விழும். ஒலியழுத்தத்தினால் குற்றியலுகரம் இதழ்குவித் தொலிக்கும் முற்றுகரமாகி விடாது.

—(தென்மொழி சுவடி 3. ஓலை 11. பக் 23. 1965)

தா. ஏ. ஞானமூர்த்தி

குற்றியலுகரத்தினை உகர உயிரின் குறுக்கமாகத் தொல் காப்பியர் கருதவில்லை. சொல்லீற்றில் வல்லொலி வருங்கால் அதனோடு இயல்பாகச் சேர்ந்தொலிக்கும் ஒலித்துணையாகவே தொல்காப்பியர் குற்றியலுகரத்தைக் கொண்டுள்ளார்.

ஆறுவல்லொலிகளை ஊர்ந்துவரினும் குற்றியலுகரஒலி ஒரே தன்மையாகவே ஒலிக்கிறது. ஆறுவல்லொலிக் கேற்ப ஆறு வகையாக அது ஒலிப்பதில்லை. எனவே தொல்காப்பியர் குற்றிய லுகர ஒலியை ஓர் ஒலியாகவே கருதுகிறார். அது புணர்ச்சியில் பல மாற்றம் எய்துவதால் அதனை ஆறுவகையாகத் தொல்காப் பியர் வகைப்படுத்தியுள்ளார்.

தனிச்சொற்களின் ஈற்றில் குற்றியலுகரம் வரும் என்பது தொல்காப்பியர் .கருத்து. குற்றியலுகர ஈற்றுச் சொல்லைத் தொடர்ந்து வேறொருசொல்வரின் குற்றியலுகரம் மொழி யிடையே வந்ததாகி விடுகிறது. குற்றியலுகரம் மொழியீற்றிலே தான் வரும். மொழியிடையே வராது. எனவே புணர்மொழியில் மொழியிடையே வரும் குற்றியலுகரம் முற்றுகரமாகிவிடுகிறது. புணர்மொழிகளில் குற்றியலுகரம் வரும் என்று நச்சினார்க் கினியர் கூறும் உரை பொருத்தமற்றதாகிவிடுகிறது. தொல்காப்

பியர் சார்பெழுத்துக்களின் இலக்கணம் கூறுங்கால் அவை ஒவ்வொன்றும் தனிமொழியில் வருவது பற்றியும் குறிப்பிட்டுள்ளார். மற்ற சார்பெழுத்துகளாகிய குற்றியலிகரமும் ஆய்தமும் புணர்மொழிகளில் தமக்குரிய மாத்திரையினின்றும் குறைந்துவரும் என்று அவர் கூறவில்லை. குற்றியலுகரம் மட்டும் புணர்மொழியில் தனக்குரிய மாத்திரையினின்றும் குறைந்துவரும் என்று நச்சினார்க்கினியர் எங்ஙனம் கொள்ள முடியும்? ஏனைய இரண்டு சார்பெழுத்துகளுக்கும் புணர்மொழியையொட்டிக் கூறிய இலக்கணம் குற்றியலுகரத்திற்கும் பொருந்துவதாகும். எனவே நூற்பா 408, 409 ஆகியவற்றிற்கு இளம்பூரணர் கூறும் விளக்கமே தொல்காப்பியர் காலத்தமிழ் மொழியின் நிலையை உண்மையாகக் குறிப்பதாகும்.

—(தொல்காப்பிய மொழியியல் பக். 81. அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு. (1972))

ஆய்தம் தனிமொழியுள் வருமாறு

38.* **குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி**
உயிரொடு புணர்ந்த வல்லாறன் மிசைத்தே **(5)**

ஆ. மொ.

இல.

The dot-shaped āytham stands between short letters and hard consonants, joined to vowels.

க. சு.

The *āytam* [symbolized by] dot [s] is preceded by short vowel and followed by short vowel and by a plosive combined with the vowel.

பி. நூ.

வீர: 1, 2. நடுவாய்தம்
நேமி: 1, 2, 3. ஆய்தம் இடைமேவும்

* ஒருதலை யன்மை என்னும் உத்திக்கு மேற்கோள்.—தொல்—பொருள். 665 பேராசிரியர்.
ஆய்தம் பேடு இனம்—நஞ்செழுத்து—நரக்கதிக்குரியது—முத்துவீரியம் 1031, 1032.

நன்: 90. குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி
உயிரொடு புணர்ந்த வல்லாறன் மிசைத்தே.

இல.வி: 17. ஷை ஷை ஷை ஷை.

தொன்: 13. ஆய்தம் குறில் வலிக்கு ஆகும் நடுவே.

முத்து: 25. தனிநிலை குறில்வலி தனக்கிடைவருமே.

சுவாமி: 8. உனித்தெரி நெஞ்சொல்யான் அங்காந்தி யன்று குறிற்கீழ்
உயிர்ச்சார் வலிமேல் ஒற்றியல்போல் வரும் ஆய்தப்புள்ளி.

இளம்பூரணர்

இது, ஒருமொழி ஆய்தம் வருமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: ஆய்தப்புள்ளி — ஆய்தமாகிய புள்ளி, குறியதன் முன்னர்—குற்றெழுத்தின் முன்னர், உயிரொடு புணர்ந்த வல் ஆறன் மிசைத்து—உயிரொடு புணர்ந்த வல்லெழுத்து ஆறன் மேலது.

எ—டு: எஃகு, கஃசு எனவரும்.

குறியதன் முன்னரும் வல்லெழுத்து மிசையும் இடம். இஃது உயிரன்மையின், இதற்குப் பற்றுக் கோடு என்பதில்லை. கஃறீது என்பதனை மெய் பிறிதாகிய புணர்ச்சி (புணரியல்.7) என்பவாகலின், 'புள்ளி' என்றதனான் ஆய்தத்தை மெய்ப்பாற் படுத்துக் கொள்க* ஈண்டுப் பெரும்பான்மையும் உயிர்என்றது, மேல் 'ஆய்தத்தொடர்மொழி' (குற், புணரியல்.1) என்றோதலின் குற்றியலுகரத்தினை. வெஃகாமை முதலிய பிற உயிர் வரவு சிறுபான்மையெனக் கொள்க.

சு. வே. 1. உயிரின்மையின்

'கஃறீது' என்பது கல் + தீது எனப்பிரிக்கப்படும். 'கல்' என்பதன் இறுதி லகரமெய். அது வருமொழியாகிய 'தீது' என்பதன் முதல் தகர எழுத்துடன் சேரும்போது ஆய்தமாகத்திரிந்தது. ஒருமெய் பிறிதொரு மெய்யாகவே திரியும். ஆதலின் லகரமெய் பிறிதான ஆய்தமாகத் திரிந்ததெனின் ஆய்தமெய்யாகத் திரிந்த தெனவே படும். எனவே ஆய்தமும் மெய் எனப்படும். மெய்யெழுத்தைப் புள்ளியெழுத்து எனவும் கூறுப. இங்கு ஆசிரியர் ஆய்தப்புள்ளி என்றதனால் ஆய்தமெய் எனக் கொள்ளல் வேண்டும்.

நச்சினார்க்கினியர்

இது நிறுத்த முறையானே ஆய்தம் ஒரு மொழியுள் வருமாறு கூறுகின்றது.

(இ—ள்.) ஆய்தமாகிய ஒற்று, குற்றெழுத்தின் முன்னதாய் உயிரொடு கூடிய வல்லெழுத்து ஆறின் மேலிடத்ததாய் வரும்; எ—று.

'வல்லாறன் மிசைத்து' என்றதனாலும் ஈண்டுப் 'புள்ளி' என்றதனாலும், ஆய்தத் தொடர்மொழி (எழுத்.409) என மேற் கூறுதலானும் உயிர் என்றது ஈண்டுப் பெரும்பான்மையும் குற்றுகரமேயாம். சிறுபான்மை ஏனை உயிர்களையும் கொள்க.

எ—டு: எஃகு, கஃசு, கஃடு, கஃது, கஃபு, கஃறு, அஃது, இஃது, உஃது எனவரும். கஃறீது, முஃடீது என்பனவற்றை மெய்பிறிதாகிய புணர்ச்சி என்றதனாலும் ஈண்டுப் புள்ளி யென்றதனாலும் ஆய்தமும் மெய்யாயிற்று

அஃகாமை, வெஃகாமை, அஃகி, வெஃகி, அஃகம் எனப் பிறவுயிர்களோடும் வந்தது. கஃசியாதெனத் திரிந்ததுவுங் குற்றியலுகரத்தோடு புணர்ந்ததாம்.

வெள்ளை வாரணனார்

குற்றெழுத்தின் முன்னரும் உயிரொடு புணர்ந்த வல்லெழுத் தின் மேலுமாக இவ்வாய்தவொலி வருமென்று தொல்காப்பியர் வரையறை கூறியதனால் அவர் காலத்து அவற்றிடையே யல்லது ஆய்தம் பயின்று வழங்காமை தெளியப்படும். இவ்வாய்தவொலி வல்லெழுத்தாறன் மேலதாய் நின்று அவற்றின் வல்லோசையை மெலிவித்து நிற்பதாகும். இவ்வாறு வல்லெழுத்துக்களுக்கு முன்னர் நின்று அவற்றினோசையை மென்மைப் படுத்தி நிற்கும் இயல்பிற்று ஆய்தம் என்பதனை யுணர்ந்த காலஞ் சென்ற உயர் திரு. மாணிக்க நாயகரவர்கள் இவ்வெழுத்தின் துணையால் பிற மொழியில் வழங்கும் எல்லா வொலிகளையும் தமிழ் மொழிக் கண் குறித்து வழங்குதல் கூடும் என்று ஆராய்ந்து விளக்கி யுள்ளார்கள். இவ்வெழுத்தின் துணையால் 'காஃபி' முதலிய பிறமொழிச் சொற்களைத் தமிழ் ஒலி எழுத்துக்களால் வழங்க வழிகாட்டியவரும் அவரேயாவர்.

ச. வே. சுப்பிரமணியன்

ஆய்தத்தைத் தொல்காப்பியமும் ஏனைய சில இலக்கணங் களும் சார்பெழுத்தென்றே பேசுகின்றன. வீரசோழியம்

உயிருக்கும் மெய்க்கும் நடுவாந்தன்மையில் அமைந்திருப்பதால் நடுவாய்தம் (1, 2) என்று குறிப்பிடுகின்றது. நேமிநாதம் ஆய்தத்தை முதல் எழுத்துள் அடக்கிப் பேசுகின்றது. ஏனைய சார்பெழுத்துக்களெல்லாம் முதல் எழுத்து அமைந்திருப்பதைப் போன்று ஆய்தத்திற்கு அமையவில்லை. ஆய்தத்தைச் சார்பெழுத்தாகக் கொண்டால் ஆய்தக் குறுக்கத்தைச் சார்பில் சார்பாகக் கொள்ளுதல் வேண்டும். அல்லது நேமிநாதம் குறிப்பதைப் போன்று ஆய்தத்தை முதல் எழுத்தாகக் கொண்டு ஆய்தக் குறுக்கத்தைச் சார்பெழுத்தாகக் கொள்ளலாம். ஆய்தம் என்றுமே ஆய்வதற்குரிய ஒன்று. வழக்கில் மிக அருகியே பயன் படுகின்றது.

(இலக்கணத்தொகை, எழுத்து. பக்கம் 27. திருவனந்தபுரம், கேரளப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை வெளியீடு 1967)

கு. கோதண்டபாணி பிள்ளை

தொல்காப்பியர் ஆய்தத்தைக் குறிப்பிடுமிடத்து 'ஆய்தப் புள்ளி' என்று குறிப்பிடுகின்றார். (எழுத். 38) ஆய்த எழுத்து என்றோ ஆய்த ஒலி என்றோ இதைக் குறிப்பிட்டாரிலர். தமிழ் எழுத்துக்களில் ஆய்தம் மட்டுமின்றி வேறு சில எழுத்துக்களும் புள்ளியிடப் பெறுகின்றன. இவ்வாறு புள்ளியிடுதல் ஏதாவது ஒரு கருத்தைக் குறிப்பிடுவதற்காகவா, அல்லது ஒரு நியதியை— ஒரு ஒழுங்கு முறையைப் பின்பற்றி இவை புள்ளி பெற்றனவா என்பனவற்றைப் பற்றி இங்கு ஆராயப் பெறுகின்றது.

....

ஆய்தம் என்பது 'ஆய்' என்னும் தூய தமிழ்ச் சொல்லின் அடியாகப் பிறந்தது; நுண்மையை யுணர்த்துவது. இங்கு நுண்ணிய எழுத்தொலி ஒன்றைக் குறிப்பிடும் புள்ளியாக அஃது இயங்கியது. தனக்கென ஒரு வடிவம் அற்று எந்த எழுத்தைச் சார்ந்து வருகின்றதோ அந்த எழுத்தின்மேல் இடப்பெறும் ஒரு புள்ளியாகி 'ஆய்தப் புள்ளி' எனப் பெயர் பெற்றது. இவ்வாய்தம் நுண்மையை யுணர்த்தும் என்பது "ஒய்தல் ஆய்தல்.....உள்ளதன் நுணுக்கம்" (உரியியல் 32) என்னும் நூற்பாவால் தெளிவுபெறுகிறது. உள்ளதோர் எழுத்தொலியின் நுணுக்கமே ஆய்தம். அந்நுணுக்கத்தைக் குறிப்பிட இட்ட குறியீடே ஆய்தப் புள்ளி.

ஆய்தத்தை முக்கூட்டுப் புள்ளியாக்கி ஒரு வரிவடிவம் பெறச் செய்ததன் தீமைகள் பல. வடமொழியின் விசர்க்கம் போல உயிர் எழுத்துக்களின் இறுதியில் அது சேர்க்கப் பெற்றது.

'ஆசிருதம்' என்ற வடசொல்லின் அடியாகப் பிறந்தது, கேடயம் போன்றது என்ற கொள்கைகள் எழுந்தன. தனக்கென ஓர் இயல்பற்றது எனத் தொல்காப்பியர் குறிப்பிட்டதற்கு மாறாக ஒரு தனியியல்பு பெற்றது. அஃகேனம் என ஓர் எழுத்தாகி. ககரத்திற்கு முந்திய எழுத்துமாகக் கொள்ளப்பட்டது. ககர ஒலியின் மெலிவிற்கே (ஹ் என்னும் ஒலிக்கே) உரியதாக்கப் பெற்றது.

ஆய்தப் புள்ளியை இடும் இடம் யாது? எழுத்தின் மேலா? அல்லது அதன் பக்கத்திலா? ஆய்தப் புள்ளி வல்லெழுத்து ஆறன் மேலே இடப் பெற்றது என்பது தொல்காப்பியத்திலிருந்து தெரி கின்றது.

"குறியதன் முன்னர்......மிசைத்தே" (மொழி மரபு. 5)

'மிசைத்தே' என்ற சொல்லைக் காண்க. மிசை என்பது மேலே எனப் பொருள்படும். ஆய்தத் தொடரில் ஆய்தம் புள்ளி பெற்று 'எகு' என இவ்வாறு எழுதப் பெற்றிருத்தல் வேண்டும். இப் பொழுது எழுதப் பெறுவது போல 'எஃகு' என எழுதப் பெற்ற தன்று; சார்ந்துவரும் எழுத்தின் முன்னர் ஆய்தப் புள்ளி இடப் பட்டதன்று. கசு என்ற ஆய்தத் தொடர் இப்போது கஃசு என எழுதப் பெறுகின்றது. இதன் ஒலிப்பு 'கஸு' என்றிருத்தல் வேண்டும். ஆனால் இப்போது அது கஃசு என்றெழுதப் பெற்று கஹ்ஸு என்று ஹ என்னும் ஒலியும் சேர்ந்து ஒலிக்கப் பெறு கின்றது. ஆய்தம் அஃகேனம் எனத் தனி எழுத்தாக ஆக்கப் பட்டதாலும், ஆய்தப்புள்ளி எழுத்தின் மிசையன்றி அதன் முன்னர் இடப்பட்டதாலும் ஹ் என்னும் ஒலி இங்குச் சேர்ந்தது போலும்.

ஆய்தப் புள்ளி இறுதி எழுத்தின் மேலே இடப்பட்டதே யன்றி அவ்வெழுத்தின் முன்னரோ பின்னரோ சேர்க்கப்பட்ட தன்று என்பதை மற்றொரு நூற்பா உறுதி செய்கின்றது.

யாதென் இறுதியும் சுட்டுமுத லாகிய
ஆய்த இறுதியும் உருபியல் நிலையும் (குற்றி. 17)

இங்குச் 'சுட்டு' என்பன அது இது உது என்பவை. இவற்றின் இறுதி வல்லெழுத்து குறைந்து ஒலிக்கும் இடங்கள் உள. அவ்விடங்களில் அவ்விறுதி எழுத்தின்மேல் புள்ளியிட்டு ஒலிக் குறைவு உணர்த்தப் பெற்றது. இச்சொற்களின் இறுதியைக்

குறிப்பிடுமிடத்துச் 'சுட்டு முதலாகிய ஆய்தவிறுதி' என்று தொல்காப்பியம் குறிப்பதேயன்றி 'சுட்டு முதலாகிய ஈற்றயல் ஆய்தம்' என்று குறிப்பிட்டிலது. எனவே ஆய்தப் புள்ளியிறுதி எழுத்தின்மேல் நின்றது. இறுதி எழுத்திற்கு அயலாக அதன் முன்னரோ பின்னரோ நின்றதன்று. அது என்பதில் உள்ள **து** என்னும் வல்லின உயிர்மெய் மேல் **து** என நின்றது. இக்காலத்தில் எழுதப் பெறுவது போல அஃது இஃது உஃது என எழுதப் பெற்றது அன்று என்பது இவற்றிலிருந்து பெறப்படும்.— (செந்தமிழ்ச் செல்வி சிலம்பு 44. பக். 129-138, 154-161 (1969)

தேவநேயப்பாவாணர்

*"ஆய்தம் தொன்றுதொட்டு மெல்லிய ககரமாகவே ஒலிக்கப் பட்டு வருதலானும், **ஏனச்** சாரியை பெற்றக்கால் அஃகேனம் எனக் ககரத்தோடியைந்தே வழங்குதலாலும், பண்டையேட்டுச் சுவடிகளில் க—ஃ என்றெழுதப் பெற்றமையாலும், உயிருக்கும் மெய்க்கும் இடையில் வைக்கப்பட்டிருப்பினும் ககரத்தை யடுத்திருப்பதாலும், **போப்** ஐயர் தம் தமிழ் இலக்கணத்தில் 'The Guttural' என்றும், **கால்டுவெல்** தம் ஒப்பிலக்கணத்தில் Guttural 'h' என்றும் குறித்திருப்பதாலும், சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் அகராதியில் அதன் அமைப்பு முறையை விளக்குமிடத்து The aspirate aytam என்று குறித்திருப்பினும் வரி பெயர்ப்பில் k என்னும் குறியை ஆள்வதாலும் ஆய்த எழுத்து ககரத்தின் திரிபே எனத் தெற்றென வறிக. ஆய்தம் ககரத்தின்பாற்பட்ட ஒரு நுண்ணிய ஒலியாய் இருத்தல் பற்றியே அப்பெயர் பெற்றது என்றறிக. "ஒய்தல் ஆய்தல்......நுணுக்கம்" (உரி. 32) என்பது தொல்காப்பியம். ஆய்தப் பெயர்க் காரணம் கூறுமிடத்து, that which is subtle, minute என்றார் கால்டு வெல்லும்".

(சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் 1003ஆவது வெளியீட்டு விழா மலர். பக். 54. (1961))

---

* "ஆய்தத்தை ஒலிக்கும்போது வாய் சிறிது திறந்தும் சிறிது மூடியும் இருத்தலின், அதனை இடையெழுத்துப் போன்ற மெய் எனக் கூறல் தகும்" என்பர் சுப்பிரமணிய சாஸ்திரியார்.

ஆய்தம் புணர்மொழியுள்ளும் வருமாறு

39. ஈறியல் மருங்கினும் இசைமை தோன்றும். (6)

ஆ. மொ.

இல:

Even at the end of the standing word phoneme of Āytham will appear shortened.

க. சு:

[Its] phonetic realization occurs even in the final position [of the first member of a word combination].

பி. நூ:

நன்	97 :	லளவீற் றியைபின் ஆம் ஆய்தம் அஃகும்.
தொன்	13 :	அஃது ஈற்று லளத் திரிந்துளி அஃகும்.
முத்து	39 :	லள இறு புணர்ச்சியின் ஆய்தம் அஃகும்.
சுவாமி	8 :	தனிக் குறில்சார் லளப்பின் நணுத் தகரத் திரிவின்முன் ஆய்தங்குறுக்காயிடும்.

இளம்பூரணர்

இது, அவ்வாய்தம் புணர்மொழியுள்ளும் வரும் என்பது உணர்த்துதல் நுதலிற்று.

(இ—ள்).: ஈறு இயல் மருங்கினும்—நிலைமொழியீறு வருமொழி முதலொடு புணர்ந்து நடக்கும் இடத்தினும், இசைமை தோன்றும்—ஆய்த ஒலி தோன்றும்.

எ—டு : கஃறீது, முஃடீது என வரும். ஈண்டும் இடங்கள் அவை.

நச்சினார்க்கினியர்

இஃது அவ்வாய்தம் புணர்மொழியகத்தும் வருமாறு கூறுகின்றது.

(இ—ள்) : நிலைமொழியீறு வருமொழி முதலொடு புணர்ந்து நடக்குமிடத்தும், அதன் அரை மாத்திரையே இசைக்குந் தன்மை தோன்றும்; எ—று.

எ—டு : கஃறீது, முஃடீது என வரும். இவ்வீறு இயலுமாறு புள்ளி மயங்கியலுட் பெறுதும். ஈண்டும் இடம் குற்றெழுத்து மேல் வரும் வல்லெழுத்து.

வேங்கடராசுலு ரெட்டியார்

புணர் மொழியில் வரும் ஆய்த எழுத்தினை ஆய்தக் குறுக்கம் என்று நன்னூலார் கூறினார். அவ்வாறு குறுகுதற்கு ஏது இன்மையானும், இவ்வாசிரியர் கூறாமையானும் அது பொருந்துவதன்று. யாப்பருங்கல விருத்திகாரர், இலக்கண விளக்க நூலாசிரியர் ஆகியவர்களும் ஆய்தக் குறுக்கம் கொண்டிலர். சிவஞான முனிவர் இலக்கண விளக்கச் சூறாவளியில் இதனைக் குறித்து ஒன்றும் கூறாமையின், அவரும் ஆய்தக் குறுக்கம் வேண்டினாரல்லர் என்பது பெறப்படும்.

அன்றியும் நன்னூலார் கூறியவாறு இச்சொல் (கஃறீது) கால் மாத்திரையாக ஒலிக்கப்படாமையும், அரை மாத்திரையாகவே ஒலிக்கப்படுதலும் செவி கருவியாக ஓர்ந்துணரற்பாலது.

வெள்ளை வாரணனார்

(இ—ள்) நிலைமொழியீறு வருமொழி முதலொடு புணர்ந்து நடக்குமிடத்தும் வேறோர் எழுத்தின் ஓசையின்கண் ஆய்தம் தோன்றும் என்றவாறு.

ஆய்தந் தோன்றுமாறு:—லகர ளகர வீற்றுச் சொற்கள் அல்வழிக்கண் தகரமுதன்மொழி வருமிடத்து ஆய்தமாகத் திரிந்து முடியும் (369, 399) எனவும், வகர வீற்றுச் சுட்டுப் பெயர் அல்வழிக்கண் வல்லெழுத்து முதன்மொழி வருமிடத்து அவ்வகரமெய் ஆய்தமாகத் திரிந்து முடியும் (379) எனவும் புள்ளி மயங்கியலிற் கூறுகின்றார். அவ்வாறு ல, ள வீற்று மொழிகள் அல்வழிக்கண் வல்லெழுத்து முதன் மொழியோடு புணர்தலி யன்ற நிலைமைக்கண் நிலைமொழியீற்றிலுள்ள அம்மெய்கள் ஆய்தமாகத் திரிந்து முடிதலான், 'ஆய்தந்தோன்றும்' என்னாது வேறோரெழுத்தின் ஓசைக்கண் ஆய்தவொலி திரிந்து தோன்றும் என்பது பட 'இசைமை தோன்றும்' என்றார்.

உ. ம்: கஃறீது, முஃடீது, அஃகடிய எனவரும்.

பிறகுறிப்புகள்:

இசைமை என்பது ஒலிப்பொருளில் பரிபாடலில் வழங்கப் பட்டமையான் இளம்பூரணர் கொண்ட ஒலிப்பொருளே இசைமை என்பதற்குச் சிறக்கும் என்பர் சுப்பிரமணிய சாஸ்திரியார்.

ஆய்தத்தின் இயல்பு

40 [1]உருவினும் இசையினும் அருகித் தோன்றும்
மொழிக்குறிப்பு எல்லாம் எழுத்தின் இயலா
ஆய்தம் அஃகாக் காலை யான. (7)

ஆ. மொ.

இல:

When Āytham appears rarely in the Onomatopoetic words denoting either form (of a thing) or musical sound, it (Āyatham) stands with lengthened sound as not to be written in script.

க. சு:

Though an āytham of lengthened duration may occur, rarely, in onomatopoetie words which denote shape and sound, it should not be represented in writing [as lengthened].

இளம்பூரணர்

இது [2]அவ்வொருமொழி ஆய்தத்திற்கு ஓர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ—ள்.) உருவினும்—ஒரு பொருளினது[3] உருவத்தின் கண்ணும், இசையினும்—ஓசையின் கண்ணும், அருகித்தோன்றும் — சிறுபான்மை[4]யாய்த் தோன்றும், குறிப்பு மொழியெல்லாம்— குறிப்பு மொழிகள் எல்லாம், எழுத்தின் இயலா—ஆய்த எழுத்தானிட்டு எழுதப்பட்டு ([5]ம் எழுத்துப்போல) நடவா. (அஃது எக்காலத்துமோ எனின், அன்று), ஆய்தம் அஃகாக் காலையான—அவ்வாய்தம் தன் அரை மாத்திரையளவாய்ச் சுருங்கி நில்லாது ([6]அவ்வுருவம் இசையதும் மிகுதியும் உணர்த்து தற்கு) நீண்டகாலத்து அந்நீட்சிக்கு.

எ—டு: கஃறென்றது என்பது உருவு. சுஃறென்றது என்பது இசை.

சு. வே. 1. உருபினும்
2. அவ்வொருவழி
3. நிறத்தின்
4. யாய்தந்
5. ம் எழுத்துப் போல்—சில சுவடிகளில் இல்லை
6. அவ்வுருபதும்

நச்சினார்க்கினியர்:

இஃது எதிரது போற்றல் என்னும் உத்தியாற் செய்யுளியலை நோக்கி ஆய்தத்திற்கு எய்தியதோர் இலக்கணம் உணர்த்துகின்றது.

இ—ள் : நிறத்தின் கண்ணும் ஓசையின்கண்ணும் சிறுபான்மை ஆய்தம் தோன்றும் பொருள் குறித்தலையுடைய சொல்லும், அவையொழிந்த எல்லா மொழிகளும் 'ஒற்றெழுத்துக்கள் போல[7] அரை மாத்திரையின் கண்ணும் சிறுபான்மை மிக்கும் நடந்து ஆய்தம் சுருங்காத இடத்தான சொற்களாம்; எ—று.

எனவே, ஈண்டு ஆராய்ச்சியின்றேனும் (செய்யுளியலிற் கூறும் "ஒற்றளபெடுப்பினும் அற்றெனமொழிப" செய்யுளியல் 18) என்னுஞ் சூத்திரத்துக் "கண்ணண்டண்ணெனக் கண்டும் கேட்டும்" (மலைபடுகடாம் 352) என்புழிக் 'கண்ண்' என்பது சீர்நிலை எய்தினாற் போலக் 'கஃஃறென்னுங் கல்லதரத்தம்' என நிறத்தின் கண்ணும் 'கஃஃறென்னும் தண்டோட்டுப் பெண்ணை' என இசையின் கண்ணும் வந்த ஆய்தம் ஒரு மாத்திரை பெற்றுச் சீர்நிலையெய்துங்கால், ஆண்டுப் பெறுகின்ற ஒரு மாத்திரைக்கு ஈண்டு எதிரது போற்றி விதி கூறினார், ஆய்தம் அதிகாரப் பட்டமை கண்டு. 'எஃஃகிலங்கிய கையராய் இன்னுயிர், வெஃஃகு வார்க்கில்லை வீடு' என்று ஏனையிடத்தும் வந்தன. ஒற்றளபெடுக்குமாறு இவ்வதிகாரத்துக் கூறிற்றிலர், அஃது உயிரளபெடை போலச் சீர்நிலையெய்தலும் அசைநிலையாந் தன்மையும் உடையவாய்ச் செய்யுட்கே வருதலின். இதனானே ஒற்றளபெடையும் ஒரு மாத்திரை பெறும் என்பது பெற்றாம்.

'எழுத்தின்' என்ற 'இன்' உவமப் பொருள். 'இயலா' வென்றது செய்யா வென்னும் வினையெச்சம்.

இவ்வாறன்றி இக்குறிப்புச் சொற்கள் ஆய்தம் இரண்டிட்டு எழுதப்படா என்று பொருள் கூறிற் செய்யுளியலோடு மாறுபட்டு மாறுகொளக்கூறல் என்னும் குற்றம் தங்கும் என்றுணர்க.

சுவடி வேறுபாடு: 7. அரைமாத்திரையின் மிக்கு நடந்து

சுப்பிரமணிய சாஸ்திரியார்:

(பொருள்) ஆய்தம் (தான் அரைமாத்திரையாய்ச்) சுருங்கி நில்லாத விடத்து (ஏனைப்புள்ளி) எழுத்துக்களின் தன்மையுற்று உருவம், இசை, மொழியிற்குறிக்கப்படும் பொருள் எல்லா வற்றின் கண்ணும் சிறுபான்மையாய்த் தோன்றும். உ—ம். உருவு கஃஃறு, இசை—சுஃஃறு, குறிப்பு—வெஃஃகு.

வேங்கடராசுலு ரெட்டியார்:

இச்சூத்திரம் ஒருமொழி ஆய்தத்திற்கு ஓர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று எனக் கொண்டு, "ஒரு பொருளினது உருவத்தின் கண்ணும்.........நீண்டகாலத்து அந்நீட்சிக்கு என்றவாறு" என்று இளம்பூரணவடிகள் பொருள் கூறினர்.

அஃதாவது 'கஃறு' என உருவினைக் குறித்த மொழியினும், 'சுஃறு' என இசையினைக் குறித்த மொழியினும், ஆய்தம் நீளுமிடத்து இரண்டு ஆய்தம் இட்டு எழுதலாகாது என்பதாம்.

இனி இதற்கு நச்சினார்க்கினியர் கூறிய உரையாவது:— "உருவினும் இசையினும்.........ஆன சொற்களாம் என்றவாறு" என்பது.

அஃதாவது உருவும் இசையும் பற்றி வரும் மொழிகளும் பிற மொழிகளும், சிறுபான்மை அரைமாத்திரையினும் மிக்கு நடந்து ஆய்தம் சுருங்காத இடத்து ஆகிய சொற்களாகும் என்றவாறாம்.

எனவே குறிப்பு மொழிகளிலும் பிறமொழிகளிலும் ஆய்தம் மிக்கு நடக்கும் என்றபடியாயிற்று.

இவர் 'மொழிக்குறிப்பெல்லாம்' என்னுந் தொடரை 'குறிப்பு மொழியும், எல்லா மொழியும்' என்று பிரித்தார். 'மொழிக் குறிப்பு' என்பது 'வினைக்குறிப்பு' என்பதுபோல் வந்தது. குறிப்பு மொழியும் எல்லாமொழியும் என்பதுவே ஆசிரியர் கருத்தாயின், 'குறிப்புமொழியும், பிறமொழியும்' என்றன்றே கூறியிருப்பார்? 'வினைக்குறிப்பு எல்லாம்' எனின், வினையும் குறிப்பும் எல்லாம் என்று பொருள் கூறுதல் பொருந்துமோ? அன்றியும், 'இயலா' என்பதைச் 'செய்யா' என்னும் வாய்பாட்டு வினையெச்சம் என்றார். மேலும், அஃகாக்காலையான என்பதற்கு, 'சுருங்காத விடத்து ஆன சொற்களாம்' என்றார். 'அஃகாக் காலையான' என்பது, சுருங்காத காலத்தில்—சுருங்காத இடத்தில் என்னும் பொருளைத் தருதலே யன்றி, 'சுருங்காத இடத்து ஆனசொற்கள்' எனப் பொருள்தருதல் இல்லை. முன்னர்,

"வல்லெழுத்து வருஉங் காலை யான (குற்றி. 25)

"தெற்கொடு புணருங் காலை யான" (குற்றி. 27)

என்னுமிடங்களிலும் "மொழிவயினான" (58) "இவணையான்" (80) "தொடர்மொழியிறுதியான" (145) "அல்வழியான" (196) "தொடர்மொழியான" (213) "வழக்கத்தான" (246) என்பன போல வரும் பலஇடங்களிலும் இச்சொல்லின் பொருளை நோக்கின், நச்சினினார்க்கினியர் ஈண்டுக் கூறிய பொருள் பொருந்தாமை புலனாகும்.

உரையாசிரியர், குறிப்புமொழிகளின் ஆய்தம் தம் அரை மாத்திரையளபாய்ச் சுருங்கி நில்லாது, அவ்வுருவதும் இசையதும் மிகுதி யுணர்த்துதற்கு நீண்ட காலத்து அந்நீட்சிக்கு ஆய்த எழுத்து எழுதப்படா என்றார். ஆயின் ஆய்தத்தின் நீட்சியைக் குறிப்பிடுதல் எவ்வாறு? இதனால் அவர் கூறிய உரையும் பொருதுமாறாதல் இன்று.

இனி இச்சூத்திரத்திற்கு, 'உருவின்கண்ணும் இசையின் கண்ணும் சிறுபான்மையவாய்த் தோன்றுகின்ற மொழிக் குறிப்புக்கள் எல்லாம் பிற எழுத்தான் இயலா 'ஆய்தம் அஃகாத காலத்து' என்பது பொருளாகும்.

உரு—நிறம்; இசை—ஓசை. அஃகுதல்—நுண்ணிதாதல். குறிப்புமொழிகள் பலவகையாய் இருத்தலின் அவற்றை யெல்லாம் தழுவாமல் நீக்குதற்கு, 'உருவினும் இசையினும்'என்று விசேடித்தார்.

கஃறு என்பது நிறக்குறிப்புமொழி

சுஃறு என்பது இசைக்குறிப்பு மொழி.

'உருவினையும் இசையினையும் உணர்த்தும் குறிப்பு மொழிகள், ஆய்தம் அஃகாவிடத்து(ப்பிற) எழுத்துக்களான் நடவா' என்றதனான், இக்குறிப்பு மொழிகட்கு ஆய்தம் இன்றியமையாத தாகும் என அதன் அவசியகத்தைக் கூறியவாறாயிற்று. அதனால் இச்சூத்திரம் வேண்டுவதாயிற்று. சார்பெழுத்து மூன்றினுள் குற்றியலிகரம் குற்றியலுகரங்களை இரண்டிரண்டு சூத்திரங் களாற் கூறிய ஆசிரியர், அவ்வாறே இருவகை ஆய்தத்தையும் இரண்டு சூத்திரங்களாற் கூறி, இம்மூன்றாம் சூத்திரத்தால் ஆய்தவெழுத்து இன்றியமையாத சொற்களைக் கூறினார், அவற்றைக் கூறுதற்கு வேறுஇடம் இன்மையானும், ஈண்டுக் கூறுதல் இயைபுடைத்தாகலானும்.

இனி 'ஆய்தம் அஃகாக்காலை எழுத்தின் இயலா' எனவே, ஆய்தம் அஃகிய காலையே எழுத்தின் இயலும் என்றும், ஆகலின் உருவினும் இசையினும் வரும் ஆய்தம் அஃகியதாகும் என்றும் கோடலும் அமையும். அவ்வாறு கொள்ளின் உருவு பற்றியும் இசைபற்றியும் வரும் குறிப்பு மொழிகளிலுள்ள ஆய்தம் குறுகிய தாகும். இவற்றை மட்டும் ஆய்தக் குறுக்கம் என்னலாம்.

இச்சூத்திரத்தின் கருத்துச் செவ்விதின் துணியப்படு மாறில்லை. ஆதலின், இஃது இன்னும் ஆராய வேண்டுவது.

வெள்ளை வாரணனார்

இ—ள் ஒரு பொருளினது நிறத்தின்கண்ணும் இசையின் கண்ணும் மாத்திரை பெருகித் தோன்றும் குறிப்பு மொழிகள் எல்லாம் அந்நீட்சியைக் குறித்தற்கெனத் தனியே எழுத்தால் எழுதப்பட்டு நடவா; ஆய்தம் சுருங்கா இடத்தான சொற்களாம்.

எனவே ஆய்தம் சுருங்கின் இம்மொழிக் குறிப்புப் புலப்படா தென்பது கருத்து.

உ—ம். 'கஃறென்னும் கல்லதர த்தம்'
'சுஃறென்னும் தண்தோட்டுப் பெண்ணை'

என முறையே நிறத்தினும் இசையினும் ஆய்தம் நீண்டு ஒலித்த தாயினும் அந்நீட்சிக்கு மற்றும் ஓர் எழுத்து வேண்டப்படாமை யறிக, இச்சூத்திரத்தில் வந்த 'அருகி' என்னும் சொல்லுக்குப் பெருகி எனவே தக்கயாகப் பரணியுரையாசிரியர் பொருள் கூறினார் (தாழிசை. 37)

இவற்றை ஆய்தம் சுருங்காத சொற்கள் எனவே, ஆய்த ஒலி சுருங்கும் சொற்களும் உள என்பது பெறுதும். நன்னூலாரும் லகர ளகர வீற்றுப் புணர் மொழிக்கண் வரும் ஆய்தம் தன் அரை மாத்திரையிற்குறுகும் என்பதனை, "ல ள வீற் றியைபினாம் ஆய்தம் அஃகும்" (97) என்ற சூத்திரத்தில் குறிப்பிட்டு எழுத் தின் எண் என்ற பகுதியில் ஆய்தக் குறுக்கம் எனத்தனியே ஒரெழுத்தாக எண்ணினார்.

கு. கோதண்டபாணி பிள்ளை

பொருள்: ஆய்தம் அரைமாத்திரையிற்குறுகாத போது அஃது உருவினும் (ஒலிவடிவிலும்) இசையினும் (ஒலியளவினும்) குறுகித் தோன்றுவதன் மொழிக்குறிப்பாகும்; அவையெல்லாம் எழுத்தைப் போன்று நடவா அல்லது செயற்படா.

(அருகி—குறுகி, எழுத்தின்—எழுத்தைப் போன்று)

ஆய்தப்புள்ளி ஒலியின் குறைவைக் குறிக்கும் ஒரு மொழிக் குறிப்பே அன்றித் தனி எழுத்து அன்று என்பதை இந்நூற்பா மீண்டும் வலியுறுத்துகின்றது.

தனியெழுத்தைப்போல அது செயலாற்றுவதன்று. தனக்கென ஓர் இயல்பும் அற்றது. அது சார்ந்து வருகின்ற எழுத்தின் இயல்பே தன்னியல்பாகக் கொண்டு அதன் குறைவைக் காட்டும் குறியீடு ஆய்தப் புள்ளி என்பதையும் இந்நூற்பா உறுதி செய்கிறது.

—(செந்தமிழ்ச் செல்வி சிலம்பு 44. பரல் 3. பக். 138. 1969)

அ. மா. பரிமணம்

ஆய்தத்தினை ஒலித்துப் பார்க்கின்ற போது, அது ஒரு குறிப்பிட்ட ஒலியைத் தோற்றுவிக்க வந்தது என்பதைக் காட்டிலும், குறிப்பிட்ட இடங்களில் குறிப்பிட்ட எழுத்துக் களின் ஒலியை மாறுதல் செய்வதற்கு அமைந்த கருவி எனக் கொள்வது பொருத்தமாகத் தோன்றுகிறது. கஃசு, கஃபு, கஃடு, அஃது—இவ்விடங்களில் ஆய்தம் வல்லொலியை நலிவிக்கின்றது. அதனால் ஆய்தத்துக்கு நலிபு என்றே பேராசிரியர் பெயர் கூறுவர். இந்நலிபு ஒலி இக்காலத்து அரிதாயினமையின் 'ஹ' என்ற ஒலி அதற்கு வந்தது.

யகர வகரங்கள் உடம்படு மெய்யாகும் என்றாலும் இ ஈ ஐ வழி யவ்வும் ஏனையுயிர் வழி வவ்வும் என வரையறை செய்தது போல ஆய்தமும் செய்யுளில் வரும்போது இன்ன இடத்து உயிர் ஒலி நிலையில் அலகு பெறும் என்றும், இன்ன இடத்து மெய்யொலி நிலையில் அலகு பெறாது என்றும் வரையறுத்துக் காட்டுவது நல்லது. வரையறை பின் வருவன.

1. நின்ற சீர் நிரையீற்று ஈரசையாகவோ நேரீற்று மூவசையாகவோ அமையும்போது வருஞ்சீர் முதலசைக் கண் இடம்பெற்ற ஆய்தம் ஒற்றுப்போல அலகு பெறா தொழி கின்றது.

எடுத்துக்காட்டு :

(அ) "அன்பின் வழிய துயிர்நிலை ய∴திலார்" (குறள். 80)

—விளமுன் நேர்.

(ஆ) "மறத்திற்கு மஃதே துணை" (குறள். 76)
—காய்முன் நேர்.

2. நின்ற சீர் நேரீற்று ஈரசையாக அமையும் போது வருஞ்சீர் மூவசையிலமைந்த ஆய்தம் உயிர் போல அலகு பெறுகின்றது.

எடுத்துக் காட்டு :

"உண்க அஃதுடம்பு" (குறள். 943)
—மாமுன் நிரை.

3. நின்ற சீரின் முதற்கண்ணும் இறுதிக்கண்ணும் அமையும் ஆய்தம் வருஞ்சீர் நோக்கம் வேண்டாது ஒற்றுத் தன்மை எய்தி நிற்கின்றது.

எடுத்துக் காட்டு :

(அ) "அஃகாமை செல்வத்திற்கு" (குறள். 178)
—காய்முன் நேர்.

(ஆ) அழுக்கற் றகன்றாரு மில்லையஃ தில்லார் (குறள். 170)
—விளமுன்நேர்.

—(இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம் கருத்தரங்கு ஆய்வுக் கோவை, தொகுதி 2. பக். 221—226; 1976.)

பிற குறிப்புகள்

நச்சினார்க்கினியர் கூறும் பொருள் பொருத்தமாயிருப் பினும் அவர் கூறும் அந்நுவயம் நேரிதாக இல்லை—சுப்பிரமணிய சாஸ்திரியார்.

'மொழிக்குறிப்பெல்லாம் என்பதற்குக் 'குறிப்பு மொழி எல்லாம்' என ஒரே பொருள் கொள்ளாது 'குறிப்பு மொழியும்' 'எல்லா மொழியும்' என இருபொருள் கொள்வது அத்துணைச் சிறந்ததன்று—பாவாணர்.

எழுத்தின் இயலா என்பது palm tree என்ற இடத்தில் என்பது இருந்து ஒலியில்லாமலிருத்தல் போலில்லாமல் ஒலியிருந் தும் எழுத்து (ஃ) இல்லாமல் இருப்பது தமிழ் வழக்காயிற்று —ச. வே. சுப்பிரமணியன்.

2. அளபெடை

அளபெடையின் நிலை.

41. குன்றிசை மொழிவயின் நின்றுஇசை நிறைக்கும்
நெட்டெழுத்து இம்பர் ஒத்தகுற் றெழுத்தே. (8)

ஆ. மொ.

இல.

In the words which fall short of the required sound the respective short vowels stand after the long vowels eoncerned and suppliment their sound.

க. சு.

When there is deficiency of sounds in words, the corresponding short vowels will stand after the long vowels and supplement the deficiency.

பி. இ. நூ.

வீர. 2. *நெடுநீர்மையளபு.*

நேமி. 3. *அளபெடைகள் சொல்லொற்றி நீட்டத் தொகும்.*

நன். 91. *இசை கெடின் மொழிமுதல் இடைகடை நிலை நெடில்*
அளபெழும் அவற்றவற் றினக்குறில் குறியே.

இல. வி. 19. *இசை கெடின் மொழிமுதல் இடைகடை நிலைநெடில்*
தத்தம் ஒத்தகுற் றெழுத்தோ டளபு எழூஉம்.

தொன். 18. *உயிர்நெடில் இனக்குறில் உற்றள பெடுக்கும்.*

முத்து. 31. *இசைகெடின் நெட்டெழுத் தெல்லாம் தமக்கினம்*
ஆகிய குறிலொடும் அளபெழும் எனலே.

32. *அதுதான்*
இயற்கை செயற்கை இன்னிசை சொல்லிசை
நெடில் குறில் ஒற்றளபு எழுத்துப்பேறு அளபு
எண்வகைப்படும் என்மனார் புலவர்.

33. *அளபும் புலுதமும் அளபெடைப் பெயரே.*

சுவாமி. 9. மேய இசைகெடின் மொழிக்கு முன் பின்
இடை குறி
தம் இனக்குறிலாய் நெடில் நீளும்.

இளம்பூரணர்

இது, "நீட்டம் வேண்டின்" '(நூன்மரபு. 6) என்பதற்கு ஓர் [1]புறனடையுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள். குன்றுஇசை மொழிவயின் நின்று இசை நிறைக்கும் —(அளபெடை யோசையாகச் சொல்லா தொழியில்) குன்றுவ தான ஓசையையுடைய அவ்வளபெடை எழுத்தானாய [2] மொழிக் கண்ணே நின்று அவ்வோசையை நிறைக்கும், (அவையாவை[3] யெனின்) நெட்டெழுத்து இம்பர் ஒத்த குற்றெழுத்து— நெட்டெழுத்துக்களின்[4] பின்னாக (அவற்றிற்குப் பிறப்பானும் புணர்ச்சியானும் ஓசையானும்) இனமொத்த குற்றெழுத்துக் கள்.

எ—டு : ஆஅ, ஈஇ, ஊஉ, ஏஎ, ஓஒ எனவரும்.

ஈண்டு மொழியென்றது அவ்வளபெடையெழுத்து ஒரு பொருள் உணர்த்தி ஓரெழுத்தொருமொழியாய் நிற்கும் நிலைமையினை. இவையும் மொழிமேற் காணப்படுதலின் சார்பிற் றோற்றத்து எழுத்தெனப்படுமால் எனின், *பெரும் பான்மையும் அம்மொழிதானே அவ்வெழுத்தாய் வருதலானும், அம்மொழி நிலைமை ஒழிய வேறெழுத்தாகவும் சொல்லப்படுத லானும், அவ்வாறு ஆகாதென்பது.

ச. வே. 1. புறநடை
2. மொழிக்கண்
3. யென்னின்
4. பின்னான

* இதில் 'பெரும்பான்மையும்' என்பதற்கு 'முழுதும்' எனப் பொருள் கொள்ளல் நன்று. பெரும்பான்மையும் அம்மொழி தானே அவ்வெழுத்தாய் வருதல் என்பதாவது : 'ஆ அ' என்புழி அது மொழியாம்; மொழியாயினும் அளபெடை எழுத்தானாய மொழியாம்; எனவே மொழியே எழுத்தாக வந்ததென்பதாகும். மொழி நிலைமையொழிய வேறெழுத்தாகச் சொல்லப் படுதலாவது : அந்த 'ஆ அ' என்பது, பசு என்ற பொருள் தரும் மொழி நிலைமை நீங்குமானால் வேறெழுத்தாக அதாவது அளபெடையெழுத்தாக அன்றி 'ஆ' என்ற தனி நெடில் எழுத்தாகச் சொல்லப்படுவதாம்.

இது மேலும் விளக்கப்படும் :

'ஆ' என்பது நெடில் எழுத்தாகவும், 'பசு' என்ற பொருளில் ஓரெழுத் தொருமொழியாகவும் வரும். உலகவழக்கிலோ

[1]சிறுபான்மை அம்மொழிதானே எழுத்தாய் வாராதெனக் கொள்க. †

எ—டு : எருதுகாலுறாஅது என்றாற் போல்வன.

நச்சினார்க்கினியர்

இஃது எதிரது போற்றல் என்னும் உத்திபற்றிச் செய்யுளியலை நோக்கி "நீட்டம் வேண்டின்" (எழுத். 6) என முற்கூறிய அளபெடையாமாறு கூறுகின்றது.

இ—ள். அளபெடுத்துக் கூறாக்கால் குன்றுவதான ஓசையையுடைய அவ்வளபெடைச் சொற்கண்ணே நின்று அவ்வோசையை நிறைக்கும்; அவையாவையோ வெனின், நெட்டெழுத்துக்களின் பின்னாகத் தமக்கு இனம் ஒத்த குற்றெழுத்துக்கள்.

எ—டு : ஆஅ, ஈஇ, ஊஉ, ஏஎ, ஓஒ என வரும். குன்றிசை மொழி என்றதற்கு இசை குன்று மொழி என்றுமாம். இனம் ஒத்தலாவது பிறப்பும் புணர்ச்சியும் ஓசையும் வடிவும்

செய்யுள் வழக்கிலோ 'பசு' என்ற பொருளைக் குறிக்க 'ஆ' என்பதைப் பயன்படுத்தும்போது ஓசை குன்றுமானால் 'ஆஅ' என அளபெடுத்த நிலையில் அதை அளபெடை எழுத்தாக்கிக் கொள்ளல் வேண்டும். ('நீட்டம் வேண்டின்' என ஆசிரியர் கூறியதைக் காண்க.) அவ்வாறு அளபெடை எழுத்தாக்கிக் கொண்டால் அதுவே மொழியாகவும் ஆம். அளபெடை எழுத்தானால மொழியாகிய 'ஆஅ' என்பது மொழி நிலைமை ஒழியுமாயின் (பசு என்ற பொருள் ஒழியுமாயின்) அளபெடை எழுத்து எனப் பெயர் பெறாது 'ஆ' என்ற நெட்டெழுத்து எனப் பெயர் பெறும். ஆனால் 'ஆ' என்பது எழுத்தாம் போது தனி நெடில் என்றும், அதுவே சொல்லாம் போது 'பசு' என்றும் பொருள்படுவது போல 'ஆஅ' என்பது மொழியாம் போதுதான் அளபெடை எழுத்து எனப் பெயர் பெறும். மொழியில்லையென்றால் அது எழுத்தே இல்லை. எனவே இளம்பூரணர் 'ஆஅ' என்பது போன்ற அளபெடை எழுத்தைப் பற்றி, அவைகள் மொழிகளாக வரும் என்றாரேயன்றி, 'ஆ' என்பது போன்ற நெடிலெழுத்துகளைப் பற்றி இந்நூற்பாவில் பேசவில்லை.

† இதில், "சிறுபான்மை அம்மொழிதானே எழுத்தாய் வாராது எனவும் கொள்க" என உம்மையை மாற்றிக் கொள்ளுதல் நன்று. மொழி எழுத்தாய் வாராது எனவே எழுத்து எழுத்தாய் வரும் எனக் கொள்ளல் வேண்டும். அதாவது, சிறுபான்மை தனிநெடில் எழுத்தும் அளபெடை எழுத்தாய் வரும் என்று கொள்ளுதல் வேண்டும் என்பதாம். 'எருது காலுறாஅது' என்பதில் 'ஆ' என்ற நெடில் எழுத்து ஆஅ என அளபெடுத்தது காண்க.

சு. வே: 1. சிறுபான்மையும்

ஒத்தல். ஈண்டு மொழியென்றது "அளபெடையசைநிலை" (செய்யுளியல் 17) என்னும் செய்யுளியற் சூத்திரத்து எட்டு இயற் சீரின்பாற் படுகின்ற எண்வகை அளபெடைச் சொற்களையும்; அவை ஆஅ, கடாஅ, ஆஅழி, படாஅகை, ஆஅங்கு, ஆஅவது, புகாஅர்த்து, விராஅய்து என்பனவாம். கட்டளை கொள்ளா ஆசிரியர் இவற்றைத் தனிநிலை, முதனிலை, இடைநிலை, இறுதி நிலை யென்றும் அடக்குப. இனி மொழியென்றதற்குத் தனிநிலை ஏழினையுமே கொள்ளின், ஒழிந்த இயற்சீர்ப்பாற்படும் அளபெடை கோடற்கு இடம் இன்மையுணர்க.

சுப்பிரமணிய சாஸ்திரியார்

இளம்பூரணர் சூத்திரத்திலுள்ள 'மொழி' என்றதற்கு 'அளபெடை கொண்ட ஓரெழுத்தொருமொழி' எனப் பொருள் கூறினர். "இனி மொழி என்றதற்குத் தனிநிலை......இடமின்மை யுணர்க" என நச்சினார்க்கினியர் இளம்பூரணரை மறுத்தனர். அம்மறுப்பு பொருந்தும் எனத் தோன்றுகின்றது. ஆயினும் நச்சினார்க்கினியர் 'மொழி' என்றதற்கு 'அளபெடைச் சொற்கள்' எனப் பொருள் கொண்டனர். அவ்வாறு கொள்ளாது 'சொற்கள்' என்றே கொள்ளல் தகும். ஏன்னெனின் இளம்பூரணர் இச்சூத்திரத்திற்கு ஆஅ, ஈஇ முதலிய உதாரணங் களையும், நச்சினார்க்கினியர் அவற்றுடன் கடாஅ, படாஅகை முதலிய உதாரணங்களையும் கூறினர். இவற்றை நோக்கின் இச்சூத்திரம் 'நெட்டெழுத்தின் ஓசை குறைவாயிருப்பின் அதன் பின்னர் ஒத்த குற்றெழுத்தின் ஓசையைச் சேர்த்தல் வேண்டும்' என உணர்த்த வந்தது எனக் கூறல் வேண்டும். 'நீட்டம் வேண்டின்......' என்ற சூத்திரத்து 'அவ்வளபுடைய கூட்டி எழூஉ தல்' எனக் கூறியிருத்தலின், ஒரு மாத்திரை கொண்ட எழுத்து கூட்டப்பட வேண்டும் எனப் பெறுதலின், இச்சூத்திரத்து 'குற்றெழுத்து' என்றது மிகையாகும். ஆகாரம் முதலியவற்றின் பின்னர் இனமல்லாத ஓரளபுடைய இகரம் முதலியன கூட்டப் படுமோ என ஐயுற்று இச்சூத்திரம் வந்ததெனின், 'ஒத்த குற்றெழுத்து' என்றதற்குப் பிரதியாக 'ஒத்த எழுத்து' எனக் கூறல் தகும். ஆதலின் நான்கு மாத்திரை ஒலிக்க வேண்டின், ஆ, ஈ முதலியவற்றின் பின்னர் அஅ, இஇ முதலியன வருமேயன்றி ஆகாரம் முதலியன வாரா வென இச்சூத்திரம் உணர்த்திற் றென்க. அன்றியும் 'ஒத்த' என்றதனால் ஆகாரம் முதலிய வற்றின் பின்னர் அகரம் முதலியனவே வரும்.

'இனம் ஒத்த' என்றதற்குப் 'பிறப்பானும், புணர்ச்சியானும் ஓசையானும் இனம் ஒத்த' என இளம்பூரணரும், 'பிறப்பும்

புணர்ச்சியும் ஓசையும் வடிவும் ஒத்த' என நச்சினார்க்கினியரும் கூறுகின்றனர். புணர்ச்சி என்ற சொல் 'ஓரிடத்தவராயிருத்தல்' என்ற பொருளில் "புணர்ச்சி பழகுதல் வேண்டா" (குறள் 785) என்னுமிடத்து வழங்கப்பட்டிருத்தலின் 'புணர்ச்சி' என்றது ஈண்டு அப்பொருளில் வழங்கப்பட்டதோ என்பது ஆராய்தற் பாலது.

வடிவும் என்றதையும் நச்சினார்க்கினியர் சேர்த்துக் கூறினமையின் அவர் நன்னூலார்க்குப் பிற்பட்டவராவர். 'ஓசை' என்றதனால் வாய்முழுவதும் திறத்தல், சிறிது திறத்தல், மூடியிருத்தல் என்ற முயற்சியைக் கொள்ளுகின்றனர் என்னலாம்.

வேங்கடராசுலு ரெட்டியார்*

ஆசிரியர் 'குன்றிசை மொழிவயின்' என்று பொதுப்படக் கூறியிருப்ப உரையாசிரியர், அம்மொழி ஓரெழுத்தொரு மொழியே என்றது பொருந்துவது அன்று. அன்றியும் அவர், ஓரெழுத்தொருமொழியாய் வாராதது சிறுபான்மை என்றார். அதுவே பெரும்பான்மையாகக் காண்கின்றது; ஓரெழுத்தொரு மொழி அளபெடுத்தல் ஒரோ வழி அருகியே வருகின்றது.

சொற்களில் ஓசை குன்றியவழி ஓரளபு எடுத்தலேயன்றி ஈரளபு எடுத்தலும் உண்டு. இது, 'நீட்டம் வேண்டின் அவ்வளபுடைய' என்று பன்மையாற் கூறியதனாற் கொள்ளப் படும்.

> **"செய்யுட்கள் ஓசை சிதையுங்கால் ஈரளபும்**
> **ஐயப்பா டின்றி யணையுமால்" (மாபுராணம்).**

என்னும் விதியும் நோக்கற் பாலது.

'குன்றிசை மொழிவயின் என்றதனான்' இவ்வளபெடை செய்யுட்கே வருவது என்பது ஆசிரியர் கருத்தாகும். உலக வழக்கில் மொழிகள் ஓசை குறைந்து வருதற்கு ஏது ஒன்றின்மையின், அளபெடை வருவதற்கு இடனின்று. நன்னூலார், "இசைகெடின்...அளபெழும்" (எழுத்தியல் 36) என்றதனால், அளபெடை செய்யுட்கண் வருதலையே குறித்தாராவார். இவ்வாறு ஓசை குறைதலின்றி, தேற்றப் பொருள்

* திரு. ரெட்டியாரின் ஆராய்ச்சி முழுவதையும் அவரது எழுத்ததிகார ஆராய்ச்சியிற் காண்க. ஈண்டு தேவையானவை மட்டில் எழுதப்பட்டன.

முதலிய பொருள் வேறுபாடு காரணமாக வழக்கிலும் அளபெடை வருதல் உண்டு. அதனை 'இயற்கையளபெடை' 'என்றும், செய்யுட்கண் வருதலைச் 'செயற்கையளபெடை' என்றும் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் கூறுவர். வழக்கில் உயிர்எழுத்துக்கள் அளபெடுத்துப் பொருள் வேறுபடுதலை ஆசிரியர், சொல்லதிகாரத்தில்

> ''ஈரளபிசைக்கும் இறுதியில் உயிரே
>
> ....
>
> குறிப்பின் இசையான் நெறிப்படத் தோன்றும்''
>
> (இடையியல். 33)

என்னும் சூத்திரத்திற் கூறியுள்ளார். இன்னணம் வருவனவற்றை யெல்லாம் ஆண்டு அடக்குதல் அமையும்.........

உரையாசிரியரும் நச்சினார்க்கினியரும் அளபெடை யெழுத்து ஏழ் என்று கணக்கிட்டனர். இலக்கண விளக்க நூலாரும் அவ்வாறே கொண்டனர்.

ஆயின், ஆசிரியர் தொல்காப்பியனார் உயிரளபெடை யெழுத்துக்களை வேறு எண்ணினாரல்லர். ஆதலின், அளபெடை யெழுத்து ஏழென்று உரையாசிரியர்கள் எண்ணியது பொருந் தாது. ஆசிரியர், குற்றியலிகரம் முதலிய மூன்றனையுமே சார் பெழுத்தாக எண்ணினாராகலானும், மகரக்குறுக்கம் ஐகாரக் குறுக்கம் இவற்றைப் பின்னூலார்போல வேறே எண்ணினா ரல்லர் ஆகலானும், மூன்று மாத்திரை பெறுவதோரெழுத்து இன்று என்று கூறினாராகலானும், ஓசை நிறைத்தற்கு நெடிலை யடுத்து வருங்குற்றெழுத்துத் தன் தன்மையிற் சிறிதும் மாறு படாது தன்னிலையிலே நிற்றலானும் அளபெடையெழுத் தென்று வேறு எண்ணுதல் அமையாது.

ஆசிரியர், 'அளபெடை' என்றது, ஓசை நிறைக்க வரும் குற்றுயிர்களையே. அஃது 'அளபெடை யசைநிலை யாகலு முரித்தே' என்னுஞ் சூத்திரத்தான் அறியப்படும். அஃது,

> ''இ உ இரண்டன் குறுக்கம் தளைதபின்
> ஒற்றெழுத் தாகும் உயிரள பெடையும்''
> ''உயிரள பெடையும் குறுகிய உயிரின்
> இகர உகரமும் தளைதபின் ஒற்றாம்'' (யா. விருத்தி.)

என்னுஞ் சூத்திரங்களால் வலியுறும். இச்சூத்திரங்களில் 'உயிரளபெடை' என்றது ஓசை நிறைக்க வந்த குற்றெழுத்துக் களையே யாதல் அறிக.

ஆயின் 'நெடில் அளபெழும் அவற்றவற்றினக் குறில் குறியே' (நன். எழுத்தியல 36) என்று நன்னூலாரும்,

'அளபெடைகள் சொல்லொற்றி நீட்டத்தோகும்' (நேமி நாதம். எழுத்ததி. 3) என்று நேமிநாத நூலாரும். கூறினாரரா லெனின், அவர், *வடநூல் வழக்குப் பற்றிக் கூறினாராகலின், அவை ஆசிரியர் கூறும் தமிழ்நடைக்குப் பொருந்தாவென்க. என்னை?, 'மூவள பிசைத்தல் ஓரெழுத்தின்றே' (நூல் மரபு. 5) என்று கூறினாராகலின். ஈண்டும் நன்னூலார் கூறியாங்கு 'நெடில் அளபெழும்' என்னாராய், 'நின்று இசைநிறைக்கும் நெட்டெழுத்திம்பர் ஒத்தகுற்றெழுத்தே' என்றே கூறியுள்ளார். 'நெட்டெழுத்தே அளபெழும்; இனக் குற்றெழுத்துக்கள் அடையாளமாக நிற்கும்' என்னும் நன்னூலார் கொள்கை தொல்காப்பியனார் கொள்கையொடு மாறுபடுவது.

ஆசிரியர் 'ஒத்த குற்றெழுத்து நின்று இசை நிறைக்கும்' என்றதனான், உயிரளபெடைகளில் ஒரு நெடிலும் ஒருகுறிலும் தனித்தனியே நிற்கும் என்றவாறாயிற்று. ஆகவே, 'கோட்டு நூறும் மஞ்சளும் கூடிய வழிப் பிறந்த செவ்வண்ணம் போல நெடிலும் குறிலும் கூடிய கூட்டத்துப் பிறந்து பின்னர்ப் பிளவுபடா ஓசையை அளபெடை யென்று ஆசிரியர் வேண்டினார்' என்று ஆசிரியர் நச்சினார்க்கினியர் கூறியது பொருந்துவதன்று. அளபெடை பிளவுபடா ஓசையாயின், "கடாஅக் களிற்றின் மேல்" என்னுமிடத்து, 'கடாஅ' என்பதிலுள்ள 'டாஅ' என்னும் அளபெடை யெழுத் தொன்றனையே ஒருநெடிலாகவும் ஒரு குறிலாகவும் பிரித்து (கடா+அ) நிரைநேர் என்னுமாறில்லை யென்க. ஆயின், 'ஓரெழுத்தினையே இரண்டு மாத்திரையும் ஒரு மாத்திரையுமாகப் பிரித்து அசைத்தும் சீர்செய்தல் பொருந்தா தெனின், அற்றன்று; 'எழுத்து வகையான' என்னாது "மாத்திரை வகையான தளை தம கெடாநிலை, யாப்பழியாமையென் றளபெடை வேண்டும்" என்றமையின் எழுத்திற்கு மாத்திரை கோடலும் அசைத்தலும் சீர்செய்தலும் தளையறுத்தலும் ஓசைபற்றியல்லது எழுத்துப்பற்றியல்ல என்க' என்று சிவஞான முனிவர் கூறியிருத்தலின், ஓர் எழுத்தையே ஒரு நெடிலாகவும் ஒருகுறிலாகவும் அமைத்துச் சீர் கோடல் பொருந்தும் எனின், பிளவுபடாது இயைந்து நின்ற ஓசையொன்றனை இரண்டாகப் பிரித்தல் எவ்வாறு இயலும் என்க. பிளவுபடாது நின்ற

* வடமொழியில் அளபெடைகள், செய்மைவிளி முதலியவற்றுக் கண் அன்றி, தமிழிற்போல ஓசை குன்றியவழி மொழிக்கண் வருதல் இல்லை.

மூவளபொலி ஒன்றனையே இரண்டெழுத்தாகப் பிரித்துச் சீர் கோடல் அமையும் எனின், மேற்கூறிய 'கடாஅக் களிற்றின் மேல்' என்பதிலுள்ள ஈரளபொலியாகிய 'டா' என்னும் ஒலியொன்றனையே இரண்டாகப் பிரித்து இரண்டு குறிலாகக் கொண்டு, கடா (கட+அ) என்பதனைப் புளிமா என்னும் ஈரசைச் சீராகக் கோடல்கூடுமே; அளபெடுத்தல் வேண்டாவன்றே? அவ்வாறு கோடல் இன்மையின், 'கடாஅ' என்று அளபெடுத்தவழி, நெடிலும் குறிலுமாகவே கொண்டு சீர்கோடல் முறை. இவற்றால் அளபெடையாவது நீரும் நீரும் சேர்ந்தாற் போல்வதும் கோட்டு நூறும் மஞ்சளும் கூடிய வழிப்பிறந்த செவ்வண்ணம் போல்வதும் அன்று என்பதும் அறியப்படும். பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் 'ஆஅழி' என்பது மூவெழுத்துப் பாதிரி என்று எழுதியிருத்தலின், அலகிடுங்கால். அளபேடையை நெடிலும் குறிலுமாகக் கொண்டே தொகை கூறியிருப்பது நன்கு அறியப்படும்.

இனிச் சிவஞானமுனிவர் காட்டிய 'மாத்திரை வகையான்' என்னும் சூத்திரத்தின் பொருள், 'தளைகெடவருமிடத்து யாப்புக் கெடாதவாறு மாத்திரை வகையால் அளபெடை கோடல் வேண்டும்' என்றதாகும். அச்சூத்திரத்தால் 'பிளவு படாத ஓசையை இரண்டாகப் பிரித்து அமைத்துக் கொள்க' என்னும் விதி பெறப்படுதல் இல்லை.

சங்கர நமச்சிவாயப்புலவர் நெடிலது விகாரமாய் ஒரொலியாய்ப் பிறக்கும் அளபெடையை இரண்டெழுத்துக் கூடி மூன்று மாத்திரையாயிற்று என்றல் பொருந்தாதென்றும், குற்றெழுத்து அறிகுறியே யென்று கோடற்குக் 'குறியே' என்றார் என்றும் கூறி, 'இக்கருத்தே பற்றி ஆசிரியர் தொல்காப்பியரும் 'குன்றிசை மொழிவயின் நின்றிசை நிறைக்கும் நெட்டெழுத்து என்றும், அவற்றின்பின் அறிகுறியாய் வரும் ஒத்த குற்றெழுத்து என்றும் கூறினரன்றே' என்றும் எழுதியுள்ளார். இவர் 'நின்றிசை நிறைக்கும்' என்பதற்கு நெட்டெழுத்தினை வினை முதலாகக் கொண்டதுவும், 'அவற்றின் பின் அறிகுறியாய் வரும்' என்று ஆசிரியர் கூறாதிருக்கவும். அதனையும் அவர் கூற்றாகக் கொண்டு குறித்ததுவும் அமைவன வல்ல. 'குன்றிசை ...குற்றெழுத்தே' என்னும் சூத்திரத்தில் 'நின்றிசை நிறைக்கும்' என்பதற்கு, 'குற்றெழுத்து' என்பதே வினைமுதல். எக்குற்றெழுத்து வரும் என்னும் ஐயப்பாட்டை யொழிக்க 'ஒத்த' என்று அடைமொழி கொடுத்தார். நிற்றலும் இசை நிறைத்தலும் குற்றெழுத்தின் தொழிலேயாதல் எளிதின் அறியப்படும். இவ்வாறாகவும், ஆசிரியர் கருத்தினை மாறுபடுத்திச் சங்கர

நமச்சிவாயர் உரை கூறியது நன்னூலார் கொள்கையை அமைத்துக் கோடற்கே யாகும்.

வெள்ளை வாரணனார்

நன்னூலார் கூறியவாறு நெட்டெழுத்தே அளபெடுத்து நிற்க, அதன் பின்னர் வரும் குற்றெழுத்து அறிகுறியாய் வந்த தாயின்,

ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை
யாஅது மென்னு மவர்

உறாஅர்க் குறுநோய் உரைப்பாய் கடலைச்
செறாஅஅய் வாழிய நெஞ்சு

அனிச்சப் பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை.

என்றற்றொடக்கத்து இலக்கியங்களில் இருமாத்திரையுடைய நெட்டெழுத்து ஓரசையாகவும், ஒருமாத்திரையுடைய குற்றெழுத்து ஓரசையாகவும் பிரித்து, அசை கொள்ளப்படுதல் பொருந்தாதாம். செய்யுளில் வரும் உயிரளபெடை நெடிலோசையும், குறிலோசையும் என வேறு பிரித்து அசை கொள்ளப் படுதலானும், நெடிலே மூன்று மாத்திரையின் மிக்கொலிக்கு மென்றல், இரண்டு மாத்திரைக்கு மேல் மூன்று மாத்திரை முதலாக ஒரெழுத்தொலித்தலில்லை என்பதுபட 'மூவளபிசைத்தல் ஒரெழுத்தின்றே' என ஆசிரியர் கூறிய சூத்திரக் கருத்தோடு முரணுதலானும், 'குன்றிசை மொழிவயின் நெட்டெழுத்திம்பர் ஒத்த குற்றெழுத்து நின்று இசை நிறைக்கும்' என்புழி இசை நிறைக்கும் என்னும் பயனிலைக்கு வினை முதலாகிய குற்றெழுத்தினை வெறும் அறிகுறியென்றல் பொருந்தாமையானும் தொல்லாசிரியரின் விதியே அளபெடைக்கு அமையும் என்க.

சிவலிங்கனார்

பிற்காலத்தார் கொண்டதுபோல 'இசைகெடின் மொழி முதல் இடை கடைநிலை நெடில் அளபெழும்' எனக் கொள்ளாமல், அளபடை எழுத்து எனத் தனி எழுத்து என்றும், அதுமொழியாகத்தான் வரும் என்றும், அதுவே பெரும்பான்மை என்றும், நெடில் அளபெடுத்தல் சிறுபான்மை என்றும் இளம்பூரணர் ஏன் கொண்டார் என்பதைக் காணுதல் வேண்டும்.

1. ஆசிரியர் தொல்காப்பியர் கூறிச்சென்ற கூற்றுக்கள் அவரை அவ்வாறு கொள்ளச் செய்தன என்னலாம். ஆசிரியர் காலத்தில் சிலசொற்கள், ஆஅ, மகாஅர், சிறாஅர் போல அளபெடுத்த நிலையிலும் வழக்கத்தில் இருந்திருக்கின்றன என்னலாம். அதனால்தான் 'நீட்டம் வேண்டின்' என்னும் நூற்பாவும், 'குன்றிசைமொழி வயின்' என்னும் நூற்பாவும் அமைத்தார். அளபெடையிலக்கணம் இல்லாமலேயே அளபெடை போலச் சொற்கள் வழங்கினவும் உண்டு. அச்சொற்கள் பெரும் பாலும் தொடர்ச் சொற்களாகும். அதாவது தனிச்சொற்களாக இன்றி நிலைவரு மொழிகளாகப் புணர்ந்த சொற்களாம். 'பலா' என்ற ஆகாரவீற்றுச் சொல் 'கோடு' என்ற சொல்லுடன் சேரும் போது 'பலாஅக்கோடு' என இடையில் அகரம் வரச் சேரும். இப்படிப் பல சொற்கள் அல்வழி வேற்றுமைப் புணர்ச்சிகளில் உள. அவற்றிடையுள்ள நெடிலையடுத்த குறிலை, நெட்டெழுத் திம்பர் நின்று இசைநிறைக்க வந்த குற்றெழுத்து எனக் கொள்ளாமல் புணர்ச்சி விதியால் வந்த எழுத்து எனக் கொள்ளல் வேண்டும். (எழுத்து. 224, 227, 262, 268, 278, 293 ஆகிய நூற்பாக்களில் கூறப்பட்டன எல்லாம் இப்படிப்பட்டனவே)

2. இனி நிலைமொழியீற்று உயிரும் வருமொழி முதல் உயிரும் இடையில் உடம்படுமெய் வந்து புணர்க்கச் சேரும் என்ற விதிக்கு மாறாக அளபெடையோ என்னும் நிலையிலும் சொற்கள் வழங்கினவும் உண்டு. "ஒகார விறுதிக் கொன்னே சாரியை" (உயிர் மய. 181) என்ற நூற்பாவானது 'கோ' என்ற சொல் 'ஐ' முதலிய உருபுகளுடன் சேரும்போது 'ஒன்' என்ற சாரியை பெறும் என வந்தது. கோ + ஐ = கோ + ஒன் + ஐ = கோனை எனக் காண்க. இவ்விடத்து நிலைமொழி யீற்று ஒகர வுயிரும் உடம்படுமெய் வேண்டாது அப்படியே நின்று (அளபெடையில்லை யாயினும்) அளபெடை போல இருத்தலைக் காண்க. (இவ்வாறே எழுத்திதகாரம் 259, 312 நூற்பாக்களிலும் காண்க.)

3. 'ஏ' என்ற நெடில் ஓரெழுத்தொருமொழியாய் வரும் போது 'அம்பு' எனப் பொருள்பட்டுப் பெயர்ச் சொல்லாகவும், 'ஏவு எனப் பொருள்பட்டு வினைச் சொல்லாகவும், 'ஏ கொண்டான்' என்னுமிடத்தில் இடைச் சொல்லாகவும் வரும். 'ஏ' என்ற பெயர்ச்சொல் 'கொட்டில்' என்ற சொல்லுடன்சேரும் போது 'ஏஎக் கொட்டில்' என இடையில் எகர எழுத்து மிகும் என்று ஆசிரியர் விதித்தார் (உயிர் மய. 278)

"எகர ஒகரம் பெயர்க் கீறாகா" (273)என விதித்த ஆசிரியர், முன்னிலை வினைச் சொல்லிலும் இடைச்சொல்லிலும் இறுதியில் வரும் எனவும் விதித்தார். (272) குற்றெழுத்துக்கள் மெய்யோடன்றி மொழியிறுதியில் வருதல் இல்லை. (மொழி. 38) தனித்து இறுதியில் வரவேண்டுமாயின் அளபெடையில் தான்வரும். எனவே, ஏஎக் கொற்றா என முன்னிலை வினையிலும், ஏஎ கொண்டான்' என இடைச்சொல்லிலும் அளபெடுத்த நிலையிலேயே வந்தன காண்க, ஆனால் 'ஏஎக் கொட்டில்' என்பதில் எகரம் புணர்ச்சி விதியால் வந்தது எனக் கொள்க. இவ்வாறு 'ஏஎ என்ற ஓரெழுத்து ஒருசொல்லில் உள்ள குற்றெழுத்து, பெயரான போது அளபெடை என்பதன்றிப் புணர்ச்சி விதியான் வந்த எழுத்து எனவும், வினைச்சொல் இடைச்சொல் ஆனபோது அளபெடையை அறிவிக்க வந்த எழுத்து எனவும் படுதல் காண்க.

இவற்றால் தொல்காப்பியர் காலத்தில் ஒலிக்கப் பட்ட சில சொற்களின் நெட்டெழுத்தைச் சார்ந்த குற்றெழுத்துக்கள் ஒலி வடிவில் அளபெடைபோலக் காணப்பட்டாலும் எழுத்துவடிவில் பொருளாலும் புணர்ச்சியாலும் அளபெடையாகவும், இடை வந்த எழுத்தாகவும் இடம் நோக்கிக் கொள்ளல் வேண்டும் என்பதையறியலாம். அதனால்தான் இளம்பூரணர் அளபெடை எழுத்து என வேண்டியதோடு மட்டுமன்றி, மொழியில் நெடில் அளபெடுத்தல் சிறுபான்மை எனவும் கொண்டார் என்னலாம். 'எழு' என்றதன் வினை 'எழுப்பு' என்று பிறவினையில் வரும் போது 'எழூ' எனவந்து பின் அது 'எழூஉ' என அளபெடுத்தல் முதலியன வெல்லாம் சிறுபான்மையில் சேர்த்துக் கொண்டார் இளம்பூரணர் என்னலாம்.

சுப்பிரமணிய சாஸ்திரியார், 'ஒத்த குற்றெழுத்து' என்பதற் குப் பதிலாக, 'ஒத்த எழுத்து' என்றிருத்தல் தகும் என்பர். நான்கு மாத்திரை பெற வேண்டின் அளபெடுக்கும் நெடிலின் பின்னர் அதே நெடில் எழுத்தை அமைப்பது கூடாது; குற்றெழுத்துகளையே அமைத்தல் வேண்டும் என்பதற்காகவே 'ஒத்த குற்றெழுத்து' என்றார் ஆசிரியராதலின் அளர்கூற்றுப் பொருந்தாது. 'செருஅஅய் வாழி' என்பது காண்க.

இனி, நெட்டெழுத்துகள் போலவே குற்றெழுத்துகளும் அளபெடுக்கும். "நீட்டம் வேண்டின்" (எழு. 6) என்னும் நூற்பா அவ்விரண்டற்குமே கூறப்பட்டது.

குற்றெழுத்தும் அளபெடுக்கும் என்பதற்கு
அளபெடை மிகூஉம் இகர இறுபெயர்
இயற்கைய வாகும் செயற்கைய என்ப (சொல். விளி)

என்னும் நூற்பாவிற்குச் சேனாவரையர், 'தொழிஇஇ' என உதாரணம் காட்டியது சான்றாகும்.

மேலும் சில சான்றுகள் வருமாறு:

1. 'தூஉத் தீம்புகை' என்பதில் தூஉ என்பதை தூ + உ + உ எனப் பிரித்து நேர் நேர் நேர் என மூவசைச் சீராக்கி வெண்சீர் வெண்டளை எனக் கொண்டு அடுத்து வரும் 'தீம்புகை' என்பதனோடு சேர்த்து வெண்பா இலக்கணம் அமைப்பர் செய்யுளியலுடையார். இங்கு தூ என்னும் நெடில் அளபெடுத்து தூஉ என்றாகிப் பின்னர் உ என்பது மேலும் அளபெடுத்து உஉ என வந்து அமைதலின் முன்னர் நெடிலும் பின்னர்க் குறிலும் அளபெடுத்தன.
2. 'எங்ங்கு' என்னும் ஒற்றளபெடையில் ங் என்னும் ஒற்று மீண்டும் ங் என அளபெடுத்தல் போலவே 'தூஉ உ' என்பதிலும் முன்னின்ற உ மீண்டும் அளபெடுத்து உ உ என நின்றது.
3. (உயிர்) 'அளபிறந்துயிர்த்தலும் ஒற்றுஇசை நீடலும் இசையொடு சிவணிய நரம்பின் மறைய' (எழுத். 33) எனக் கூறியதிலும் குற்றெழுத்தும் அளபிறந்துயிர்க்கும் என்பது கூறப்பட்டது.
4. உலக வழக்கிலும் 'வருக' என ஒருவரை அழைக்கும் போது 'வருக அ அ' என அழைத்தல் உண்டு.

அளபெடைப் பெயர்களும் உண்டு. குரீஇ. ஆடூஉ, மகடூஉ, மகாஅர் என்பன அவை. இவை உலக வழக்கிலும் தொல்காப்பியர் காலத்தில் இருந்தன. அதனால் அவர் இவற்றை அளபெடைப் பெயர் என்றே வழங்கினார்.

பலா + கோடு = பலாஅக்கோடு என அகர எழுத்துப் பேறாக வரும் அளபெடையும் உண்டு. இதை அளபெடைப் போலி என்று கூறலாம்.

'கோ + ஒன் = கோஒன்' என்பதில் ஒன்சாரியை. என்றாலும் கோஒன் என்பதை அளபெடை நிலையிலேயே ஒலிக்கின்றோம். இதையும் அளபெடைப் போலியுள் சேர்க்கலாம்.

(இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்ற நான்காவது கருத்தரங்கு மலர். (1972. பக். 379-384))

சுந்தர-சண்முகனார்

தமிழ்மொழியில் தக்க சொல்லைப் பெய்து சீரை இயற்கையாக நிறைவுடையதாக்கிச் செய்யுள் இயற்ற முடியாதா? தொல்காப்பியர் காலத்திற்கு முன்பு அளபெடையமைத்துச் செய்யுள் இயற்றியவர்கள், செய்யுளில் ஒலியை நிரப்பி இடத்தை அடைப்பதற்காக அளபெடை அமைக்கவில்லை; பொருள் கருதியே அளபெடை அமைத்துச் செய்யுள் இயற்றினர்.

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை (குறள். 15)

இதில் உள்ள அளபெடையை இன்னிசையளபெடை எனல் பொருந்தாது. து என்ற குறிலே அளபெடுத்து த் தூ என வந்து அது பின்னர் தூஉ என அளபெடுத்தது. நெடில் போலவே குறிலும் அளபெடுக்கும் என்பது இதனால் பெறப்படும். இந்த அளபெடையில், மழையின் வரம்பு கடந்த ஆற்றலை வலியுறுத்தி நீட்டி நெளித்துப் பலகையைத் தட்டிப் பேசுவது போன்ற பொருட் குறிப்பு அமைந்து கிடக்கிறது.

''ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை'' (குறள். 653)
''உறாஅர்க் குறுநோய் உரைப்பாய்'' (குறள். 1200)

என்பனவற்றில் உள்ள அளபெடைகளில் புகழ் கெடுக்கும் தீச் செயல்களைக் கட்டாயம் நீக்கியே தீரவேண்டும் என இடித்து வலியுறுத்தும் பொருட்குறிப்பையும், பிரிந்திருக்கும் தலைவர் நெடுநாளாய் வாராமல் இருக்கிறார் எனப் பிரிவின் நீட்டிப்பைத் தலைவி ஏக்கத்துடன் உணர்த்தும் பொருட் குறிப்பையும் முறையே அமைந்து கிடத்தலை அறியலாம். இவற்றில் செய்யுளுக்குரிய—செய்யுளைச் சீர்செய் தற்குரிய அசைகளாகவும் இயற்கையாக அமைந்து விட்டன.

அளபெடைகள் பொருளுக்காகத் தோன்றின என்னும் பெறுமான உண்மையை இலக்கண ஆசிரியர்கள் அறியாமலும் இல்லை. இந்தப் பெறுமான உண்மைக்குத் தொல்காப்பியத் திலேயே சான்றுள்ளது.

''அளபெடை அசைநிலை யாகலு முரித்தே'' (16)

என்னும் தொல்காப்பியச் செய்யுளியல் நூற்பா இங்கே குறிப் பிடத்தக்கது. இதன் உரையில் எடுத்துக்காட்டாக நச்சினார்க் கினியர் தந்துள்ள,

"உப்போஒ எனவுரைத்து மீள்வாள்"
"நெல்லுக்கு நூறோஒநூ றென்பாள்"

என்னும் வெண்பா அடிகளிலுள்ள 'உப்போஒ', நூறோஒநூ' என்னும் பகுதிகளிலுள்ள 'போஒ' 'றோஒ' என்பன 'போ + ஒ' 'றோ + ஒ' என ஈரசைச் சீர்கள் அல்ல; அவை ஓரசைகளேயாம். அஃதாவது—அளபெடைக் குறிலாகிய 'ஒ' என்னும் எழுத்து 'போ' அல்லது 'றோ' என்னும் நெடிலோடு இரண்டறக் கலந்து, தனக்கெனத் தனிமதிப்பு இன்றி ஓரசையாய் நின்றுளது. இதனைத்தான் தொல்காப்பியர் மேலுள்ள நூற்பாவில் 'அசை நிலை' என்னும் தொடரில் குறிப்பிட்டுள்ளார். இந்த 'ஒ' இங்கு அலகு பெறாது. பெற்றால் வெண்டளை கெட்டுவிடும். எனவே ஈண்டு இந்த அளபெடைகள் இடம் நிரப்பும் நோக்கத்துக்காக இன்றி, பண்டமாற்று என்னும் பொருள் பெறுமானத்துக்காகவே அளபெடுத்துள்ளன என்பது புலனாகும்.

(இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம் ஐந்தாவது கருத்தரங்கு ஆய்வுக்கோவை. பக். 667—670. 1973).

நா. இராசகோபாலன்

நீளும் நெட்டெழுத்தின் மீதும், நீட்சியைக் குறிக்கவரும் குற்றெழுத்தின் மீதும் ஆசிரியர் கருத்து செலுத்தியிருப்பது நோக்கத்தக்கது.

"கூட்டி யெழூஉதல்" (தொல். நூன்மரபு. 6)

"குற்றெழுத்து இசைநிறைக்கும்" (தொல். மொழி மரபு. 8) என்று இருநூற்பாக்களில் கூறுவது கொண்டு இதனை நன்கறியலாம். நீளும் நெட்டெழுத்தையும் ஓசை நிறைக்கும் குற்றெழுத்தையும் உள்ளத்திற் கொண்டே ஆசிரியர் அளபெடையென்றார்.

இவ்வாறு இரண்டையும் கருத்துட் கொண்டு அளபெடை என்றது, செய்யுளியலுள் அவ்வளபெடையைத் தாம் வேண்டியவாறு எடுத்தாளுவதற்காகவே. நீளுதலால் இசை நிறையுமாயின் அளபெடையைச் சீராகவும், நீண்டதனைக் குறிக்கவரும் குற்றெழுத்து சீர்சிதையுமாறு நிற்பின் அதனை அசையாகவும் கொள்ள விரும்பினார் தொல்காப்பியர்.

ஆஅ என நீண்டு நின்றது, இரண்டு அசை என வேண்டின் அது சீர்நிலை.

ஆஅ என நீண்ட பின்னரும் ஒரு சீர் என வேண்டின் அது அசைநிலை.

இசை நிறைக்கும் குற்றெழுத்து மெய்யெழுத்துப் போல அலகுகாரியம் பெறாது என்பது கருத்து.

—(இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம் ஐந்தாவது கருத்தரங்கு ஆய்வுக்கோவை. பக். 635–639. 1973.)

அ. தெட்சிணாமூர்த்தி

அளபெடையை இசைநிறை, இன்னிசை, சொல்லிசை என வ கப்படுத்துவது தேவையில்லை. ஏன் எனின் அவற்றுக்குக் கூறப்படும் இலக்கணம் முறையாக அமையவில்லை.

1. **"துப்பாய தூஉ மழை"** (குறள் 12)

இதில் துப்பாயது என்றதில் உள்ள **து** என்பது **தூ** என நெடிலாய்ப்பின் **தூஉ** என அளபெடுத்தது. குறில் நெடிலாகி அளபெடுத்தமையால் இன்னிசையளபெடை என்னலாமா. இன்னிசையளபெடை என்பது சீரும் தளையும் சிதையாவிடத்து இன்னோசைக்காகக் குறில் நெடிலாகிப் பின் அளபெடுப்பதாகும். இங்கு துப்பாயது என்பது ஒரு சீராக இல்லாமல் துப்பாய, து என இருசீராய் அமைதலின் **து** என்பது ஓரசையாகித் தளையும் சீரும் சிதைகின்றன அதனால் து என்பது தூஉ என அளபெடுக்க வேண்டியதாயிற்று. அதனால் தூஉ என்பது இசைநிறை யளபெடை என்றாகும். இசைநிறையளபெடை நெடிலே அளபெடுக்கும் என்பது விதி.

2. **"வருவர்கொல் வயங்கிழாஅய் வலிப்பல்"**

இதில் 'வயங்கிழாய்' என்பது 'வயங்கிழா அய்' என அளபெடுத்தது. கலிப்பாவில் கருவிளச்சீர் வரலாம் என்பது விதி. அதனால் சீர் சிதையவில்லை. கலிப்பாவில் விளமுன் நிரையாகும் ஆசிரியத் தளையும் வரலாம். அதனால் தளையும் சிதையவில்லை எனவே சீரும் தளையும் சிதையாத போது இது அளபெடுத் துளதே. அளபெடுத்த நிலையில் காய்ச்சீராகி அடுத்துவரும் சீருடன் கலித்தளையாகச் சேர்கிறது. கலிப்பாவுக்குரிய தளை என்ற உரிமை பெறுகின்றது. எனவே வயங்கிழாஅய் என்பது இசைநிறைக்குரியதாகவோ இன்னிசைக்குரியதாகவோ இல்லை.

3. **"உப்போஒ எனவுரைத்து மீள்வாள்"**

இதில் உள்ள உப்போஒ என்பது காய்ச்சீராகி அடுத்துவரும் சீருடன் கலித்தளையாக வருகிறது. இது வெண்பாவடியைச்

சார்ந்ததாதலின் கலித்தளை கூடாது. அதனால் அளபெடை ஒகரத்துக்கு அலகுகாரியம் இல்லை. இந்த அளபெடை இசை நிறைக்க வந்ததன்று. இன்னிசை நிறைக்க வந்ததுமன்று.

4. குரூஉத்திரள், குரூஉச்சுடர் போல்வன புணர்ச்சி விதியால் உகரம் பெற்று வந்தனவேயன்றி அளபெடைகள் அல்ல.

—(இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றக் கருத்தரங்கு ஆய்வுக்கோவை தொகுதி 2. பக். 667-672. 1976.)

5. நசை என்னும் பெயர்ச்சொல் செய்யுளில் நசைஇ என்றாம்போது வினையெச்சமாகிறது. இது கொண்டு பெயரெச்சம் வினையெச்சமாக அளபெடுக்கும்போது அவ்வளபு சொல்லிசையளபெடை யெனப்படும். ஆறுமுகநாவலர் சிவஞான முனிவர் போல்வார் கருத்து இது.

வினையடியிலிருந்து பெயர்ச்சொல் அமைவது உண்டே தவிரப் பெயரிலிருந்து வினைச்சொல் உண்டாவது தமிழ் மரபாகத் தெரியவில்லை.

நசை என்பது விரும்புவாயாக என்ற பொருளில் வரும் வினையடிச் சொல்லாகவே தெரிகிறது. பழி, அடி, குத்து என்பன போன்றது அது. நச என்பதே விரும்பு என்னும் பொருளில்வரும் வினையடியாம். நயப்பு என்பதில் நய என்பது நச என்பதன் திரிபே. (ச-ய ஆகத் திரியும்) எனவே நச என்பதுவே நசை என்றாயிற்று. அது பின்னர் நசைஇ என வினையெச்சமாகும்.

நச என்னும் வினையடியே நசை, நசைஇ என வருவதால் பெயர்ச்சொல் வினையெச்சச் சொல்லாயிற்று என்பது பொருந்தாது. அதனால் சொல்லிசையளபெடைக்குக் கூறும் இலக்கணமும் பொருந்தாது.

நசைஇ என்பதில் இகரம் அளபெடை எழுத்தன்று; வினையெச்ச விகுதியாம்.

'கெழீஇயிலர்' என்பதும் சொல்லிசையளபெடையன்று. கெழு என்னும் வினைச்சொல் உகரவிகுதி சேர்ந்து அவ்வுகரம் இகரமாகத் திரிந்து, அவ் இகரம் நீண்டுபின் அது அளபெடுத்தது. கெழு + உ → கெழு + இ → கெழி → கெழீ → கெழீஇ எனக் காண்க. (கெழு—பொருந்து).

(சொல்லிசையளபெடை — இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம் ஐந்தாவது கருத்தரங்கு ஆய்வுக்கோவை. பக். 688-90. 1973.)

த. பாண்டியன்தனசிங்

உயிர் அளபெடையையும் ஒற்றளபெடையையும் மொழி முதல் இடை ஈறு என மூன்றாக அமைப்பதே நன்று. ஒற்றளபெடையை மட்டும் குறிற்கீழ் இடை, குறிற்கீழ்க்கடை, குறிலிணைக்கீழ் இடை, குறிலிணைக் கீழ்க்கடை என நான்கு என்பது தேவையில்லாதது. நெட்டெழுத்துத் தனி நின்று அளபெடுக்கும் எனக் கொண்டு தனிநிலை அளபெடை என்பது ஒன்று வேண்டுதல் பயனில்லாதது; மிகைப்பட்டதாகும்.

இசைநிறையளபெடை, இன்னிசையளபெடை, சொல்லிசையளபெடை என முத்திறப் படுத்தலாம்.

இசைநிறையளபெடை இரண்டு வகை: 1. செய்யுளில் ஓசையமையாது தளை தட்டும்போது வருவது. "வீழ்நாள் படாஅமை நன்றாற்றின்" (குறள்.) என்பதில் 'படாஅமை' என்பது படாமை என்றிருக்கின் தளை தட்டும். 2. ஓரசை ஈரசைச் சீராக அமைக்கப்படும்போது வருவது. "நற்றாள் தொழாஅ ரெனின்" (குறள். 2) 'தொழாஅ' என்பது ஈரசையாகவும் 'தொழா' என்பது ஓரசையாகவும் அமைதல் காண்க. தொழா என்னும் ஓரசை தொழாஅ என ஈரசையாகி வெண்பா இலக்கண இசையை நிறைத்தது.

இன்னிசையளபெடை இரண்டு வகை 1. "துன்புறூஉம் துவ்வாமை" (குறள். 94) என்பதில் 'துன்புறூஉம்' என்பது காய்ச்சீராய் அமைந்து அடுத்துவரும் சீருடன் வெண்சீர் வெண்டளையாகத் தொடர்கிறது. 'துன்புறும்' என அளபெடாது நிற்கின் விளச்சீராக அமைந்து அடுத்துவரும் சீருடன் இயற்சீர் வெண்டளையாகத் தொடர்கிறது. இதில் தளைப் பெயர் மாற்றம் உண்டு; ஓசை மாற்றம் இல்லை—இதனால் ஒரு பாடற்குரிய ஓசை வேறு பாடற்குரிய ஓசையாகாதபடி அமையும் தளை மாற்றம் தரும் அளபெடை இன்னிசையளபெடை எனப்படும். 2. ஓசையும் தளையும் மாற்றமே இல்லாதபடி வரும் அளபெடையும் இன்னிசையளபெடையாம்.*

சொல்லிசையளபெடை மூன்று வகைப்படும். வடிவமாற்றம், பொருள் மாற்றம், தன்மை மாற்றம் என்பனவற்றால் அமைவன அவை:

* இதற்கு உதாரணம் கட்டுரையாளர் காட்டவில்லை.

1. **"குடிதழீஇக் கோலோச்சும்"** (குறள். 544) என்பதில் 'தழீஇ' என்பது 'தழுவி' என்பதன் மாற்றம். வெள்ளோசைக்குத் தழீஇ என்பதும் அமையும். அதனால் ஓசை மாற்றம் இல்லை; பொருள் மாற்றமும் இல்லை. ஆனால் சில எழுத்துக்கெட்டு வடிவ மாற்றம் உண்டு.

2. **"வரல்நசைஇ இன்னும் உளேன்"** (குறள்.1263) இதில் நசை என்பது நசைஇ என ஆயது. நசை—விருப்பம்; பெயர்ச்சொல்; நசைஇ—விரும்பி; வினையெச்சம். எனவே பொருள் மாற்ற முண்டு. ஓசைமாற்றம் இல்லை.

3. மேல் நசை என்பது பெயர்ச்சொல் தன்மையும் நசைஇ என்பது வினைச்சொல் தன்மையும் ஆதலின் தன்மை மாற்றம் உண்டு.

—(இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றக் கருத்தரங்கு ஆய்வுக்கோவை. 2. பக்கம். 695-700 (1976)).

செ. வை. சண்முகம்

அளபெடை என்பது ஈருயிர்களின் கூட்டொலி (vowel cluster)யாகவும், மூன்று மாத்திரையுடைய ஓரொலி அதாவது தனியொலியாகவும் தொல்காப்பியர் காலத்திலேயே இருந்திருக்க வேண்டும்.

செய்யுளில் அளபெடை சீர்நிலையெய்துவது கூட்டொலித் தன்மையும் எய்தாதது தனிநிலைத் தன்மையும உணர்த்தும். சொல்லிசை அளபெடை பற்றி மரபுவழி வரும் விளக்கம் சொல்லியல் விளக்கமாகும். ஒலியன் நிலையில் பார்த்தால் அளபெடை தனி ஒலியன் என்பது தெளிவாகும்

1. சங்க இலக்கியத்தில் எல்லா நெட்டெழுத்துக்களுமே அவற்றிற்கு இணையான அளபெடைகளோடு பொருள் வேறுபட்டு வேற்றுநிலையில் வழக்கில் வருவதால் அளபெடைகளைத் தனி எழுத்துக்கள் என்று ஐயமின்றிக் கூறலாம்.

உதாரணம்:

ஆ/ஆஅ. தாய் (அன்னை) புறம் 418. தாஅய் (தாவி) நற். 647.

ஈ/ஈஇ. நீர் (நீங்கள்) புறம் 110. நீஇர் (தண்ணீர்) புறம். 355.

ஊ/ஊஉ. மூய் (மூடு) குறுந். 233. மூஉய் (மூடி) பரிபா. 10.

ஏ/ஏஎ. சேய் (சேய்மை) குறுந். 64. சேஎய் (முருகன்) குறுந். 1.

ஓ/ஓஒ. போர் (சண்டை) அகம். 36. போஒர் (ஒரூர்) அகம். 186.

2. நெட்டெழுத்தோடு பொருள் மாறுபடாமல் உறழ்ந்து வருகின்ற அளபெடைகளை ஒலியன் உறழ்ச்சியாகக் கொள்ளல் வேண்டும்.

உதாரணம் : கடாஅம் (மதம்) நற். 18 கடாம் (மதம்) பத்து. 6:44.

அளபெடையின் அடிப்படை வடிவம் என்ன ?

1. நெட்டெழுத்தே நீண்டு செய்யுளில் ஓசை நிறைத்தற்காக அளபெடையாயிற்று.

ஏஎர் (அழகு) நற். 267—ஏர் குறுந். 377.

2. (அ) இரண்டுயிர்களுக்கு இடையில் மெய்யெழுத்தமைந்த வடிவத்தோடு அளபெடை வடிவம் வந்துளது. (தேயம்—தேஎம்) இதில் மெய்யெழுத்தே அளபெடைக்கு அடிப்படை தேசம்—தேயம்—தேஎம் எனவருவதில் சகரவல்லினம் யகர இடையினமாக மாறி அது பின்னர்க் கெட்டு ஏகாரத்தைச் சார்தலின் அகரம் அதன் இனமான எகரமாயிற்று. (தேசம்→தேயம்→தே அம்→தே எம்)*, (ஆ) பர→ பஅ→ பாஅ→பாஅய் (நற். 112,)→ பாய் (நற் 31)—இதில் இடைநின்ற ரகாமெய் கெட்டது. (இ) தா அம் (குறுந். 329) தாவும் என்ற வடிவங்கள், தா—உம் என்ற அடிப்படை வடிவத்திலிருந்து 'ஆ'வை அடுத்த 'உ' ஓரினமாக வேண்டி 'அ' என்றாகித் 'தாஅம்' எனவும் வகர உடம்படு மெய் பெற்றுத் 'தாவும்' எனவும் ஆயின. —(இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றக் கருத்தரங்கு ஆய்வுக்கோவை 2. பக். 597—602. 1976).

---

* 'தேஎம்' என்ற இயற்கையளபெடைப்பெயரே தே யெம் → தேயம் → தேசம் என்றாயிற்று என்று கொள்ளல் தகும்.

ஐகார ஔகார அளபெடை

42. ஐ ஔ என்னும் ஆயிர் எழுத்திற்கு
இகர உகரம் இசைநிறை வாகும் (9)

ஆ. மொ:

இல.

'i' and 'u' are the supplementals after the long vowels 'ai' and 'ou'.

க. சு.

The sound 'i' and the sound u occur to supplement the two phonemes 'ai' and 'au'.

பி. இ. நூ.

நன். 71. ஐ ஔ இ உச் செறிய

இல. வி. 19. ஐ ஔ இ உ என்னும்
ஆயி ரெழுத்தோடும் அளபெழும் என்ப.

முத்து. 21. அவற்றுள்
இ உ ஐ ஔக்கு இனம்என மொழிப.

சுவாமி. 9. ஐ ஔ இ உக் குறிலாய்க் கூய் அளவாம்.

இளம்பூரணர்

இது, மேலதற்கோர் புறனடையுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: ஐ ஔ என்னும் ஆ ஈர் எழுத்திற்கு—(ஒத்த குற்றெழுத்தில்லா) ஐ ஔ என்று சொல்லப்படும் அவ்விரண்டெழுத்திற்குமுன், இகரம் உகரம் இசை நிறைவு ஆகும்—(ஈகார ஊகாரங்கட்கு ஒத்த குற்றெழுத்தாகிய) இகர உகரங்கள் ([1]அக்குன்றிசை மொழிக்கண் நின்று) ஓசையை நிறைப்பன வாகும்.

எ—டு : ஐ இ, ஔ உ எனவரும். ஐகாரத்திற்கு இகரமும் ஔகாரத்திற்கு உகரமும் என நிரனிறையாகக் கொள்க.

இத்துணையும் நூன் மரபின் ஒழிபு.

ச. வே. 1. குன்றிசை

நச்சினார்க்கினியர்

இஃது ஒத்த குற்றெழுத்து இல்லாதன அளபெடுக்குமாறு கூறுகின்றது.

இ—ள்: தமக்கு இனமில்லாத ஐகாரம் ஔகாரம் என்று கூறப்படும் அவ்விரண்டெழுத்திற்கு, ஈகார ஊகாரங்கட்கு இனமாகிய இகர உகரங்களைச் சார்த்திக் கூற, அவை அக்குன்றிசை மொழிக்கண் நின்று ஓசையை நிறைப்பனவாம்; எ—று.

ஐஇ, ஔஉ என நிரனிறையாகக் கொள்க. இவற்றை முற்கூறிய இயற்சீர் எட்டிற்கும் ஏற்பனவற்றோடு உதாரணங் காட்டிக் கொள்க.

இத்துணையும் நூன் மரபின் ஒழிபு.

வெள்ளை வாரணனார்

அளபெடைக்கண் இசை நிறைப்பன குற்றெழுத்துக்களே யென்பதை ஈண்டும், "இகர உகரம் இசைநிறைவாகும்" என்பதனால் ஆசிரியர் விளக்கியுள்ளார்.

'நெடில் அளபெழும் அவற்றவற் றினக்குறில் குறியே' எனவுரைத்த பவணந்தியாரும், தம் கொள்கைக்கு மாறாகக் 'குற்றுயிர் அளபின் ஈறாம்' எனக் கூறிப்போந்தார். ஓசையால் மொழிமுதல் மொழியீறு சொல்லும் இவ்விடத்தில் அளபெடையிற் குற்றெழுத்து ஈறும் எனக் கூறுதல் வெறுங் குறியளவிற் கென்றே கொள்ளற்கில்லை. இதனால் அளபெடையிற் குற்றெழுத்து ஒலித்து நிற்றலை நன்னூலாரும் தம் கொள்கையினை மறந்து உடன்பட்டன ரெனவே கொள்ள வேண்டியுளது.

3. எழுத்துகள் தொடர்ந்து மொழியாதல்

ஓரெழுத் தொருமொழி

43. நெட்டெழுத்து ஏழே ஓரெழுத்து ஒருமொழி. (10)

ஆ. மொ:

இல.

The seven long letters serve as one-letter words.

க. சு.

The seven long vowels alone (May occur) as one-syllable independent words.

பி. இ. நூ:

நன். 129. உயிர்மவில் ஆறும் தபநவில் ஐந்தும்
கவசவில் நாலும் யவ்வில் ஒன்றும்
ஆகும் நெடில்..............
ஓரெழுத்து இயல்பதம்.

இல. வி- 39. நெட்டெழுத் தேழே ஓரெழுத் தொரு மொழி.

முத்து. 116. உயிர் நெடில் ஏழும் ஓரெழுத் தொருமொழி.
118. உயிர்போல் கசதநபமவஎன் மொழி.
ஆகும் என் மனார் அறிந்திசி னோரே.

இளம்பூரணர்

இது, எழுத்தினான் மொழியாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள் நெட்டெழுத்து ஏழும்—நெட்டெழுத்தாகிய ஏழும், ஓர் எழுத்து ஒருமொழி—ஓர் எழுத்தானாகும் ஒருமொழியாம்.

எ—டு : ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, [1]ஔ எனவரும்.

இதுவும் உயிர்க்கும் உயிர்மெய்க்கும் பொது. ஔகாரத்தில் [2]உயிர்மெய்யினையே கொள்க. ஏழும் [3]என்பதன் உம்மை விகாரத்தால் தொக்கது.

நச்சினார்க்கினியர்

இஃது ஓரெழுத்தொருமொழி உணர்த்துதல் நுதலியவற்றுள் நெட்டெழுத்தானாம் மொழியாக்கங் கூறுகின்றது.

இதுவும் எதிரது போற்றல்.

இ—ள்: நெட்டெழுத்தாகிய உயிர்கள் ஏழும் ஓரெழுத்தானாகும் ஒருமொழியாம். எ—று.

முற்றும்மை தொகுத்து ஈற்றசை ஏகாரம் விரித்தார்.

எ—டு : ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ எனவரும். ஔகாரம் உயிர் மெய்க்கண்ணல்லது வராது. ஊ என்பது தசை. இஃது உயிர்க்கும்

சு. வே. 1. கௌவெள
2. உயிர் மெய்யினை
3. என்னும்

உயிர்மெய்க்கும் விதி. கா, தீ, பூ, சே, தை, கோ, கௌ எனவரும். இவை தம்மை யுணர நின்ற வழி எழுத்தாம். இடை நின்று பொருளுணர்த்தியவழிச் சொல்லாம், நெட்டெழுத்தேறிய மெய் நெட்டெழுத்தாயும் குற்றெழுத்தேறிய மெய் குற்றெழுத்தாயும் நிற்றலேயன்றி மெய்க்கு நெடுமையும் குறுமையும் இன்மை யுணர்க.

சுப்பிரமணிய சாஸ்திரியார்

பொ. ள்: (பன்னீருயிருள்) நெட்டெழுத்தேயே ஓரெழுத்தான் ஆக்கப்பட்ட ஒரு மொழியாகும்.

கோ முதலிய சொற்களும் ஓரெழுத் தொருமொழியாகக் கொள்ளப்படுதலின், ஈண்டு நெட்டெழுத்து என்றது நெட்டெழுத்தைக் கொண்ட உயிர் மெய்யினையும் குறிக்கும். நெட்டெத்தேயே என்றவிடத்து ஏகாரம் ஈற்றசையெனவும் முற்றும்மை தொக்க தெனவும் கூறினர் உரைகாரர்கள். விதேயத்தின் பின்னர் வரும் ஏகாரம் ஈற்றசையாகுமேயன்றி உத்தேசியத்தின் பின்னர் வரும் ஏகாரம் ஈற்றசையாகா; அன்றியும் உயிர் பன்னிரண்டனுள் நெட்டெழுத்தைப் பிரித்துக் கூறினமையின் ஏகாரம் பிரிநிலை ஏகாரம் என்னலாம். ஆயின் அப்போது முற்றும்மை தொக்கது எனக் கொள்ளுதல் வேண்டா.

பிற குறிப்புகள்

ஏயே என்பதில் ஏகாரம் பிரிநிலை என்பது சிறக்கும். அடுத்த நூற்பாவில் குற்றெழுத்தைந்தும் என வந்தது கொண்டு உரைகாரர்கள் எகாரம் ஈற்றசை என்றனர்போலும்.

ஞானியார் மடாலயச்சுவடியில் "நெட்டெழுத்தாகிய ஏழும் ஓரோமொழி எ—று" என்று உரை எழுதப்பட்டுள்ளது. ஓரோர் மொழி என்பது ஓரோ மொழி என எழுதப்பட்டிருக்கலாம்.

எடுத்துக்காட்டாக ஔ என்ற நெட்டுயிர் இளம் பூரணத்தில் உள்ளது. சில சுவடிகளில் அதற்குப்பதில் கௌ, வௌ என்பன உள்ளன. நச்சினார்க்கினியர் தாம் படித்த சுவடியில் கௌ, வௌ என்பனவே இருக்கக் கண்டார்போலும். அதனால் அவர், "ஈரள பிசைக்கும் இறுதியில் உயிரே" (இடையியல். 33) என்னும் நூற்பாவுரையுள் "உரையாசிரியரும் நெட்டெழுத்......... தொருமொழி" என் புழி ஔகாரத்தினை உதாரணம் காட்டாது "கவவோ டியையின்" என்பதனால் கௌ, வௌ என உதாரணம் காட்டினமையானும்" என்றெழுதினார்.

குற்றெழுத்தின் இயல்பு

44. * குற்றெழுத்து ஐந்தும் மொழிநிறைபு இலவே. (11)

ஆ. மொ :

இல.

All the five short letters will not serve as one-letter words.

க. சு.

None of the five short vowels occurs as a word by itself.

பி. இ. நூ.

நன்.	29.	நொ து ஆம்குறில் இரண்டோடு ஒரெழுத்து இயல்பதம்.
இல. வி.	39.	குற்றெழுத் தைந்தும் மொழிநிறை பிலவே.
முத்து.	117.	குற்றெழுத் தைந்தும் கொளாமொழி என்ப.

இளம்பூரணர்

இது, குற்றெழுத்துக்கள் ஒரெழுத் தொருமொழியாகா என்பதும், அவற்றுள்[1] ஒருமொழியாவன உள என்பதும், உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள். குற்றெழுத்து ஐந்தும்—குற்றெழுத்தாகிய ஐந்தும், மொழிநிறைபுஇல—ஒரெழுத்தாய் நின்று[2] ஒருமொழியாய்[3] நிறைதல் இல.

அவற்றுட் சில நிறைக்கும்.

ஒகரம் ஒழிந்த நான்கும் சுட்டாயும் வினாவாயும் மொழி நிறைக்கு மன்றோ வெனின், அவை இடைச் சொல்லாதலின் அவற்றிற்குக் கருவி செய்யார் என்க. இதுவும் உயிர்க்கும் உயிர்

* இந்நூற்பா தன்கோட் கூறலுக்கு மேற்கோள்—தொல் பொருள் 665. பேராசிரியர்.

சு. வே. 1. ஒரு வழியாவன
2. மொழியாய்
3. நிறைத்தல்

மெய்க்கும் பொது. ஐந்தும் [1]என்பதன் உம்மை, ஈண்டு எச்சப்பட நின்றது.*

எ—டு: .து, நொ. எனவரும்.

நச்சினார்க்கினியர்

இது குற்றெழுத்து ஐந்தும் மொழியாகா; அவற்றுட் சில மொழியாகும் என்பது உணர்த்துகின்றது.

இ—ள்: குற்றெழுத்தாகிய உயிர் ஐந்தும், தாமே நிறைந்து நின்று மொழியாதல் இல; சில மொழியோடு கூடி நிறைந்து நின்று மொழியாம்; எ—று,

எ—டு: து, நொ எனவரும். இவை உயிர்மெய்க் கண்ணல்லது வாராமையானும், உயிர்க்கண்ணும் ஏனை அகரமும், எகரமும் அக்கொற்றன் எப்பொருள் எனத் தனித்து நின்று உணர்த்த லாற்றாது இடைச் சொல்லாய்ப் பெயரைச் சார்ந்து நின்று சுட்டுப் பொருளும், வினாப்பொருளும் உணர்த்துதலானும் 'நிறை பில' என்றார். முற்றும்மை ஈண்டு எச்சப்பட்டு† நின்றதென்றுணர்க.

சுப்பிரமணிய சாஸ்திரியார்

பொ—ள்: குற்றெழுத்தைந்தும் ஓரெழுத் தொருமொழியாக நிறைந்து நில்லா.

ஈண்டுமொழி என்றது முற்சூத்திரத்திற் குறிக்கப்பட்ட ஓரெழுத்தொரு மொழியைக்காட்டும். 'நிறைபு' என்றது 'செய்பு' என்ற வாய்பாட்டு வினையெச்சம். 'மொழிநிறைவு' என்றதைத் தொகையாகக் கொள்ளின் அதனை இரண்டாம் வேற்றுமைப்

சு. வே. 1. என்னும்

* ஈண்டு முற்றும்மைக்கு முற்றுப்பொருள் கொள்ளினும் குற்றமின்று—பாவாணர்.

† உயிர்க்குற்றெழுத்து ஐந்தாதலின் ஐந்தும் என்பதில் உம்மை முற்றும்மையாம். இவ்வைந்து உயிர்குறிலும் தாமே மொழியாதல் இல்லையெனவே, சிலகுற்றுயிர்கள் மெய்யொடு கூடி நின்று மொழியாதல் உண்டு என்பது ஏற்ப்படுதலின் உம்மை முற்றுநிலை நீங்கி எச்ச நிலையெய்திற்றென்க. பத்துபணம் கொடுக்க வேண்டியவன் சில கொடுத்தபோது பெற்றவன் மற்றவனிடத்தில் அவன் பத்தும் கொடுக்கவில்லை என்றால் முழுதும்கொடுக்க வில்லையாயினும் சில கொடுத்தான் என்ற பொருளைத் தருவதுபோல் கொள்க.

பெயராகவும் கொள்ளல் தகும். உரைகாரர்கள் உம்மையை எச்சவும்மையாகக் கொண்டு "குற்றெழுத்துள் சில ஓரெழுத் தொருமொழியாய் நிற்கும்" எனப்பொருள் கூறி, அவற்றிற்கு து, நொ இவற்றை உதாரணமாக உணர்த்தினர். து, நொ என்பன உயிர்மெய்யே யன்றிக் குற்றெழுத்தாகாமையின், அது பொருந்தா தென்க. அவ்வாறு கொள்ளின் உம்மையை முற்றும் மையாகவே கொள்ளலாகும்.

அ இ உ எ இவற்றை இடைச்சொல்என உரைகாரர் ஈண்டுங் கூறுகின்றனர். அவை அவ்வாறில்லை யென்பது முன்னரே கூறப்பட்டது. 43, 44 ஆவது சூத்திரங்களை ஒரே சூத்திரமாக ஆசிரியர் கொண்டனரோ என்ற ஐயம் உண்டா கின்றது.

வெள்ளை வாரணனார்

அ இ உ எனத் தனிநின்று சுட்டுப்பொருள் உணர்த்துவன வற்றை மொழி என்னாதது என்னை யெனின் அவை தமக் கென வேறு பொருளின்றிப் பொருளாதியாறன் பொருளையே சுட்டி நிற்றலின் மொழியாமேனும் தனியே ஓரெழுத்தாக நின்று ஒருமொழியாக நிறைதல் இலவாகலின் 'மொழிநிறைபு இல' என்றார். மொழிநிறைபு—மொழியியல்பில் நிறைந்து முழுப் பொருள் தரல்.

பிறகுறிப்புகள்:

சுப்பிரமணிய சாஸ்திரியார் "உரைகாரர்கள் உம்மையை... நொ து என்பன உயிர்மெய்யேயன்றிக் குற்றெழுத்தாகாமையின் அது பொருந்தா தெனக" என்று எழுதியது பொருந்தாது. அவர் முன் நூற்பாவில், நெட்டெழுத்து என்பது நெட்டெழுத் தினைக் கொண்ட உயிர்மெய்யினையும் குறிக்கும்" என்றெழுதி ஈண்டு நொ து என்பன குற்றெழுத்தாகா என்றது மாறுபட்ட தாம் இது மேற்கோள்மலைவு என்னும் குற்றமாம்.

மொழியின் பெயர் முறை தொகை.

45. ஒரெழுத்து ஒருமொழி ஈரெழுத்து ஒருமொழி
இரண்டு இறந்து இசைக்கும் தொடர்மொழி உளப்பட
மூன்றே மொழிநிலை தோன்றிய நெறியே. **(12)**

ஆ. மொ.

இல:

Words stand classified as words of one letter, words of two letters and words of more than two letters.

க. சு:

(One) way to classify occurring words is (to classify them) as being words (formed by) one vocalized symbol, words (formed by) two vocalized symbols, and words (formed by) the combination of more than two (vocalized) symbols.

பி. இ. நூ.

நன். 128. எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருள்தரின்
யதமாம் அது பகாப்பதம் பகுபதம் என
இருபா லாகி இயலும் என்ப.

இல. வி. 38. எழுத்தே தனித்தும் இணைந்தும் தொடர்ந்தும்
பதமாம் பொருள்தரின் அதுபாகப் பதம்பகு
பதம்என ஆஇரு பகுதித்து என்ப.

முத்து. 124. மொழியே
ஓரெழுத் தாதி ஒன்பானெழுத்து அந்தமாம்.
மொழியே தனிஇணை துணைபொது கணம் கலப்புறு
மொழி ஓர் ஏழ்என மொழிநரும் உளரே.
சொன்ன எழுத்தினாற் சொல்வதே சொல்லாம்.

இளம்பூரணர்

இது, எழுத்தினான் ஆகும் மொழிகளின் பெயரும் முறையும் தொகையும் உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: ஓரெழுத்து ஒருமொழி—ஓர் எழுத்தான் ஆகும் ஒரு மொழி, ஈர் எழுத்து ஒருமொழி—இரண்டு எழுத்தான் ஆகும் ஒருமொழி, இரண்டு இறந்து இசைக்கும் தொடர்மொழி—இரண்டு இறந்து பலவற்றான் இசைக்கும் தொடர்மொழி, உளப்படமூன்று—[1]உட்பட்ட மொழிகளின் நிலைமை மூன்றாம், தோன்றிய நெறி—அவை தோன்றியவழக்கு நெறிக்கண்.

எ—டு ஆ, மணி வரகு, கொற்றன் எனவரும்.

நச்சினார்க்கினியர்

இது முன்னர் மெய்ம் மயக்கம் உடனிலை மயக்கம் கூறலானும், ஈண்டு நெட்டெழுத்தேழே (எழு. 74) என்பதனானும் எழுத்தினான் மொழியாமாறு கூறினார். அம்மொழிக்கு இச்சூத்திரத்தால் பெயரும் முறையும் தொகையும் கூறுகில்றார்.

இ—ள்: ஓரெழுத்தானாகும் ஒரு மொழியும் இரண்டு எழுத்தானாகும் ஒரு மொழியும் இரண்டனையிறந்து பல வற்றான் இசைக்குஞ் தொடர்மொழியுடனே கூட, மொழிகளின் நிலைமை மூன்றே யாம், அவை தோன்றிய வழக்கு நெறிக்கண்; என்று.

எ—டு : ஆ, கா, நா ஓரெழுத்தொருமொழி; மணி, வரகு, கொற்றன் ஈரெழுத் தொருமொழி*; குரவு, அரவு மூவெழுத் தொருமொழி. கணவிரி நாலெழுத்தொருமொழி; அகத்தியனார் ஐயெழுத்தொருமொழி; திருச்சிற்றம்பலம் ஆறெழுத்தொரு மொழி: பெரும் பற்றப்புலியூர் ஏழெழுத் தொருமொழி.

ஓரெழுத் தொருமொழியும் தொடர்மொழியும் என்னாது ஈரெழுத் தொருமொழியும் ஓதினார், சில பல என்னும் தமிழ் வழக்கு நோக்கி.

ஆசிரியர் ஒற்றுங் குற்றுகரமும் எழுத்தென்று கொண்டனராதலின் மா, கா என நின்ற சொற்கள் மால், கால் என ஒற்றடுத்துழி ஒற்றினான் வேறு பொருள் தந்து நிற்றலின் இவற்றை ஈரெழுத்தொருமொழி என்றும், நாகு வரகு என்னும் குற்றுகர ஈற்றுச் சொற்களிற் குற்றுகரங்கள் சொல்லொடு கூடிப் பொருள் தந்து நிற்றலின் இவற்றை ஈரெழுத்தொருமொழி மூவெழுத்

சு. வே. 1 உட்பட

* வரகு என்பதில் குற்றியலுகரத்தையும் கொற்றன் என்பதில் ஒற்றெழுத்தையும் நீக்கி எண்ணினார்.

தொருமொழி யென்றுங் கோடும் என்பார்க்கு, ஆசிரியர் பொருளைக் கருதாது மாத்திரை குறைந்தமை பற்றி 'உயிரில் எழுத்தும் எண்ணப்படாஅ' (செய்யுளியல் 44) குறிலே நெடிலே குறிலிணை (செய்யுளியல் 3) என்னும் செய்யுளியற் சூத்திரங் களால் இவற்றை எழுத்தெண்ணவும் அலகிடவும் பெறா என்று விலக்குவராதலின், அவற்றால் ஈண்டு ஈரெழுத்தொரு மொழியும் மூவெழுத் தொருமொழியும் கொள்ளின், மாறுகொளக்கூறல் என்னுங் குற்றம் தங்கும் என்று மறுக்க.

இனி 'நெட்டெழுத்தேழே யோரெழுத் தொருமொழி' (எழு. 43) 'குற்றெழுத் தைந்தும் மொழி நிறைபிலவே' (எழு. 44) என்பனவற்றான் மெய்க்குக் குறுமை நெடுமையின்மையான் உயிரும் உயிர்மெய்யுமாகிய நெடிலும் குறிலுமே மொழியாம் என்று கூறி, மீட்டும் அதனையே இச்சூத்திரத்தான் ஓரெழுத் தொருமொழியென்றெடுத்து அதனோடே ஈரெழுத்தையும் இரண்டிறந்ததனையும் கூட்டி மொழியாகக் கோடலின், ஒற்றினைக் கூட்டி எழுத்தாகக் கோடல் ஆசிரியர்க்குக் கருத்தன்மையுணர்க. அன்றியும் 'மொழிப்படுத்திசைப்பினும்' (எழு. 53) என்னும் சூத்திரத்திற் கூறுகின்ற வாற்றானும் உணர்க. 'அகர முதல் னகர இறுவாய் முப்பஃதென்ப' (எழு. 1) என ஒற்றினையும் எழுத்தென்றது எழுத்தின் தன்மை கூறிற்று; ஈண்டு மொழியாந்தன்மை கூறிற்று.

சுப்பிரமணிய சாஸ்திரியார்

வரகு என்றதை ஈண்டு ஈரெழுத்து மொழியாகக் கொண்டு அவ்வாறு கோடற்கு "உயிரில் எழுத்தும் எண்ணப்படாஅ", "குறிலே நெடிலே குறிலிணை" என்ற செய்யுளியற் சூத்திரங்கள் சான்றாகும் என்ற நச்சினார்க்கினியர், குற்றியலுகரப் புணரியலுள் 'வரகு' என்பதை முதற் சூத்திரத்திலுள்ள உயிர்த் தொடர் மொழிக்கும், 'யாடு' என்பதை ஆறாஞ் சூத்திரத்துள்ள ஈரெழுத்தொருமொழிக்கும், 'நாகு' என்பதை முதற் சூத்திரத் துள்ள ஈரெழுத்தொருமொழிக்கும் உதாரணங்களாகக் கூறுதல் எவ்வாறு பொருந்தும்? ஆதலின் இளம்பூரணர் கூறிய உதாரணமே சிறக்கும்.

மொழிகளை மூவகையாகப் பிரித்தது குற்றியலுகரத்திற் காக என முன்னர்க் கூறப்பட்டது. அதனை அறியாது 'ஓரெழுத் தொருமொழியும் தொடர்மொழியும் என்னாது ஈரெழுத்தொரு மொழியும் ஓதினார்; சில பல என்னும் தமிழ் வழக்கு நோக்கி'

என்றனர் நச்சினார்க்கினியர். இத்தொடரானே அவர் நன்னூலார்க்குப் பிற்பட்டவர் எனக்கூறலாகும்.

வேங்கடராகவலு ரெட்டியார்

மொழிகளில் நிற்கும் எழுத்துக்களை எண்ணுங்கால் உயிர்மெய் எழுத்து ஒரெழுத்தாகவே எண்ணப்படும். மேல், மெய்யோடியையினும் உயிரியல் திரியா என்னும் சூத்திரத்தின் உரையில், 'இயல் என்றது பெரும்பான்மை மாத்திரையினை; சிறுபான்மை குறியும் **எண்ணும்** கொள்க' என்று உரையாசிரியரும் 'இயல் திரியா' என்பதற்கு, 'தம் அளவும் குறியும் **எண்ணும்** திரிந்து நில்லா' என்று நச்சினார்க்கினியரும் உரைத்திருத்தல் காண்க.

'உயிரில் எழுத்தும் எண்ணப்படாஅ' என்று ஆசிரியர் செய்யுளியலில் விலக்கியிருத்தலின், மால், கால் என்பனவற்றை ஓரெழுத்தொருமொழியென்றும், வரகு என்பதனை ஈரெழுத்தொருமொழியென்றும் கொள்ளுதல் வேண்டும் என்றார் நச்சினார்க்கினியர். இஃது ஆசிரியர் கருத்தொடு மாறுபடுவதாகும். ஆசிரியர், ஒற்றினையும் குற்றுகரத்தையும் எழுத்தாக எண்ணியிருப்பது,

> **"ஈரெழுத் தொருமொழி உயிர்த்தொடர் இடைத்தொடர்**
> **ஆய்தத் தொடர்மொழி வன்றொடர் மென்றொடர்"** (குற்றி. 1)

என்னுஞ் சூத்திரத்தினால் விளங்கும். ஈரெழுத்தொருமொழி யென்றது, நெடிற்றொடர்க் குற்றுகர மொழியை. உயிர்த்தொடர், இடைத்தொடர், ஆய்தத்தொடர், வன்றொடர், மென்றொடர் என, நெடிலைச்சார்ந்த குற்றுகரம் ஒன்றொழிய மற்றவற்றை யெல்லாம் தொடர்மொழி என்று கூறியிருத்தலின் ஒற்றும் குற்றுகரமும் எண்ணினாராவார். அல்லாக்கால், பத்து, பந்து, வரகு என்பன போல்வன தொடர்மொழியாமாறு இல்லையன்றே? இவற்றைத் தொடர்மொழிகள் என்றே பிறாண்டும் ஆண்டுள்ளமை காண்க.* இதனை ஆராய்ந்தே நச்சினார்க்கினியர் கொள்கையைப் பின்பற்றிச் செல்லும் இலக்கண விளக்க நூலாரும், அறம், அகலம் முதலாகப் பலவற்றைத் தொடர் மொழிக்கு உதாரணங் காட்டி, 'கால், மால், கல், வில், நாகு, தெள்கு, எஃகு, கொக்கு, கோங்கு, என்பனவற்றை ஒரெழுத் தொருமொழி என்றும், சாத்தன், கொற்றன், வரகு, குரங்கு என்பனவற்றை ஈரெழுத்தொருமொழி என்றும் கூறின் ஆகாது (பத. 1. உரை) என்றெழுதியுள்ளார். நச்சினார்க்கினியர் தாமும்,

* குற்றியலுகரப் புணரியல் நூற்பா . 2, 6, 8, 12

அவற்றுள்

மெல்லெழுத் தியற்கை யுறழினும் வரையார்
சொல்லிய தொடர்மொழி யிறுதி யான (தொகை மரபு. 3.)

என்னும் சூத்திரத்தின் உரையில் 'கதிர்' என்னும் சொல்லைத் தொடர்மொழியாகக் கொண்டு கதிர்ஞெரி, கதிர்ஞ்ஞெரி என உதாரணம் காட்டினார். பின்னும் ஈரெழுத் தொருமொழி களுள்ளும் சில உறழ்ச்சி பெற்று முடிதல் கொள்க என்று எழுதி காய்ஞெரி, காய்ஞ்ஞெரி ....எனவரும் என்றும் கூறினார். இவற்றால் அவர் கொள்கை ஆசிரியர் கருத்தொடு மாறுபடுதலே யன்றி முன்பின் முரணாயிருத்தலும் காண்க.

ஆயின் 'உயிரில் எழுத்தும் எண்ணப்பாஅ' என்று ஆசிரியர் கூறியதன் கருத்து யாதோ எனின், அவ்விதி, செய்யுட்கண் இசை பற்றி எண்ணப்படா என்றதேயாம் என்க. ஆகவே அஃது ஈண்டைக்குக் கூறிய விதியன்றாதல் பெறப்படும். கா, கால் என்பவற்றிற்கும், நா, நாடு, நாட்டு என்பவைகளுக்கும் பொருள் வேறுபாடுண்மையின் பொருள் பற்றி ஒற்றுங் குற்றுகரமும் எழுத்தாக எண்ணுதல் கூடும். வடநூலார், செய்யுட்களில் ஒற்றுக்களை எண்ணாமையும், தனிச்சொற்களில் எண்ணுதலும் ஈண்டு அறிதற் பாலன.

நச்சினார்க்கினியர் 'மொழிப்படுத்திசைப்பினும்' என்னும் சூத்திரத்திற்குக் கூறியுள்ள பொருளும் பொருந்தாமை அச்சூத்திர ஆராய்ச்சியிற் காட்டப்படும்.

இனி, 'எழுத்தே தனித்தும் தொடர்ந்தும்' என்னும் நன்னூற் சூத்திரத்தின் உரையில், சங்கரநமச்சிவாயர் ஈரெழுத்தொரு மொழியும் தொடர்மொழியேயாம் என்றும், அதனைத் தொடர் மொழி என்னாத தொல்காப்பியனார் கொள்கை குற்றமுடைய தென்றும் கூறினார். தொல்காப்பியனார் இரண்டெழுத்துக்கள் தம்முட் கூடி நிற்றலைத் தொடர்ந்து நிற்றல் என்பாரல்லர். பல என்னும் ஈரெழுத்து மொழியைத் 'தொடரல் இறுதி (உயிர்மயால். 12) என்றது காண்க. இரண்டற்கு மேற்பட்ட பல பொருள்கள் ஒன்றன்பின் ஒன்றாகச் செல்லுதலைத் தொடர்ந்து செல்கின்றன, தொடர்ச்சியாகச் செல்லுகின்றன என்பதன்றி, ஒரு பொருளின் பின் ஒருபொருள் செல்லுதலைத் தொடர்ச்சி யாகச் செல்கின்றது என்றல் இன்றும் வழக்கில் இல்லை. ஆதலின், 'தொல்காப்பியனார் இரண்டெழுத்து மொழியினைத் 'தொடர்மொழி' என்னாமை குற்றமாகும்' என்றது பொருந்துவ தன்று.

அன்றியும் அவர் (சங்கரநமச்சிவாயர்) ஒருமை இருமை பன்மை யென்னும் வடநூல் வழக்குப்பற்றி, ஓரெழுத் தொரு மொழி ஈரெழுத் தொருமொழி, தொடர்மொழி என்று மூன்று வகையாகத் தொல்காப்பியனார் கூறினார் என்றார். ஒருமை இருமை பன்மை என்பன வசனத்திற்கேயன்றி, மொழியின் எழுத்துக்கட் கன்று என்பது அறிதற்பாலது. நன்னூல் விருத்தி காரர், 'இரண்டிறந் திசைக்குந் தொடர்மொழி' என்றதனான், இரண்டிறந் திசையாததனையும், அஃதாவது ஈரெழுத்து மொழி யினையும் தொடர்மொழியாகக் கோடல் ஆசிரியர் கருத்தாகும் என்று கொண்டார். ஆசிரியர், ஈரெழுத்து மொழியாகிய 'பல' என்னுஞ் சொல்லைத் 'தொடரல் இறுதி' என்றதனான், ஈரெழுத் தொருமொழி தொடர்மொழி அன்று என்பதே அவர் கருத்தாதல் நன்கு அறியப்படும்.

வெள்ளைவாரணனார்

"ஈரெழுத் தொருமொழி யுயிர்த்தொடர் இடைத்தொடர்"
(குற்றி. 1)

ஈரெழுத்து மொழியும் உயிர்த்தொடர் மொழியும்" (குற்றி. 6)

என்றாங்குப் பின்னர் எடுத்தாளுதற் பொருட்டும், இரண்டி ணைந்து நிற்பனவற்றைத் தொடர் என்னாது இரண்டுக்கு மேற்பட்டனவற்றைத் தொடர் என வழங்கும் தமிழ் வழக்கு நோக்கியும் மூவகைப்படுத்துக் கூறினார். இம்மொழி வகை களைத் தாமே வகுத்துக் கூறுவதாகக் கூறாது 'அவை தோன்றிய நெறியெ' என ஆசிரியர் கூறுதலால், மொழித் தோற்றங் கருதிப் பண்டையோர் வகுத்த வழக்குநெறி அஃ தென்பது புலப்படுதலானும், இம் மொழிவகைகளைக் கூறு முன்னேயும் நெட்டெழுத் திம்பரும் தொடர்மொழி யீற்றும்' என இரண்டிறந்திசைப்பன வற்றையே தொடர்மொழியாகக் கொண்டு ஆசிரியர் விதி கூறுதலானும், பல சில என்னும் ஈரெழுத் தொருமொழிகளைத் 'தொடரல் இறுதி' எனக் குறித்துப் போதலால் அவை தொடர்மொழியாகா என்பது ஆசிரியர் கருத்து ஆதலானும், அங்ஙனம் ஈரெழுத்தொருமொழி யினையும் தொடர்மொழி எனக்கோடல் பண்டைத் தமிழ் நூலார் கருத்தன்றென்பது தெளிய விளங்கும்.

எழுத்துக்கள் மொழியாங்கால் முன்பின் தொடர்பின்றி ஒன்றாய் நின்று தனித் தொலித்தலும், அன்புடையார் இருவர், ஒருவர் ஒருவரை இன்றியமையாது நோக்கி நிற்குமாறு போல இரண்டெழுத்துக்கள் தம்முள் இணைந்

தொலித்தலும். இவ்வாறன்றி முதலெழுத்தினை இரண்டாவதும் இரண்டாம் எழுத்தினை மூன்றாவதும் இங்ஙனமே பின்வரும் எழுத்துக்களும் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்து நின்றொலித்தலும் என இம்மூவகை ஒலிநிலையும் மொழியின் தோற்றத்துடன் ஒருங்கு தோன்றிய தமிழ்நெறியாகும். ஆசிரியர் தொல்காப்பியனார் கூறிய மூவகை மொழிநிலையினைத் தெளிய உணர்ந்த வைத்தியநாதநாவலர் தாமியற்றிய இலக்கண விளக்க நூலில்,

> ''எழுத்தே தனித்தும் இணைந்தும் தொடர்ந்தும்
> பதமாம் பொருள்தரின் அதுபகாப் பதம்பகு
> பதமென ஆயிரு பகுதித் தென்ப. (இல. வி. 38)

இத்தலைச் சூத்திரம் மொழியாக்கமும் அதன் பகுதியும் உணர்த்துகின்றது. இ—ள்: மேற்கூறிய இலக்கணங்களை எய்தி நின்ற எழுத்துக்கள் தாமே தனித்து ஓரெழுத்தாகியும் இணைந்து ஈரெழுத்தாகியும், இரண்டனையிறந்து தொடர்ந்து பல எழுத்தாகியும் நின்று பொருளை விளக்குமெனின் அவ்வெழுத்துக்கள் மொழி எனப்படும்'' எனச் சூத்திரமும் கருத்தும் பொருளும் கூறி விளக்கியுள்ளார். தொல்காப்பியர் ஒன்று இரண்டு பல என வடநூல் வழக்கினைப் பின்பற்றி இங்ஙனம் மொழிகளை மூவகைப் படுத்தினாரெனக் குற்றங் கூறினாருமுளர். ஒன்று இரண்டு பல என்னும் எண்ணு நிலைக்கும் தனித் தொலித்தல், இணைந்தொலித்தல், தொடர்ந் தொலித்தல் என்னும் எழுத்தின் ஒலி நிலைக்கும் வேறுபாடுண் மையை அன்னோர் அறிந்திலர். அன்றியும் தமிழ் நூலிற் போன்று வடநூல் இலக்கண மரபின் ஏகாக்ஷரபதம், துவியக்ஷர பதம், பகுவக்ஷரபதம் என வழங்கும் வழக்கின்மையும் கருதற் குரியது.

தேவநேயப்பாவாணர்

''இருபெயர் பல்பெயர்'' (எச்சவியல் 21) என்றநூற்பாவில் இளம்பூரணர், ''மற்றும் பல பெயர் என அமையாதே?, இரு பெயர் என வேண்டியது என்னை; இரண்டையும் பல வென்பவால் எனின், அற்றன்று; இரண்டனையும் பன்மை யென்றுவேண்டான் இவ்வாசிரியன் என்பது'' என்பர் இந் நூற்பாவைப் பின்பற்றி.

''நச்சினார்க்கினியர் உரைநடைக்கேற்பக் கொள்ளாது செய்யுளியற் கேற்பக் கொண்டு சொற்களைக் குற்றுகரமும் மெய்யும் நீக்கி எழுத்தெண்ணுவது பொருந்தாது.''

ச. வே. சுப்பிரமணியன்

புணர்ச்சிக்கு மொழி தேவையாதலின் எழுத்ததிகாரத்தில் மொழிவகையைக் கூறுகின்ற தொல்காப்பியம், ஓரெழுத்தொரு மொழி, ஈரெழுத்தொருமொழி, தொடர்மொழி என மூன்றாக விளக்குகின்றது. நன்னூல் தனிமொழி, தொடர் மொழி என இரண்டாக வகுக்கின்றது. இலக்கண விளக்கம் தனிமொழி இணைமொழி தொடர்மொழி என மூன்றாகப் பகுக்கின்றது. முத்துவீரியம் தனிமொழி, இணைமொழி, துணைமொழி, பொது மொழி, தணமொழி, சணமொழி, கலப்புறுமொழி என ஏழாக விரிக்கின்றது. தொல்காப்பியம் மொழி எனவும், நன்னூலும் இலக்கண விளக்கமும் பதம் எனவும் பேசுகின்றன. முத்து வீரியம் கூறுகின்ற தனிமொழி ஏனையோர் கூறுவதினின்றும் மாறுபடுகின்றது.—(இலக்கணத்தொகை. எழுத்து, பக். 102)

வே. சிவசுப்பிரமணியன்

எழுத்தெண்ணுங்கால் ஒற்றும் குற்றியலிகரமும் நீக்கி எண்ண வேண்டும் என்பதாயின்

> **தொடரல் இறுதி தம்முன் தாம்வரின்**
> **லகரம் றகரவொற் றாகலும் உரித்தே** (உயிர்மய. 12)

என்னும் நூற்பாவில் நச்சினார்க்கினியர் பல, சில என்பவற்றைக் கொள்வதுடன் பல்ல, சில்ல என்பவற்றையும் கொண்டிருத்தல் வேண்டும். கொள்ளாமையின் ஒற்றும் எண்ணப்படும் என்பது தெரியவரும்.

ஓரெழுத்தொருமொழி ஈரெழுத்தொருமொழி தொடர் மொழி என மொழியை மூன்றாக அமைத்துக் கொண்டதற் கேற்பக் குற்றியலுகரப் புணரியலில் நெடிற்றொடர் எனவும் தனித் தொடர் ஒன்று கொண்டார்.

ஈரெழுத்தொருமொழியன்றாயின் அவ்விரண்டெழுத்துக் களும் ஒன்றையொன்று தொடராது பிரிந்து இசைக்குமாயின் அவை மொழியாய் ஒரு பொருளைச் சுட்டுமாறு யாங்ஙனம்?

இரண்டெழுத்துத் தொடர்ந்திசைப்பதும் தொடர்மொழி; இரண்டிறந்திசைப்பதும் தொடர்மொழியாம். இரண்டெழுத்துத் தொடர்ந்திசைப்பதை ஈரெழுத்து மொழி என்றமையால் இரண்டிறந்திசைப்பதைத் தொடர்மொழி என்றார். எனவே, தொடர்மொழி என்பது, காரணம் கருதாது பார்க்கும்போது இரண்டிறந்திசைக்கும் மொழியையும், எழுத்துகள் தொடரும்

மொழி எனக் காரணம் கருதிப் பார்க்கும்போது ஈரெழுத்து மொழியையும் குறிக்கும் காரண இடுகுறிப் பெயர் என்னலாம்.

மொழிவகையில் மூன்றாய் இருப்பினும் தனித்து வருதல், தொடர்ந்து வருதல் என்று பண்புநிலையில் அவை இரண்டாய் அடங்கும் என்று கண்டவர் நன்னூல் ஆசிரியர். அதனால் அவர் தனித்து வருதல், தொடர்ந்து வருதல் என்னும் பண்புநிலையில் பாகுபாடு அமைத்தார். "எழுத்தே, தனித்தும் தொடர்ந்தும் பொருள்தரின் பதமாம்" (நன். பத. 1) என்றார் அவர்.

—(தொடர்மொழி. செந்தமிழ்ச் செல்வி சிலம்பு. 34 பரல். 3. பக். 129-134 1959).

கோ. விசயவேணுகோபாலன்

ஓரெழுத்தொருமொழி, ஈரெழுத்தொரு மொழி, இரண்டிறந் திசைக்கும் தொடர்மொழி என்ற தொல்காப்பியரின் பாகுபாடு எழுதப்பெறும் வரிவடிவத்தின் அடிப்படையில் எழுந்த பாகுபாடு

ஈரெழுத்தொரு மொழிக்கு அடிப்படை எழுதப்படும் வரி வடிவங்கள் மட்டுமன்றிக் குற்றியலுகர மொழிப் பாகுபாடும் அடிப்படை

இளம்பூரணர் கொள்வதுபோல உயிரும் உயிர்மெய்யும் மட்டுமே அடிப்படையாக அமையாது மெய்யும் பிறவும் அடிப் படையாக அமைகின்றன.

இளம்பூரணர் எழுத்து என்பதற்கு அசை என்ற பொருள் கொண்டிருக்கக் கூடும். அவ்வாறாயின் அக்கருத்துத் தொல் காப்பியத்தில் எழுத்ததிகாரச் சொல்லதிகார வியல்களுள் இல்லை.

நச்சினார்க்கினியர் கூற்றுப்படி இம் மும்மொழிப் பாகுபாடு கட்குச் செய்யுளியலுள் கூறப்பெறும் அசையிலக்கணப் பாகுபாடு களை அடிப்படையாகக் கொள்ளுதல் நலிந்து பொருள் கூறும் முயற்சியே. வழக்கில் கொள்ளப் பெறும் அடிப்படை வேறு; செய்யுளியலுள் ஓசையடிப்படையில் கொள்ளப் பெறுவது வேறு. நச்சினார்க்கினியர் விளக்குவது போல் ஈரெழுத்தொருமொழி சில பல என்னுந் தமிழ் வழக்கு நோக்கிக் கூறப்பெற்றது எனல் பொருந்தாது. அவரே சில என்பதற்குப் பன்மைப் பொருளைத் தருகிறார். சில என்பதற்கு இருமை என்ற பொருளும் இல்லை.

சங்கரநமச்சிவாயர் முதலானோர் கூற்றுப்படி இருமை என்ற கருத்து வடநூல் வழக்குப் பற்றிக் கொள்ளப்பட்டதன்று.

நெடிற்றொடர்க் குற்றியலுகரம் என்ற வழக்கு தவறு. ஈரெழுத்துமொழி என்றே குறிப்பிடவேண்டும்.

சொல்லதிகாரத்தில் மும்மொழிப் பாகுபாடு இல்லை.

—(தொல்காப்பியரின் ஓரெழுத்தொருமொழி முதலிய பாகுபாடுகள்.' வையை. மலர் ஒன்று. மதுரைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை வெளியீடு. பக். 12-29 1974).

4. எழுத்துகளின் இயக்கம்

தனிமெய் இயக்கம்

46*. மெய்யின் இயக்கம் அகரமொடு [1]சிவணும் (13)

ஆ. மொ.

இல:

The pronunciation of the consonants takes place with the aid of 'a'.

க. சு:

The nature of consonant(s) (is) that they are combined with the sound 'a'.

பி. இ. நூ. :

நன். 126 : மெய்கள் அகரமும்...சாரியை பெறும்.

இல வி 37 : எவ்வழி யானும் மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்.

முத்து. 95 : மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்.

ச. வே. : 1. நிலையயல்

* *சிவணுதல்—பொருந்துதல்; என்னை? "மெய்யின்......சிவணும்" என்றாற் போலக் கொள்க—யாப்பருங்கலம் 34 இன் உரை.*

ஒற்றெழுத்தை முதலாக உச்சரித்தவாறு என்னையோ எனின், ஒற்றுத் தன்னைச் சொல்லுதலான் முதலாகக் கொண்டு உச்சரித்தான், அகரம் ஏற்றி எனக் கொள்க. என்னை?

"மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்" என்பவாகலின்—(நேமி. 7. உரை).

இளம்பூரணர்.

இது, தனி மெய்களைச் சொல்லும் [1]முறைநிலை இது என்பது உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள் : மெய்யின் இயக்கம்—தனி மெய்களினது [2]இயக்கம், அகரமொடு சிவணும்—அகரத்தோடு பொருந்தும்.

எ—டு : ட ற ல ள வென்னும் புள்ளி (நூன் மரபு. 23) என வரும்.

இது மொழியிடை (நின்ற) எழுத்துக்கள் அன்மையின் நூன் மரபின் வைக்க எனின், தன்னையுணர்த்தாது வேறு பொருள் உணர்த்தும் [3]சொல்நிலை போல, 'ட ற ல ள' என்றது உயிர் மெய்யை உணர்த்தாது தனி மெய்யை உணர்த்தலானும், ஒற்றினை உயிர்மெய் போலச் சொல்லுகின்ற வழுவமைதி யிலக்கணத்தானும் மொழி மரபின் கண்ணதாயிற்றென உணர்க.*

நச்சினார்க்கினியர்:

இது தனி மெய்களை [4]அகரம் இயக்குமாறு கூறுகின்றது.

சு. வே. 1. முறைமை
2. இயங்குதல்
3. சொல் நிலைமை
4. அகரம் என்பது சில சுவடிகளில் இல்லை,

இந்நூற்பா மொழியிடை நின்ற எழுத்துகளுக்குக் கூறாமல் தனி நிற்கும் எழுத்துகளுக்கு அகரமொடுசிவணும் எனக் கூறுத லின் தனி எழுத்துகளுக்கு இலக்கணம் கூறும் நூன்மரபில் வைக்கப்படல்வேணடும்; ஆனால் மொழி மரபில் வைக்கப் பட்டது ஏன்?—இதுவினர்.

சொல் என்பது பொருள் உணர்த்துவது; 'கள்' என்பது க, ள் என்னும் இரண்டெழுத்துகளை மட்டும் உணர்த்தாமல் அவற்றுக்கு அப்பாற்பட்டதான ஒரு பொருளை—உண்ணும் பொருளை உணர்த்துவது பேல "டறலள" (நூன்மரபு 23) என்னுமிடத்தும் டறலள என்பன உயிர்மெய் எழுத்து களாக இருந்தும் அப்பாற்பட்டதான ட் ற் ல் ள் என்ற மெய்யெழுத்துகளை உணர்த்துதலின் சொல்லின் இலக்கணம் அமைந்தன போலக் காணப்படுகின்றன. அதனால் இந்நூற்பா மொழி மரபில் வைக்கப்பட்டது—இதுவிடை

ட் ற் ல் ள் என்று கூறுவதற்குப் பதிலாக ட ற ல ள எனக் கூறுவது வழு; என்றாலும் நூற்பாவில் அவ்வாறு கூற இயலா மையாலும் எளிமை கருதியும் ட ற ல ள எனக் கூறவேண்டு தலின் அமைதியுமாயிற்று.

இ—ள்: தனி மெய்களினது நடப்பு, அகரத்தோடு பொருந்தி நடக்கும்; எ—று.

எனவே, ஒருவன் தனி மெய்களை நாவாற் கருத்துப் பொருளாகிய உருவாக இயச்கும் இயக்கமும் கையாற் காட்சிப் பொருளாகிய வடிவாக இயக்கும் இயக்கமும் அகரத்தோடு பொருந்தி நடக்கும் என்றவாறு

எ—டு: **வல்லெழுத் தென்ப கசடதபற** (எழு. 19)

''ககார ஙகார முதல்நா வண்ணம்'' (எழு. 89) என்றாற் **போல்வன** நாவால் இயக்கியவாறு காண்க. எழுதிக் காட்டு மிடத்துக் ககரம் முதலியன உயிர்பெற்று நின்ற வடிவாக எழுதிப் பின்னர்த் தனி மெய்யாக்குதற்குப் புள்ளியிட்டுக் காட்டுகின்ற வாற்றான் வடிவை இயக்குமிடத்தும் அகரங் கலந்து நின்றவாறு காண்க.

இங்ஙனம் மெய்க்கண் அகரங் கலந்து நிற்குமாறு கூறினாற் போலப் பதினோருயிர்க்கண்ணும் அகரங்கலந்து நிற்கும் என்பது ஆசிரியர் கூறாராயினார், அந்நிலைமை தமக்கே புலப்படுத லானும் பிறர்க்கு இவ்வாறு உணர்த்துதல் அரிதாகலானும் என்று உணர்க. இறைவன் இயங்கு திணைக்கண்ணும் நிலைத் திணைக்கண்ணும் பிறவற்றின் ்ண்ணும் அவற்றின் தன்மையாய் நிற்குமாறு எல்லார்க்கும் ஒப்ப முடிந்தாற்போல, அகரமும் உயிர்க்கண்ணும் தனிமெய்க்கண்ணும் கலந்து அவற்றின் தன்மையாயே நிற்கும் என்பது சான்றோர்க் கெல்லாம் ஒப்ப முடிந்தது, 'அகரமுதல' என்னுங் குறளான் 'அகரமாகிய முதலை யுடைய எழுத்துக்களெல்லாம்; அதுபோல இறைவனாகிய முதலையுடைத்து. உலகம்' என வள்ளுவனார் உவமை கூறிய வாற்றானும், கண்ணன், 'எழுத்துக்களில் 'அகரமாகின்றேன் யானே' யெனக் கூறியவற்றானும் பிறநூல்களானும் உணர்க.

இதனான் உண்மைத்தன்மையும் சிறிது கூறினாராயிற்று. இதனை நூல்மரபிற் கூறாது ஈண்டுக் கூறினார், 'வல்லெழுத் தென்ப கசடறபற' என்ற இடத்துத் தான் இடை நின்று ஒற்றென்பதோர் பொருளை உணர்த்தி மொழியாந் தன்மை எய்தி நிற்றலின்.

சுப்பிரமணிய சாஸ்திரியார்:

.........மொழி மரபில் நூல்மரபில் உள்ள சூத்திரங்களின் ஒழிபைக் கூறினர் ஆசிரியர் எனச் சிவஞான முனிவர் கூறுதலின், ''வல்லெழுத் தென்ப கசட தபற'' முதலிய சூத்திரங்களின்

ஒழிபை இச்சூத்திரத்தில் ஆசிரியர் கூறினர் எனக் கொள்ளலாம். இச்சூத்திரத்தின் அடியில் உள்ள நச்சினார்க்கினியத்தினின்றும் இச்சூத்திரம் மெய்களின் ஒலிவடிவினையும் வரிவடிவினையும் கூறுகின்றதென்றும், எல்லாவெழுத்தாந்தன்மையை அகரம் அடைகின்றதென்றும் அவர் கொண்டதாக அறியப்படும். மெய்களின் ஒலியைப் பிறர் அறியுமாறு தனியாய் ஒலித்தல் இயையாமல் இருப்பினும் அவற்றின் வடிவத்தை க், ச் என அகரமின்றி எழுதுதற்கு இயையுமாதலானும், ககர மென்று ஒலிப்பின் 'க்' என்ற எழுத்தைக் கொள்ளுதல் போல் 'க' என்ற வரிவடிவை 'க்' என்ற தனிமெய்யாகக் கொள்ளாமையானும், "ஒருவன் தனிமெய்களை நாவாற் கருத்துப் பொருளாகிய உருவாக இயக்கும் இயக்கமும், கையாற் காட்சிப் பொருளாகிய வரிவடிவாக இயக்கும் இயக்கமும் அகரத்தோடு பொருந்தி நடக்கும்" என்ற அவர் தந் தொடர் பொருந்தா தென்க. பகவத்கீதையில் கண்ணன் கூறிய தொடர்க்கு, "அகரமாகின்றேன் யான்" எனச் சொல்வகையான் பொருள் கொள்ளப்படினும், கருத்து வகையான் அதற்குப் பொருள் "என்னை ஓரெழுத்தாகத் தியானிக்க வேண்டுமாயின், அகர மாகத்தியானித்தல் வேண்டும்" என்றதே. கடவுள் எல்லோருக்கும் முதலாதலின், அகரமும் எல்லா வெழுத்திற்கும் முதலாயிருத்தல் வேண்டும் என்ற நியதியில்லை. அவ்வாறு நியதியிருப்பின் 'வேதத்துள் ஸாமவேதமாயிருக்கிறேன்' என அவர் கூறுவது பொருந்தாத கூற்றாகும். ஏன் எனில் ஸாமவேதம் ருக்வேதத்தை அடிப்படையாகக் கொண்டதன்றோ? இனி, எல்லா வாக்கும் அகாரமாயுள்ளது என உபநிஷத்துள் கூறப் பட்டது எவ்வாறு பொருந்துமெனின், ஆங்கு அகாரம் என்ற தற்குப் பரை நிலையிலுள்ள நாதமே பொருள் என உரை காரர்கள் கூறியிருக்கின்றனர். அவ்வாறே ஈண்டும் 'அகரமொடு' என்றதற்குப், 'பரை நிலையிலுள்ள நாதம்' எனப் பொருள் கொள்ளின் படும் இழுக்கென்னை யெனின், அப் பொருள்,

> **அஃதிவ ணுவலா தெழுந்துபுறத் திசைக்கும்**
> **மெய்தெரி வளியிசை யளபு நுவன் றிசினே** (எழுத். 103)

என்ற விடத்து, வெளிப்படையாய் வைகரி நிலையிலுள்ள ஒலிகளைப்பற்றியே இந்நூலுள் வழங்குகின்றேன் என்ற ஆசிரியர் கூற்றுக்கு முரண்படும் என்க.

அவ்வாறாயின் "அகர முதல...யுலகு" என்ற விடத்துக் கடவுள், உலகிற்கு எவ்வாறு முதற் காரணமோ அவ்வாறு

எழுத்துக்களுக்கெல்லாம் அகரம் முதற்காரணம் எனக் கொள்ள வேண்டாவோ எனின், உவமைக்கும் பொருளுக்குஞ் சிறிது ஒற்றுமையிருப்பின் உவமையணியாகுமாதலின் கடவுளும் அகரமும் முறையே உலகத்திற்கும் எழுத்துக்களுக்கும் முதன்மையாய் இருத்தலான் முதன்மையையே பொதுத்தன்மை யாகக் கொள்ளின் தகும்.

சிவலிங்கனார்

கண்ணன் 'அகரமாகின்றேன்யான்' என்ற தொடர்க்கு "என்னை ஓரெழுத்தாகத் தியானிக்க வேண்டுமாயின் அகர மாகத் தியானித்தல் வேண்டும்" என்பதே கருத்து என்றார் சுப்பிரமணிய சாஸ்திரியார். அதுவே கருத்தாயினும் அகரத்தை விட்டு வேறெழுத்தாகத் தியானிக்கக் கூடாது என்பதற்குரிய காரணந்தான் என்னை? அகரம் முதன்மையானது என்பது தானே காரணம்? 'ஸாமவேதமாய் இருக்கின்றேன்' எனக்கூறிய தன் காரணம் இருக்கு வேதத்தைக் காட்டிலும் இசையினிமை இதில் மிக்கிருப்பதுதான் ஆகும். இருக்கு கானம், யசுர்கானம் என்பதின்றி 'ஸாமகானம்' என்று வழங்குதலைக் காணலாம். இறைவன் 'ஸாமகானப்பிரியன்' என்றும் கூறப்படுவன். அதனால் கண்ணன் 'ஸாமவேதமாய் இருக்கின்றேன்' என்றதைக் காட்டி முதல்வேதமாகிய இருக்குவைக் கூறாததால் அகர எழுத்தா கின்றேன் என்றதற்குப் பலரும் கொள்ளும் பொருளை விட்டுத் தாம் வேறு கருத்துப் பொருளாகக் கொண்டது பொருந்தாது என்னலாம். அவர், "கடவுள் எல்லோர்க்கும் முதலாதலின் அகரமும் எல்லா எழுத்திற்கும் முதலாயிருத்தல் வேண்டும் என்ற நியதியில்லை" என்றும் எழுதினார். அகரம் முதலாகவே எல்லா எழுத்தும் (பிறமொழிகளிலும்) பிறப்பன என்பது யாவரும் ஒப்பிய ஒன்று. அதுவே எல்லா எழுத்துக்களிலும் கலந்ததோடன்றி எல்லா எழுத்துகளுக்கும் மூலமாகவும் அமைவது.

மெய்ம் மயக்கப் புறனடை

**47. தம்மியல் கிளப்பின் எல்லா எழுத்தும்
மெய்ந்நிலை மயக்கம் மானம் இல்லை.** **(14)**

ஆ. மொ.

இல.

All the letters (consonants), when describing their nature (in grammar) may appear irrespective of their rules of intermingling.

க. சு.

It is not a mistake that, when any (consonant) phoneme denotes itself, it (occurs according to) the disturbance in the nature of the distribution of consonants.

பி. இ. நூ.

நன்.	121.	தம் பெயர் மொழியின் முதலும் மயக்கமும் இம்முறை மாறியும் இயலும் என்ப.
இல. வி.	35.	தம்மரபு இசைப்பின் முதல் ஈறு இடைநிலை அம்மரபு இல்லவும் ஆம்என மொழிப.
முத்து.	81.	தம்பெயர் மொழியின் முதலும் மயக்கமும் இம்முறை மாறியும் இயலும் என்ப.

இளம்பூரணர்

இது மெய்ம் மயக்கத்திற்கு ஓர் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: [1]எல்லா எழுத்தும் தம் இயல் கிளப்பின்—எல்லா மெய்யெழுத்தும் மொழியிடையின்றித் தம் வடிவின் இயல்பைச் சொல்லுமிடத்து, மெய்மயக்க நிலை மானம் இல்லை—மெய்ம் மயக்க நிலையின் மயங்கி வருதல் குற்றம் இல்லை.

எ—டு: வல்லெழுத் தியையின் டகார மாகும் (புள்ளி மய. 7) எனவரும்.

இதனை[2] அம்மெய்ம் மயக்கத்து வைக்க வெனின் இது வழுவமைதி நோக்கி மொழி மரபின் கண்ணதாயிற்று.

சு. வே. 1. எல்லா மொழியெழுத்தும்
2. மெய் மயக்கத்து

நச்சினார்க்கினியர்

இது முன்னர் மெய்க்கண் உயிர் நின்றவாறு கூறி அவ்வுயிர், மெய்க்கண் ஏறி உயிர்மெய்யாய் நின்ற காலத்து அம்மெய்யாற் பெயர் பெறுமாறு கூறுகின்றது.

இ—ள்: [1]பன்னீருயிரும், மெய்யின் தன்மையிலே தம்முடைய தன்மை மயங்கிற்றாகப் பெயர் கூறின் குற்றமில்லை; எ—று.

மெய்யின் தன்மையாவது வன்மை மென்மை இடைமை; தம்மியலாவது உயிர்த்தன்மை. என்றது, வல்லெழுத்து மெல்லெழுத்து இடையெழுத்தென உயிர்மெய்க்கும் பெயரிட்டாளுதல் கூறிற்று. அவை "வல்லெழுத்தியையின் அவ்வெழுத்து மிகுமே" (எழுத். 296) எனவும், மெல்லெழுத்தியையின் இறுதியோ டுறழும் "(எழு. 342) எனவும்," இடையெழுத்தென்ப யரல வழள" (எழு. 21) எனவும் பிறாண்டும் ஆளுப. எழுத்தை வன்மை மென்மை இடைமை யென விசேடித்த சிறப்பான் இப்பெயர் கூறினார்.

இஃதன்றிப் பதினெட்டு மெய்யும் தன்மை கூறுமிடத்து மெயம் மயக்கங் கூறிய வகையானன்றி வேண்டியவாறு மயங்கும் என்று கூறி "அவற்றுள் ளஃகான் முன்னர்" (எழு. 24) என்பதனைக் காட்டில், அஃது இருமொழிக் கண்ணதென மறுக்க.

சுப்பிரமணிய சாஸ்திரியார்

முன்னர்ச் சூத்குரத்தில் 'மெய்' என்றும், இச்சூத்திரத்துள் 'மெய்ந்நிலை மயக்கம்' என்றும் இருத்தலான் 'எழுத்து' என்றது மெய்யினையே குறிக்கும். எழுத்து என்றதற்கு உயிர் என்ற பொருளையும், சூத்திரத்தில் "எல்லா வெழுத்தும் மெய்ந்நிலை தம்மியல் மயக்கம் கிளப்பின் மானமில்லை" என்ற அந்நுவயத்தையும், பன்னீருயிரும் மெய்யின் தன்மையிலே தம்முடைத் தன்மை மயங்கிற்றாகப் பெயர் கூறின் குற்றமில்லை யெனப் பொருளையுங் கொண்டு நச்சினார்க்கினியர், "இஃதன்றிப் பதினெட்டு மெய்யும்.........மறுக்க" என்ற தொடரால் இளம்பூரணரை மறுக்கின்றனர். மொழிமரபு தனிமொழியைப் பற்றியே கூறுகின்றது என்றதற்குச் சான்று ஒன்று மின்று. அவர் கூறும் பொருளுக்குக் காரணம் "வல்லெழுத்தியையின் அவ்வெழுத்து மிகுமே" "இடையெழுத்தென்ப யரல வழள" முதலிய சூத்திரங்களில் வல்லெழுத்து இடையெழுத்து என்பவற்றால் உயிர்மெய்யை ஆசிரியர் குறிக்கின்றனர் என்ற மயக்கமேயாகும்.

சு. வே. 1. பன்னீருயிரையும்

"இடையெழுத்தென உயிர்மெய்க்கும் பெயரிட்டாளுதல்" என ஈண்டும், தனிமெய்களை இடையெழுத்தென்னும் குறியினை யுடைய என்று கூறுவர்" என 2-வது சூத்திரவுரையிலும் அவர் கூறியிருத்தல் நோக்கற் பாலது. 'மயக்கம் மானமில்லை' என்ற விடத்து "மயக்கம் மானம் இல்லை" எனப் பதப்பிரிவு காட்டி யுள்ளார் பதிப்பித்தோர் பிற்காலத்து நிகண்டுகளில் 'மானம்' என்றதற்குக் 'குற்றம்' என்ற பொருளிருத்தலின் அவ்வாறு செய்தனராகும். ஆனால் "மயக்கம் ஆனம் இல்லை" என்ற பதப்பிரிவே தக்கதாம். என்எனில் மானம், ஆனம் என்பன மாநம், ஹாநம் என்ற வடமொழிச் சொல்லின் தற்பவமாகும்; வடமொழியில் 'மாநம்' என்றதற்குக் குற்றம் என்ற பொருள் இல்லை; 'ஹாநம்' என்றதற்கே அப்பொருள் உண்டு.

இச்சூத்திரத்தை "ட ற ல ள வென்னும்" (எழு. 23) முதலிய ஏழுசூத்திரங்களின் ஒழிபாகக் கொள்ளல் தகும்.

வேங்கடராசுலு ரெட்டியார்

இச்சூத்திரத்திற்கு, "எல்லா மெய்யெழுத்தும்...குற்ற மில்லை" என்று இளம்பூரணர் எழுதியிருக்கும் உரை பொருத்த முடையதாகத் தோன்றுகின்றது. ஆயின் இது மெய்ம்மயக்க நிலைக்குப் புறனடையாகலின், இதனை மேல் நூன்மரபின் மெய்ம்மயக்கினைக் கூறியவழிக் கூறுதல் வேண்டும் எனின், மெய்கள் அகரவுயிரொடு சேர்ந்தொலிக்குமிடத்து உயிர்மெய் யாகுமாயினும், அவ்வுயிர்மெய், தன்னை யுணர்த்தாது மெய் களை யுணர்த்துதலின் மொழியாதல் ஒப்புமை நோக்கி, அதனை மேற்சூத்திரத்திற் கூறினாராகலின், அவ்வாறு வருபவை மெய்ம்மயக்க நிலையின் மயங்கிவரினும் குற்றமில்லையென்று இயைபு கருதி ஈண்டுக் கூறினார். இவ்வியைபினானே இது, தனி மொழியிலக்கணம் கூறும் இவ்வியலில் வைக்கப்பட்டது.

இச்சூரத்திரத்தில், 'எழுத்து' என்றது மேற் சூத்திரத்துக் கூறிய மெய்யெழுத்துக்களைக் குறிப்பதாகலானும், 'மெய்ந் நிலைமயக்கம்' என்றது மெய்கள் தம்மொடு தாம் நின்று மயங்குதலைக் குறிக்கும் ஆகலானும், நச்சினார்க்கினியர் "பன்னீருயிரும்...,..குற்றமில்லை" என்று கூறியது அமைவுடைய தாதலின்று.

வெள்ளை வாரணனார்

நச்சினார்க்கினியர், உரையாசிரியர் கருத்தை மறுத்து, "இது முன்னர்........பெயர் பெறு'மாறு கூறுகின்றது" எனக் கருத்

துரைத்து, ''பன்னீருயிரும் வன்மை........குற்றமில்லை எனப் பொருள் கூறி'', ''என்றது வல்லெழுத்து......பெயரிட்டாளுதல் கூறிற்று'' என விளக்கமும் கூறினர்.

உயிர்மெய்யை வேற்றுமை நயங் கருதி இரண்டெழுத்தாகக் கூறும் ஆசிரியர் ''வல்லெழுத்தியையின் அவவெழுத்து மிகுமே'', ''மெல்லெழுத்தியையின் இறுதியோடு உறழும்'',''இடையெழுத்து என்ப யரல வழள'' என்றவிடத்து ஓரெழுத்தாகக் கூறினார் என்றல் பொருந்தாதாகலானும், 'வல்லெழுத்தியையின் அவ்வெழுத்து மிகுமே' யென்புழி வல்லெழுத் தென்பதனை உயிர் எழுத்தாகக் கொள்ளின் அவ்வெழுத்து மிகும் என்பது அவ்வுயிர் மெய்யெழுத்து மிகும் எனப் பொருள்பட்டு மாறு கொள்ளு மாதலானும், வன்மை, மென்மை, இடைமையாகிய தன்மை மெய்க்கேயன்றி உயிர்க்கில்லாமையானும், வல்லெழுத்து, மெல்லெழுத்து, இடையெழுத்து என்ற பெயர்கள் உயிர் மெய்க்கன்றி மெய்க்கேயுரியன வென்பது அவற்றைத் தொகுத்து ''அம்மூவாறு'' எனச் சுட்டி மெய்மயக்கம் கூறுதலாற் புலனாம் ஆதலானும் உரையாசிரியர் கூறியவாறு இச்சூத்திரம் மெய் மயக்கத்திற்குப் புறனடையென்பதே பொருந்தும் என்க.

மெய் மயக்கத்திற்கு, ''அவற்றுள் லளஃகான் என்பதனைக் காட்டில் அஃதிருமொழிக் கணணதென மறுக்க'' என்பர் நச்சினார்க்கினியர். ஆசிரியர் இவ்வோத்தின்கண் ஒருமொழி தொடர்மொழி என்னும் வேறுபாடின்றிப் பொதுவாக மொழி யிடை எழுத்துக்களின் இலக்கணங் கூறுகின்றார் என்பது, ஒரு மொழி புணர்மொழிகளில் வரும் குற்றியலிகர குற்றியலுகரங் களையும் ஆய்தத்தையும் கூறுதலாற் பெறபடுமாதலின், நச்சினார்க்கினியர் கூற்று ஆசிரியர் கருத்தன்றென்க. இம் மெய் மயக்கப் புறனடையை நன்னூலார் முதனிலை யெழுத்துக்களின் புறனடையோடு சேர்த்துக் கூறுவர்.

பிற குறிப்புகள் :

மானம் என்பதற்குப் பதில் ஆனம் என்று பதப் பிரிப்பு அமைய வேண்டும் என்றார் சுப்பிரமணிய சாஸ்திரியார்.

ஏனை யுருபும் அன்ன மரபின
மான மிலவே சொல்முறை யான

(தொல். சொல், வேற். மய. 28)

என்றவிடத்து மானம் என்ற சொல் குற்றம் என்ற பொருளிலேயே ஆளப்பட்டமையின் ஆனம் எனப் பிரித்தல் வேண்டுவதன்று.

ஈரொற்று உடனிலை

48. யரழ என்னும் [1]மூன்றுமுன் ஒற்றக்
கசதப ஙஞநம ஈரொற்று ஆகும். (15

ஆ. மொ.

இல.

'K, c, th, p' and 'ṅ, ñ, n, m' stand after the consonants (individually) y, r and ḻ forming double consonant structure.

க. சு.

The three (phonemes) y, r, ḻ may be followed by k, c, t, p, ṅ, ñ, n, m (and thus they) form two consonant (clusters).

பி. இ. நூ. :

நன். 119 : யரழ ஒற்றின்முன் கசதப ஙஞநம ஈரொற்று ஆகும்.
இல. வி. 33 : யரழ ஒற்றின்முன் கசதப ஙஞநம ஈரொற்றாம்.
சுவாமி. 13 : யரழ முன் கபம தநச ஞங ஈரொற்றுறும்.

இளம்பூரணர்

இது, ஈரொற்றுடனிலை யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: யரழ என்னும் மூன்று—யரழ என்று சொல்லப் படுகின்ற மூன்றனுள் ஒன்று, முன் ஒற்ற—(குறிற் கீழும் நெடிற் கீழும்) முன்னே ஒற்றாய் நிற்ப (அவற்றின் பின்னே), கசதப ஙஞநம ஈரொற்றாகும்—கசதபக்களில் ஒன்றாதல் ஙஞநமக்களில் ஒன்றாதல் ஒற்றாய் வர அவை ஈரொற்றுடனிலையாம்.

எ—டு. வேய்க்குறை, வேய்ங்குறை; வேர்க்குறை, வேர்ங் குறை; வீழ்க்குறை, வீழ்ங்குறை, சிறை, தலை, புறம் என ஒட்டுக.

இவ்விதி மேல் ஈற்றகத்து உணர்ந்து கொள்ளப்படுமால் எனின், இது 'ஈர்க்கு', 'பீர்க்கு' என [2]ஒரு மொழியுள்ளும்

சு. வே. : 1. மூன்றும்
2. ஒரு மொழியுள்

வருதலானும், இரண்டு [1].மெய்க்கண்ணும் வருதல் விகாரம் ஆதலானும் ஈண்டுக் கூறப்பட்டது.*

அஃதேல், இதனை நூன் மரபினகத்து மெய்ம்மயக்கத்துக்கண் கூறுகவெனின், ஆண்டு வேற்றுமைநயம் கொண்டதாகலின் ஈரொற்று உடனிலையாதல் நோக்கி ஒற்றுமைநயம் பற்றி ஈண்டுக் கூறப்பட்டது.†

நச்சினார்க்கினியர்

இஃது ஈரொற்றுடனிலையாமாறு கூறுகின்றது.

இ—ள்: யரழ வென்று கூறப்படும் மூன்று புள்ளியும் ஒற்றாய் நிற்ப, கசதபக்களும் ஙஞநமக்களும் வந்து ஈரொற்றாய் நிற்கும்; எ—று.

எ—டு: வேய்க்க, வாய்ச்சி, பாய்த்தல், வாய்ப்பு எனவும், பீர்க்கு, நேர்ச்சி, வார்த்தல், ஆர்ப்பு எனவும், வாழ்க்கை, தாழ்ச்சி, தாழ்த்தல், தாழ்ப்பு எனவும், காய்ங்கனி, தேய்ஞ்சது, காய்ந்தனம், காய்ம்புறம்எனவும், நேர்ங்கல், நேர்ஞ்சிலை, நேர்ந்

சு. வே. 1. மெய்க்கண்ணுறுதல்

* புள்ளி மயங்கியலில் யகர மெய்யீறு கசதப முதலியவற்றோடு புணரும் புணர்ச்சி விதியும் அவ்வாறே ரகர ழகர வீறுகள் புணரும் புணர்ச்சி விதியும் கூறப்படுதலின் ஆண்டு, யரழ முன்னர்க் கசதபஙஞநம ஆகியவை வந்து புணருமிடத்து மயங்கும் மயக்கம் பெறப்படும். அதனால் ஈண்டுக் கூற வேண்டுவதில்லையே என்பது வினா, அதற்குவிடை: புள்ளி மயங்கியலில் இருமொழிப் புணர்ச்சி கூறப்பட்டது. (வேய்+குறை+வேய்க்குறை) ஈர்க்கு, பீர்க்கு என ஒரு மொழியிடையும் ஈரொற்று மயங்கி வருதலினால் ஈண்டுக் கூறப்பட்டது. அன்றியும் இருமொழிப் புணர்ச்சிக்கண் வருவது (தோன்றல்) விகாரம். ஒருமொழியின் இடையில் வருவது இயல்பு. அதனானும் ஈண்டுக் கூறப்பட்டது.

† நூன் மரபில் மெய்ம்மயக்கம் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இந் நூற்பாவும் மெய்ம் மயக்கமே கூறுதலின் இதனையும் நூன் மரபிலேயே கூறியிருக்க வேண்டும். அங்ஙனம் கூறாமைக்குக் காரணம் நூன்மரபில் மெய்ம்மயக்கம் வேற்றுமை நயம் பற்றிக் கூறப்பட்டது ஆதலின்.
(வேற்றுமை நயம் ஒற்றுமை நயம் விளக்கத்தை நூற்பாவுரை யிறுதிற் காண்க) (பக்)

திலை, நேர்ம்புறம் எனவும் வரும். ழகரத்திற்கு வாழ்ந்தனம் என இக்காத்து [1]வழங்குமெனின் உணர்க.

இனித் தாழ்ங்குலை. தாழ்ஞ்சினை. தாழ்ந்திரள், வீழ்ம்படை என அக்காலத்து வழங்குமென்று இத்தொகைச் சொற்கள் காட்டலும் ஒன்று. [2] உரையாசிரியரும் இருமொழிக்கட் காட்டியவற்றிற்கு அவ்வீறுகடோறும் கூறுகின்ற சூத்திரங்கள் பின்னர் வேண்டாமையுணர்க. இஃது ஈரொற்றுடனிலையாதலின் ஈண்டு வைத்தார்.

இனி நெடிற் கீழேயன்றிப் பலவெழுத்துத் தொடர்ந்து நின்றதன் பின்னும் ஈரொற்று வருதல் கொள்க. அவை வேந்தர்க்கு, அன்னாய்க்கு என்றாற் போல்வனவாம்.

வேங்கடராசுலு ரெட்டியார்

தனி மொழியில் யகர ரகர ழகர மெய்களுக்குமுன் முறையே ஙகர ககரமும், ஞகர சகரமும், நகர தகரமும், மகர பகரமும் இணைந்து ஈரொற்றாய் நிற்கும் என்பது இச்சூத்திரத்தின் பொருளாம்.

உதாரணம்:

	ங்க்	ஞ்ச்	ந்த்	ம்ப்
ய்	....	தேய்ஞ்சது.	மேய்ந்தது	மொய்ம்பு
ர்	....	....	சேர்ந்தது	....
ழ்	....	....	வாழ்ந்தது	....

என்பன. பலவற்றிற்கு உதாரணம் இறந்தன. காட்டப்பட்டுள்ள வினைச் சொற்களுக்கும் பெயர்ச் சொற்களைக் காட்டுதல் சிறப்புடையதாகும்.

வேய்ங்குழல் ஆர்ங்கோடு பாழ்ங்கிணறு என்பவை போல்வன காட்டாகாவோ வெனின், அவை இருமொழிப் புணர்ச்சியாகலின் ஈண்டைக் காகா என்க. ஆயின், இச் சூத்திரத்தைத் ''தம்மியல்............மானமில்லை'' (47) என்னுஞ் சூத்திரத்தையடுத்து வைத்திருத்தலின், இதுவும் இருமொழிப் புணர்ச்சிக்கட் படுவதோர் வேறுபாடு உணர்த்துகின்றது என்னலாகாதோ எனின், ஆகாது. என்னை எனின்,

சு. வே. 1. வழங்கு மேனும்
2. உரையாசிரியர்

அவ்வாறாயின், இச்சூத்திரமும் முன்னர் வரும் சூத்திரங்கள் இரண்டும் மொழியின் ஈற்றில் நிற்கும் மெய்யெழுத்துக்களுட் சிலவற்றிற்குச் சிறப்புவிதி சொல்வனவாகும். ஆகலின், இவற்றை முன்னர், "ஞணநம......புள்ளியிறுதி" (எழு. 78) என்னுஞ் சூத்திரத்தின்கீழ்க் கூறுதல் வேண்டும். அவ்வாறின்மை யின், இச்சூத்திரம் யரழ வீற்று மொழிகளை நிறுத்த சொல்லாக வைத்துப் புணர்சிவிதி கூறியதாதல் இன்று. யகர ரகர ழகர வீறுகட்குமுன் க ச த ப க் க ள் வரின் அவை மிக்கும், அவற்றின் இன மெல்லெழுத்துத் தோன்றப் பெற்றும் ஈரொற்றுடனிலை யாகும் என்று இச்சூத்திரத்திற் கூறிற்றிலரே. ஆகலின், வேய்க் குறை, வேய்ங்குறை; வேர்க்குறை, வேர்ங்குறை; வீழ்க்குறை, வீழ்ங்குறை என்று உரையாசிரியர் காட்டிய உதாரணம் பொருந்துவனவல்ல. அன்றியும், வேய்ங்குழல், ஆர்ங்கோடு, பாழ்ங்கிணறு என்னுந் தொடக்கத்தனவற்றிற்கு ஆசிரியர்,

"மெல்லெழுத் துறழு மொழியுமா ருளவே" (புள்ளிமய. 65)

என்றும்,

"ஆரும் வெதிரும் சாரும் பீரும்
மெல்லெழுத்து மிகுதல் மெய்பெறத் தோன்றும்" (புள்ளிமய. 68)

என்றும்,

"பாழென் கிளவி மெல்லெழுத் துறழ்வே" (புள்ளிமய. 92)

என்றும் முன்னர் விதிகூறி அவற்றைப் புணர்ப்பர்.

இனி வேய்க்க, வாய்ச்சி, பாய்த்தல், வாய்ப்பு என்பவை போல, கசதபக்கள் ஈரொற்றாய் வருதலைக் காட்டுதல் வேண்டற்பாலதன்று. என்னெனின், கசதபக்கள் ஈரொற்றாய் வருதலைக் காட்டின், அவ்வண்ணமே ங ஞ ந மக்களும் ஈரொற் றாய் வருதலைக் காட்டுதலே முறையாகும். அவ்வாறு யரழக் களின் முன் ஙஞநமக்கள் ஈரொற்றாய் வந்து அமைந்த சொல் ஒன்றேனும் அவர் காட்டிற்றிலராகலானும், யரழக்களின் முன் இவ்வெழுத்துக்கள் தனித்தனியே மயங்குதற்கு,

யரழ வென்னும் புள்ளி முன்னர்
முதலா கெழுத்து ஙகரமொடு தோன்றும். (நூன்மரபு. 29)

என்னுஞ் சூத்திரத்தான் விதிகூறியுள்ளாராகலானும், அதனானே கசதபக்கள் ஈரொற்றாய் வருதலும் அமையு மாகலானும், ஙஞந மக்களும் கசதபக்களும் இரண்டு இரண்டு இணைந்து ஒரு மொழிக்கண் ஈரொற்றாய் வருதலையே இச்சூத்திரத்தில் 'கசதப

ஙஞநம' என நிரலே நிறீஇ 'ஈரொற்றாகும்' என்றார் என்று கோடலே அமைதியாகலானும் என்க.

முன் சூத்திரத்தில், ரகர ழகரங்கள் குறிற்கீழ் ஒற்றாக வாரா என்று விலக்குதலின், யகர மொன்றே குறிற்கீழ் ஒற்றாய் வரும்.

இச்சூத்திரத்தை நூன்மரபில் மெய்ம்மயக்கங் கூறியவழிக் கூறாது இவ்வியலிற் கூறியது, இவ்விதி தனிமொழியைக் குறித்தது என்பது விளங்குதற் பொருட்டேயாகும். இனி, உரையாளர் இஃது ஈரொற்றுடனிலையாதலின் ஈண்டு வைத்தார் என்றனர். அதற்கு யாதொரு தொடர்பும் இன்மையின் அக்காரணம் ஏற்புடைத்தன்று.

சிவலிங்கனார்

உரையில் காணப்படும் வேற்றுமை நயம் ஒற்றுமை நயம் பற்றிச் சுப்பிரமணிய சாஸ்திரியார்,

> "ஈண்டு வேற்றுமை நயம் என்பது தொடரும் எழுத்துக்கள் வெவ்வேறிடத்தில் பிறத்தலைக் குறிக்கும்; ஒற்றுமை நயம் என்பது அவை பெரும்பான்மையும் ஓரிடத்திற் பிறத்தலைக் குறிக்கும்."

எனத் தமது தொல்காப்பிய எழுத்ததிகார ஆராய்ச்சிக் குறிப்பில் எழுதியுள்ளார். இது பொருந்தாது. பின்வருமாறு கூறுவதே பொருந்துவதாம்.

நூல்மரபில் கூறப்பட்ட மெய்ம் மயக்கம், தன் மெய்யோடு தான் மயங்கும் உடன் நிலை மயக்கமும், பிறமெய்யோடு மயங்கும் வேற்றுநிலை மயக்கமும் என இரண்டாம். 'வெல்லம்' என்பதில் லகரமெய் தன் மெய்யான லகரத்துடன் மயங்கி உடனிலை மெய்ம் மயக்கமாயிற்று. 'வெல்க' என்பதில் லகரமெய் பிறிதான ககர மெய்யுடன் மயங்கி வேற்றுநிலை மெய்ம் மயக்க மாயிற்று. இவ்விரண்டிலும் லகரமெய் அடுத்த உயிர்மெய்யில் உள்ள மெய்யுடன் மயங்கியதாகும். அஃதாவது லகரமெய், அடுத்த உயிர்மெய்யினை வேறுபடுத்திப் பிரிக்கப்பட்ட மெய்யுடன் மயங்கியதாகும். (வெல்+ல்+அம், வெல்+க்+அ) அதனால் நூல்மரபிற் கூறப்பட்ட மெய்ம் மயக்கம் அடுத்த மெய்யை வேற்றுமை நயத்திற் கொண்டு கூறப்பட்டதாகும். மொழி மரபிற் கூறப்பட்ட ஈரொற்றுடனிலை மெய்ம் மயக்கம் அவ்வாறன்று. வேய்க்குறை என்பதில் யகரமெய், அடுத்த ககர மெய்யுடன் மயங்கியதாகும். அதாவது யகரமெய் அடுத்தும் ஒரு

தனிமெய்யாகிய ககர மெய்யுடன் மயங்கியதாகும். எனவே யகர மெய் தன்போல ஒரு மெய்யுடனேயே மெய் என்னும் ஒற்றுமையில் மயங்கியதாம். அதனால் மொழிமரபில் ஒற்றுமை நயங் கருதிக் கூறப்பட்டது. ஆர்பு, ஆர்ப்பு என்பனவும் முறையே வேற்றுமை நயமும் ஒற்றுமை நயமும் கருதியனவாம். இவ்வாறே பிறவும்.

குறிற்கீழ் ஒற்றாகா மெய்கள்

49. அவற்றுள்
ரகார ழகாரம் குற்றொற் றாகா. (16)

ஆ. மொ.

இல.

Among these
'r' and 'ḻ' do not come as consonants after short letters.

க. சு.

Among those
r, and ḻ cannot be (finally) preceded by short vowels.

பி. இ. நா.

நன்.	119.	ரழத் தனிக்குறில் அணையா.
இல. வி.	33.	ரழத் தனிக்குறில் அணையா.
முத்து.	77.	ரகார ழகாரம் குற்றொற் றொற்றா.
சுவாமி.	13.	ரழவும்......தனிக்குறில் உறாவே.

இளம்பூரணர்

இது ரகார ழகாரங்கட்கு எய்தியது ஒரு மருங்கு மறுத்தல் நுதலிற்று.

இ—ள் : அவற்றுள்—மேற்கூறப்பட்ட மூன்றனுள்ளும், ரகார ழகாரம் குற்று ஒற்று ஆகா—ரகாரமும் ழகாரமும் குறிற்கீழ் ஒற்றாகா.

அவை நெடிற்கீழ் ஒற்றாம்; குறிற்கீழ் உயிர் மெய்யாம்.

எ—டு : தார், தாழ் என நெடிற்கீழ் ஒற்றாய் நின்றன. கரு, மழு எனக் குறிற்கீழ் உயிர் மெய்யாய் நின்றன.

இவ்வாறு விலக்கினமையின், யகரம் பொய் எனவும் நோய் எனவும் இரண்டிடத்தும் ஒற்றாயிற்று. குற்றொற்று என்பது குறிதாகிய ஒற்று எனப் பண்புத் தொகை. குறிற்கீழ் நிற்றலான் குறியது எனப்பட்டது. ஈண்டுக் குறில் நெடில் [1]என்கின்றது [2]மொழிமுதல் எழுத்தினை எனவுணர்க. இதுமேல் வரையறை யில எனப்பட்ட உயிரும் மெய்யும் மயங்கும் மயக்கத்திற்கு ஓர் வரையறை கண்டு கூறினவாறு.

நச்சினார்க்கினியர்

இஃது எய்தியது ஒருமருங்கு மறுத்தல் கூறுகின்றது.

இ—ள்: முற்கூறிய மூன்றனுள், ரகாரமும் ழகாரமும், குறிற்கீழ் ஒற்றாகா, நெடிற்கீழ் ஒற்றாம், குறிற்கீழ் உயிர் மெய்யாம்; எ—று.

கீழ் என்னும் உருபு தொகுத்துக் கூறினர். ஆகாதன வற்றிற்கு உதாரணம் இன்று.

எ—டு: கார், வீழ் என நெடிற்கீழ் ஒற்றாய் வந்தன. கரு, மழு எனக் குறிற்கீழ் உயிர்மெய்யாய் வந்தன. இவற்றை விலக்கவே, யகரம் பொய் எனவும் நோய் எனவும் இரண்டிடத்தும் ஒற்றாய் வருதல் பெற்றாம். புகர், புகழ், புலவர் என்றாற் போல்வனவோ வெனின், மொழிக்கு முதலாம் எழுத்தினைச் [3] சொல்வனவற்றிற்கே ஈண்டு ஆராய்ச்சியாதலால் அவை வேண்டியவாறே வருமென்று உணர்க. அன்றியும் குற்றொற்றென்றே சூத்திரஞ் செய்தலிற் குறிலிணை யொற்றினைக் காட்டிக் கடாவலாகாமை யுணர்க. இது வரையறை யின்றி உயிர்மெய்யோடு தனிமெய் மயங்குவனவற்றிற் சில வொற்றிற்கு வரையறை யீண்டுக் கூறியது.

சுப்பிரமணிய சாஸ்திரியார்

"குற்றொற்று என்பது......குறியது எனப்பட்டது" என இளம்பூரணர் கூறுகின்றனர். ஈண்டு ரகர ழகர ஒற்றைக் குறியது என்பது பொருந்தாக் கூற்றாகும், குற்றெழுத்தின் பின்னர் வந்த ஒற்றை எங்கும் அவ்வாறு வழங்காமையின். அக்காரணம் பற்றியே குற்றொற்று என்பதைப் பண்புத்

சு. வே. 1. என நின்றது
2. மொழிக்கு முதல் எழுத்தினை, மொழிமுதலென
3. சேர்வனவற்றிற்கே

தொகையாகக் கொண்டதும் பொருத்தமின்று. குற்றொற்று என்பதைக் குறிலின்கீழ் வரும் ஒற்று என வேற்றுமைத் தொகையாகக் கொள்ளவேண்டும். நச்சினார்க்கினியர்க்கும் இதுதான் உடன்பாடு என்பது 'கீழ் என்னும் உருபு தொகுத்துக் கூறினார்' என்ற தொடரால் பெறப்படும். இச்சூத்திரத்தில் 'குற்றொற்று' என்பதற்கு, ஈரெழுத் தொருமொழியுள் குறிலின் கீழ் உள்ள ஒற்று எனப் பொருள் கொள்ளல்வேண்டும் என்பது வருஞ் சூத்திரத்தான் விளங்கும்.

வேங்கடராசுலு ரெட்டியார்

மேற்சூத்திரத்திற் கூறப்பட்ட மூன்றெழுத்துக்களுள் ரகரமும் ழகரமும் குறிற்கீழ் ஒற்றாதல் இல்லை என்பது இச்சூத்திரத்தின் பொருள்.

அஃதாவது, க ச த ப ங ஞ நம ஈரொற்றாய் வருங்கால், மருங்கு,—,மருந்து, அரும்பு, ஒழுங்கு, கொழுஞ்சி, உழுந்து, தழும்பு என்பனபோல ரகர ழகரங்கள் குற்றெழுத்துக்களின் பின் உயிர்மெய் எழுத்துக்களாய் வருமேயன்றி, கர்ங்குல்,—, மர்ந்து, அர்ம்பு, மழ்ங்குல்,—, கழ்ந்து,—என்பன போல மெய்யெழுத்துக்களாய் வாரா என்பதாம். குற்றொற்றாகா என்று பொதுவாக விலக்கியதனால், க ச த ப ங ஞ ந மக்கள் இணைந்து வரும் வழியே யன்றி, யாண்டுமே அவை குறிற்கீழ் ஒற்றாக வாரா என்பது போதரும். ஆதலின் இரு, விழு என்றல்லாதே கன்னடத்திற்போல இர், விழ் என்று வாரா என்றவாறாம்.

நன்னூலார், மேல் இரண்டு சூத்திரங்களையும் ஒரு சூத்திரமாக்கிக் கூறினார். அவர், "ரழத் தனிக்குறில் அணையா" (நன். 119) என்றதற்குச் சங்கர நமச்சிவாயர், "ரகார ழகார ஒற்றும் தனிக் குறிலும் மயங்கும் தன்மைய வாயினும், மொழிக் குறுப்பாக வருவதும் நிற்பதுமாய் மயங்கா" என்று பொருள் கூறினார். மொழிக் குறுப்பாக வாரா என்பது அவ்வாசிரியர் கருத்தன்று; என்னை யெனின், "அன் ஆன் அள் ஆள் அர் ஆர்" (பதவியல். 13) என்றும், "அர் ஆர் பவ்வூ ரகரமா ரீற்ற" (வினை. 8) என்றும் தனிக்குறிலணைந்த ரகரமுள்ளதாகிய 'அர்' என்பதனை மொழிக்குறுப்பாக அவர் கூறுதலான் என்க.

சிவலிங்கனார்

இளம்பூரணர், 'குற்றொற்று' என்பதற்கு உரையில் 'குறிற் கீழ ஒற்று' எனப் பொருள் எழுதிக் கீழே 'குற்றொற்றென்பது குறிதாகிய ஒற்று எனப் பண்புத்தொகை' என எழுதியது மாறு பாடுடையது. 'குற்றொற்று' என்பது 'குறிற்கீழ் ஒற்று' எனப் பொருள் தரின் ஏழாம் வேற்றுமைத் தொகையாம். குறிதாகிய ஒற்று என்னும் போது பண்புத்தொகையாம். இளம்பூரணர், உரையில் வேற்றுமைத் தொடராகக் கூறி, விளக்கத்தில் அல்வழித் தொடராகக் கூறியது பொருந்தாது. மேலும் குறிது என்பது குறுமை என்னும் பொருளின்றிக் குறுமையையுடையது என்னும் பொருளது ஆதலினாலும் பொருந்தாது. இருபெயரொட்டுப் பண்புத்தொகையாகக் கொள்ளின் அதற்குரிய இலக்கணம் அத் தொடரில் இல்லை. வாழைப்பழம் என்னுமிடத்து வாழையும் பழமும் ஒன்றாதல் போலக் குறிது ஒற்று என்னுமிடத்தில் குறியதும் ஒற்றும் ஒரெழுத்தாதல் இல்லை.

தொடர்மொழியியல்பு

50.* **குறுமையும் நெடுமையும் அளவிற் கோடலில்**
தொடர்மொழி யெல்லாம் நெட்டெழுத்து [1]இயல. (17)

ஆ. மொ.

இல.

As short and long are defined by units of sound
The word which is formed of more than two short letters will function as having long ones.

க. சு.

As shortness and length (of vowels) are defined by measure of quantity, all polysyllabic words are of the nature of long (monosyllables).

---

* தந்து புணர்ந்துரைத்தல் என்ற உத்திக்கு இனம்—தொல்—பொருள். 665-பேராசிரியர்.
''இசைநிலை நிறைய'' (செய்.26) என்னும் நூற்பாவுரையுள் பேராசிரியர் மேற்கோள்.

க. வே. 1 இயல்பே.

இளம்பூரணர்

இது மேலதற்கோர் புறனடை யுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள் : குறுமையும் நெடுமையும் அளவின் கோடலின்- உயிரெழுத்திற்குக் குறுமையும் நெடுமையும் அளவிற் கொள்ளப் படுதலின், தொடர்மொழியெல்லாம் நெட்டெழுத்து இயல— தொடர்மொழிக் கீழ் நின்ற ரகார ழகாரங்கள் எல்லாம் நெடிற் கீழ் நின்ற ரகார ழகாரங்களின் இயல்பையுடைய (என்று கொள்ளப்படும்).

எ—டு : அகர், புகர்; அகழ், புகழ் எனக் கொள்க.

புலவர் என்றாற் போல இரண்டு மாத்திரையை இறந்ததற் பின்னும் வருமால் எனின், அவையும் 'தன்னின முடித்தல்' என்பதனால் நெடிற்கீழ் ஒற்று எனப்படும். எல்லாம் என்றதனான், ரகார ழகாரங்களேயன்றிப் பிறவொற்றுக்களும் 'நெடிற்கீழ் ஒற்று' எனப்படும். இதனானே 'விரல்தீது' என்புழி லகரம் 'நெடிற்கீழ் ஒற்று' என்று கெடுக்கப்படும்.*

நச்சினார்க்கினியர்

இஃது 'அளபிறந்துயிர்த்தலும்' (எழு. 33) என்னும் செய்யுளியலை நோக்கிய நூன்மரபிற் சூத்திரத்திற்குப் புறனடையாய் அதன்கண் நிகழ்வதோர் ஐயம் அகற்றுகின்றது; என்னை? உயிரும் உயிர்மெய்யும் அளபிறந்து இசைக்குங்காற் குறிலோ நெடிலோ இசைப்பதெனை மாணாக்கர்க்கு நிகழ்வதோர் ஐயம் அறுத்தலின்.

இ—ள் : எழுத்துக்களது குறிய தன்மையும் நெடிய தன்மை யும், மாத்திரையென்னும் உறுப்பினைச் செவிகருவியாக அளக் கின்ற அளவு தொழிலாலே செய்யுட்குக் கொள்ளப்படுதலின்' அம்மாத்திரை தம்முன் தொடர்ந்து நிற்கின்ற சொற்கள் எல்லாம், நெட்டெழுத்து மாத்திரை மிக்கு நடக்கும்படியாகத் தொடர்ந்த சொல்லாம்; எ—று.

எ—டு : ''வருவர்கொல் வயங்கிழாஅய்'' (கலித், 11) எனவும், ''கடியவே கனங்குழாஅய்'' (கலி. 11.) எனவும் குற்றெழுத்துக்க ளெல்லாம் நெட்டெழுத்தினை மாத்திரை

சு. வே. 1 இயல்பே.

* வேல்+தீது=வேறீது ஆவதுபோல விரல்+தீது=விரறீது ஆம் என்பது கருத்து.

மிகுத்தற்குக் கூடியவாறு உணர்க* ஏனைச் செய்யுட்களையும் இவ்வாறே காண்க. எனவே, மாத்திரை அளக்குங்கால் நெட்டெழுத்தே மாத்திரை பெற்று மிக்கு நிற்கும் என்றமை யான். எதிரது போற்றல் என்னும் உத்தி பற்றிச் செய்யுளியலை நோக்கிக் கூறியதாயிற்று. ஈண்டுக் கூறினார், நெட்டெழுத்து இரண்டு மாத்திரையின் இகந்து வரும் என்பது அறிவித்தற்கு.

†அளபென்று மாத்திரையைக் கூறாது** அளவெனச் சூத்திரஞ் செய்தமையான் அளவு தொழில் மேல் நின்றது அது செய்யுளி யலுள் ***மாத்திரையளவும் (செய்யுளியல். 2) என்பதனானும் உணர்க ††இயல என்றதனைச் செயவென் எச்சமாக்கிப் படுத்தலோசையாற் கூறுக.

இனித் தன்னின முடித்தல் என்பதனான் ஒற்றிற்கும் இவ்வாறே கொள்க. 'குரங்குளைப் பொலிந்த கொய் சுவற் புரவி' (அகம். 4) என்ற †††குறுஞ்சீர் வண்ணத்திற்கு உரிய குற்றெழுத்துக்கள் எல்லாம் இடையில் நின்ற ஒற்றெழுத்தை மாத்திரை மிகுத்தற்குக் கூடி நின்றவாறு உணர்க. எனவே, குற்றெழுத்துக்கள் எல்லாம் ஒற்றெழுத்துக்களோடும் நெட்டெ ழுத்துகளோடும் கூடி அவற்றையே ஓசை மிகுத்து நிற்கும் என்றவாறாயிற்று. இதனானே 'ஒற்றிசை நீடலும் என்ற

---

* வயங்கிழாஅய் என்பதில் உள்ள வ,ய,கி என்ற குற்றெழுத்துகள் ழா என்ற நெடிலை மாத்திரை நீளச் செய்ய வேண்டித் தொடர்ந்துள்ளன என்பது கருத்து.

† அளபு=அளக்கப்படுவது; மாத்திரை

** அளவு=அளத்தல் தொழில்

*** மாத்திரையளவும்=மாத்திரையின் அளத்தலும்

†† 'இயல' என்பதை எடுத்தல் ஓசையாற் கூறின் 'இயல்பு டையன' என்ற வினைமுற்றுப் பொருளதாகும். படுத்த லோசையாற் கூறின் 'இயலும் (நடக்கும்)படியாக' என எச்சப் பொருளதாம்.

††† குறுஞ்சீர் வண்ணம் என்பது குற்றெழுத்து மிக்கு வருவதாம். "குரங்குளைப் பொலிந்த கொய்சுவற் புரவி" (அகம். 4) என்ற வரியில் குற்றெழுத்துக்களே யுள்ளன. அதனால் இது குறுஞ்சீர் வண்ணம் எனப்படும். இக்குற்றெழுத்துக்கள் எல்லாம் இடை யிடையே உள்ள ங்,ப்,ந் முதலிய ஒற்றெழுத்துக்களையும் மாத்திரை மிகுத்தற்குக் கூடிநின்றன. இப்படியே குற்றெழுத் துகள் ஒற்றெழுத்துகளோடும் நெட்டெழுத்துகளோடும் கூடி நின்று அவற்றின் மாத்திரைகளை மிகுத்து நிற்கும். ஒற்று இசை நீடல் என்பது குற்றெழுத்துத்தன்மையாய் நீளுதலாம்.

ஒற்றிசை நீளுங்காற் குற்றெழுத்தாய் நீளும் என்றார். இனி உரையாசிரியர் புகர், புகழ் எனக் குறிலிணைக்கீழ் ரகார ழகாரங்கள் வந்த தொடர் மொழிகள் எல்லாம் தார், தாழ் என்றாற் போல ஓசை யொத்து நெட்டெழுத்தின் தன்மையவாம் என்றாரால் எனில், புகர், புகழ் என்பனவற்றை நெட்டெழுத்தென்றே எவ்விடத்தும் ஆளாமையானும் நெட்டெழுத்தாகக் கூறிய இலக்கணத்தால் ஒரு பயன் கொள்ளாமையானும் செய்யுளியலுள் இவற்றைக் குறிலிணை ஒற்றடுத்த நிரையசையாகவும் தார் தாழ் என்பவற்றை நெட்டெழுத்து ஒற்றடுத்த நேரசையாகவும் கோடானும் அது பொருளன்மையுணர்க.

சுப்பிரமணிய சாஸ்திரியார்

நெட்டெழுத்து என்ற சொல்லைப் பலவிடங்களிலும் ஆசிரியர் நெட்டெழுத்தைக் கொண்ட ஈரெழுத்தொருமொழி என்ற பொருளைக் குறிக்குமாறு வழங்குதலைக் காணலாம்.

உ...ம். **"நெட்டெழுத் திம்பரும் தொடர்மொழியீற்றும்"**
(எழுத். 36)

"நெட்டெழுத் திம்பர் ஒற்றுமிகத் தோன்றும்"
(எழுத். 197)

ஆகலின், "புகர், புகழ் என்பனவற்றை நெட்டெழுத்தென்றே எவ்விடத்தும் ஆளாமையின்" என்ற காரணத்தைக் கூறி நச்சினார்க்கினியர் இளம்பூரணரை மறுத்தது பொருந்துமோ?

பொருள் + நிலை = பொருணிலை, முதல் + நிலை = முதனிலை, விரல் + தீது = விரறீது முதலிய விடங்களில் ஒற்று மெய் கெடுதல் தொடர்மொழி நெட்டெழுத்தைக் கொண்ட ஈரெழுத்தொருமொழியின் தன்மையைப் பெறும் என்றதனாலும், "நெடியதன் முன்னர்" (எழுத். 161) என்ற சூத்திரத்தானும் பெறப்படுதலின் "நெட்டெழுத்தாகக் கூறிய இலக்கணத்தால் ஒரு பயன் கொள்ளாமையான்" என்ற நச்சினார்க்கினியர் கூற்றுப் பொருந்தாதென்க. இதனை விரல் தீது என்புழி லகரம், "நெடிற்கீழ் ஒற்று" என்று கெடுக்கப்படும் என இளம்பூரணரே குறித்தது காண்க.

இச்சூத்திரத்துக்குப் பொருள் கூறும்போது இளம்பூரணர் முன் சூத்திரத்திலிருந்து 'ரகார ழகாரங்கள்' என்றதை வருவித்து இச்சூத்திரத்துள்ள 'தொடர்மொழி' என்றதற்குத் "தொடர் மொழிக்கீழ் நின்ற ரகார ழகாரங்கள்" எனப் பொருள்

கொண்டனர். அவ்வாறு கொண்டமையானே "எல்லாம் என்றதனான் ரகார ழகாரங்களேயன்றிப் பிற ஒற்றுக்களும் நெடிற்கீழ் ஒற்று" எனக் கூற வேண்டியதாயிற்று. அவ்வாறு கொள்ளாது தொடர்மொழி என்றதற்கு ஆற்றலானுள்ள பொருளே கொள்ளல் சாலும். அவ்வாறு கொள்ளின் "நெடியதன் முன்னர் ஒற்றுமெய் கெடுதலும்" (எழுத். 161) என்றதனால் பொருள் + நிலை போன்ற விடத்துள் ஒற்று மெய் கெடுதல் கொள்ளல் கூடும்.

நச்சினார்கினியர், சூத்திரத்துள்ள அளவு, தொடர்மொழி என்பனவற்றிற்கு ஆற்றலானுள்ள பொருளைக் கொள்ளாது. அளவு தொழில், அம்மாத்திரை தம்முள் தொடர்ந்து நிற்கின்ற சொல் என முறையே பொருள் கொண்டனர். அன்றியும் 'நெட்டெழுத்தியல' என்ற குறிப்பு வினைமுற்றை எச்சமாக்கி, 'நெட்டெழுத்து மாத்திரை மிக்கு நடக்கும்படியாக' எனப் பொருளும் உரைத்தனர்.

அன்றியும் இஃது, "அளபிறந்துயிர்த்தலும் என்னும் செய்யுளியலை நோக்கிய நூன்மரபிற் சூத்திரத்திற்குப் புறனடையாய் அதன்கண் நிகழ்வதோர் ஐயம் அகற்றுகின்றது; என்னை? உயிரும் உயிர்மெய்யும் அளபிறந்து இசைக்குங்கால் குறிலோ நெடிலோ இசைப்பது என மாணாக்கர்க்கு நிகழ்வதோர் ஐயமறுத்தலின்" எனக் கூறினர். அப்பொருளை ஈண்டுக் கூறுதற்கு இடன் இன்மையானும், புகர் புகழ் என்பன வற்றிற்கு இலக்கணங்கூற வேண்டுவது இன்றியமையாமையானும், அவர் கூறும் ஐயம் "குன்றிசை மொழிவயின்" (எழுத். 41) என்ற சூத்திரத்தாற் போக்கப்படும் ஆகலானும் அவர் கூற்றுப் பொருந்தா தென்க.

"செய்யுளியலுள் இவற்றைக் குறிலிணை ஒற்றடுத்த...பொருளன்மையுணர்க" எனவும் நச்சினார்கினியர் இளம்பூரணரை மறுக்கின்றனர். ஒரு செய்கையில் தொடர்மொழியெல்லாம் நெட்டெழுத்தைக் கொண்ட ஈரெழுத்தொருமொழியை ஒக்கும் எனின் எல்லாச் செய்கையிலும் ஒத்திருத்தல் வேண்டாமையான் அவர் மறுப்புப் பொருந்தா தென்க.

"அளபென்று பகர வுகரமாக மாத்திரையைக் கூறாது அளவென வகர வுகரமாகச் சூத்திரஞ் செய்தமையான் அளவு தொழின்மேல் நின்றது" என்கின்றனர்.

"அளவு நிறையும்" (எழுந். 164) முதலிய சூத்திரங்களின் 'அளவு' என்றது மாத்திரை என்ற பொருளில் வாராமை உண்மையாயினும்,

"எல்லா வெழுத்தும் வெளிப்படக் கிளந்து
....
அளவிற் கோடல் அந்தணர் மறைத்தே (எழுத் 102)

என்ற சூத்திரத்தில் 'அளவிற் கோடல்' என இளம்பூரணப் பதிப்பு ஒன்றிலும் "அளபிற் கோடல்" என இளம்பூரணப் பதிப்பு மற்றொன்றிலும் நச்சினார்க்கினியப் பதிப்புக்களிலும் காணப்படுகின்றமையின், அதே சொல் ஈண்டும் இருத்தலின், ஈண்டு "அளவிற் கோடலின்" என்றும். ஆங்கு "அளபிற் கோடல்" என்றும் பாடம்மாற்றிக் கொண்டதற்குக் காரணம் தெரியவில்லை. அச்சூத்திரத்தில் "அளபிற் கோடல்" என்றதற்கு மாத்திரை கூட்டிக் கோடல் என்றே பொருள் கூறினர். ஆகலின் 'அளவு' என்ற சொல் ஒரு பொருளையும், 'அளபு' என்ற சொல் மற்றொரு பொருளையும் குறிக்கும் சொற்கள் எனக் கொள்ளாது இரண்டும் பல பொருளொரு சொல் எனவே கோடல் தகும்.

வேங்கடராசுலு ரெட்டியார்

இச்சூத்திரத்தில் 'அளபிற் கோடலின்' என்றதனான் தொடர்மொழியெல்லாம் நெட்டெழுத்தியல என்பதற்கு, தொடர்மொழியிலுள்ள குறிலிணை யெழுத்துக்கள் நெட்டெழுத்தின் இயலவாம் என்று பொருள் கொள்ளுதல் தகும், அளபினான் நெட்டெழுத்தியலவாவன குறிலிணைகளேயாகலின். அயர்பு, அகழ்வு என்பன போல்வனவற்றில் ரகர ழகரங்கள் குறிலிணைக் கீழ வந்தனவாகலின், அவை நெடிற்கீழ் வந்தன போன்று கொள்ளப்படும் என்பது கருத்து.

இளம்பூரணவடிகள் இவ்வாறே கருத்துக் கொண்டார். பேராசிரியரும் செய்யுளியலில் "இசைநிலை நிறைய" (செய். 26) என்னும் சூத்திரத்தின் உரையில், 'இவற்றை உண்மை வகையாற் சீராம் என்றானல்லன்; "தொடர்மொழியெல்லாம் நெட்டெழுத்தியல்" என்றாற் போலக் கூறினான் என்பது' என்று எழுதியிருத்தலின், இவ்வாறே கருத்துக்கொண்டாராவர். சிவஞான முனிவரும், தமது சூத்திர விருத்தியில், 'முதல்' என்னும் சொல்லின் ஈற்று லகர மெய் கெட்டதற்கு விதி கூறுமிடத்து, "நெடியதன்முன்னர்" என்னும் சூத்திர விதி "குறுமையும் நெடுமையும்" என்பதனாற் பெற்றுக் கெட்டது' என்று கூறினார்.

'அளபிற்கோடலில், தொடர்மொழியெல்லாம் நெட்டெழுத்தியல' என்றதனான் தொடர்மொழிக்கண் உள்ள இரண்டு

குற்றெழுத்துகள் இரண்டு மாத்திரை பெறுவனவாகலின், அவை ஒரு நெடில் போலக் கருதுக என்பதே ஆசிரியர் கருத்து; அவற்றை அவர் நெடில் என்றே கூறினாரல்லர். பகல்=பால் எனவும், அகழம் = ஆழம் எனவும், அகம் = ஆம் எனவும், துவற்றல் = தூற்றல் எனவும் இவ்வாறு பல சொற்களில் இரண்டு குற்றெழுத்துக்கள் ஒரு நெடிலாகி வழங்குகின்றன இவை யெல்லாம் மருவி வந்தனவேயாயினும் இச்சூத்திர விதியை வலியுறுத்தத் தக்கனவாய் அமைந்துள்ளன.

ஆசிரியர் நச்சினார்க்கினியர் இச்சூத்திரத்திற்கு இவ்வாறு பொருள் கூறுதலை மறுத்து, 'எழுத்துக்களது குறிய தன்மையும் நெடிய தன்மையும் மாத்திரை யென்னும் உறுப்பினைச் செவி கருவியாக அளக்கின்ற அளவு தொழிலாலே செய்யுட்குக் கொள்ளப்படுதலின், அம்மாத்திரை தம்முள் தொடர்ந்து நிற்கின்ற சொற்களெல்லாம், நெட்டெழுத்து மாத்திரை மிக்கு நடக்கும் படியாகத் தொடர்ந்த சொல்லாம்' என்று பொருள் கூறினார். 'இயல என்றதனைச் செயவென் எச்சமாக்கிப் படுத்த லோசையாற் கூறுக என்றும் எழுதினார். இவ்வதிகாரத்துள், இச்சொல் (இயல) வந்துள்ள விடங்களுள் (சூ. 103, 282, 306, 319, 327' 338, 345, 371, 376, 401, 403) ஓரிடத்திலேனும் செயவென் எச்சப் பொருளில் வந்திலது; யாண்டும் குறிப்பு வினைச் சொல்லாகவே வந்துளது; ஈண்டு, எச்சச் சொல்லாகக் கோடற்கு இயையும் இன்று. நிற்க.

நச்சினார்க்கினியர், இச்சூத்திரத்திற்கு உதாரணமாக, நெட்டெழுத்துக்கள் அளபெடுத்தலைக்காட்டி, 'குற்றெழுத்துக்களெல்லாம் நெட்டெழுத்தினை மாத்திரை மிகுத்தற்குக் கூறிய வாறு உணர்க' என்றும், 'தன்னின முடித்தல் என்பதனான் ஒற்றிற்கும் இவ்வாறே கொள்க' என்றும் எழுதி, ஒற்றளபெடையைக் காட்டி, 'குறுஞ்சீர் வண்ணத்திற்கு உரிய குற்றெழுத்துக்களெல்லாம், இடையில் நின்ற ஒற்றெழுத்தை மாத்திரை மிகுத்தற்குக் கூடிநின்றவாறு உணர்க' என்றும் கூறினார். ஆசிரியர் 'நீட்டம் வேண்டின்' 'குன்றிசை மொழி வயின்' 'ஐ ஔ என்னும்' என்ற சூத்திரங்களால் உயிரளபெடைக்கு விதி கூறியுள்ளாராகலின், மீண்டும் அளபெடையைக் குறித்துக் கூறுதல் வேண்டுவதின்று. அன்றியும், இச்சூத்திரம் நச்சினார்க்கினியர் கூறியவாறு பொருள்படுதல் இல்லை

இன்னும் அவர் 'புகர் புகழ் என்பனவற்றை நெட்டெழுத் தென்றே எவ்விடத்தும் ஆளாமையானும்...செய்யுளியலுள், இவற்றைக் குறிலிணை ஒற்றடுத்த நிரையசையாகவும், தார் தாழ் என்பனவற்றை நெட்டெழுத்து ஒற்றடுத்த நேரசையாக வும் கோடலானும், அது பொருளன்மை யுணர்க' என்றார். ஆசிரியர், 'நெட்டெழுத்தே' என்னாது, 'நெட்டெழுத்தியல' என்றே கூறியுள்ளாராகலின், இவற்றை நெட்டெழுத்தாகவே ஆளவேண்டுதலின்று. மேற்குறித்த பேராசிரியருரையும் இதனைத் தெளிவிக்கும்.

அன்றியும் நச்சினார்க்கினியர் தாமே,

"அளவும் நிறையும் வேற்றுமை யியல' (புள்ளி 14)

என்னும் சூத்திரத்தின் உரையில், 'வேற்றுமையியல்' எனவே தாம் வேற்றுமையல்ல வாயின' என்று எழுதினாராகலின், அவ்வாறே, ஈண்டும், 'நெட்டெழுத்தியல' எனவே, தாம் நெட்டெழுத்தல்லவாயின' என்றெழுதி அமைத்துக் கொள்ளு தல் தகுமன்றே? அவ்வாறு அமைக்காமல், இளம்பூரணர் உரையை மறுத்துக் கூறியது தக்கதன்று.

இவ்வாற்றால், இச்சூத்திரத்திற்கு இளம்பூரணவடிகள் கூறிய பொருளே அமைவுடைப் பொருளதாதல் தெளிவுறும்.

வெள்ளைவாரணனார்

என்றது மேலைச் சூத்திரத்து ர, ழ என்பன குறிற் கீழ் ஒற்றாகா என்று கூறியது கொண்டு குற்றெழுத்தின் பின்னதாய் யாண்டும், ரகார ழகாரம் வாரா என்பது கருதிப் புகர், புகழ் என்பன யாண்டடங்கும் என்பாரை நோக்கிப் புகழ் புலவர் என்றாற் போல அக்குறில்கள் இணைந்து நிற்க அவற்றைத் தொடர்ந்துவரின் அக்குறிலிணைகளும் நெடிலின் தன்மையை யுடையன வாதலான், அவற்றின் பின்வரும் ரகர ழகரங்களும் நெட்டெழுத்தின் பின் நின்றனவாகவே கொள்ளப்படும் என்ற வாறாம்.

இவ்வாறன்றி நச்சினார்க்கினியர், "இச்சூத்திரம்......ஐய மகற்றுகின்றது" எனக் கருத்துரைத்து, இச்சூத்திரத்து 'நெட்டெழுத்தியல' என்ற தொடர்க்கு ';நெடிற் கீழ் நின்ற ரகார ழகாரங்களின் இயல்பை யுடையவாம்' என உரையாசிரியர் உரைத்த வழியே யுரையாது, 'இயல' என்பதனைச் செய வென்னும் வாய்பாட்டு வினையெச்சமாகக் கொண்டு 'எழுத்துக்களது குறிய தன்மையும்......தொடர்ந்த சொல்லாம்' எனப் பொருள் கூறினார்.

அளபிறந்துயிர்த்தலும் என்ற சூத்திரம் இசை நூலில் உயிரும் ஒற்றும் தன் மாத்திரையில் நீண்டொலித்தலைக் கூறியதாதல், அச்சூத்திரத்திற்கு இளம்பூரணர் எழுதிய உரையானும் அதனைப் பிறன்கோட் கூறல் என்னும் உத்திக்கு எடுத்துக்காட்டாகப் பேராசிரியர் குறித்தலானும் புலனாம் ஆதலின், இசைநூற்குக்கூறும் இவ்விலக்கணம் செய்யுளியலுக்கும் உண்டெனச் சூத்திரச் சொற்றொடரைப் பிரித்துக் கூறுதல் பொருந்தாது. அன்றியும் செய்யுளியல் விதியை இதுமாட்டெறிந்த தென்பதற்குரிய சொற்றொடர் இதனுட் காணப்படாமையானும், ஆண்டுக் கூறப்படும் விதி அளபெடைக்கண் அடங்கும் ஆதலானும், மேலைச் சூத்திரத்தில் குற்றொற்று எனப் பொதுப்படக் கூறியதனால் வரும் ஐயம் அகற்றுதல் வேண்டுமாதலானும் நச்சினார்க்கினியர் உரை இச்சூத்திரத்தின் கருத்தன்று என்பது பெறப்படும்.

அன்றியும் நெட்டெழுத்தாவது, குற்றெழுத்து இரண்டு நின்று நீண்டிசைப்பதாகலின் குற்றெழுத்துக்கள் இரண்டு முதலியனவாகத் தொடர்ந்தனவெல்லாம் நெட்டெழுத்தின் இயல்புடையவென்பது பொருந்தும். ''நெட்டெழுத்தாவது நீரும் நீரும் சேர்ந்தாற் போலக் குற்றெழுத்து இரண்டொத்து நின்று நீண்டிசைப்பதொன்றாகலின்'' எனவரும் சிவஞான முனிவர் கூற்றானும், குறிலிணை முதலியவாகத் தொடர்ந்த குற்றெழுத்துக்கள், நெட்டெழுத்தின் இயல்புடைய என்பது போதரும். இக்கருத்தே பற்றி ஆசிரியர் தொல்காப்பியனாரும் குறிற்கீழ் நின்ற ஆகாரம் குறுகுதலைக் கூற வந்தவிடத்துக் குறிற்கீழ் ஆகாரம் அகரம் எனக் குறுகும் என்றுரையாது அவ்வாகாரத்தின் உறுப்பாகிய ஒரு மாத்திரையளவினையுடைய அகரம் கெடும் என்பதுபட,

> குறியத னிறுதிச் சினைகெட வுகரம்
> அறிய வருதல் செய்யுளுள் உரித்தே (எழுத். 23),

எனச் சூத்திரஞ் செய்தலானும்—விரல் தீது என்பது முதலாக வரும் குறிலிணை யொற்றை நெடிற்கீழ் ஒற்றெனக் கருதிக் கெடுத்தற்கேற்ப, பின்னர் 100ல் ''நெடியதன் முன்னர் ஒற்று மெய் கெடுதலும்'' என விதி கூறிப்போதலானும் பின்னரும் பல இடங்களில் குறிலிணை எழுத்துக்களை நெடியல்பினவாகக் கொண்டு விதி கூறுதலானும் இளம்பூரணர் உரையே ஆசிரியர் கருத்தொடு ஒட்டியதாதல் நன்கு துணியப்படும்.

பிற குறிப்புகள் :

''இதற்கு முன் உள்ள சூத்திரங்கள் மொழிக்கண எழுத்துக்கள் மயங்குமாறு கூறி அதிகாரப்பட்டு நிற்றலானும், பின்னுள்ள சூத்திரம் மயக்கமே கூறலானும், நச்சினார்க்கினியர் கூறியவாறு செய்யுள்கள் தத்தம் இசை பெறும் பொருட்டுக் குற்றெழுத்துக் கள் நெட்டெழுத்துக்களோடு கூடி அவற்றினோசையை மிகுத்து நிற்கும் என்று பொருள்பட வந்ததாகக் கோடலினும் மயக்கம் பற்றி வந்ததோர் ஐயமறுக்க வந்ததாகக் கோடலே பொருத்தம் ஆதலின் இச்சூத்திரத்திற்கு உரையாசிரியர் உரையே பொருத்த மாகும்—கணேசய்யர்.

செய்யுளில் ஈரொற்று இலக்கணம்

***51. செய்யுள் இறுதிப் [1]போலி மொழிவயின்**
னகார மகாரம் ஈரொற்று ஆகும். (18)

ஆ. மொ.

இல.

Inverse at the end of the word 'Polum' 'n' and 'm' stand together as twin consonants.

க. சா.

At the end of a metrical composition, in the word (denoting) likeness, n̲ and m will form a two-consonant cluster.

பி. இ. நா.

நன். 120: லளமெய் திரிந்த னணமுன் மகாரம்
நைந்து ஈரொற்றாம் செய்யு ளுள்ளே.

இல. வி. 34: லளமெய் திரிந்த னணவொடு மகாரம்
ஈரொற் றாகும் செய்யு ளுள்ளே.

முத்து. 80: லளமெய் திரிந்த னணமுன் மகாரம்
நைந்தீ ரொற்றாம் செய்யு ளுள்ளே.

சு. வே. 1. போனு

* *மாறனலங்காரம் பொருளணியியல் 93ஆம் நூற்பாவின் உரை யில் ''செம்மேனி பொன் போன்ம்'' என்னும் செய்யுளின் உரை யில் இந்நூற்பா ஆளப்பட்டுள்ளது.*

இளம்பூரணர்

இது, செய்யுட்கண் [1]ஈரொற்றுடனிலை ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: செய்யுள் இறுதி போலி மொழிவயின்—[2]செய்யுள் இறுதிக்கண் 'போலும்' என்னும் மொழிக்கண், னகாரம் மகாரம் ஈர்ஒற்று ஆகும்—னகாரமும் மகாரமும் வந்து ஈரொற்று உடனிலையாய் [3]நிற்கும்.

எ—டு : "எம்மொடு தம்மைப் பொரூஉங்கால் பொன்னொடு கூவிளம் பூத்தது போன்ம்" எனவரும்.

நச்சினார்க்கினியர்

இது செய்யுட்கண் ஈரொற்றிலக்கணம் ஆமாறு கூறுகின்றது.

இ—ள் : செய்யுட்கண் 'போலும்' என்னும் சொல்லின் இறுதிக்கண் னகாரமும் மகாரமும் வந்து ஈரொற்று உடனிலையாய் நிற்கும்; எ—று.

எ—டு : அந்நூலை—முந்நூலாகக் கொள்வானும் போன்ம் (கலித். 103) "சிதையும் கலத்தைப் பயினால் திருத்தித்—திசையறி மீகானும் போன்ம்" (பரிபா—10—55) எனவரும். [4]போலும் என்னும் செய்யும் என்னும் முற்று ஈற்று மிசை யுகரம் மெய்யொழித்துக் கெட்டு லகரந் திரிந்து நின்றது [5]இஃது இறுதியில் முற்று; இடையிற் பெயரெச்சமாகிய உவம உருபு. ஈண்டு முற்றென்பார் இறுதிமொழி என்றார். *

வேங்கடராகுலு ரெட்டியரர்

செய்யுள் இறுதி என்றதனால், செய்யுள் ஈற்றில் இருப்பதாகிய 'போலும்' என்னும் சொல்லே 'போன்ம்' என்றாகும்;

சு. வே. 1. ஈரொற்றிலக்கணம்
2. செய்யுட்கண்
3. நிற்கப் பெறும்
4. போன்ம் எனச்
5. இஃது.........மொழி என்றார். இத்தொடரில் இது பெயரெச்சமாகிய உவம உருபு என்பது மட்டில் மகாலிங்கய்யர் பதிப்பில் உண்டு.

பெயரெச்சம் இறுதியில் நில்லாது; முற்றே இறுதியில் நிற்கும். இறுதிப் போலி என்றதால் அது முற்று என்பது பெறப்படும். 'உயிர் போலும் கேளிர்' என்னுமிடத்தில் போலும் என்பது இடை நின்று பெயரெச்சமாயிற்று. 'மீகானும் போன்ம்' (போலும்) என இறுதியில் நின்று முற்றாயிற்று.

பிறவிடத்தில் அவ்வாறாதல் இல்லை என்பது போதரும், ஆயினும்,

''வஞ்சினம் வாய்த்தானும் போன்ம்'' (கலி. முல்லை 1)

என்றும்,

''குடர்கூளிக் கார்த்துவான் போன்ம்'' (கலி. முல்லை. 1)

என்றும்,

தோளில் திருகுவான் போன்ம்'' (கலி. முல்லை. 1)

என்றும் செய்யுளின் இடையே வந்துளது. ஈண்டு இது செய்யுளின் ஒவ்வோர் உறுப்பின் ஈற்றில் வந்தது என்று கொண்டு ஓராற்றான் அமைத்தல் கூடும் ஆயின்,

''பெருங்கல் லடாரும் போன்ம் என விரும்பி'' (புறம். 19)

என்று அடியின் இடையில் வந்திருப்பது அமையுமாறில்லை. பண்டைச் செய்யுட்களிலேயே இவ்வாறு வந்திருத்தலின்,

''மழையுண் மாமதி போன்மெனத் தோன்றுமே''
(சீவக. நாமகள். 98)

என்று சீவகசிந்தாமணியில் வந்திருப்பது தவறாகாது. இவற்றைக் கண்டு போலும் நன்னூலார், செய்யுளிறுதி என்று கூறாமல், பொதுப்பட,

''லளமெய் திரிந்த னணமுன் மகாரம்
நைந்தீ ரொற்றாம் செய்யு ளுள்ளே'' (நன். 120)

என்று கூறுவாராயினார்.

நச்சினார்க்கினியர் இவ்வாறு வருதலைத் தொல்காப்பியனார் கூற்றாகக் காட்டுவான் வேண்டி, 'செய்யுளிறுதிப் போலி மொழிவயின்' என்னும் அடியை, 'செய்யுட்போலி மொழியிறுதி வயின்' என்று மாற்றிக் கூட்டிப் பொருள் கூறினார். அஃது ஆசிரியர் கருத்தன்மை சூத்திரக் கிடக்கையான் அறியப்படும்.

சிவலிங்கனார்

போலும் என்பது 'போன்ம்' எனத்திரிந்த நிலையில் செய்யுள் இறுதியிலேயன்றி யிடையிலும் வருதலைக் காணுமிடத்துத் தொல்காப்பியர்க்குப் பின்னர் அச்சொல் இடையிலும் இலக்கியங்களில் ஆளப்பட்டிருக்கலாம் என அறிய வேண்டியுளது. ''ஐ விரை மாண்பகழி யரந்தின் வாய் போன்ம் போன்ம் போன்ம் பின்னுமலர்க்கண் புனல்'' எனப் பரிபாடலில் (10:97-98) அச்சொல் அடுக்கியும் வந்துள்ளது காண்க.

மகரம் குறுகும் இடம்.

* 52. [1]னகாரை முன்னர் மகாரங் குறுகும் (19)

ஆ. மொ.

இல.

'm' after 'n' diminishes (in soumd).

க. சு.

m after n will be shortened.

பி. இ. நூ.

நன் : 120. ல...மெய் திரிந்த ன...முன் மகாரம் நைந்து ஈரொற்றாம் செய்யு ளுள்ளே.

,, 96. ணன முன்னும் வஃகான் மிசையும் மக்குறுகும்.

இளம்பூரணர்

இது, "அரையளவு குறுகல் மகரம் உடைத்து" (நூன்மரபு 13) என்பதற்கு ஓர் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள் : னகாரை முன்னர் மகாரம் குறுகும்—(மேற்கூறப் பட்ட) னகாரத்து முன் வந்த மகாரம் மாத்திரை குறுகி நிற்கும்.

நச்சினார்க்கினியர்

இஃது அரையளபு குறுகும் என்ற மகாரத்திற்குக் குறுகும் இடம் இது என்கின்றது.

இ—ள் : முற்கூறிய னகரத்தின் முன்னர் வந்த மகரம் தன் அரை மாத்திரையிற் குறுகி நிற்கும்; எ—று.

சு. வே. 1 னகார

* எழுத்துச்சாரியை ஈறுதிரிதலுக்கு இந்நூற்பாவைக் காட்டுவர் நச்சினார்க்கினியர். (தொல். இடை. 3) னகாரம்—னகாரை எனத் திரிந்தது.

மகரக் குறுக்கத்தால் வரும் பயன் :
கழிநெடி லிசையும் காலெழுத் திசையும்
பெயரயற் புணர்ப்பினும் பெயரிடைப் புணர்ப்பினும்
வழுவென மொழிப வாய்மொழிப் புலவர்
—(மாபுராணம்—யாப்பருங்கல விருத்தி. நூற்பா. 2ன் உரை)

எ—டு : போன்ம் என முன்னர்க் காட்டினாம். னகாரை யென இடைச்சொல் ஈறு திரிந்து நின்றது.

இனித் தன்னின முடித்தல் என்பதனான் ணகார ஒற்றின் முன்னும் மகாரங் குறுகுதல் கொள்க. 'மருளினு மெல்லா மருண்ம்' என வரும்.

வேங்கடராசுலு ரெட்டியரர்

மொழியின் ஈற்றில் இரண்டு மெய்யெழுத்துக்களை ஒலித்தல் அருமையாகலின், இறுதி மெய்யெழுத்தினை நன்கு ஒலித்தல் இன்று. அதனானே அது, தன் அளபிற் குறுகிற்று. வடமொழி யில், சொல்லின் இறுதியில் இணைந்த மெய்யெழுத்துக்கள் இருப் பின் அவற்றுள் ஈற்றில் இருக்கும் மெய்யெழுத்துக் கெட்டுவிடும். இதனை,

ஸம் யோகாந் தஸ்ய லோப : (8 : 2 : 23)

என்னும் பாணினீய சூத்திரத்தான் அறியலாகும். வட மொழியாளர் ஒலிக்காதேவிடுதல் போன்ற இடங்களில், தமிழர் பாதியளவு ஒலிக்கின்றனர் என அறிக.

"தன்னின முடித்தல் என்பதனுன், ணகார ஒற்றின் முன்னும் மகாரங் குறுகுதல் கொள்க; மருளினும் எல்லாம் மருண்ம் என வரும்" என்று நச்சினார்க்கினியர் கூறினார். ஆசிரியர், மேற் சூத்திரத்தால், போலி மொழியில் னகார மகாரம் ஈரொற்றாகும் என்று கூறி. இச்சூத்திரத்தில் அம்மகரம் குறுகும் என்று விதித் தலின், 'மருள்' என்னும் சொல்முன் வரும் மகரம் குறுகும் என்றல் அவர் கருத்தன்று. அவர் (ஆசிரியர் தொல்காப்பியனார்) காலத்தில் இல்லாதே பிற்காலத்து நூல்களில் வழங்கியது கண்டு நன்னூலார் "ண ன முன் மகாரம் நைந்தீ ரொற்றாம்" என்றார். அதனை, இந்நூலிற்காட்டி அமைத்தல் பொருந்தாது. அவ்வாறு காட்டின் உரையாசிரியர் காட்டுவனவெல்லாம் நூலாசிரியர் கொள்கையாகவே கற்கும் மாணாக்கர் கருதுவராகலின், சொற் களின் வரலாற்று முறைமை அறியுந் திறத்தில் தடுமாற்றம் நேரும். இளம்பூரண அடிகள் இவ்வாறு காட்டாமை அறியத் தக்கது.

மொழிக்கண் மாத்திரை வேறுபடாமை.

*53. மொழிப்படுத்து இசைப்பினும் தெரிந்துவேறு இசைப்பினும்
எழுத்தியல் திரியா என்மனார் புலவர் (20)

ஆ. மொ.

இல.

The nature of the letter will not change when using it either in words or in songs, so say the poets.

க. சு.

Learned men say that the nature of a sound will not be altered

Whether it is pronounced occurring in a word, or appears pronounced otherwise.

பி. இ. நூ. :

நன். 127 : மொழியாய்த் தொடரினும் முன்னனைத்து எழுத்தே.

இளம்பூரணர்

இது, எழுத்துக்கட்கு மொழிக்கண் மாத்திரை காரணமாகப் பிறப்பதோர் ஐயம் தீர்த்தல் நுதலிற்று.

இ—ள் : மொழிப்படுத்து இசைப்பினும் — மொழிக்கண் படுத்துச் சொல்லினும், தெரிந்து வேறு இசைப்பினும்—தெரிந்து கொண்டு வேறே சொல்லினும், எழுத்து இயல் திரியா என்மனார் புலவர்—உயிரும் மெய்யும் ஆகிய எழுத்துக்கள் (பெருக்கம் சுருக்கம் உடையன போன்று இசைப்பினும்) தத்தம் மாத்திரை யியல்பில் திரியா என்று சொல்லுவர் புலவர்.

எ—டு : [1]அஃகல், அ எனவும், ஆல், ஆ எனவும், கடல், க எனவும், கால், கா எனவும் கண்டு கொள்க.

வேறு என்றதனான், எடுத்தல் படுத்தல் முதலிய ஓசை வேற்றுமைக்கண்ணும் எழுத்தியல் திரியா [2]என்பது கொள்க.

---

* மறுதலை சிதைத்துத் தன்துணிபு உரைத்தல் என்ற உத்தியில் சார்த்திக் கொள்ள இந்நூற்பா காட்டப்பட்டது—தொல் பொருள். 665—பேராசிரியர்.

சு. வே. 1. அகல்
2. என்பதூஉம்

நச்சினார்க்கினியர்

இஃது ஒற்றுங்குற்றுகரமும் ஈண்டு எழுத்துக்களோடு கூட்டி எண்ணப்பட்டு நிற்கும் என்பதூஉம் செய்யுளியலுள் எண்ணப் படாது நிற்கும் என்பதூஉம் கூறுகின்றது.

இ—ள்: ஒற்றும் குற்றுகரமும் பொருள் தரும் நிலைமையை ஆராய்ந்து, சொல்லாகச் சேர்த்துச் சொல்லினும், செய்யுளியலுள் ஒற்றும் குற்றுகரமும் பொருள் தருமேனும் மாத்திரை குறைந்து நிற்கும் நிலைமையை நோக்கி எழுத்தெண்ணப்படா என்று ஆண்டைக்கு வேறாகக் கூறினும், அவ்விரண்டிடத்தும் அரை மாத்திரை பெற்று நிற்கும் ஒற்றும் குற்றுகரமும் முற்கூறிய எழுத்தாந் தன்மை திரியாவென்று கூறுவர் புலவர்; எ—று.

இதனான் ஒற்றும் [1]ஆய்தமும் குற்றுகரமும் எழுத்தாகி நின்று பொருள் தந்தும், எழுத்தெண்ணவும் அலகிடவும் பெறா [2]என்பது கூறினாராயிற்று தெரிந்து வேறிசைத்தல் குற்றுகரத் திற்கு இன்றாதலின் எற்புழிக் கோடலான் [3]ஒற்றிற்கும் ஆய்தத் திற்கும் கொள்க.

எ—டு: அல், இல், உண், எண், ஒவ் எனவும், கல், வில், முள், செல், சொல் எனவும், ஆல், ஈர், ஊர், ஏர், ஓர் எனவும், கால் சீர் சூல் தேன் கோன் எனவும் உயிரும் உயிர்மெய்யுமாகிய குற்றெழுத்தையும் நெட்டெழுத்தையும் ஒற்றெழுத்துக்கள் அடுத்து நின்று பொருள் தந்தவாறு காண்க. கடம், கடாம், உடையான், திருவாரூர், அகத்தியனார் என ஈரெழுத்தையும் மூவெழுத்தையும் நாலெழுத்தையும் ஐயெழுத்தையும் இறுதி யிலும் இடையிலும் ஒற்றடுத்து நின்று பொருள் தந்தவாறு காண்க. எஃகு, தெள்கு, கொக்கு, குரங்கு என்பனவும் எழுத் தெண்ணவும் அலகிடவும் பெறாத குற்றுகரம் அடுத்து நின்று பொருள் தந்தவாறு காண்க. "உயிரில் எழுத்தும் எண்ணப் படாஅ—உயிர்த்திறம் இயக்கம் இன்மையான" (செய்யு. 44) என்பது எழுத்து எண்ணப் பெறாமைக்கு விதி.

இனி, சூத்திரத்திற்கு எழுத்துக்களைச் சொல்லாக்கிக் கூறினும் பிறிதாகக் கூறினும் மாத்திரை திரியாது என்று பொருள் கூறி, 'அகரம்' என்புழியும் 'அ' என்புழியும் 'ஆலம்' என்புழியும் 'ஆ' என்புழியும் 'ககரம்' என்புழியும் 'க' என்புழியும்

சு. வே. 1. சில சுவடிகளில் ஆய்தம் இல்லை
2. என்பதூஉம்
3. ஒற்றிற்கே கொள்க.

'காலம்' என்புழியும் 'கா' என்புழியும் ஓசை ஒத்து நிற்கும் என்றால், அது முன்னர்க் கூறிய இலக்கணங்களாற் பெறப்படுதலின் பயனில் கூற்றாம் என்க.

சுப்பிரமணிய சாஸ்திரியார்

இளம்பூரணர் 'இயல்திரியா' என்றதற்கு 'தத்தம் மாத்திரை இயல்பில் திரியா' எனப் பொருள் கூறினர். அவ்வாறு கூறுதற்குக் காரணம் முதற் சூத்திரத்தில் மகாரம் தன்னியல்பு மாத்திரையினின்றும் குறுகும் எனக் கூறப்பட்டதாகும். பின்னர் உள்ள சூத்திரங்களில் ஐகார ஔகாரங்களுக்குப் பிரதியாக அகர இகரமும் அகர உகரமும் வரும் எனக் கூறினமையான், ஆங்கு ஐகார ஔகாரங்கட்கும் அகர இகர, அகர உகரங்கட்கும் மாத்திரையில் வேறுபாடின்மையானும், பிறப்பிடங்களில் வேறுபாடுண்மையானும் 'இயல்' என்றதற்கு 'மாத்திரையியல்பு' எனச்சுருக்கிப் பொருள் கொள்ளாது 'தன்மை' என்றே கொள்ளல் சாலும்.

இச்சூத்திரம் பொதுவாக எழுத்து தனியேயிருப்பினும், மொழிக்கண் இருப்பினும் ஒரே தன்மையன எனக் கூறினமையானும், எழுத்து என்றது உயிர், மெய் இரண்டையும் குறித்தலானும், 'தங்கை' போன்ற சொற்களில் ககரம் வல்லினமாக ஆசிரியர் காலத்து ஒலிக்கப்பட்டதேயன்றித் தற்போது போன்று ஒலிக்கப்படவில்லை என்பது அறியக்கிடக்கும். ஆதலின் டாக்டர், கால்டுவெல் கூறும் 'வல்லின மெல்லின மாறுகை' என்றது பிற்காலத்துத் தமிழ் மொழிக்குப் பெருந்துமேயன்றி ஆசிரியர் காலத்துள்ள தமிழ் மொழிக்குப் பொருந்தாது. இக் கருத்தை நோக்கியே "மொழியாய்த் தொடரினும் முன்னனைத் தெழுத்தே" (நான். 27) என்ற நன்னூற் சூத்திரம் எழுந்தது.

நச்சினார்க்கினியர் இளம்பூரணர் கூறிய பொருளை "அது முன்னர்க்கூறிய...பயனில் கூற்றாம்" என மறுத்து, "ஒற்றும் குற்றுகரமும்......திரியாவென்று கூறுவர் புலவர்" எனப்பொருள் கூறினர். இப்பொருள் இவ்விடத்திற்குப் பொருந்தாமையானும் தெரிந்து என்றதற்கு 'ஒற்றுங்குற்றுகரமும் ஆராய்ந்து' என்றும், வேறிசைப்பினும் என்றதற்கு 'செய்யுளியனுள்...வேறாகக் கூறினும்' என்றும் பொருள் கொள்ளுதற்குக் காரணம் அறியப் படாமையானும், அவர் இங்குக் கொள்வன வெல்லாம் செய்யுளியற் சூத்திரங்களால் பெறப்படுகின்றமையானும் அவர் உரை பொருத்த முற்றதாகத் தெரியவில்லை.

வேங்கடராசுலு ரெட்டியார்

தெரிதலாவது—பலவற்றுள் ஒன்றனைப் பிரித்து எடுத்தல். இப்பொருள் இன்றும் வழக்கில் உளதாதலைத் 'தெரிந்தெடுத்தல்' என்னும் சொல்லான் அறிக.

வேறு இசைத்தலாவது—எடுத்தல் படுத்தல் முதலியனவாக ஓசை வேறுபட ஒலித்தல்.

எனவே, தெரிந்து வேறிசைப்பினும் என்றது மொழியி லுள்ள எழுத்துக்களுள் ஓர் எழுத்தினைப் பிரித்துத் தனியே ஓசை வேறுபட ஒலித்தாலும் என்றவாறாம்.

இச்சூத்திரம் கூறியது எற்றிற்கோ எனின், தனியே மெய்யும் உயிருமாய் நின்ற எழுத்துக்கள் ஒருங்கு சேர்ந்து உயிர்மெய்யாய் ஒலித்தவழி மாத்திரைக் குறைவு நேர்ந்தாங்கு, பல எழுத்துக்கள் ஒருங்கே ஒரு சொல்லாகச் சேருமிடத்து மாத்திரைக் குறைவு நேருங் கொல்லோ என ஐயம் தோன்றுமாதலின், அவ்ஐயம் தோன்றாதிருத்தற்குக் கூறினார் என்று கொள்க.

ஆசிரியர் நச்சினார்க்கினியர் இச்சூத்திரத்தைத் 'தெரிந்து மொழிப்படுத்து இசைப்பினும். வேறு இசைப்பினும் எழுத்தியல் திரியா என்மனார் புலவர்' என மொழிமாற்றிக் கூட்டி, "ஒற்றுங் குற்றுகரமும் ... திரியா என்று கூறுவர் புலவர்" என்று உரை கூறி,"இதனான்...என்பது கூறினாராயிற்று" என்று கருத்துக் கொண்டாரால் எனின், அதற்கு விடை :

இச்சூத்திரத்தில், 'எழுத்து' என்றதற்கு நச்சினார்க்கினியர் கூறுமாறு, ஒற்றும் குற்றுகரமும் எனப் பொருள் வருதல் யாங்ஙனம்? மேற்சூத்திரங்களில் அவ்வெழுத்துக்களைக் குறித்துக் கூறியிருப்பரேல், அதிகாரத்தான் அவற்றைக் கொள்ளலாகும்; அதுவும் இல்லை. இச்சூத்திரமே இப்பொருள் தருமாயின், முன்னர்ச் செய்யுளியலில், 'உயிரில் எழுத்தும் எண்ணப்படா' என்று சூத்திரம் செய்தல் வேண்டா; "மாத்திரையளவும், எழுத்தியல் வகையும் மேற்கிளந்தன்ன" என்ற மாட்டேற்றானே இவ்விதி பெறப்படும் அன்றே? நச்சினார்க்கினியர், செய்யுளி யலுக்கே பொருந்துகின்ற சில இலக்கணங்களை உட்கொண்டு, இவ்வதிகாரச் சூத்திரங்களுக்குப் பொருள் கூறுதல் சிறிதும் பொருந்துவதன்று.

இச்சூத்திரத்திற்கு இளம்பூரண அடிகள் எழுதிய பொருளையே சிவஞான முனிவரும், தொல்காப்பியப் பாயிர

விருத்தியின் ஆசிரியராகிய அரசஞ் சண்முகனாரும் தம் உரைகளில் எழுதுவாராயினர். நன்னூலாரும் இக்கருத்தைக் கொண்டே,

> மொழியாய்த் தொடரினும் முன்னனைத் தெழுத்தே''.
> (நன். 127)

என்று சூத்திரஞ் செய்துள்ளார்.

வெள்ளைவாரணனார்

மேல் 'போலும்' என்ற மொழியின் மகரம் தன் அரையளபிற் குறைவது போன்று ஏனை யெழுத்துக்கள் தம்மியல்பு வேறுபடும் இயல்பினவோ என்று ஐயுறுவாரை நோக்கி, மொழிக்கண் படுத்துச் சொல்லினும் தெரிந்து கொண்டு வேறே சொல்லினும் எழுத்துக்கள் தத்தம் மாத்திரையியல்பில் திரியாவெனக் கூறித்தெளிவித்தார்.

ஈண்டு 'எழுத்தியல் திரியா' என்றது மொழிக்கட்பட்டுத் தெரிந்து வேறு இசைக்கப்படும் முப்பதெழுத்துக்களையுமே. தெரிந்து வேறிசைக்கப்படும் இயல்பின்றி மொழியைச் சார்ந்து வருவன மூன்றும், சார்ந்து வருதலாகிய தம் இயல்பிலன்றி வேறு வகையால் திரிபுபட இசைப்பனவாகா வாதலின் இவ்விதி அவற்றிற்கு வேண்டுவதன்றாம். மொழிக்கண் படுத்துச் சொல்லினும் தெரிந்து வேறு சொல்லினும் எழுத்தியல் திரியா எனவே இவற்றாற் பொருள் திரியும் என்றாராயிற்று. வேறு இசைத்தல் என்றதனால் எடுத்தல் படுத்தல் முதலிய ஓசை வேற்றுமைக் கண்ணும் எழுத்தியல் திரியா என்பது கொள்க. எடுத்தல் படுத்தலால் மாத்திரை வேறுபட்டுப் பொருள் வேறுபடும் என்பதைக் காது, கட்டு முதலிய குற்றியலுகரங்கள் இதழ் குவித்து முற்றக் கூறிய விடத்தும் இதழ்குவியாமல் குறையக் கூறிய விடத்தும் பொருள் வேறுபடும் என நச்சினார்க்கினியர் கூறுவது கொண்டு அறியலாம். ஒற்றும் குற்றுகரமும் ஈண்டு எழுத்தெனக் கொண்டார் ஆசிரியர் என்பது முற்கூறப்பட்டதாதலின் நச்சினார்க்கினியர் உரை, ஆசிரியர் கருத்தன்றாம். இவ்வாறே எழுத்துக்கள் தனித்துச் சொல்லுமிடத்துப் போல மொழியாய்த் தொடருமிடத்தும் தம்மியல்பிற்றிரியாது நிற்கும் என்பதனை நன்னூலார்,

> "மொழியாய்த்...எழுத்தே" (நன். 127)

என்பதனாற் கூறினார். சங்கர நமச்சிவாயரும் "எழுத்து, சுண்ணத்தின்கண் அரிசன முதலிய போலாது மாலையின்கண்

மலர் போல அவற்றில் நிற்றலின் முன்னணைத் தென்றார்" என விளக்கியுரைத்தார்.

வேங்கடராசுலு ரெட்டியார் குறிப்பு :

திரு. சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள், சைவ சித்தாந்தக் கழகத்தார் இவர்கள் பதிப்பித்த அச்சுப் பிரதிகளில், 'ஒற்றும் ஆய்தமும் குற்றுகரமும்' எனவும், 'ஏற்புழிக் கோடலால் ஒற்றிற்கும் ஆய்தத்திற்கும் கொள்க' எனவும் காண்கின்றன. உரையில் மூன்று முறை 'ஒற்றும் குற்றுகரமும்' என்றே காணப்படுதலினாலும், அவதாரிகையிலும் 'ஒற்றும் குற்றுகரமும்' என்றே இருப்பதினாலும், மழவை மகாலிங்கையரவர்கள் பதிப்பில் 'ஒற்றும் குற்றுகரமும்' என்றே இருத்தலினாலும், ஓலையேடுகளிலும் அவ்வாறே காண்டலினாலும் ஆய்தம் என்பது பிறர் ஒருவரால் சேர்க்கப்பட்டது போலும். 'ஏற்புழிக் கோடலால் ஒற்றிற்கே கொள்க' என்பது மகாலிங்கையர் பதிப்புப் பாடம்.

5. போலி

போலி எழுத்துகள்

54. அகர இகரம் ஐகாரம் ஆகும். (21)

ஆ. மொ.

இல.

'a' and 'i' will be 'ai'

க. சு.

'a' and 'i' become 'ai'

பி. இ. நா.

நன் : 125. அம்முன் இகரம்.........
எய்தின் ஐ ஒத்து இசைக்கும்

இல. வி. 36. அம்முன் இகரம்...
எய்தின் ஐ ஒத்து இசைக்கும்

முத்து. 107. அகரமும் இகரமும் ஐகாரம் ஆகும்

இளம்பூரணர்

இது போலி எழுத்தாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: அகர இகரம்—அகரமும் இகரமும் கூட்டிச் சொல்ல, ஐகாரம் ஆகும்—ஐகாரம் போல் ஆகும்.

எ—டு : ஐயர், அ இயர் எனவரும். அது கொள்ளற்க.

நச்சினார்க்கினியர்

இது சிலவெழுத்துக்கள் கூடிச் சில வெழுத்துக்கள் போல இசைக்கும் என எழுத்துப் போலி கூறுகின்றது.

இ—ள் : அகரமும் இகரமும் கூட்டிச் சொல்ல ஐகாரம் போல இசைக்கும், அது கொள்ளற்க;எ—று.
போல என்றது தொக்கது.

எ—டு : ஐவனம் அஇவனம் எனவரும். ஆகும் என்றதனான் இஃது இலக்கணம் அன்றாயிற்று.

55. அகர உகரம் ஔகாரம் ஆகும். (22)

ஆ. மொ.

இல.

'a' and 'u' will be 'ou'

சு. சு.

'a' and 'u' become 'au'

பி. இ. நூ

நன். 125. அவ்வோடு உவ்வும்...ஔ ஓரன்ன.

இல. வி. 36. அவ்வோடு உவ்வும்...ஔ ஓரன்ன.

இளம்பூரணர்

இதுவும் அது

இ—ள்: அகர உகரம்—அகரமும் உகரமும் கூட்டிச் சொல்ல, ஔகாரம் ஆகும்—ஔகாரம் போல ஆகும்.

எ—டு : ஔவை—அஉவை எனக்கண்டு கொள்க. அது கொள்ளற்க.

சு. வே. 1. கூட

நச்சினார்க்கினியர்

இதுவும் அது

இ—ள்: அகரமும் உகரமும் கூட்டிச் சொல்ல ஒளகாரம் போல இசைக்கும்: அது கொள்ளற்க; எ—று.

போல என்றது தொக்கது

எ—டு : ஒளவை, அஉவை எனவரும்.

சுப்பிரமணிய சாஸ்திரியார்

இவ்விரண்டு சூத்திரங்களிலும் (54, 55) அகர இகரம், அகர உகரம் என்பவற்றை முறையே எழுவாயாகவும், அவற்றின் பின்னர்க் கூடச் சொல்ல அல்லது கூட்டிச் சொல்ல என்றது தொக்க தெனவும், ஐகார ஒளகாரம் இவற்றின் பின்னர் போல என்றது தொக்கது எனவும் இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் கொண்டனர். ஐகார ஒளகாரங்கள் எழுவாய் எனவும் இகர உகரங்களின் பின்னர் உம்மை தொக்கது எனவும் கொள்ளின் பொருந்தும் எனத் தோற்றுகின்றது. இவ்வாறு உரை கூறச் சான்று 59 ஆவது சூத்திரமாகும்.

நச்சினார்க்கினியப் பதிப்புகளிலும், சிதம்பரம்பிள்ளை இளம்பூரணப் பதிப்பிலும் இரண்டு சூத்திரத் துரையின் இறுதியில் 'அஃது கொள்ளற்க' என்றுளது. அன்றியும் 'ஆகும் என்றதனான் இஃது இலக்கணம் அன்றாயிற்று' என நச்சினார்க் கினியத்திலுள்ளது. இவையெல்லாம் பொருந்தாக் கூற்றாகும் என்பர் சிவஞான முனிவர். கன்னியப்ப முதலியார் இளம்பூரணப் பதிப்பில் முற்சூத்திரத்தின் இறுதியில் 'அது கொள்ளற்க' என்றுளது. பிற்சூத்திரத்தின் இறுதியில் அஃது இல்லை. இத் தொடர் நச்சினார்க்கினியம் படித்தவரால் இளம்பூரணப் பதிப்பில் எழுதியிருத்தல் வேண்டும்.

வித்துவான், சுன்னாகம் கணேசய்யர், 'கொள்ளற்க' என்றது பொருந்தாது; இது அக்காலத்துக் கொள்ளப்பட்டு வந்தமையின் எனக்கூறியது நோக்கற்பாலது.

வேங்கடராசுலு ரெட்டியார்

மொழிகளில் அஇ என்பது ஐகாரத்திற்கும் அஉ என்பது ஒளரகாரத்திற்கும் வரும் என்றவாறு,

ஐவனம்—அஇ வனம்
ஔவை—அஉவை.

எனவரும். அஇ, அஉ என்று உடம்படுமெய் இன்றி எழுதும் வழக்கு ப்ரக்ருதத்திலும் உண்டு.

[1] 'தைத்யாதிஷ்வஇ'

என்னும் சூத்திரத்தால், தைத்ய முதலிய சொற்களிலுள்ள ஐகாரத்திற்கு அஇ என்பது வரும் என அறியப்படும்.

தைத்ய என்பது தஇச்சோ என்றும்
சைத்ர ,, சஇத்தோ ,,
பைரவ ,, பஇரவோ ,,

[2] 'பௌராதிஷ்வஉ'

என்னுஞ் சூத்திரத்தால், பௌர முதலிய சொற்களிலுள்ள ஔகாரத்திற்கு அஉ என்பது வரும் என அறியப்படும்.

பௌர என்பது பஉரோ என்றும்
கௌரவ என்பது கஉரவோ என்றும்

வரும்.

ஆயின் தெலுங்கிலும் கன்னடத்திலும் உடம்படுமெய் பெற்று, அயி, அவு என்பன வருகின்றன. ஆந்த்ரசப்த சிந்தாமணியில்,

[3] 'வா அயிரவுர் வக்ரதமௌ'

என்னும் சூத்திரத்தானும் ஐகார ஔகாரங்கள் விகற்பமாக அயி அவுக்களாகும் என்னும் அதன் உரையானும்,

கை—கயி
ஔர—அவுர

என்று காட்டியிருக்கும் உதாரணங்களானும்[4] பால வ்யாகரணத்தில்

அயிது—ஐது
அவுடு—ஔடு

என்று காட்டியுள்ள உதாரணத்தாலும், மொழிகளிலுள்ள ஐகாரத்திற்கு அயி என்பதும், ஔகாரத்திற்கு அவு என்பதும் வரும் என்றல் அறியப்படும்

1. ப்ராக்ருதப்ரகாசம். 1:36
2. ,, 1:42
3. ஆந்த்ரசப்த. அஜந்த பரிச். 66
4. பாலவ்யா. க்ரியாபரிச். 103

கன்னட மொழியிலுள்ள பாஷாபூஷணம் என்னும் நூலில்,

[1]"யவயோ ரனாதிஸ்தயோ ரைஔ ஸ்வரேண வா"

மொழிமுதலல்லாவிடத்து உயிரோடு கூடியுள்ள யகார வகாரங்களுக்கு ஐ ஔக்கள் உறழ்ச்சியாய் வரும் என்று கூறி,

பாரயிஸிதம்—பாரைசிதம் (கரைகண்டான் கரை காண்பித்தான்)

தவுதலெ—தௌதலெ (தபுதலை)

என்னும் உதாரணங்களைக் காட்டியிருத்தலானும், [2]சப்தமணி தர்ப்பணம் என்னும் நூலில்

கவுரங்குழ்—கௌரங்குழ்

அவுரங்டு—ஔரங்டு

என்றும்,

தேரயிஸிதம்—தேரைஸிதம்

கோரயிஸிதம்—கோரைஸிதம்

என்றும் காட்டியிருக்கும் உதாரணங்களாலும், தெலுங்கிற் போன்று மொழிகளில் ஔகாரத்திற்கு அவு என்பதும் ஐகாரத்திற்கு அயி என்பதும் வரும் என்பது தெளிவாகும். தமிழ் மொழியிலும் பிற்காலத்தில் வட சொற்களை எழுதுமிடத்து,

வைத்தியன்—வயித்தியன்

மௌனம்—மவுனம்

என்று, தெலுங்கு கன்னடமொழிகளில் எழுதுதல் போன்று உடம்படு மெய்யிட்டு எழுதுதல் உண்டு. இரண்டு, அகரத்தின் முன் வந்த இகரத்தை நோக்கி யகரமும் உகரத்தை நோக்கி வகரமும் வந்ததாகும்.

நச்சினார்க்கினியர், 'ஐகாரமாகும்' என்பதற்கு 'ஐகாரம்போல இசைக்கும்' என்றும், 'ஔகாரம் ஆகும்' என்பதற்கு, 'ஔகாரம் போல இசைக்கும்' என்றும் உரை எழுதி, 'அது கொள்ளற்க' என்றும் 'போல என்றது தொக்கது' என்றும் கூறினார். *இளம் பூரணர் அது கொள்ளற்க' என்னாமை, பிரயோக விவேகத்தான்

1. கர்ணாடகபாஷா. 113

2. சப்தமணி. 168 உரை

இளம்பூரணரும் போலி எழுத்தைக் கொள்ளற்க என்னாமை அவர் உரையில் காண்க. (பிர. 5. உரை.) இதனால் இளம் பூரணர் உரைப் பதிப்பில், 'அகர இகரம் ஐகாரம் ஆகும்' என்னும் சூத்திரத்தின் உரையில் 'அது கொள்ளற்க' என்று பதிப்பித்திருப்பது நச்சினார்க்கினியர் உரையினைக் கண்டோர் செய்த தவறாகும்.

அறியப்படும். பிரயோக விவேக நூலார் 'கொள்ளா வெழுத் திற்கு இலக்கணங்கூறின் அந்நூற்கு நின்று பயனின்மை என்னும் குற்றந்தங்கும்' என்று கூறி நக்சினார்க்கினியர் கொள்கையை மறுத்துள்ளார்.

சிவஞான முனிவர் இச்சூத்திரங்கள் சந்தியக்கரம் உணர்த்து கின்றன என்று கொண்டார். இவை சந்தியெழுத்தின் இயல் பினைக் கூறுவனவாயின், ஆசிரியர், இவற்றைத் தனியெழுத்துக் களின் இயல்பினைக் கூறும் நூன்மரபில் வைத்திருப்பர்- அவ் வாறன்றி, மொழியிலுள்ள எழுத்துக்களின் இயல்பினைக் கூறும் மொழிமரபில் இவற்றை வைத்திருத்தலின், மொழியிலுள்ள ஐகாரத்திற்கு அஇ என்பது வரும் என்றும், ஔகாரத்திற்கு அஉ என்பது வரும் என்றுமே அவர் கருத்துக் கொண்டார் என்பது அறியப்படும். மேற்காட்டிய பிராகிருதம், தெலுங்கு, கன்னட மொழிகளிலும் சொற்களிலுள்ள ஐகார ஔகாரங்களுக்கே அஇ அஉ என்பன வரும் என்று கூறியிருப்பவை உளங்கொளற்பாலன.

பிறகுறிப்புகள் :

'ஆகும்' என ஆக்கச்சொல் கொடுத்துக் கூறியதனால் இவ் வொலிகள் (அஇ, அஉ) செயற்கை யென்பது உணர வைத்தார்— வெள்ளை வாரணனார்.

56. அகரத்து இம்பர் [1]யகரப் புள்ளியும்
[2]ஐஎன் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும் (23)

ஆ. மொ.

இல.

'y' consonant after 'a' also will give the sound of 'ai'.

க. சு.

When the consonant 'y' occurs after 'a', it will also appear as receiving the shape of the long consonant 'ai'.

சு. வே. 1, யவகரப்
2. ஐ ஔ (வ. உ. சிதம்பரம் பிள்ளை குறிப்பு)

பி. இ. நூ.

வீர. 3 : யகரத்தினோடு அகரம் இயைந்து ஐ ஆகும்.

நேமி. 9 : ஆதி உயிர்......நீதியினால் யவ்வியையின் ஐ ஆகும்.

நன். 125 : அம்முன்......யகரம்...எய்தின் ஐ ஒத்து இசைக்கும்

இல. வி. 36 : அம்முன் ...... யகரம் ... எய்தின் ஐ ஒத்து இசைக்கும்.

குறிப்பு :

அகரயகரம் ஐகாரம் ஆகும் என்ற ஆசிரியர் அகர வகரம் ஔகாரம் ஆகும் என்றாரில்லை. யகர, ஐஎன் என்பனவற்றை யவகர, ஐஔ எனக் கொள்ளின் அக்குறை நீங்குகிறது. அதற் கேற்பப் பிற நூலார் கூறுவனவாவன :

வீர 3 : அகரம் வகரத்தினோடு இயைந்து ஔவாம்

நேமி. 9 : ஆதியுயிர் வவ்வியையின் ஔவாம்.

நன். 125 : அவ்வோடு...வவ்வும் ஔ ஓரன்ன.

இல.வி. 36 : அவ்வோடு...வவ்வும் ஔ ஓரன்ன.

இளம்பூரணர்

இதுவும் அது.

இ—ள் : அகரத்து இம்பர் யகரப் புள்ளியும்—அகரத்தின் பின்னர் இகரமேயன்றி [1]யகரமாகிய புள்ளியும், ஐஎன் நெடுஞ் சினை—ஐ யெனப்பட்ட [2]நெட்டெழுத்தாம், மெய்பெறத் தோன்றும்—அவை வடிவு பெறத் தோன்றும்.

எ—டு : ஐவனம் அய்வனம் எனவரும்.

[3]மெய்பெறத் தோன்றும் என்றதனான் (அகரத்தின் பின்னர் [4]உகரமேயன்றி) வகரப் புள்ளியும் ஔகாரம் போல வரும் எனக் கொள்க என்றவாறு. ஔவை—அவ்வை எனக் கண்டு கொள்க.

சு. வே. 1. யகரமான
2. நெட்டெழுத்தின்
3. மெய்பெற என்றதனான்
4. யகரமே (இது தவறு)

நச்சினார்க்கினியர்

இதுவும் அது.

இ—ள் : அகரத்தின் பின் இகரமேயன்றி யகரமாகிய புள்ளி வந்தாலும், ஐயெனப்பட்ட நெட்டெழுத்தின் வடிவு மெய் பெறத் தோன்றும்; எ—று.

எ—டு : ஐவனம் அய்வனம் என வரும். மெய் பெற என்றதனான் அகரத்தின் பின்னர் உகரமேயன்றி வகரப் புள்ளியும் ஔகாரம்போல வரும் என்று கொள்க. ஔவை—அவ்வை என வரும்.

வேங்கடராசுலு ரெட்டியார்

மொழிகளில் ஐகாரத்திற்கு அகரமும் யகர மெய்யும் சேர்ந்து வரும் என்பது இச்சூத்திரத்தின் பொருள். சூத்திரத்தில் 'யகரப் புள்ளியும்' என்பதில் உள்ள உம்மை இறந்தது தழீஇயது, மொழிகளில் அகரமும் இகரமும் சேர்ந்து ஐகாரமாதலேயன்றி அகரமும் யகர மெய்யும் சேர்ந்தும் ஐகாரம் ஆகும் என்பது பொருளாகலின்.

'ஐயென் நெடுஞ்சினை' என்றது ஐகாரம் என்னும் நெடிய சினையெழுத்து என்றபடி.

இவ்வாசிரியர், மொழியின் முதல் எழுத்தினைச் சினை என்று வழங்குதல் இலர்; முதல் என்றே கூறுவர்.

''நீயென் ஒருபெயர் நெடுமுதல் குறுகும்'' (உருபியல். 7)

''மூன்றன் முதல்நிலை நீடலும் உரித்தே'' (குற்றிய. 52)

''முதனிலை நீடினும் மான மில்லை'' (குற்றிய. 60)

என்பன போல்பவை காண்க. ஆதலின் 'சினை' என்றது மொழியின் முதல் எழுத்தல்லாத எழுத்தினை என்று கோடல் அமைதி. மொழியின் இடையிலும் இறுதியிலும் நிற்கும் ஐகாரத்திற்கு அய் என்பது வரும் என்றவாறாகும். இதனான்,

''அகரத் திம்பர் வகரப் புள்ளியும்
ஔவென் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்''

எனச் சூத்திரஞ் செய்யாததன் காரணமும் புலனாகும். என்னை யெனின், ஔகாரம் மொழியின் இடையிலும் கடையிலும் நிற்பது அன்மையின் அஃது அவ் என்றாதல் இல்லை. ஆயின்,

"சுட்டுச் சினை நீடிய மென்றொடர் மொழியும்" (குற்றிய. 22) என்னுமிடத்து, மொழியின் முதல் எழுத்தினைச் சினை என்றாரால் எனின், ஆண்டு முதல் எழுத்தாகிய ஆகாரத்தினைச் சினை என்றாரல்லர்; அகரச் சுட்டுச் சினை நீண்டவழி அஃது ஆகாரமாகும் என்று கூறினார். இவ்வாறே நெட்டெழுத்துக் குற்றெழுத்தாதலை அதன் சினை கெட்டது என்று கூறியுள்ளார்.

"குறியத னிறுதிச் சினை கெட வுகரம்
அறிய வருதல் செய்யுளுள் உரித்தே" (உயிர்மய. 32)

என்றவிடத்து கனா என்பது போன்ற சொல்லின் இறுதியதாகிய ஆகாரம் குறுகிக் கன என்பது போன்றாதலைச் சினை கெட என்று கூறியுள்ளது காண்க.

பிற்காலத்தாசிரியருள் ஒரு சாரார் 'அகரத்திம்பர்' என்னும் சூத்திரத்தின் பொருளையே மேற்கொண்டு மொழிகளில் யாண்டும் ஐகாரத்திற்கு அய் என்பது வரும் என்று கூறியுள்ளனர்.

"அகரம் வகரத்தினோடிணைந்தௌவாம் யகரத்தினோ
டகரம் இயைந்தைய தாகும்" (வீர. சந்தி-3)

என்று வீரசோழிய நூலாரும்,

"ஆதியுயிர் வவ்வியையின் ஔவாம் அஃதன்றி
நீதியினால் யவ்வியையின் ஐயாம்" (நேமி. எழு. 9)

என நேமிநாத நூலாரும் கூறியுள்ளனர். இவர் இருவரும் அகரமும் யகரமும் சேர்ந்து ஐகாரம் ஆகும் என்றனரேயன்றி அகரமும் இகரமும் சேர்ந்து ஐகாரம் ஆகும் என்றனரல்லர்: அன்றியும், அகரமும் வகரமும் சேர்ந்து ஔகாரமாகும் என்றும் கூறியுள்ளனர். (அகரவகர ஔகாரமாகும் என்று) ஆசிரியர் தொல்காப்பியனார் கூறிற்றிலராதலின், இஃது அவர் காலத்து வழக்கன்று என்று கோடலே அமைதி. இளம்பூரணர் உரையே இக்கூற்றுகட்கு மூலமாகும் போலும்.

....

வடமொழியிலக்கண நூல்களில் அகரமும் இகரமும் சேர்ந்து ஐகாரம் ஆகியிருக்கின்றது என்றும், ஆண்டு அகரத்தின் மாத்திரை அரையும் இகரத்தின் மாத்திரை ஒன்றரையும் உள என்றும், அவ்வாறே அகரமும் உகரமும் சேர்ந்து ஔகாரமாகி யிருக்கின்றதென்றும், ஆண்டும் அகரத்தின் மாத்திரை அரையும் உகரத்தின் மாத்திரை ஒன்றரையும் உள என்றும் கூறப் பட்டுள்ளனவேயன்றி, அ ய் இ என்னும் இம்மூன்றுஞ் சேர்ந்து

ஐகாரம் ஆகும் என்றும் அ வ் உ இம்மூன்றும் சேர்ந்து ஔகாரம் ஆகும் என்றும் கூறப்படவில்லை.

இனி, சிவஞானமுனிவர் கூறியவாறு, 'அகரத்திம்பர்' என்னும் சூத்திரத்தில் 'இம்பர்' என்னும் சொல்லினால் ஐயம் நிகழ, அதனை நீக்க 'இகரயகரம்' என்னும் சூத்திரம் கூறினாரா யின் இம்மொழி மரபில், மேல், 'நெட்டெழுத்திம்பரும்' என்றும். 'குன்றிசை மொழிவயின்......நெட்டெழுத்திம்பர்' என்றும் கூறிய சூத்திரங்களில் ஐயம் நிகழ்ந்திருக்கு மன்றே? அதனை நீக்க ஆண்டேவேறு சூத்திரஞ் செய்திருத்தல் வேண்டுமே? ஆண்டு 'இம்பர்' என்னும் சொல்லின் பொருளை ஐயமறத் தெளிந் தார்க்கு ஈண்டு ஐயம் நிகழ்தலே இன்று. இனி ஈண்டு நிகழும் என்றே கொள்ளினும் அவ் ஐயத்தை 'இகரயகரம் இறுதி விரவும்' என்னும் சூத்திரம் நீக்குதல் எவ்வாறு? விரவும் என்னும் பயனிலைக்கு வினைமுதல் இகர யகரமேயன்றோ? இச் சூத்திரம் 'இகரயகரங்கள் மொழியின் இறுதியில் விரவி நிற்கும்; அஃதாவது ஒன்றற்கொன்று வரும்' என்னும் பொருளைத் தருதலேயன்றி, யகரம் இடையிலும், இகரம் இறுதியிலும் நிற்கும் என்னும் பெருளைஎவ்வாறு தரும்? இவற்றால் சிவஞான முனிவர் கூற்று பொருந்துவதன்று என்பது நன்கு புலனாகும்.

வெள்ளைவாரணனார்

மேலைச் சூத்திரத்தில் தொல்காப்பியனார் அகரத்தின் முன் வகரமெய் வந்து ஔகாரம்போல வொலிக்கும் எனக் கூறாதிருக் கவும் நன்னூலார் அதனை "அம்முன் இகரம்யகரம் என்றிவை" நன். 125 என்ற இச்சூத்திரத்திற் கூறியது;—'மெய்பெறத் தோன்றும் என்றதனால் வகரப்புள்ளியும் ஔகாரம்போல வரும் எனக் கொள்க' என அச்சூத்திரத்திற்கு உரையாசிரியர் உரைத்த சிறப்புரை கருதி யென்க. இவ்விதி தொல்காப்பியர்க் குடன்பா டாயின்,

> **அகரத் திம்பர் வகரப் புள்ளியும்**
> **ஔவென் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்**

என்றொரு சூத்திரம் செய்திருப்பர்.

அவ்வாறுரையாமை யொன்றே, இவ்விதி அவர்க்கு உடன் பாடன்றென்பதைப் புலப்படுத்தலானும், பிறப்பியலில்,

உஊ ஒஓ ஔஎன இசைக்கும்
அப்பா லைந்தும் இதழ்குவிந் தியலும் (பிறப்.5)

எனக் கூறுமாற்றால் இதழ் குவிதலாற் பிறக்கும் ஔகார ஈற்றோசைக்கும் தொழிற்பாட்டுக்கும்

"பல்லிதழ் இயைய வகரம் பிறக்கும்" (பிற. 98)

என்றதனால் மேற்பல்லைக் கீழ்இதழ் இயையப்பிறக்கும் வகரத்தின் ஓசைக்கும் தொழிற்பாட்டுக்கும் பெரியதொரு வேறுபாட்டினை ஆசிரியர் விரித்துரைத்தலானும், அகரமும் வகரமும் கூடிஔஎன ஒலித்தல் தொல்காப்பியர் காலத்து வழக்கன்றென்பது புலனாகும். அங்ஙனமாகவும் வ. உ. சிதம்பரம்பிள்ளையவர்கள், தாம் பதிப்பித்த தொல்காப்பிய எழுத்ததிகார இளம்பூரணர் உரையில்,

அகரத் திம்பர் யவகரப் புள்ளியும்
ஐ ஔ நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்

எனப் பாடத்தினைத் திரித்துப் புதுப் பொருள் கொள்ளுதல் முற்றும் பொருந்தாத தொன்றாகும்.

....

*சிவஞான முனிவர் 'அம்முன் இகரம்' என்னும் எழுத்துப் போலியுணர்த்தும் நன்னூற் சூத்திரத்தினைச் சந்தியக்கரம் உணர்த்திற்றாகக் கொண்டு, அகரமும் யகரமெய்யும் இகரமும் கூடி ஐ என்னும் எழுத்தாக ஒலிக்கும் எனவும், அவ்வாறே அகரமும் வகரமெய்யும் உகரமும் கூடி ஔ என்னும் எழுத்தாக ஒலிக்கும் எனவும் பொருள்கூறி, இக்கருத்தே பற்றி ஆசிரியர், 'அகர இகரம் ஐகாரமாகும்' 'அகரவுகரம் ஔகாரமாகும்' எனக் கூறி ஐ என்னும் நெட்டெழுத்து வடிவு புலப்படுத்தற்கு அகர இகரங்களேயன்றி அவற்றினிடையே யகரமும் ஒத்திசைக்கும் என்பார், 'அகரத்திம்பர் யகரப்புள்ளியும்—ஐயென் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும் என்றும், மெய்பெற என்ற இலேசானே ஔ என்னும் நெட்டெழுத்தின் வடிவு புலப்படுவதற்கு அகர உகரங்களேயன்றி அவற்றினிடையே வகரமும் ஒத்திசைக்கும் என்றும், இம்பர் உம்பர் என்றாற் போல்வன காலவகை யிடவகைகளான் மயங்குமாதலின் முதற்கண் நிற்பதுயாதோ இறுதிக்கண் நிற்பது யாதோ என்னும் ஐயம் நீக்குதற்கு "இகரயகரம் இறுதி விரவும்" என்றும் கூறினார் எனவும் சூத்திர விருத்தியுள் குறிப்பிடுவர்.

* இப்பகுதியில் உள்ள சிவஞான முனிவர் கருத்தினை நூல் மரபு உரைவளம் முதற் சூத்திர விருத்தியில் (பக். 20ல்) காண்க.

"அகர இகரம் ஐகாரமாகும்," "அகரவுகரம் ஔகாரமாகும்" என இரு சூத்திரத்தும் அவ்விற்றின் விதியை ஆசிரியர் முடித்துக் கூறினாராதலானும், அகரத்தின் பின்னர் இகரமேயன்றி யகரப் புள்ளி வரினும் ஐகாரம் போல இசைக்கும் என்பதற்கே,

> "அகரத் திம்பர் யகரப் புள்ளியும்
> ஐயென் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்"

என ஆசிரியர் உம்மை கொடுத்துக் கூறினார் ஆதலானும், இச் சூத்திரத்து 'மெய்பெற என்றது, இலேசாய் வந்ததன்றி, அகரமும் யகரப்புள்ளியும் கூடிஐகாரம்போல ஒலிக்கும் பொழுது உயிரீறாக ஒலிக்கும் இயற்கைஐகார வீறுபோலன்றி இப் போலியீறு மெய்யோசைபெறத் தோன்றி யிசைக்கும் என்ற வேற்றுமையை விளக்குதற்கு வந்த அடைமொழியாகலானும், அவர் கூறியவாறு அ, ய், இ என்ற முன்றுங்கூடி ஐ யெனவும், அ, வ், உ என்ற மூன்றும் கூடி ஔ எனவும் ஒலிக்கும் எனின், அவ் விடத்து ஐ ஔ என்ற ஒலியின் வேறாக அய்யி, அவ்வு என மாத்திரை மிக்கு வேறு ஒலிபட்டிசைத்தலானும் 'இகரயகரம் இறுதிவிரவும் என்ற சூத்திரம் இகரமும் யகரமும் ஒருமொழியின் இறுதிக்கண் நாய், நாஇ என விரவி இறுதிப் போலியாய் வரு தலைக்குறித்த வேறு சூத்திர மாதலின் 54-ஆம் சூத்திரமாகிய இதற்கும் 58 ஆம் சூத்திரமாகிய அதற்கும் இடையே ஐகாரக் குறுக்கம் பற்றிய சூத்திரம் அமைந்திருத்தலால் சந்தியக்கரம் கொள்ளுதற்குரிய தொடர்பின்மையானும் ஐஔ என்பனவற்றை சந்தியக்கரமாகக்கோடல் தொல்காப்பியனார் கருத்ததன்றாதல் புலப்படும்.

அன்றியும் இச்சூத்திரங்கள் ஐகார ஔகாரங்களின் கூட்டொலியினை உணர்த்தினவாயின் ஆசிரியர் இயற்கைப் பொருளை இற்றெனக் கூறாது செயற்கைப் பொருளுக்குரிய ஆக்கங் கொடுத்துச் சொல்லுதல் பொருந்தாது. எனவே இச்சூத்திரங்கள் செயற்கை ஓசையாய்ப் போலி எழுத்துணர்த் தின எனவே படும். நன்னூலார்க்கும் இதுவே கருத்தாதல் "அம்முன் இகரம்" என்ற சூத்திரத்திற்குச் சங்கரநமச்சிவாயர் உரைத்த உரையாற் புலனாம்.

சிவலிங்கனார்

ஆசிரியர், 'ஐ என்ற எழுத்துக்கு அ இ என்பன சேர்ந்து போலியாக வரும் என்றார்' என யாவரும் கொண்டனர். ஒரெழுத்துக்கு ஓர் எழுத்தே போலியாக வரவேண்டும். இரண்

டெழுத்துச் சேர்ந்து ஒரெழுத்துக்குப் போலியாக வரும் என்பது எங்ஙனம் பொருந்தும்?

முகன்—முகம்

என்பதுபோல் வருதல் வேண்டும். அதனால் ஆசிரியர் அகர இகரம் ஐகாரம் ஆகும் என்றது, 'அகர ஒலிக்கூறும் இகரஒலிக் கூறும் இணைந்து ஒரொலியாகி, ஐகாரமாக வரும்' என்ற பொருளளவில் கூறினரே யன்றி ஐவனம்—அஇவனம் என எழுதிக்காட்டுமாறுபோல ஒலிக்கும் அளவில் கூறினாரல்லர். ஒலியளவில் ஐயும் அ இ யும் ஒன்று போன்றனவே: எழுதிக் காட்டுமளவில் ஒன்று போன்றனவல்ல என்பதற்காகத்தான் இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும், ''அது கொள்ளற்க'' என்றெழுதினர். (எழு—54, 55)0 ஐவனம் என்பது அஇவனம் எனவரினும்'' (ஒலிப்பினும்) அஇவனம் என்ற அதைக் கொள்ளா தீர் என்பதே அத்தொடர்க்கருத்தாம். இவ்வாறே ஒளகாரத்துக் கும் கொள்க.

''நாய் நாஇ எனக் கண்டு கொள்க (விரவும் என்றதனால் அவையிரண்டும் கொள்க என்றவாறு)'' என இளம்பூரணத்தில் காணப்படுவது பொருத்தமின்று. 'நாய், நாயி எனக்கண்டு கொள்க' என்பதே பொருந்துவதாம். அஇவனம் என்பதைக் கொள்ளற்க என்ற இளம்பூரணர் நாஇ என்பதைக் கொள்க என்பரோ?

அகரத்தின் பின்னர் ய் என்ற எழுத்துச் சேர்ந்து இரண்டும் ஐ என்ற ஒலியைத் தரும். ''அகரத்திம்பர் யகரப் புள்ளியும், ஐ யென் நெடுஞ்சினை மெய்பெறத்தோன்றும்'' என்றார் ஆசிரியர். அகர இகரம் ஐகாரமாகும் என்றது போல அகர யகரம் ஐகாரமாகும் என ஓரடியில் கூறாமல்' அகரத்து இம்பர் யகரப் புள்ளி...தோன்றும் என ஈரடியில் கூறியதன் கருத்து கூர்ந்துணரற்பாற்று. அகரத்தின் பின்னர் இகரம் என்னாமல் அகரமும் இகரமும் என விட்டிசையா நிலையில் கூறியதும், அகரத்தின் பின்னர் யகரப்புள்ளி என முன்னும் பின்னும் என்ற முறையில் கூறியதும் காண்க. அன்றியும் அகர இகரம் ஐகாரம் ஆகும் என ஆக்கச் சொல் கொடுத்தும், அகரத்தின் பின்னர் யகரப்புள்ளி (அய்) ஐ என்ற வடிவு பெறத்தோன்றும் என்று ஆக்கச் சொல்லின்றித் தனி வடிவம் கொள்வதுபோலக் கூறியும் சென்றமை காண்க. ஐ—அஇ—அய் இம்மூன்றும் ஒன்றாயினும் அ இ என்பதில் உள்ள 'இ' ஒலிக்கும், அய் என்பதன் ய் ஒலிக்கும் சிறிது வேறுபாடுண்டு. எனவே அ இ என்பது ஐ ஆகவே மாற, அய் என்பது ஐ என்ற வடிவம் பெறுகின்றது என்றுணர

வேண்டும். அதனால் அஇ என்பது ஐ என்ற ஒலிவடிவிற்குரியது என்பதும் அய் என்பது ஐ என்ற ஒலி வடிவிற்கும் வரிவடிவிற்கும் உரியது என்பதும் அறியலாம். ஐவனம் என்பதை அஇவனம் என ஒலிக்கவேண்டுமே தவிர எழுதிக்காட்டமுடியாது; அய்வனம் என ஒலிப்பதுடன் எழுதிக்காட்டவும் கூடும். அதனால்தான் அஇவனம் என்பதைக் கொள்ளற்க என்ற உரையாசிரியர் இருவரும் அய்யர் என்பதைக் கொள்ளற்க எனக் கூறினாரிலர்.

ஐ என்பது அஇ எனவும் அய் எனவும் ஒலிக்கப் பெறுதல் தனியெழுத்தில் இல்லை; மொழியில் வரும் போது தான் என்பதற்காக இவற்றை மொழிமரபில் கூறினார் ஆசிரியர். உதாரணங்கள் அஇ என வந்ததற்கு இல்லாமல் அய் என வந்ததற்கே செய்யுள்களில் காணப்படுதலும் நோக்கும் போதும் அஇ என்றது ஒலி வடிவுக்கு மட்டுமே என்பதும் அய் என்றது ஒலிவடிவு வரிவடிவு இரண்டுக்கும் உரியது என்பதும் பெறப்படும் (ஔகாரத்துக்கும் இப்படியே கொள்க)

ஐகுறுகுதல

57. ஓரளபு ஆகும் இடனுமார் உண்டே
தேருங் காலை மொழிவயின் ஆன **(24)**

ஆ. மொ.

இல.

there may be places to pronounce them as having one unit of sound while used in words if we examine.

க. சு.

when examining (some) words, there exist environments (in which) (it) has one measure of quantity.

***பி. இ. நூ.**

நேமி : 4. மும்மையிடத்து ஐ ஔவும் குன்றும்.

நன் : 95. தற்சுட்டு அளபு ஒழி ஐ மூவழியும்
நையும் ஔவும் முதல் அற்றாகும்.

* தொல்காப்பியத்தில் ஔகாரம் குறுகும் என்பது கூறப்படவில்லை: பிற இலக்கண நூலார் கூறினர். அவரெல்லாரும் ஐகார ஔகாரங்கள் குறுகுதலைச் சேர்த்தே கூறினாராதலின் அப்படியே இங்கு அவை குறிக்கப்பட்டன.

இல. வி. 21. தற்சுட் டளபொழி ஐமூ வழியும்
நையும் ஔவும் முதலற் றாகும்.

தொன் ; 16. ஐத்தனித்து அளபெடுத் தன்றி மூவிடத்தும்
ஔவும் முதலிடத்து அஃகும் என்ப.

முத்து : 37. மொழிமுதல் இடைகடை மூவிடத் தினும்
அஃகும்; முதலிடம் ஔவும் அற்றே.

அவி. 14. அளபெடை தனியிரண் டல்வழி ஐஔ
உளதாம் ஒன்றரை தனிமையும் ஆகும்.

இளம்பூரணர்

இது என் நுதலிற்றோ வெனின், உயிர்களுள் ஒன்றற்கு மாத்திரைச் சுருக்கம் கூறுதல் நுதலிற்று.

இ—ள்: தேருங்காலை மொழிவயின் ஓர் அளபு ஆகும் இடனும் உண்டு—ஐகாரம் ஆராயுங்காலத்து மொழிக்கண் ஓர் அளபாய் நிற்கும் இடமும் உண்டு.

எ—டு : இடையன், மடையன் எனவரும்.

'தேருங்காலை' என்றதனான் முதற்கண் சுருங்காதென்பது கொள்க. 'இடன்' என்றதனான் இக்குறுக்கம் சிறுபான்மை என்பது கொள்க.

நச்சினார்க்கினியர்

இஃது அதிகாரத்தான் ஐகாரத்திற்கும் ஔகாரத்திற்கும் எதிரதுபோற்றல் என்பதனால் செய்யுளியலை நோக்கி மாத்திரைச் சுருக்கங் கூறுகின்றது.

இ—ள் : ஒரு சொல்லிடத்தே நின்ற ஐகார ஔகாரங்கள், ஆராயுமிடத்து, ஒரு மாத்திரையாய் நிற்கும் இடமும் உண்டு; எ—று.

உம்மையான் இரண்டு மாத்திரை பெறுதலே வலியுடைத் தாயிற்று. இடனும் என்றது, ஒரு சொல்லின் முதலிடை கடை யென்னும் மூன்றிடத்தும் குறுகும் அது, செய்யுட்கண் ஓசை யிடர்ப் பட்டொலிக்கு மிடத்துக் குறுகு மென்றற்கு. உரையிற் கோடலால் ஐகாரம் முதலிடை கடையென்னும் மூன்றிடத்தும் குறுகும்; ஔகாரம் முதற்கண் குறுகும் எனக் கொள்க.

எ—டு : ஐப்பசி, கைப்பை, இடையன், குவளை எனவரும். 'அடைப்பையாய்க் கோறா' எனவும், 'புனையிளங் கொங்கை

யாய், எனவும், வரும் பிறவாறும் வருவன செய்யுளியலுட் காண்க. ஔவை, கௌவை எனவரும்.

ஔகாரம் 'கௌவை நீர் வேலி கூற்று' எனத் தொடை நோக்கிக் குறுகினவாறுங் காண்க. 'தேருங்காலை' என்றதனான் ஓரெழுத்தொரு மொழியுங் குறுகும். கை, பை என வரும்.

வேங்கடராசுலு ரெட்டியார்

ஐகாரம் மொழிக்கண் ஒருமாத்திரையளவில் ஒலித்தல் உண்டு என்பது இச்சூத்திரத்தின் பொருள்.

மேற்சூத்திரத்தில் ஐகாரத்தைக் குறித்துக் கூறினாராகலின் அதிகாரத்தான் ஈண்டு ஐகாரம் என்பது கொள்ளப்படும்.

மொழிவயினான என்றதனால், எழுத்தாகக் கூறுமிடத்து, தன் இரண்டு மாத்திரையிற் குறையாது ஒலிக்கும் என்பது போதரும். ஐ—என ஒலித்து ஓர்க.

இனி மொழியில் மாத்திரை குறைதலை, இடையன், குவளை என ஒலித்து அறிக.

இவையின் னனவும் பிறவும் எரிபொன் னார மார்பன்
கவிஞர் மதியி னகன்று காட்சிக் கினிய விழவில்
சுவையின் மிகுதி யுடைய சோர்வில் பொருளொன்றதுதா
னவையி னகல நோக்கு நயந்த வண்ண மொழிவாம்

(சீவக. 933)

இப்பாட்டில் இவை, சுவை, நவை என்பனவற்றில் உள்ள ஐகாரம் இரண்டாமடியிலுள்ள வி-போல ஒரு மாத்திரை அளவாக ஒலிப்பது அறிக.

இடனுமா ருண்டே என்றதனால், ஒருமாத்திரையளவில் ஒலித்தல்சிறுபான்மை என்பது போதரும். ஆசிரியர் மேற் சூத்திரத்தில்மொழியின் இடையிலும் கடையிலும் நிற்கும் ஐகாரத் திற்கேஅகரமும் யகரப்புள்ளியும் வரும் என்று விதித்தார் என்பது போந்தமையின், அவ் ஐகாரம் ஓரள பாதலும் உண்டு என்று இச்சூத்திரத்தாற் கூறினார். ஆகலின், மொழிமுதற்கண் ஐகாரம் குறுகுதல் இல்லை. உரையாசிரியரும் 'முதற்கண் சுருங்காது' என்றார். சிவஞான முனிவர், ஐகாரம் மொழிமுதற் கட் சுருங்காது என்றும், ஔகாரக் குறுக்கம் இல்லையென்றும் கூறியது அறியத்தக்கது.

பிற்காலத்தில், மொழிமுதலிலும் ஐகாரம் அய் என்பது போலக் குறுகி ஒலித்தமையானும், ஔகாரமும் அவ் என்பது

போல ஒலித்தலையானும், நேமிநாத நூலாரும், வீரசோழிய நூலாரும்' ஐகார ஔகாரங்கட்கு முறையே அகர இகரமும், அகர உகரமும் வரும் என்று விதியாராய், அகரயகரமும், அகர வகரமும் ஆகும் என்று கூறினார். அதனான், அவ் ஐகார ஔகாரங்கள் ஒன்றரைமாத்திரை ஒலிக்கும் என்பது அறிய லாகும். இஃது,

> ''அளபெடை தனியிரண் டல்வழி ஐ ஔ
> உளதாம் ஒன்றரை தனிமையு மாகும்''

என அவிநயர் கூறியதனாலும் அறியப்படும். இச்சூத்திரத்தில், ஒன்றரை மாத்திரையாய் வரும் இடம் இஃது என்று கூறாறில ராயினும் அது மொழிமுதற்கண்ணே என்று கொள்ளுதல் தகும்.

> கொய்தகைப் பொதியிற் சோலைக்
> குழவிய முல்லை மௌவல்
> செய்யசந் திமையச் சாரல்
> கருப்புரக் கன்று தீம்புக்
> கய்தரு மணியிற் றெண்ணீர்
> மதுக்கலந் தூட்டி மாலை
> பெய்தொளி மறைத்து நங்கை
> பிறையென வளர்கின் றாளே (சீவக. பதுமை. 102)

இதில், கய் என்பது ஒன்றரை மாத்திரையளவினதாதல் கொய், செய், பெய் என்று ஏனையடிகளில் வந்துள்ள சொற்களை நோக்கிஅறியலாகும்.

> பவ்வ நீர்ப்பவ ளக்கொடி போல்பவள்
> மவ்வ லங்குடி லாள்சுர மஞ்சரி
> கொவ்வை யங்கனி வாய்க்குண மாலையோ
> டெவ்வந் தீர்ந்திருந் தாளிது கூறினாள்.
>
> (சீவக. குண. 24)

இப்பாட்டில் பவ்வம், மவ்வல்என்பனவற்றில் ஔகாரம் ஒன்றரை மாத்திரையளவினதாதல், கொவ்வை எவ்வம் என்னும் சொற் களை நோக்கின் அறியலாகும். பிரயோக விவேக நூலாரும் ஔகாரம் இவ்வாறு வருதலைப் பல உதாரணங்காட்டி விளக்கி யுள்ளார்.

யாப்பருங்க ஆசிரியர்,

ஐ ஔ மகரக் குறுக்கம் (யா.க. சூத்திரம்.2) என்று கூறினார். உரைகாரர் 'அளபெடுத்தற்கண்ணும், தனியே சொல்லுதற் கண்ணும் என்னும் இரண்டிடத்தும் அல்லாத வழி வந்த ஐகார ஔகாரம் என்பன தம் அளவிற் சுருங்கி நின்று ஒன்றரை

மாத்திரையாம்; ஐகார ஔகாரம் தனியே நின்று ஓரேவிடத்து ஒரு பொருளைச் சொல்லுதற்கண் ஒன்றரை மாத்திரையும் ஆம்' என்று எழுதி, ''அளபெடை....தனிமையுமாகும்'' என்ற அவிநயச் சூத்திரத்தை மேற்கோள் தந்து உதாரணமும் காட்டினார்.

நேமிநாத நூலாரும்,

''மும்மையிடத்தை ஔவும் குன்றும் (நேமி. 4)

என்றார்.

''ஒன்றரை யாகும் ஐஔ'' (வீர. 5)

என்றார் வீர சோழிய நூலார்.

நன்னூலார்,

தற்சுட்டளபொழி ஐமூ வழியும்
நையும் ஔவும் முதலற் றாகும் (நன். 4)

என்று விதித்துள்ளார். இவர் அவிநயத்தைப் பின் பற்றித் 'தற் சுட்டளபொழி ஐ' எனக் கூறியவாறறிந்து, அதற்கேற்பத் 'தன்னைச் சொல்லுதற் கண்ணும் அளபெடுத்தற் கண்ணும் அல்லாத வழி வந்த ஐகாரம்... மூன்றிடத்தும் குறுகும்' என்று மயிலைநாதர் பொருள் கூறினார். சங்கர நமச்சிவாயர் அவ் வுரையை மறுத்து, 'ஐகாரம் தன்னைக் கருதித் தன்பெயர் கூறுமளவிற் குறுகாது; ஒழிந்த...மூன்றிடத்தும்...குறுகும்' என்று ஆசிரியர் கருத்திற்கு முரணாக உரை கூறினது பொருந்தாது.

இலக்கண விளக்க நூலார் நன்னூற் சூத்திரத்தையே மேற் கொண்டுள்ளார். இவ்வாறு பிற்காலத்தார் கூறினும், ஔகாரக் குறுக்கம் இன்று என்பதே இவ்வாசிரியர் கருத்து.

நச்சினார்க்கினியர், ஓரெழுத் தொருமொழியும் குறுகும் என்றார். அவ்வாறு கை, பை என்பன குறுகின் கய், பய் என ஒன்றரை மாத்திரையாய் வரும்.

'தேருங்காலை' என்றதனால், ஐகாரம் ஒரு மாத்திரையாய் ஒலித்தற்குரிய இடங்களிலும் அஃதாவது மொழியின் இடை யிலும் கடையிலும் ஒன்றரை மாத்திரையளவு ஒலித்தல் சிறு பான்மை உண்டு என்று கொள்ளுதலும் கூடும்.

பிறகுறிப்புகள் :

சுப்பிரமணிய சாஸ்திரியர் நச்சினார்கினியர் கொள்கையினர்; வெள்ளைவாரணனார், இளம்பூரணர் சிவஞான முனிவர் வேங்கடராசுலு ரெட்டியார் ஆகியோர் கொள்கையினர்.

இளம்பூரணர் உரைச்சுவடி ஒன்றில் எடுத்துக்காட்டு இடையன், மடையன், திணை, பனை என்றிருப்பதாக அடிகளாசிரியர் தமது தொல்காப்பிய எழுத்ததிகார இளம் பூரணப் பதிப்பில் கூறுவர். (பக். 76)

போலியில் மற்றொரு வகை

58. இகர யகரம் இறுதி விரவும். (25)

ஆ. மொ.

இல.

'i' and 'y' will change their plaees at the end of words.

க. சு.

'l' and 'y' alternate in the final position.

பி .இ. நூ:

இல. வி. 36. இகர யகரம் இறுதி விரவும்
முத்து. 106. இகரமும் யகரமும் இறுதியில் விரவும்

இளம்பூரணர்

இதுவும் ஓர் போலி எழுத்து உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள் : இறுதி இகர யகரம் விரவும்—இகர ஈற்று மொழிக்கண் யகரமும் (அது போல்) இகரமும் விரவி வரும்.

எ—டு : நாய், நாஇ எனக் கண்டு கொள்க. (விரவும் என்றதனான் அவை இரண்டும் கொள்க என்றவாறு)

நச்சினார்க்கினியர்

இதுவும் போலி கூறுகின்றது.

இ—ள் : இகரமும் யகரமும் ஒரு மொழியின் இறுதிக்கண் ஓசை விரவிவரும்; அவ்விகாரம் கொள்ளற்க: எ—று.

எ—டு : நாய், நாஇ எனவரும்

சிவலிங்கனார்

இறந்தது விலக்கல் என்பதனால் நன்னூலார் நாய், நாஇ எனவரும் போலியைக் கூறாது விட்டார் என்பர் வெள்ளை வாரணனார்.

'அவ்விகாரம் கொள்ளற்க' என நச்சினார்க்கினியத்தில் காணப்படுவது பொருந்தாது.

தாஇ—தாய், பாஇ—பாய், நாஇ—நாய் என உதாரணம் காட்டுவர் வேங்கடராசுலு ரெட்டியார்.

நாயி என்பது பண்டை வழக்காக இருந்திருக்கலாம் என்பர் தேவநேயப்பாவாணர். (தொல். எழு. இளம் கழகப்பதிப்பு.) நா+இ என இரண்டுயிர் (ந்+ஆ+இ) சேர்ந்திசைப்பதில்லை யாதலின் "எல்லா மொழிக்கும் உயிர்வரு வழியே, உடம்படு மெய்யின் உருவு கொளல் வரையார்" (எழு. 140) என்னும் விதிப்படி'ய்'உடம்படுமெய்பெற்று நாயி என ஒலிக்கப்பட்டிருக்க லாம் என்பது பாவாணர் கருத்துப் போலும். அப்படியாயின் இகரமும் யகரமும் இறுதியில் விரவும் என்பதன் பொருள் மாறுபடும். இங்கு விரவும் என்பது ஒன்றனிடத்து ஒன்று வரும் என்பதையே குறிக்கும்.

மேலும் உடம்படுமெய் என்பது இருமொழிக்கண் வருவது எனின் ஒரு மொழியில் ஈருயிர் நிற்குமா என்ற ஐயம் வரும். ஆஅல் என்பது போல அளபெடையிலன்றி வேறெங்கும் வருதல் இல்லை. அளபெடையிலும் விட்டிசையின்றி நெடிலோசை யாகவே வரும். யகரத்துக்கு இகரம் போலிதான் என்றாலும் அது உயிர் எழுத்து தானே?

நாய் என ஒலித்த தமிழர் அதனை நாஇ என ஒலித்தபோது விட்டிசைத்த நிலையில் ஒலிக்காமல் நாயி எனச்சேர்த்தே ஒலித் தனர் எனக் கொண்டால் இந்நூற்பாவுக்கு வேறு பொருளே கொள்ளல் தகும்.

"இகரத்தொடு கூடிய யகரம் (ய்+இ=யி) மொழியிறுதிக் கண் யகர மெய்யொடு விரவி வரும்" எனப்பொருள் கொண்டால் பொருந்தும்.

நாய்—நாயி எனக் காண்க.

யகர ஈற்றுமொழிகளை இகரம் சேர்த்து வழங்குதல் இன்றும் உண்டு.

போய் வா—போயி வா.
பொய்—பொய்யி
காய்—காயி

என்பன காண்க.

இனிக் கல்வெட்டுக்களில் இகர ஈற்றுச் சொற்கள் யகரமெய் யுடன் சேர்ந்து வருதலைக்காணலாம். கணி—கணிய் என வந்துள்ளது.

இதைக்கொண்டு பார்க்குமிடத்து இகரமும் யகரமும் மொழி யிறுதியில் சேர்ந்து வரும் என்பது பெறப்படுகிறது. இங்கு விரவும் என்பதற்குச் சேர்ந்து வரும் எனப்பொருள் கொள்ளல் வேண்டும்.

நாய்—நாஇ
நாய்—நாயி
கணி—கணிய்

இம்மூன்றனுள் ஆசிரியர் எதைக்கொண்டு நூற்பாச் செய்தார் என்பது விளங்குதலரிதே. கல்வெட்டுகளில் காணப் படுவது பிழையே யாதலின் அதற்கு இலக்கண அமைதி தேவை யில்லை. நாஇ—நாயி இவை ஒலியில் சிறிதே வேறுபாடுடையன. எனவே நாய்—நாஇ என்பதைக் கொண்டே ஆசிரியர் கூறியிருக் கலாம். எனினும் என் முடிபான கருத்து பின் வருவதே.

அகர இகரம் ஐகாரம் ஆகும், அகர யகரம் ஐ வடிவு பெறும் என ஆசிரியர் கூறியது ஐகார ஒலிபற்றியாகும். அவ்வொலி மொழி முதலிடை கடைகளில் வரும்போது ஐயர்—அஇயர்—அய்யர், திரையர்—திரஇயர்—திரயர், படை—படஇ—படய் எனவரும். இவற்றுள் அஇயர், திரஇயர் என்பன ஐயர், திரையர் என்பனவற்றின் ஒலியமைப்பளவில் வருவனவே தவிர எழுதிக் காட்ட வருவனவல்ல. ஆனால் படஇ என்பது ஒலிக்கவும் எழுதிக் காட்டவும் வருவது. இது இறுதியில் மட்டும் வருவது. அதனால் மொழி இறுதியில் வரும் ஐகாரத்தில் (அகர) இகரத்துக்குப் பதில் (அகர) யகரம் விரவிவரும் என்பதே ஆசிரியர் கருத்தெனக் கொள்ளலாம். (படஇ—படய்) இது வரிவடிவிற்கேயுரியது. (ஐயர் என்பது அஇயர் என ஒலிக்கலாமே தவிர அப்படியே எழுதிக்காட்டல் கூடாது.)

பிற குறிப்புகள்

ஐ, ஔ பற்றிக் கட்டுரையாளர் கருத்துகள் வருமாறு :

வே. வேங்கடராசுலு ரெட்டியரர்

(ஐகார ஔகாரம்)

முன்னிலை யொருமை வினைமுற்றின் விகுதியாகிய ஐ-என்பதனை நோக்கின், அஃது அய் என்பதாதல் அறியப்படும். அதன்பொருட்டு, வினைமுற்றில் அன் சாரியை வந்த விடத்தும் வாராவிடத்தும் விகுதிகள் எவ்வாறு நிற்கின்றன என்று நோக்குதும். சாரியை வந்துள்ள செய்தனன் என்னும் சொல் சாரியை வாராதபோது செய்தான் என அன் என்பதன் அகரம் நீண்டது. அதுபோலவே செய்தாய் என்ற முன்னிலைச் சொல்

சாரியை சேர்ந்து வரும்போது செய்தனய் என்றுதான் வரும். செய்தனை என ஐகாரம் வருவது பொருத்தம் இல்லை. இதனால் ஐ என்பது அய் என்பதன் திரிபே என்னலாம்.

வள்ளல் என்பது விளியேற்கும்போது வள்ளால் என அகரம் நீண்டு வரும். அவ்வாறே நங்காய் என்ற விளிக்கும் நங்கை என்பதினும் நங்கய் என்பதே ஏற்றதாகும்.

மரம்→மர+அத்து=மரத்து என்றவி'-த்து அகரத்தின் முன் அகரம் கெட்டதுபோலப் பனய்→பன+அம்+காய்=பனங்காய் என்பதில் அகர முன்னர் அகரம் கெட்டதாகக் கொள்ளலாம்.

மரம்→மர+அடி=மராடி என்றாயதுபோலப் பனய்→ பன+அட்டு=பனாட்டு என்றாயது.

(The journal of oriental Research of the University of Madras. Vol. I, parts 1+2. page 10-11. Reprint.)

ச. வே. சுப்பிரமணியன்

வந்தனன் என்பது படர்க்கை வினைமுற்று. இதில் இறுதி அன் என்பதன் னகர ஒற்று ஒருமையையும் அகரம் படர்க்கை யிடத்தையும் உணர்த்தும். வந்தனென் என்பது தன்மை யொருமை வினைமுற்று. இதில் இறுதி என் என்பதின் னகரம் ஒருமையையும் எகரம் தன்மையிடத்தையும் உணர்த்தும். வந்தனை என்பது முன்னிலையொருமை வினைமுற்று. இதில் இறுதி ஐ என்பது ஒருமையெண்ணையும் முன்னிலையிடத்தையும் உணர்த்துவதாகக் கொள்ளவேண்டும். படர்க்கைக்கும் தன்மைக் கும் இடத்தையும் எண்ணையும் உணர்த்த வேறு வேறு எழுத் திருத்தல் போலவே முன்னிலைக்கும் இருப்பது நன்று. எனவே ஐ என்பதை அ இ என இரண்டெழுத்துகளாகக் கொண்டால் இகரம் ஒருமை எண்ணையும் அகரம் முன்னிலையிடத்தையும் உணர்த்தினவாகக் கொள்ளலாம். எனவே அ இ என்ற இரண் டுயிர்களின் கூட்டொலியே ஐ என்பதாகும்.

அய் என்ற இரண்டெழுத்தின் கூட்டொலியாகக் கொண் டால் இரண்டு தடைகள் வரும்.

1. செய்யுளில் அலகிடும்போது ஐகாரம் இரண்டுமாத்திரை யாக அலகிடப்படும். அதை அய் என்பதாகக் கொண்டால் ஒன்றரை மாத்திரையாகக் குறைந்துவிடும்.

2. ஐயீற்றுச் சொல் உயிர் முதல் மொழிவரின் யகர வுடம்படுமெய் பெறும் என்பது விதி. (தலை + இல் = தலையில்) அய் எனக் கொள்ளும்போது அவ்விதி பொருந்தாது (தலய் + இல் = தலயில்)-Descriptive Grammer of Cilappathikaram page. 30. 1965.)

தெ. பொ. மீனாட்சி சுந்தரனார்

ஐகாரம் உயிரும் மெய்யும் சேர்ந்த கூட்டொலியாகும். (அய்) அதற்கு இரண்டு காரணங்களாவன :

1. ஐகாரமும் 'அய்'யும் எங்கும் வேற்றுநிலை வழக்கில் (Contrasting distribution) வரவில்லை.

2. ஏய்—எய் (சேய்—செய்) ஓய்—ஒய் (கோய்—கொய்) போன்று ஆய்—அய் வேறுபடாமல் ஆய்—ஐ (வாய்—வை) என்று வேறுபடுவதால் ஐகாரத்தை அய் என்றே கொள்ளலாம்.

குற்றெழுத்தோடு வரும் மெய்யெழுத்தும் சேர்ந்து இட அமைப்பால் (by position) நெட்டெழுத்தாகக் கருதலாம். (A History of Tamil language. page, 76, 66.)

செ. வை. சண்முகம்

1. தொல்காப்பியர் உயிர் பன்னிரண்டனுள் ஐகாரத்தையும் ஔகாரத்தையும் சேர்த்திருப்பதால் மற்றைய எழுத்துகள் போலவே இவ்விரண்டும் தனி ஒலியன்களாகும்.

2. அகர இகரம் ஐகாரமாகும், அகர உகரம் ஔகாரமாகும் என்றதால் இரண்டுயிர்களின் கூட்டொலிகள் அவை எனக் கொள்ளலாம்.

3. 'அகரத் திம்பர் யகரப் புள்ளியும், ஐயென் நெடுஞ் சினை மெய் பெறத் தோன்றும்' என்றதால் உயிரும் மெய்யும் கூடிய கூட்டொலிகள் என்றும் கூறலாம்.

இம் மூன்றனுள் ஒன்றே கொள்ளல் தகும்.

அய் என்பதே ஐ என்பதன் கூட்டொலி என்பதற்குச் சான்றுகள் வருமாறு :

1. தொல்காப்பியர் ய்ந், ய்ச், ய்ஞ் போன்ற மெய்ம்மயக்கங் களைக் குறிப்பிடினும் இவற்றிற்குத் தனிமொழியில் சான்றுகள் கிடைக்கவில்லை.* ஆனால் ஐகாரத்தை அய் என்று கொண்டால் சான்றுகள் கிடைக்கும்.

* ஆய்நர், ஆய்ச்சியர் என்பன உளவே?

(உ—ம்) : வினைநர்—வினய்நர் (பதிற். 62 : 16), முரைசு—முரய்சு (அகம். 36 - 21) முனைஞர்—முனய்ஞர் (தொல். 1003).

2. விளியேற்கும்போது சில சொற்களின் ஈற்றுயிர்நீளும். உ - ம். மக்கள்—மக்காள், தோழி—தோழீ. அன்னை என்பது அன்னய் என்றிருந்தால் அன்னாய் என நீளுதல் பொருந்தும்.

3. உறைநர் என்பது உறையுநர் எனவரும். உறை என்ப தன் ஐயீற்றை அடுத்து உகரம் வருகிறது. இரண்டுயிர் ஒன்று சேர்தல் இல்லை. அதனால் 'ய்' என்பதும் தேவைப்படுகின்றது. அய் என்பதைக் கொண்டால் உறய்நர் என்பது உறயுநர் என மெய்யீற்றையடுத்து உயிர் வந்தது என்பது எளிதில் பொருந்தும். பகர்நர்—பகருநர் (பதிற். 6 : 17).

4. ஐந்து→அய்ந்து→அய்ஞ்சு. இவற்றில் ஐ என்பதற்குப் பதில் அய் எனபதைக் கொண்டால் ஐ, அ என மாறும் என்ற ஒரு விதி தேவையில்லை.

5. கை+இல்=கையில். இதில் யகர வுடம்படுமெய் பெற்றது என்பதினும் கய்+இல்=கய்யில் என யகர மெய் இரட்டித்தது என்பது எளிதாகும். என்பன சான்றுகளாம்.

தமிழ் இலக்கண ஆசிரியர் ஐகாரத்தைத் தனி ஒலியனாகக் கொண்டதற்கு இவர் காட்டும் காரணம் இரண்டு:

1. புணர்ச்சி விதியில் காட்டிய சிக்கல்

2. அசைஇ, நிலைஇ போலும் அளபெடை பயின்று வந்துள்ளமை என்பன.

ஔகாரம் பற்றி இவர், ஔ என்பது அஉ என உயிரும் உயிரும் சேர்ந்த கூட்டொலி என்பதைவிட அவ் என உயிரும் மெய்யும் சேர்ந்த கூட்டொலியே' என்பர்—(இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்ற நான்காவது கருத்தரங்கு மலர். பக். 369—373, 1972)

மா. இளையபெருமாள்

ஐகாரத்தை அஇ என்று எழுதும் முறை கேரளத்தில் காணப் படும். தமிழ்க் கல்வெட்டுக்களிலும், பாஷா கௌடில்யம் போன்ற பழைய மலையாள நூல்களிலும் அதிகமாகக் காணப் படுகின்றது. உதாரணமாகக் கி. பி. 9-ஆம் நூற்றாண்டினதாகக் கருதப்படும் வாழைப்பள்ளிக் கல்வெட்டில் 'கைலாசம்' என்ற சொல் 'கஇலாசம்' என்று எழுதப்பட்டிருக்கின்றது.—(பேராசிரியர், ரா. பி. சேதுப் பிள்ளை வெள்ளி விழா மலர். பக். 347)

நா. இராசகோபாலன்

ஒரு சொல்லில் ஓரெழுத்திற்கீடாக அச்சொல்லின் பொருள் வேறுபடாத வகையில் வேறோர் எழுத்து நிற்குமாயின் அதனைப் போலி என்பர். ஒன்று போலப் பிறிதொன்று வழங்குமாயின் அதனைப் போலி எனல் வழக்கு. ஓரெழுத்திற்கீடாக ஒன்றேயன்றி இரண்டெழுத்துகள் நின்றும் போலியாதல் உண்டு. (தொல். எழுத்து. மொழி மரபு. 21, 23, 22)

ஐகாரம் ஓரெழுத்து ஒருமொழியாக வந்த விடத்தும் தொடர்மொழியிடத்து உறுப்பாய் வந்தவிடத்தும் அகர இகரங்களும், அகர யகரங்களும் வழங்கப் பெற்றிருத்தல் வேண்டும். (கை→ கஇ→ கய், ஐ→ அஇ→ அய்) தொடர்மொழியின் முதலில் ஔகாரத்திற்கு ஈடாக அகர உகரங்கள் வழங்கப் பெற்றிருத்தல் வேண்டும். கௌ வௌ என வரும் ஓரெழுத்தொரு மொழி கஉ வஉ என வழங்கப் பெற்றிருத்தல் வேண்டும்.

இகர ஈற்று மொழிகள் யகர ஈற்றன ஆதலும் யகர ஈற்று மொழிகள் இகர ஈற்றன ஆதலும் ஆசிரியர் காலத்து வழக்குப் போலும்.

சந்தியக்கரம் என்பது இரண்டெழுத்துக்களின் கூட்டொலி; போலி என்பது தனி ஒலி. எனவே ஐ, ஔ என்பனவற்றிற்கு அய் அவ் என்பன போலி எழுத்துக்களேயன்றிச் சந்தியக்கரங்களல்ல—(இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம் நான்காவது கருத்தரங்கு மலர் (1972). பக். 310—314)

வி. பொ. பழனிவேலனார்

உயிர் எழுத்துகள் பன்னிரண்டும் தனித்தனி ஒலியால் எழுப்பப்படுவன. ஐ, ஔ கூட்டெழுத்துகளோ கூட்டொலிகளோ அல்ல. வேற்று மொழியினர் தம் மொழி உயிர் எழுத்துகளைக் கூட்டெழுத்துகள் எனக் கூறவில்லை. ஆங்கிலத்தில் i என்பது கூட்டொலி எழுத்தன்று. அஇ, அய், அஉ, அவ் என்பன ஐ ஔ ஒலிகளுக்குப் போலி எழுத்துகளே.

—(செந்தமிழ்ச்செல்வி சிலம்பு. 54. பக், 11—13. 1980)

6. மொழி முதல் எழுத்துகள்

மொழி முதல் ஆகும் உயிர்

59. பன்னீர் உயிரும் மொழிமுதல் ஆகும். (26)

ஆ. மொ.

இல.

All the twelve vowels can be the initial of words.

க. சு.

All the twelve vowels occur at the beginning of words.

பி. இ. நூ.

வீர.	7:	ஆவியனைத்தும்...மொழி முதலே
நேமி.	7:	காட்டும் உயிரும்...மொழிக்கு முன் என்று அயர்விலார் கட்டுரைத்தார் ஆய்ந்து.
நன்.	102:	பன்னீருயிரும்...மொழி முதல்.
இல. வி.	26:	பன்னீருயிரும்...மொழி முதல்.
தொன்.	10:	உயிர்...முதற்கே.
முத்து.	60:	முந்நான்கு உயிரும் மொழி முதல் ஆகும்.

இளம்பூரணர்

இது உயிரெழுத்து மொழிக்கு முதலாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள் : பன்னீர் உயிரும் மொழிமுதல் ஆகும்-பன்னிரண்டு உயிரெழுத்தும் மொழிக்கு முதலாம்.

எ—டு : [1]அடை, ஆடை, [2]இடை, ஈயம், உரல், ஊர்தி, எழு, ஏணி, ஐவனம், ஒளி, ஓளி, ஔவியம் எனவரும்.

நச்சினார்க்கினியர்

இது மேல் எழுத்தினால் மொழியாமாறு உணர்த்தி அம்மொழிக்கு முதலாம் எழுத்து இவை என்பது உணர்த்துகின்றது.

சு. வே. 1. அரை
2. இலை

இ ள் : பன்னிரண்டு உயிரெழுத்தும் மொழிக்கு முதலாம்.

எ—டு : அடை, ஆடை, இலை, ஈயம், உளை, ஊர்தி, எழு ஏணி, ஐவனம், ஒளி, ஓடம், ஔவியம் எனவரும்.

தனிமெய் மொழி முதல் ஆகாமை

60. உயிர்மெய் அல்லன மொழிமுதல் ஆகா. (27)

ஆ. மொ.

இல.

Consonant without vowel cannot become the initial of words.

க. சு.

Consonants eannot oeeur inilially in words unless followed by vowels.

குறிப்பு

உயிரொடு கூடிய மெய்கள் மொழி முதலில் வரும் என்றவர் அம்மெய்கள் எவ்வெவ்வுயிர்களுடன் கூடி வரும் எனப் பின்னர் கூறுதலின் பின்வந்த இலக்கண நூலார் அவை யாவை என முன் மொழிந்து கொண்டனர். அவர் நூற்பாக்கள் வருமாறு.

பி. இ. நூ.

நன் : 102. ...க ச த ந ப ம வ ய ஞ ங
ஈரைந்துயிர் மெய்யும் மொழிமுதல்.

இல. வி. 26. ...க த ந ப ம வெனும்
ஆவைந் தெழுத்தொடு ச வ ஞ ய உளப்பட
அவ்வொன்பான் உயிர் மெய்யும் மொழி முதல்.

தொன் : 10. ...க ச த ப ஞ ந ம ப ய முதற்கே.

இளம்பூரணர்

இது (உயிர்) மெய்யெழுத்து மொழிக்கு முதலாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள் : உயிர்மெய் அல்லன மொழிமுதல் ஆகா-உயிரோடு கூடிய மெய்யல்லாதனவாகிய தனிமெய்கள் மொழிக்கு முதலாகா; உயிரோடு கூடிய [1] மெய்கள் மொழிக்கு முதலாம்.

ஈண்டு உயிர் மெய் என்பது வேற்றுமை நயம் கருதியென உணர்க. ஈண்டு ஒற்றுமை கருதில்,

க த ந ப ம வெனு மாவைந் தெழுத்தும்
எல்லா வுயிரொடும் செல்லுமார் முதலே. (மொழி. 28)

எனச் சூத்திரம் சுருங்க [2]ஓதும தன்றி, இதனாற் சொல்லப்பட்ட அறுபது உயிர்மெய்யினை எடுத்தோத [3]வேண்டின் சூத்திரம் பரக்க வரும் என்பது*

நச்சினார்க்கினியர்

இஃது உயிர்மெய் மொழிக்கு முதலாம் என்கின்றது.

இ—ள் : உயிரோடு கூடிய மெய்யல்லாதனவாகிய தனி மெய்கள் மொழிக்கு முதலாகா; எ—று.

எனவே, உயிரோடு கூடிய மெய்களே மொழிக்கு முதலாவன என்றவாறாம். ஈண்டு உயிர்மெய் என்றது வேற்றுமை நயங் கருதிற்று; ஒற்றுமை கருதின் மேலைச் சூத்திரத்து உயிரோடு கூடி ஆம் என்றல் பயன் இன்றாம்.

சு. வே. 1. உயிர்மெய்கள்
2. ஓதுமன்றி, வருவதன்றி
3. வேண்டிச்

* உயிர்மெய் என்பதற்கு உயிரோடு கூடிய மெய் எனப் பொருள் கொள்ளுதலின் வேற்றுமை நயம். கி என்ற எழுத்து இ என்ற உயிரோடு கூடிய க் என்ற எழுத்தாகும் எனத் தனித் தனியாகப் பிரித்துக் காணின் கி என்ற உயிர்மெய் வேற்றுமை நயமாகக் கருதப்படும். இந்நூற்பாவில் வேற்றுமை நயமே கருதிக் கூறப்பட்டது; ஒற்றுமை நயம் கருதிக் கூறியதாகக் கொள்ளுதல் கூடாது. ஏன்எனின் அடுத்த நூற்பாவில் கதநபம என்ற மெய்யெழுத்துகளைக் கூறி அவை எல்லா உயிரொடும் முதலாகும் எனக் கூறுமிடத்து மெய்களையும் உயிர்களையும் தனித் தனி நிறுத்திக் கூறியிருத்தலால் அந்நூற்பா வேற்றுமை நயம் கருதியே கூறப்பட்டது காணலாம். மொழி முதலாம் மெய்கள் பற்றி அடுத்த நூற்பா முதல் சில நூற்பாக்கள் கூறலின் இந்நூற்பாவும் மெய்களைப் பற்றியதாகவே அமையும். அதனால் ஈண்டு உயிர்மெய் என்றது வேற்றுமை நயமாம்.

சுப்பிரமணிய சாஸ்திரியார்

இச்சூத்திரம் இல்லாவிடின் வரும் குற்றம் என்னையெனின், தமிழ் மொழியில் மொழிக்கு முதலில் ஒரு மெய் மற்றொரு மெய்யான் தொடரப்பட்டு வாராது என்பது பெறப்படாத தாகும். பின்னர்க் கூறப்பட்ட 6 சூத்திரங்களான் அது பெறப் படாதாவெனின், ஆங்கு மொழிமுதலில் வரும் மெய்கள் எவ்வெவ்வுயிரான் தொடரப்படும் என்று கூறப்படாமையின், அவ்வுயிர்களைத் தவிர்த்து ஏனை யுயிர்களால் தொடரப்படா எனப் பெறப்படுமே யன்றி, மற்றொரு மெய்யான் தொடரப் படா எனப் பெறப்படாவாம். ஆதலின் இச்சூத்திரம் வேண்டும் என்க.

வடமொழியில் மொழிக்கு முதலாக ஸம்யுக்தாக்ஷரம் (ம்ரு, க்ரு. த்ரி போன்றன) வரலாம் ஆகலின், வடமொழிக்கும் தமிழ் மொழிக்கும் உள்ள வேற்றுமைகளுள் ஒன்றனை இச் சூத்திரம் உணர்த்துகின்றது—(நூற்பாவுசைக் கீழ்க்குறிப்பு.)

பிற குறிப்புகள் :

—ச.வே. சுப்பிரமணியன், மெய்யெழுத்துகளும் உயிரொடுகூடி முதலாதலின் மெய்கள் மொழிமுதலாகா என்பது பிழைபடும். உயிர்மெய்யொலியே முன்னிற்பது என்பர்.

மெய்பன்னீர் உயிருடன் மொழிமுதல் ஆதல்

*** 61. க த ந ப ம வெனும் ஆவைந்து எழுத்தும்**
எல்லா உயிரொடும் செல்லுமார் முதலே. (28)

---

* முந்து மொழிந்ததன் தலைதடுமாற்றத்துக்கு இந்நூற்பா மேற்கோள். (தொல். பொருள். 665. பேராசிரியர்)

ஆர் என்னும் இடைச்சொல் அசை நிலையாய் வருவதற்கு மேற்கோள். (தொல். சொல். இடை. 23)சேனாவரையர்

செல்லு மார் முதல் என்பதில் ஈற்றில் 'முதற்கு' என்ற நான்கன் உருபு தொக்கு வந்தது செய்யுள் விகாரம். தொகை வகையால் தொக்கதன்று என்பதை ''இரண்டு முதலாம் இடையா றுருபும் வெளிப்படல் இல்லது வேற்றுமைத் தொகையே'' (நன். 362) என்ற நூற்பாவினால் அறியலாம். (மயிலை நாதர் உரை).

ஆ. மொ.

இல.

k, th, ṉ, p and m—these five consonants joining all vowels, becom initials of words.

க. சு.

k, t, n, p and m, those five consonants may be followed by any vowel when occurring initially.

பி. இ. நூ.

வீர. 7. கசத நபம வரியும்...மொழி முதல்.

முத்து. 61. பன்னீ ருயிரோடும் கசதபநம வரும்.
(இவற்றில் சகரமும் உடன் காணப்படுகின்றன)

இளம்பூரணர்

இது, மேல் முதலாம் என்னப்பட்ட உயிர்மெய்கட்கு வரையறை கூறுதல் நுதலிற்று.

கதநபம எனும் அ ஐந்து எழுத்தும்—கதநபம என்று சொல்லப்பட்ட[1] ஐந்து தனிமெய் எழுத்தும், எல்லா உயிரொடும் முதல் செல்லும்—பன்னிரண்டு உயிரோடும் மொழிக்கு முதலாற்குச் செல்லும்.

எ—டு; கலை, காளி, கிளி, கீரி, குடி, கூடு, கெண்டை, கேழல்,[2] கைதல், கொண்டல்,[3] கோடை, கௌவை எனவும், தந்தை, தாடி, திற்றி, தீமை, துணி, தூணி, தெற்றி, தேவர், தையல், தொண்டை, தோடு, தௌவை எனவும்,[4] நடம், நாரை, நிலம், நீர், நுழை, நூல், நெய்தல், நேயம், நைகை, நொய்யன, நோக்கம், நௌவி எனவும், படை, பாடி, பிடி, பீடம், புகழ்,[5] பூமி, பெடை,[6] பேடி, பைதல், பொன், போதகம், பௌவம் எனவும், [7]மடம், மாலை, மிடறு, மீனம், முகம், மூதூர், மெலிந்தது, மேனி, மையல், மொழி, [8]மோதகம், மௌவல் எனவும் வரும்.

சு. வே. 1. அவ்வைந்து
2. கைதை
3. கோடல்
4: நந்து
5. பூழி
6. பேடை
7. மடி
8. மோதம்

முதற்கு என்பதன் [1]நான்காம் உருபு விகாரத்தாற் றொக்கது.

நச்சினார்க்கினியர்

இது மேற்பொது வகையான் எய்துவித்த இருநூற்றொருபத் தாறு எழுத்துக்களைச் சிறப்பு வகையான் வரையறுத்து எய்து விக்கின்றது.

இ—ள்: கதநபம என்று கூறப்பட்ட அவ்வைந்து தனி மெய்யும், பன்னிரண்டு உயிரோடும் மொழிக்கு முதலாதற்குச் செல்லும்; எ—று.

எ-டு: கலை, கார், கிளி, கீரி, குடி, கூடு, கெண்டை, கேழல், கைதை, கொண்டல், கோடை, கௌவை எனவும்; தந்தை, தாய், தித்தி, தீமை, துணி, தூணி, தெற்றி, தேன், தையல், தொண்டை, தோடு, தௌவை எனவும், நந்து, நாரை, நிலம், நீலம், நுகம், நூல், நெய்தல், நேமி, நைவளம், நொச்சி, நோக்கம், நௌவி எனவும்; படை, பால், பிடி, பீடு, புகழ், பூமி, பெடை, பேடை, பைதல், பொன், போது, பௌவம் எனவும், மடி, மாலை, மிடறு, மீளி, முகம், மூப்பு, மெலிவு, மேனி, மையல், மொழி, மோத்தை, மௌவல் எனவும் வரும்.

சகரமெய் ஒன்பதுயிருடன் மொழிமுதல் ஆதல்

62. [2]சகரக் கிளவியும் அவற்றோர் அற்றே
அஐ ஔஎனும் [3]மூன்றலங் கடையே (29)

ஆ. மொ.

இல.

'e' follows the same rule exept with 'a' 'ai' and 'ou'.

க. சு.

The phoneme 'c' can similarly stand initially exept when followed by 'a' 'ai' and 'ou'.

சு. வே. 1. நான்காவது
2. அவைஔவெனும்
3. ஒன்றலங்

பி. இ. நூ.

இல. வி. 16. ஐஔள அலவொடு சகரமும்...முதலும்
(அகரத்துடன் சகரம் வரும் என்பது இதன் கொள்கை)

இளம்பூரணர்

இதுவும் அது.

இ—ள்: சகரக் கிளவியும் அவற்று ஓர் அற்று—சகரமாகிய எழுத்தும் மேற்சொல்லப்பட்டவைபோல எல்லா வுயிரோடும் மொழிக்கு முதலாம், அஐஔ எனும் மூன்று அலங்கடை—அஐஔ என்னும் மூன்றும் அல்லாவிடத்து,

எ-டு: சாலை, சிலை, சீறுக, சுரும்பு, சூழ்க, [1]செய்கை, சேவடி, [2]சொறுக, சோறு எனவரும்.

சகடம் எனவும் சையம் எனவும் விலக்கினவும் வருமால் எனின், அவற்றுள் ஆரியச் சிதைவல்லாதன கடிசொல் இல்லை (தொல்-சொல். எச்ச. 5) என்பதனாற் கொள்க.

நச்சினார்க்கினியர்

இதுவும் அது.

இ—ள்: சகரமாகிய தனி மெய்யும் முற்கூறியவை போல எல்லாவுயிரோடுங்கூடி மொழிக்கு முதலாம், அகர ஐகார ஔகாரம் என்று சொல்லப்பட்ட மூன்று உயிரும் அல்லாத இடத்து; எ—று.

எ—டு: சாந்து, சிற்றில், சீற்றம், சுரை, சூரல், செக்கு, சேவல், சொல், சோறு என வரும். சட்டி, சகடம், சமழ்ப்பு என்றாற் போல்வன 'கடிசொல் இல்லை' (எச்ச. 56) என்பதனாற் கொள்க. சையம் சௌரியம் என்பவற்றை வடசொல் என மறுக்க.

வேங்கடராசுலு ரெட்டியார்

சமழ்மை (நாலடியார் 72) சழக்கு (பெரியாழ்வார் திருமொழி 5. 1. 2) என்றாற் போல்வன பிற்காலத்தன.

சையம் சௌரியம் என்பன போல்வன வடமொழிச் சொற்கள்.

சு. வே. 1. செறுக.
2. சொரிக

நன்னூலாரும் நேமிநாதரும் ச, சை, சௌ இம்மூன்றும் மொழிமுதல் வரும் என்றனர். சை, சௌ எழுத்துக்கள் முதற்கண் உள்ள மொழிகள் தமிழில் இல்லன வாகலின் அவர் கொள்கை பொருந்தாது என்றும், சமழ்ப்பு சழக்கு என்பனபோலப் பிற்காலத்து வழங்கிய தமிழ் மொழிகளைக் 'கடிசொல் இல்லை காலத்துப் படினே' என்பதனால் தழுவிக் கொள்ளுதல் தகும் என்றுங் கொண்டு இலக்கண விளக்க நூலார், சை, சௌ இவ்விரண்டும் மொழிமுதற்கண் வாரா என்றார், (இலக்கண விளக்கம் 27. உரை) அவர் கொள்கையே பொருத்தம் உடையது; பிறர் கூறியவாறாயின், ரதம், லோகபாலர் என்னும் சொற்கள் செய்யுட்களில் வழங்கப் பட்டிருத்தலின் ர, ல முதலிய பிற பலவும் மொழிமுதற்கண் வரும் எனல் வேண்டும். அவை யெல்லாம் தமிழ்ச் சொற்களல்ல வாகலின் அவை மொழி முதற் கண் வரும் என்று கூறுதல் தக்கதன்றாதல் போலவே, சை சௌக்கள் முதற்கண் வரும் என்றலும் தக்கதன்று.

மயிலை நாதர் "சுட்டியா" என்னும் சூத்திரத்தின் (நன். 106) உரையில்,

சரி சமழ்ப்புச் சட்டி சருகு சவடி
சளி சகடு சட்டை சவளி—சவிசரடு
சந்து சதங்கை சழக்காதி யீரிடத்தும்
வந்ததன்னால் சம்முதலும் வை

என்னும் செய்யுளைக் காட்டி, சகரம் மொழி முதற்கண் வரும் என்றார். இச் சொற்கள் ஆசிரியர் காலத்தில் வழங்கியிருக்கு மேல் அவர் சகரத்தை விலக்கார். 'அ ஐ ஔ எனும் மூன்றலங் கடை' என்று கூறுதலின், ஆசிரியர் காலத்தில் சகர அகரமும் மொழி முதற்கண் வழங்கவில்லை என்பது தேற்றம். தபு, உரிஞ் என்று ஒவ்வொரு மொழியில் மட்டும் ஈற்றில் நிற்கும் எழுத் தினைக் கூறியவர், சகர முதன் மொழிகள் பல வழங்கியிருக்கு மேல் அதனை விலக்கு வாரல்லர்.

'சத்தான்' என்று வழங்கற் பாலதாகிய சொல் 'செத்தான்' என்று வழங்குகின்றது. தெலுங்கிலும் கன்னடத்திலும் மலையாளத்திலும் முறையே சச்செனு, சத்தனு, சத்து என்று வழங்குகின்றது. இவற்றால் தமிழில் சகர அகரம் மொழி முதற்கண் பண்டு சகர எகரச் சாயையில் ஒலித்ததாகும் என்பது உய்த்துணரக் கூடும்.

தேவநேயப்பாவாணர்

சகரம் மொழிமுதல் வாராதென்று கூறுவது தமிழுக்குச் சற்றும் பொருந்தாது. 'அ ஐ ஔ எனும் மூன்றலங்கடையே' என்னும் நூற்பா அடிக்கு "அவை ஔ என்னும் ஒன்றலங் கடையே" என்ற பாட வேறுபாடும் உள்ளது. சக்கட்டி, சக்கை, சகடு, சட்டை, சடசட, சடை, சடைவு, சண்டி, சண்டு, சண்டை, சணல், சதுப்பு, சப்பட்டை, சப்பென்று, சப்பாணி, சப்பு, சப்பை, சம்பு, சம்மட்டி, சமட்டு, சமம், சமழ், சமை, சரடு, சரள், சரி, சருகு, சருச்சரை, சரேலென, சல்லடை, சல்லரி, சல்லி, சலசல, சலங்கை, சலி, சவ்வு, சவம், சவர், சவை, சளி, சளக்கென, சழக்கு, சள்ளென, சள்ளை, சளை, சற்று, சறுக்கு, சன்னம் முதலிய நூற்றுக்கு மேற்பட்ட தனித்தமிழ்ச் சொற்கள் அடிப் படையானவும் தொன்று தொட்டவும் இன்றியமையாதனவும் வேருன்றினவும் சேரி வழக்கினவுமாயிருக்க, அவற்றைப் பிற்காலத்தன என்று கொள்ளுவது பெருந்தவறாகும். சக்கை, சட்டி, சண்டு, சண்டை, சதை, சப்பு, சவி, சற்று, சறுக்கு முதலிய சொற்கள் எத்துணை எளிமையும் இயல்புமானவை என்பது சொல்லாமலே விளங்கும். சண்டு சருகு முதலிய சில சொற்கள் பண்டு சகர முதலனவாயிருத்தல் கூடுமெனினும், சக்கு, சடார், சடேர், சரட்டு, சலசல, சரேல், சவ்வு, சளக்கு, சளார், சள் முதலிய ஒலிக்குறிப்புச் சொற்களும் அவற்றினடிப் பிறந்தவும் துவக்கந் தொட்டுச் சகர முதலனவாயே இருந் திருத்தல் வேண்டும். சாப்பிடு என்னும் உலக வழக்கெளிமைச் சொல் சப்பு என்னும் மூலத்தினின்றே தோன்றியதாகும். சப்பு + இடு = சப்பிடு—சாப்பிடு. சுவை என்னும் சொல்லும் சவை என்பதன் திரிபாகவே தோன்றுகின்றது. செத்தான் என்னும் இறந்த கால வினை முற்று பண்டைக் காலத்தில் 'சத்தான்' என்றே இருந்திருத்தல் வேண்டும். ஒ. நோ. காண்—கண்டான், நோ—நொந்தான். நெடின் முதலான வினைப் பகுதி இறந்த கால முற்றில் முதல் குறுகும்போது இனக் குறிலாய்க் குறுகுவதே மரபு; தெலுங்கிலும் சச்சினாடு. (செத்தான்) சச்சிப் போயினாடு (செத்துப்போனான்) என்றே சொல்வர். மேலும் முழுமுதல் அரணமும் வருபகை பேணார் ஆரெயிலும் அமைத்துக் கொண்ட தொல்காப்பியர் காலத்தமிழர் சட்டி செய்யத் தெரியாதிருந் தனர் என்பது பெருநகைக்கிடமானதாகும். சட்டி என்பது சமையலுக்கு இன்றியமையாததும் எளிநிலையானதும் மறு பெயரற்றதுமான கலவகை.

"சரி சமழ்ப்புச் சட்டி...வை"

என்பது நன்னூல் மயிலை நாதர் உரை மேற்கோள்.

வகரமெய் எட்டு உயிருடன் மொழி முதல் ஆதல்

63. உ ஊ ஒ ஓ என்னும் நான்குஉயிர்
வ என் எழுத்தொடு வருதல் இல்லை. **(30)**

ஆ. மொ.

இல.

u, ū, o and ō—these fohr vowels with the consonant 'v' never come at the beginning of words.

க. சு.

'v' does not occur together with the four vowels u, ū, o, o (initially)

பி. இ. நூ.

வீர.	7.	வவ்வில் ஏவிய எட்டும்
நேமி :	7.	ஈட்டிய வவ்வரியின் எட்டெழுத்தும்.
நன் :	103.	உ ஊ ஒ ஓ அலவொடு வம்முதல்.
இல. வி.	27.	உ ஊ ஒ ஓ அலவொடு வகரமும்.
முத்து.	64.	உ ஊ ஒ ஓ அலவொடு வவ்வரும்.

இளம்பூரணர்

இதுவும் அது.

இ—ள் : உஊஒஓ என்னும் நான்கு உயிர்—உஊஒஓ என்று சொல்லப்படுகின்ற நான்கு உயிரும், வஎன் எழுத்தொடு வருதல் இல்லை—வ என்னும் மெய்யெழுத்தோடு மொழி முதலில் வருதல் இல்லை.

பிற உயிர்கள் வரும்.

எ—டு: வளை, வாளை, விளரி, வீடு, வெள்ளி, வேர், வையம், வெளவு எனவரும்.

நச்சினார்க்கினியர்

இதுவும் அது.

இ—ள் : உஊஒஓ என்று சொல்லப்பட்ட நான்கு உயிரும், வ என்று சொல்லப்படும் தனிமெய்யெழுத்தோடு கூடி மொழிக்கு முதலாய் வருதல் இல்லை; எ—று.

எனவே, ஒழிந்தன மொழிக்கு முதலாம் என்றவறாயிற்று.

எ-டு: வளை, வாளி, விளிரி, வீடு, வெள்ளி, வேட்கை, வையம், வெளவுதல் எனவரும்.

வேங்கடராசலு ரெட்டியார்

உஊமுதலான நான்கெழுத்துக்களோடு வகரம் மொழிமுதல் வாராததற்குக் காரணம் என்னை எனின்,

"பல்லிதழ் இயைய வகாரம் பிறக்கும்" (எழு. 98)

எனவும்,

"உஊ ஒஓ ஔஎன இசைக்கும்
அப்பால் ஐந்தும் இதழ்குவிந் தியலும்" (எழு. 87)

எனவும் முன்னர்க் கூறுவாரதலின், பல்லும் இதழும் சேரப் பிறக்கும் வகர மெய்யோடு, இரண்டு இதழும் குவியப் பிறக்கும் உகர முதலிய உயிர் எழுத்துக்களைச் சேர்த்து முதற்கண் ஒலித்தல் நன்கு இயலாமையேயாகும்.

ஆயின் வகர ஔகாரம் ஒலித்தல் எவ்வாறோ எனின் அது 'வவ்' என்னும் ஒலியினை யுடையதாதலின் ஒலித்தல் இயலும்.

ஞகரமெய் மூன்றுயிருடன் மொழி முதல் ஆதல்

64. ஆஎ
ஒஎனும் மூவுயிர் [1]ஞகாரத் துரிய (31)

ஆ. மொ.

இல.

ā, e and o—these three vowels with 'ṉ' appear at tae beginning of words.

க. சு.

ñ is accompanied by the three vowels ā, e, o (inilially)

பி. இ. நூ.

வீர. 7: ஞந் நான்கும்...மொழி முதல் (ஞமலி என அகரத் துடன் வரும் என்பது இது)

நேமி. 6. ஞ...வின் கண்...மூன்று மொழிக்குமுன்.

சு. வே. 1. ஞகாரக் குரிய

நன். 105. அஆ எஒவ்வோடு ஆகும் ஞம்முதல்.
இல.வி. 27. ஆஎ ஒவ்வொடு ஞகாரமும்...முதலும்.
முத்து. 62. அஅ எஒவ்வோ டாகும் ஞம்முதல்.

இளம்பூரணர்

இதுவுமது.

இ—ள்: ஆஎஒ எனும் மூவுயிர் ஞகாரத்து உரிய—ஆஎஒ என்று சொல்லப்படும் மூவுயிர்கள் ஞகார ஒற்றோடு முதலாதற்கு உரிய; பிற உயிர் உரியவல்ல.

எ-டு: ஞாலம்,[1] ஞெகிழி, ஞொள்கிற்று எனவரும்.

ஞழியிற்று என்றாற்[2]போல்வன விலக்கினவும் வருமால் எனின் அவை[3]அழிவழக்கென்று மறுக்க.

நச்சினார்க்கினியர்

இதுவும் அது.

இ—ள்: ஆஎஒ என்று கூறப்படும் மூன்று உயிரும், ஞகர ஒற்றோடு கூடி மொழிக்கு முதலாதற்கு உரிய; எ-று.

எனவே ஏனைய உரியவல்ல என்பதாம்.

எ—டு: ஞாலம், ஞெண்டு, ஞொள்கிற்று எனவரும்.

"ஞமலி தந்த மனவுச் சூலுடும்பு" (பெரும்பாண். 32) என்பது திசைச்சொல், ஞழியிற்று என்றாற் போல்வன இழி வழக்கு.

சுப்பிரமணிய சாஸ்திரியார்

"ஞமலி தந்த மனவுச்சூல் உடும்பு என்பது திசைச் சொல்" என்ற தொடர் நச்சினார்க்கினியத்தில் உள்ளது. இவ்விலக்கணம் செய்யுளீட்டச் சொற்கள் எல்லாவற்றிற்குங் கொள்ளப்பட வேண்டுமேயன்றி இயற் சொற்களுக்கு மாத்திரம் கொள்ளப் படுதல் இயலாது, அவ்வாறு எங்கும் கூறப்படாமையின். அவ்வா றாயின் 'ஞமலி' என்ற சொல் இருக்கும்போது ஆசிரியர் ஏன் அதனைக் கொள்ளவில்லையெனின், அச்சொல் அவர் காலத்துப் பெரும்பான்மையும் வழங்கப்பட வில்லை எனக் கொள்ளுதலே

சு. வே. 1. ஞெளிந்தது
2. போலும்
3. இழிவழக்கு

சாலும். அன்றியும் பூதம், தெய்வம் முதலிய வட சொற்களைச் சொல்லதிகாரத்துள் ஆசிரியர் கூறி அவற்றிற்குப் பயனிலை எவ்வாறு வரும் என்றதைக் கூறுதல் நோக்கத்தக்கது.*

வேங்கடராகுலு ரெட்டியார்

ஞமலி என்னும் சொல் திசைச் சொல்லாய் வந்து வழங்கினதையும் சேர்த்து நன்னூலார் "அஆஎ ஒவ்வோடாகும் ஞம் முதல்" (நன். 106) என்றார். நேமிநாத நூலாரும் (எழுத். 7) இலக்கணவிளக்க ஆசிரியரும் (27) ஞகரத்தில் இவ்வாசிரியர் கூறிய மூன்றெழுத்துக்களையே கூறியுள்ளனர்-ஞகரத்தில் இம் மூன்றெழுத்துக்களேயன்றி ஏனையவை மொழிமுதற்கண் வாராத காரணம் விளங்கவில்லை.

பிற குறிப்புகள் :

வளை ஞரல (பதிற்று. 30) வரிஞிமிறு (கலி. 127) என ஞகரம் அகர இகரங்களுடன் மொழிமுதலில் வந்தது தொல்காப்பியர்க்குப் பிற்பட்டாகலாம்.

நரல—ஞரல. மிஞிறு—ஞிமிறு என வந்தன எனின் தடையில்லை.

யகரம் ஆகாரத்துடனே மொழிமுதல் ஆதல்

65. ஆவொடு அல்லது யகரம் முதலாது (32)

ஆ. மொ.
இல.

'y' exept with 'ā' never commences a word.

க. சு.

'y' does not occur initially except when followed by 'ā'.

பி. இ. நூ.

வீர. 7. யவ்வாறும்...மொழிமுதலே
நேமி. 7. யவின்கண்...மூன்று நன்மொழிக்கு முன்
(யானை, யுகம், யோகி,)
நன். 104. அஆஉஊஓஔயம் முதல்

* கூறப்பட்டதெங்கு?

இல.வி. 27. ஆவோடு யகரமும் முதலும்

முத்து. 63. அஆஉஊஒஔ வோடு யகரம் மொழிமுதல் ஆகும் என்ப.

குறிப்பு :

நன்னூல் ஙகரமும் மொழி முதலாகும் என்னும் அது:

106. சுட்டு யாஎகர வினா வழி அவ்வை
ஒட்டி ஙவ்வும் முதல் ஆகும்மே.
(அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம், யாங்ஙனம், எங்ஙனம்.)

இளம்பூரணர்

இதுவுமது.

இ—ள் : ஆவொடு அல்லது யகரம் முதலாது—ஆகாரத் தோடல்லது யகரம் முதலாகாது.

எ—டு : [1]யான் எனவரும்

யவனர் என்றாற்போல்வன விலக்கினவும் வருமால் எனின், அவை ஆரியச்சிதைவென்று மறுக்க.

நச்சினார்க்கினியர்

இதுவுமது.

இ—ள் : ஆகாரத்தோடு கூடியல்லது யகர ஒற்று மொழிக்கு முதலாகாது ; எ—று.

எ—டு : யானை, யாடு, யாமம் என வரும்.

யவனர், யுத்தி, யூபம், யோகம், யௌவனம் என்பன வட சொல் என மறுக்க.

பிறகுறிப்புகள் :

ஆ, ஊ, ஓ என்ற மூன்றெழுத்துடன் யகரம் மொழி முதலாகும் என்பது நேமிநாதம். (எழுத். 7)

'அ ஆ ஊ ஓ ஔ யம் முதல்' என்பது நன்னூல். (104).

"இகர ஈகார எகர ஏகாரங்கட்குப் பிறப்பிடமாகிய இடை யண்ணமே யகரத்திற்குப் பிறப்பிடமாகலின், மொழி முதற்கண்

சு. வே. 1. யானை

யி யீ யெ யே ஒலித்தல் அரியதாகும் போலும். உ ஊ ஒ ஓ ஔ இவை இதழ்குவியப் பிறப்பனவாதலின் இடையண்ணத்திற் பிறக்கும் யகரத்தொடு முதற்கண் வருதல் அரியவாயின. ய மொழி முதற்கண் வராத காரணம் நன்கு விளங்கவில்லை. இதனைக் குறித்து *அரசஞ் சண்முகனார் எழுதியிருப்பது அறியத் தக்கது" என்பர் வேங்கடராசுலு ரெட்டியார். தொல்காப்பியர் காலத்தில் யகரமுதல் மொழி வழக்கில் இல்லை. பிற்கால வழக்கிலும் உருப்பெறவில்லை. இன்றுவரை யகர முதல் மொழி தமிழில் தோன்றவில்லை.

எல்லா எழுத்தும் முதல் ஆம் இடம்

66. முதலா ஏன தம்பெயர் முதலும் (33)

ஆ. மொ.

இல.

The letters which do not serve as initials, will become initials while denoting their names.

க. சு.

Other (consonants) which do not occur inilially will occur inilially (when they) denote themselves.

பி. இ. நூ.

நன்.	121	தம் பெயர் மொழியின் முதலும் மயக்கமும் இம்முறை மாறியும் இயலும் என்ப.
இல. வி.	35.	தம் மரபு இசைப்பின் முதல்ஈறு இடைநின்ல் அம்மரபு இல்லனவும் ஆம் என மொழிப
முத்து.	81	தம்பெயர் மொழியின் முதலும் மயக்கமும் இம்முறை மாறியும் இயலும் என்ப.

இளம்பூரணர்

இது, மொழிக்கு முதலாகாதனவும் ஒரோ வழி ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள் : முதலா ஏன—மொழிக்கு முதலாகாத ஒழிந்த மெய்களும், தம்பெயர் முதலும்— (அவ்வெழுத்துக்கள்) தம் பெயர் கூறுதற்கு முதலாம்.

முதலாயினமெய் க த ந ப மக்களும், வகரமும், சகரமும், ஞகரமும், யகரமும் என இவை. முதலாகாத மெய் ஙகரமும்,

* செந்தமிழ். தொகுதி 2: பக். 82;3.

டகரமும், ணகரமும், ரகரமும், லகரமும், ழகரமும், ளகரமும், றகரமும், னகரமும் என இவை.

எ—டு : அவை தம்பெயர்க்கு முதலாமாறு :— ஙக்க ளைந்தார், டப்பெரிது, ணந்நன்று என்றாற்போல ஒட்டிக் கொள்க.

இனி ஏன என்றதனான் முதலாம் என்னப்பட்ட ஒன்பது [1]உயிர்மெய்யும் பன்னிரண்டு உயிரும் தம் பெயர் கூறும் வழியும் மொழிக்கு முதலாம் எனக் கொள்க.

கக்களைந்தார், தப்பெரிது, அக்குறிது, ஆவலிது என்றாற் போல ஒட்டிக்கொள்க.

நச்சினார்க்கினியர்

இது, மொழிக்கு முதலாகாதனவும் ஒரோ வழி ஆம் என்கிறது.

இ—ள் : மொழிக்கு முதலாகா என்ற ஒன்பது மெய்யும், மொழிக்கு முதலாம் என்ற ஒன்பது மெய்யும் பன்னிரண்டுயிரும், தத்தம் பெயர் கூறுவதற்கு முதலாம் ; எ—று.

முதலாவும் ஏனவும் என்ற உம்மைகள் தொக்கு நின்றன.

எ—டு : ஙகரமும், டகரமும், ணகரமும், ரகரமும், லகரமும், ழகரமும், ளகரமும், றகரமும், னகரமும் என மொழிக்கு முதலாகாத ஒன்பதும் முதலாமாறு : ஙக்களைந்தார், டப்பெரிது, ணந்நன்று என வரும். இவ்வாறே ஏனையவற்றையும் ஒட்டுக. இனி ஏன என்றதனான் கக்களைந்தார், தப்பெரிது அக்குறிது, ஆநெடிது என மொழிக்கு முதலானவற்றையும் தம் பெயர் கூறுதற்கு முதலாமாறு ஒட்டிக்கொள்க, வரையறுக்கப் பட்டு மொழிக்கு முதலாகாது நின்ற மெய்க்கும் இவ்விதி கொள்க. அவை சகரத்து மூன்றும், வகரத்து நான்கும், ஞகரத் தொன்பதும் யகரத்துப் பதினொன்றுமாம்.

பிற குறிப்புகள் :

"ஏனை என்றதனால்...முதலாம் எனக் கொள்க" என இளம்பூரணர் எழுதி உதாரணம் காட்டியதையும், 'ஏனை' என்பதற்கு நச்சினார்க்கினியர் கொண்ட பொருளையும் அருத்தாபத்தியினாலேயே கொள்ளலாம் என்பர் வேங்கடராசுலு ரெட்டியார்.

சு. வே. 1. மெய்யும்

சுப்பிரமணிய சாஸ்திரியார், "சொல்லதிகாரத்தில் "பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும், சொல்லி னாகும் என்மனார் புலவர்" (156) என ஆசிரியர் கூறியிருக்கின்ற மையின் அவ்விருவர் கூற்றும் வேண்டா என்பர். ரெட்டியார் கூறியாங்குக் கொள்வதே பொருந்தும்.

முதலும் என்பது முதல் என்னும் பெயரடியாகப் பிறந்த வினை என்பர் பிரயோக விவேக நூலார். (35)

குற்றியலுகரம் மொழி முதல் ஆமாறு

***67. குற்றிய லுகரம் முறைப்பெயர் மருங்கின்**
ஒற்றிய நகரமிசை நகரமொடு முதலும். (34)

ஆ. மொ.

இல.

The shortened 'u' when joining consonant 'n̲' of noun which denotes relationship becomes the initial.

க. சு.

The overshort 'u' when it occurs in a noun denoting relationship, will occur initially pronounced before the consonant 'n'.

குறிப்பு

மொழி முதற் குற்றியலுகரத்தைப் பின்வந்த இலக்கண நூலார் யாரும் கைக் கொள்ளவில்லை. இதை மறுத்தல் என்னும் மதம் என்பர் சங்கர நமச்சிவாயர். (நன்னூல் 94 இன் உரை).

இளம்பூரணர்

இது, குற்றியலுகரம் மொழிக்கு முதலாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: குற்றியலுகரம் முறைப்பெயர் மருங்கின்—குற்றிய லுகரம் முறைப் பெயரிடத்து, ஒற்றிய நகரமிசை நகரமொடு முதலும்—ஒற்றாய் நின்ற நகரத்தின் மேலாய நகரத்தோடு மொழிக்கு முதலாம்.

எ—டு: நுந்தை எனவரும்.

இவ்வாறு முதலாக்கம் கூறவே, மொழி முதற் குற்றிய லுகரத்திற்கு இடமும் பற்றுக் கோடும் கூறியவாறாயிற்று. இடம் நுந்தை என்னும் முறைப் பெயர். பற்றுக்கோடு நகர மிசை நகரம்.

* உய்த்துக் கொண்டுணர்தல் என்ற உத்திக்கு மேற்கோள் தொல். பொருள். 665 பேராசிரியர்.
நன்னூல் 105 இல் மயிலைநாதர் ஆட்சி.

நச்சினார்க்கினியர்

இஃது எழுத்துக்களை மொழிக்கு முதலாமாறு கூறி முறையே குற்றியலுகரம் மொழிக்கு முதலாமாறு கூறுகின்றது.

இ—ள்: குற்றியலுகரமானது முன்னிலை முறைப் பெயரிடத்து, தனி மெய்யாய் நின்ற நகரத்துமேல் நின்ற நகரத்தோடு கூடி மொழிக்கு முதலாம்;எ—று.

நுந்தை எனவரும். இதனானே முறைப் பெயர் இடமும் நகரம் பற்றுக்கோடும் ஆயிற்று. ஈண்டுக் குற்றியலுகரம் மெய்ப் பின்னர் நின்றதேனும் ஒற்றுமை நயத்தான் மொழிக்கு முதல் என்றார். இது செய்யுளியலை நோக்கிக் கூறியதாயிற்று.

சுப்பிரமணிய சாஸ்திரியார்

61-வது சூத்திரத்தில் நகரம் எல்லா வுயிரொடும் செல்லுமார் முதலே எனக் கூறப்பட்டிருக்க இச்சூத்திரம் எற்றுக்கு எனின், நூன் மரபில் அகர முதல் ஔகார இறுவாய் உள்ள எழுத்துக்களையே உயிராக ஆசிரியர் கூறினமையானும், எல்லா வுயிரொடும் என்றதனான் குற்றியலுகரம் கொள்ளப்படாமை யானும், இச்சூத்திரம் வேண்டும் என்க. நகரம் எல்லா வுயிரொடும் செல்லும் என்றவாறு ஈண்டும் நகரம் குற்றியலுகர மொடு செல்லுமார் முதலே எனக் கூறாது குற்றியலுகரம் நகர மொடு முதலும் என ஏன் ஆசிரியர் கூறினர் எனின், ஆண்டு உயிர் மெய்களுள் உயிர் சிறப்புடைத்து என்றதை நோக்கியும், ஈண்டுச் சார்பெழுத்தாகிய குற்றியலுகரத்தினைக் காட்டிலும் அதன் சார்பாகிய மெய்சிறந்தது என்றதை நோக்கியும் என்க.

நகரத்தின் பின்னர் வரும் குற்றியலுகரத்தை மொழிக்கு முதல் எனக் கூறுதல் எவ்வாறு பொருந்தும் எனின், "அவை யோருள் முன்னர் அரசனொடு வேலைக்காரன் வந்தான்" என்ற வழக்குப் போலக் கூறினர் என்க. ஆகலின் நுந்தை என்ற சொல்லின்கண் 'ந்தை' என்ற பகுதிக்கு முதலில் குற்றியலுகரம் வரும் என்றதே கருத்தாயிற்று.

> **நெட்டெழுத் திம்பரும் தொடர்மொழி யீற்றும்**
> **குற்றியலுகரம் வல்லா றூர்ந்தே** (எழுத்ததி. 36)

என ஆசிரியர் கூறியிருக்க, ஈண்டு நகரத்தின் பின்னர் எவ்வாறு குற்றியலுகரம் வரும் எனின், அவர் காலத்து 'நுந்தை' என்ற சொல்லிலுள்ள உகரம் முற்றியலுகரமாயும் குற்றியலுகரமாயும் ஒலிக்கப்பட்டதை நோக்கி இச்சூத்திரம் கூறினர் என்க.

ஆகலின் முற்றியலுகரம் கொண்ட நகரம் மொழி முதலாய் வரும் என 61-ஆவது சூத்திரத்தாற் பெறப்பட, அவ்வுகரம் குற்றியலுகரமாகவும் ஒலிக்கப்பட்டது என்பது இச்சூத்திரத்தாற் கிடைத்த பொருளாகும்.

வே. வேங்கடராசுலு ரெட்டியார்

ஈண்டு மொழிமுதற்கண் நிற்பது நகரமெய்யேயாயினும், முதற்கண் மெய்யெழுத்து ஒலிக்க இயலாமையானும், அதனை ஒலிக்கச் செய்தல் உயிர் எழுத்தே ஆகலானும் ஒற்றுமை நயத்தால் 'குற்றியலுகரம் நகரமொடு முதலும்' என்றார்.

நகரம் மேற்பல் முதலிடத்து நா நுனி பரந்து ஒற்றப் பிறத்தலானும், உகரம் இரண்டு இதழும் குவித்துக் கூறப் பிறப்ப தாதலானும், இரண்டு நகர வொலிகளை ஒலித்தற் கிடையே, நன்கு இதழ் குவித்துக் கூறும் முயற்சி நிலையாமையான் உகரம் அரை மாத்திரையளவாக ஒலிக்கின்றது என்பது உய்த்துணர்தல் கூடும். மயிலை நாதர் தம் உரையில் (நன். 105)

நுந்தை யுகரங் குறுகி மொழிமுதற்கண்
வந்த தெனினுயிர்மெய் யாமனைத்தும்—சந்திக்
குயிர்முதலா வந்தணையும் மெய்ப்புணர்ச்சி யின்றி
மயலணையும் என்றதனை மற்று.

என்னும் வெண்பாவினைக் காட்டி, மொழிமுதற்கண் குற்றுகரம் உளது என்றல் பொருந்தாது என்றார். ஆசிரியர் ஒற்றுமை நயங்கருதி இவ்வாறு கூறினார் என்று அமைத்துக் கோடலே தக்கது; முன்னர்,

"நீயென் ஒருபெயர் நெடுமுதல் குறுகும்" (எழுத். 179)
"மூன்றன் முதனிலை நீடல்" (குற்றி. 52)

என்னும் சூத்திரத்தும் இவ்வாறே ஒற்றுமை நயத்தாற் கூறியுள்ளாராகலின்.

ஆசிரியர் மொழிக்கு முதலாகும் எழுத்து இருப்த்திரண்டு என்றாராயினும், உயிர்மெய் எழுத்துக்களைத் தனித்தனியே எண்ணின், மொழிக்கு முதலாகும் எழுத்துத் தொண்ணூற்று நான்கு ஆகும். அவையாவன.

உயிர் எழுத்து	12	பகர வரி	12
ககர வரி	12	மகர "	12
சகர ,,	9	யகர "	1
ஞகர ,,	3	வகர "	8
தகர ,,	12	மொழிமுதற்குற்றுகரம்	1
நகர ,,	12		94

இவ்வாறே மொழிமுதலெழுத்துக்கள் தொண்ணூற்று நான்கு என்றார் இலக்கண விளக்க நூலாரும். நேமிநாதமுடையார் தொண்ணூற்றெட்டுக் காட்டினார். நன்னூலார் நூற்று மூன்று கொண்டார். அவையெல்லாம் பொருந்தாமை மேலே ஆங்காங்குக் கூறியுள்ளதனால் அறியலாம்.

மொழிமுதல் குற்றியலுகரப் பொருள்நிலை.

68. முற்றிய லுகரமொடு பொருள்வேறு படாஅது
அப்பெயர் மருங்கின் நிலையிய லான. (35)

ஆ. மொ.

இல.

If this shortened 'u' in relationship denoting noun is pronounced as full 'u' the meaning will not be different.

க. சு.

With the full 'u' the meaning will not change, if that item will occur in its place.

இளம்பூரணர்

இது, மேலதற்கோர் புறனடை.

இ—ள்: முற்றியலுகர மொடு பொருள் வேறு படாது—(அம்முதற்கட் குற்றியலுகரம் ஆண்டு இதழ்குவித்துக் கூறும் வழி) முற்றுகரத்தோடு பிற உகரம் போலப் பொருள் வேறு படாது, (யாண்டெனின்,) அப்பெயர் மருங்கின் நிலையியலான்—அம்முறைப் பெயரிடத்துத் தான் நிற்றற்கண்.

எ—டு: நாகு எனவும் நகு எனவும் குறுகியும் குறுகாதும் நின்ற உகரங்கள் போல, நுந்தை என்று [1]குறுக்கமாய வழியும், இதழ் குவித்துக் கூறக் குறுகாத வழியும் பொருள் வேறுபடாத வாறு அறிக.

இனி இரட்டுற மொழிதல் என்பதனால், பொருள் என்றதனை இடனும் பற்றுக்கோடும் ஆக்கிப் பிற உகரங்கள் போல ஈண்டை [2]உகரங்கள் இடனும் பற்றுக்கோடும் [3]வேறுபடா என்பது கொள்க.

சு. வே: 1. குற்றுகரமாய
2. உகரம்
3. வேறுபடாது

நச்சினார்க்கினியர்

இது மேலதற்கோர் புறனடைகூறுகின்றது.

இ—ள் : அம்முறைப் பெயரிடத்தே நிற்றல் இலக்கணமான குற்றியலுகரம், இதழ் குவித்துக் கூறும்வழி வரும் முற்றுகரத்தோடு அவ்விடத்துக்குற்றுகரம் பொருள் வேறு படுமாறு போல ஈண்டுப் பொருள் வேறுபட்டு நில்லாது; எ—று.

எ—டு : காது, கட்டு, கத்து, முருக்கு, தெருட்டு என்பன முற்றுகரமும் குற்றுகரமுமாய்ப் பொருள் வேறுபட்டு நின்றாற் போல நுந்தை என்று இதழ் குவித்து முற்றக் கூறியவிடத்தும் இதழ் குவியாமல் குறையக் கூறிய விடத்தும் ஒருபொருளே தந்தவாறு காண்க. நுந்தாய் என்பதோ எனின், அஃது இதழ் குவித்தே கூறவேண்டுதலிற் குற்றுகரமன்று. இயல் என்றதனான் இடமும் பற்றுக்கோடும் இரண்டிற்கும் வேறுபா டின்றென்று கொள்க. இதனானே மொழிக்கு முதலாமெழுத்துத் தொண்ணூற்று நான்கென்று உணர்க*.

சிவலிங்கனார்

பொருள் வேறுபடாது என்பதற்கு உரையாசிரியர் இருவரும் வேறு வேறு பொருள் கொண்டனர்.

காது என்பதின் உகரத்தைக் குற்றியலுகரமாகக் கொள்ளின் பெயர்ச்சொல்லாகவும், முற்றுகரமாகக் கொள்ளின் ஏவல் முற்றாகவும் பொருள் வேறுபடுதல் போல, நுந்தை என்பதின் உகரத்தை எவ்வாறு கொண்டாலும் நும்தந்தை என்ற பெயர்ச்சொல் நிலையில் வேறுபடுதல் இல்லை என்பது நச்சினார்க்கினியர் கொண்ட பொருள்.

நாகு என்பதின் உகரம் குற்றியலுகரமாக உள்ளபோதும் நகு என்பதின் உகரம் முற்றுகரமாக உள்ளபோதும் உயிர் என்ற பொருளில் அவை வேறு படாதவாறு போல, நுந்தை என்பதில் உள்ள உகரம் குற்றியலுகர மாகும்போதும் முற்றுகரமாகும் போதும் உயிர் என்ற பொருளில் மாறுபடுவதில்லை'' என்பது இளம்பூரணர் கொண்ட பொருள். இதற்குச் சான்று ''அவைதாம் குற்றியலிகரம்'' (எழு. 2.) என்ற நூற்பாவில்,

> ''சந்தனக்கோல் குறுகின விடத்துப் பிரப்பங்கோல் ஆகாது: அதுபோலவே இகர உகரங்கள் குறுகினவிடத்தும் அவை உயிர் ஆகற்பாலன''

என்று அவர் எழுதியதாகும்.

---

* மொழிமுதல் எழுத்து (நூற்பா 61 முதல் 66 வரை) 93. மொழி முதற் குற்றுகரம் ஒன்று சேர 94.

மேலும் இளம்பூரணர் பொருள் என்பதற்கு இடனும் பற்றுக்கோடும் எனப் பொருள் கொண்டதும் ஓரளவில் பொருந்துவதாம்.

'ஈற்றுக்குற்றியலுகரத்திற்கு இடனும் பற்றுக்கோடும் உண்டு; ஈற்றுமுற்றுகரத்துக்கு இடனும் பற்றுக்கோடும் இல்லை; வேண்டியவாறு வரப்பெறும். ஆனால் நுந்தை என்ற சொல்லில் முதற்கண் உள்ள 'ந்' என்பது குற்றுகரத்துக்கும் முற்றுகரத்துக்கும் உரியதாகவே யுள்ளது; வேறு பாடில்லை. இக்கருத்தும் ஏற்கக் கூடியதே.

நுந்தை என்பதே நும்தந்தை என்ற பொருளுடையதாயினும் அவ்வாறு பிரித்துக்காணாமல் ஒரு சொல்லாகவே கொண்டு ஒலிக்கும் போது அதிலுள்ள உகரம் குற்றியலுகரமாகவும், நும்தந்தை என்ற இருசொற்பொருளைக்கொண்டு ஒலிக்கும் போது அது முற்றுகரமாகவும் கருதப்படும். குற்றுகரமாம் போது ஒரு சொல்லாகவும் முற்றுகரமாம் போது இருசொல் நிலையாகவும் கருதப்படும்.

த ந நு எ எனும் அவைமுத லாகிய
கிளைநுதற் பெயரும் பிரிப்பப் பிரியா. (சொல். 410)

என்ற நூற்பாவினால் நுந்தை என்ற முறைப்பெயர் பிரிக்கக் கூடாமை அறியலாம்.

7. மொழியிறுதி எழுத்துகள்

7. மொழியிறுதி எழுத்துகள்

69. உயிர் ஔ எஞ்சிய இறுதி யாகும் (36)

ஆ. மொ.

இல.

All the vowels except 'ou' form the end of the words.

க.சு.

[All] vowels except au occur finally.

பி.இ. நூ:

வீர. 8. ஈரைந்து எழில் உயிரும்...ஈற்றெழுத்தாம் என்பர். (எ, ஒ நீங்கலாக)

நேமி. 8. உயிரின்கண் ஒன்பான் ... ஈற்றெழுத்தாம் என்றுரைப்பர் (எ, ஒ, ஔ நீங்கலாக)

நன். 107. ஆவி......ஈறே. (பன்னிரண்டும் ஆம்)
108. குற்றுயிர் அளபின் ஈறாம். (தனிக்குற் றெழுத்து பற்றியது இது.)
இல. வி. 29. குற்றுயிர் அளபின் ஈறாம்.

இளம்பூரணர்

இது, உயிர் மொழிக்கு ஈறாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்; உயிர் ஔ எஞ்சிய இறுதி ஆகும்—[1]உயிர் எழுத்துக் களுள் ஔகாரம் ஒழிந்தவை மொழிக்கு ஈறாம், ஔகாரந்தான் ஈறாகாது.

இஃது உயிர்க்கும் உயிர்மெய்க்கும் பொது.

எ-டு: ஆஅ, ஆ, ஈஇ,ஈ, ஊஉ, ஊ, ஏஎ, ஏ, ஐஇ, ஐ, ஓஒ ஓ, என உயிர் ஈறாயின. இவற்றுட் குற்றெழுத்தைந்தும் அள பெடை வகையான் ஈறாயின.

உயிர்மெய்களும் மேல்வரையறை கூறாதனவாகிய அகர ஆகார இகர ஈகார ஐகாரங்களோடு இயைந்தன ஈண்டே கொள்க.

எ-டு: விள, பலா, கிளி, குரீ, பனை எனவரும்.

நச்சினார்க்கினியர்

இஃது உயிர் மொழிக்கு ஈறாமாறு கூறுகின்றது.

இ—ள்:உயிர்களுள் ஔகாரம் ஒழிந்தனவெல்லாம் மொழிக்கு ஈறாம்; எ-று.

எனவே ஔகார உயிர் ஈறாகா தாயிற்று. இஃது உயிர்க்கும் உயிர்மெய்க்கும் பொது.

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என இவைதாமே ஈறாயின. ஆஅ, ஈஇ, ஊஉ, ஏஎ, ஓஒ எனக்குறில் ஐந்தும் அளபெடைக்கண் ஈறாயின. கா தீ பூ சே கை கோ எனவும், விளி, கிளி, மழு எனவும் வரும். எகர ஒகரம் மேலே விலக்குப, 'அளபெடை மிகூஉம் இகர இறுபெயர்' (சொல். 125) என்பராதலின் அள பெடைப் பின்வந்த குற்றெழுத்தும் கொள்வர்* ஆசிரியர்

சு. வே. 1. உயிர் எழுத்துக்கள்.

* தொழி என்பது தொழிஇ என அளபெடுத்து அது தொழி இ இ என அளபு மிகும் என்பது, அளபெடைமிகூஉம் இகர இறு பெயர் (சொல். 125) என்பதில் பெறப்பட்டது. அவ்விகரமும் இறுயிதில் வரும்.

என்றுணர்க. நெட்டெழுத்தேழும் முதன்மொழியாம் என்னுந் துணையே முன் உணர்த்துதலின் ஈண்டு அவை ஈறாம் என்றும் உணர்த்தினார்.

சுப்பிரமணிய சாஸ்திரியார்

இச்சூத்திரவுரையில் 'இஃது உயிர்க்கும் உயிர்மெய்க்கும் பொது' எனக் கூறினர் உரைகாரர்கள். இம்மொழி மரபினுள் உயிரையும் மெய்யையும் தனியெழுத்துகளாய்க் கொண்டு ஆசிரியர் சூத்திரங்கள் கூறினமையின், அவ்வாறு உரைகாரர்கள் கூறுதல் வேண்டா.

ஔ ஈறாகும் இடம்.

70. [1]கவவொடு இயையின் ஔவும் ஆகும் (37)

ஆ. மொ.

இல.

'Ou' also appears at the end which joining 'k' and 'v'

க.சு.

'Au' will also occur in preceded by k [for] v.

பி.இ.நா.

நன். 108. ஔ ககர வகரமொடு ஆகும் என்ப.

இல. வி. 29. ஔ ககர வகரமொடு ஆகும் என்ப.

இளம்பூரணர்

இது, ஈறாகாதென்ற ஔகாரம் இன்னுழி ஆம் என்கின்றது.

இ—ள் : கவ ஒடு இயையின்—ககர வகரமாகிய மெய்களோடு பொருந்தின், ஔவும் ஆகும்—முன் ஈறாகாதென்ற ஔகாரமும் ஈறாம்.

எ-டு: கௌ, வௌ எனவரும்.

நச்சினார்க்கினியர்

இஃது ஈறாகாதென்ற ஔகாரமும் இன்னுழி ஆம் என் கின்றது.

இ—ள் : முன் ஈறாகாதென்ற ஔகாரமும் ககர வகரத்தோடியைந்த வழி ஈறாம்; எ—று.

எ-டு: கௌ, வௌ எனவரும். எனவே, ஒழிந்த உயிரெல்லாம் தாமே நின்றும் பதினெட்டு மெய்களோடுங் கூடி நின்றும்

சு. வே: 1 கவவோ

ஈறாதல் இதனால் பெற்றாம். இதனானே ஒளகாரம் ஏனை மெய்க்கண் வாராதெனவிலக்குதலும் பெற்றாம். உயிர் நகரத் தோடு கூடி மொழிக்கு ஈறாம் என்பது இதனால் எய்திற்றேனும் அது மொழிக்கு ஈறாகாமை தந்து புணர்ந்துரைத்தலான் உணர்க*. இது வரையறை கூறிற்று.

பிற குறிப்புகள்

''நற்றிணையில் 'தெள' என்று கருதும்படி ஒரு சொல் வந்துளது, ''கண்ணும் காட்சிதெளவின'' (நற். 397). அகராதி நிகண்டில் 'தெளவல்' என்று ஒரு சொல் காணப்படுகின்றது. அதற்குக் கெடுதல் என்று பொருள். இந்நூல் 61 ஆம் நூற்பா வுரையில் 'தெளவை' என்றொரு சொல்லை இளம்பூரணர் காட்டியுள்ளார்'' திரு—அடிகளாசிரியர்.

தெள என்பது 'தவ்' என்பதின் திரிபாகும். தவ்வல் என்பது கெடுதல், தப்புதல் என்னும் பொருளது. தவ்வுதல் என்பது தப்புதல் என வருவது போல தெளவுதல் என்பது தெளப்புதல் என வருவதின்று. ஆதலின் 'தவ்' என்பதே சொல் என அறிய லாம்.

தவ்வை என்பதே தௌவை என எழுதப்பட்டது என்னலாம் என் + அவ்வை = எவ்வை, நும் + அவ்வை = நுவ்வை, தன் + அவ்வை = தவ்வை என வருதலின் 'தவ்வை' என்பதே இயற் சொல் என்க.

* உயிர் ஒள நீங்க மொழியிறுதியில் வரும் எனமுன்னரும் ஒளகாரமும் க் வ் என்பனவற்றோடியையின் இறுதியில் வரும் என இங்கும் உணர்த்தியதாலும் நகர மெய்யுடன் உயிர் இறுதியில் வராது என யாண்டும் விலக்காமையானும் உயிர் எழுத்துகள் நகரத்தொடு கூடி மொழி யிறுதியில் வரும் என்பது பெறப்பட்டது. இது தந்து புணர்ந்துரைத்தல் என்ற உத்தியின் பாற்படும். உள்பொருளல்லாத ஒன்றனை உள்பொருள் போலக் கொணர்ந்து கூட்டி உரைத்தல் அவ்வுத்தி யின் பொருளாம்.

எகர உயிர் மெய்யுடன் ஈறு ஆகாமை,

71. எஎன வரும் உயிர் மெய்யீறு ஆகாது. (38)

ஆ.மொ :

இல.

The vowel 'e' in conjunction with consonants never comes at the end of words.

க.சு.

The vowel e combined with consonant does not occur finally.

பி.இ.நா.

நன். 108. எகரம் மெய்யொடு (ஈறு) ஏலாது

இல. வி. 29. எகரம் மெய்யோடு (ஈறு) ஏலாது.

இளம்பூரணர்

இது எகரம்தானே நின்றவழியன்றி மெய்யோடு கூடி ஈறாகாதென வரையறை கூறுதல் நுதலிற்று.

இ—ள் : எ என வரும் உயிர் — எ என்று சொல்லவரும் உயிர், மெய் ஈறு ஆகாது—தானே ஈறாவதன்றி மெய்யோடு இயைந்து ஈறாகாது.

நச்சினார்க்கினியர்

இஃது எகரந்தானே நின்ற வழியன்றி மெய்யோடு கூடினால் ஈறாகாதென விலக்குகின்றது.

இ—ள் : எ என்று கூறப்படும் உயிர் தானே ஈறாவதன்றி யாண்டும் மெய்களோடு இயைந்து ஈறாகாது ;எ—று.

ஒகரம் நகரமெய் ஒன்றுடன் ஈறாதல்.

72. ஒவ்வும் அற்றே நவ்வலங் கடையே. (39)

ஆ:மொ.

இல.

'O' also plays the same rol eexcept with 'ṉ'

க.சு.

'O' behaves equally except (when preceded by) 'n'.

பி.இ.நா.

நன். 108. ஒ நவ்வொடு (ஈறு) ஆம்

இல. வி. 29. ஒ நவ்வொடு (ஈறு) ஆம்.

இளம்பூரணர்

இதுவும் வரையறை.

இ—ள் : ஒவ்வும் அற்று—ஒகரமும்தானே நின்று ஈறாவ தன்றி மெய்யோடு இயைந்து ஈறாகாது, ந அலங்கடை—நகர மெய்யோடு அல்லாதவிடத்து.

எ—டு : நொ என வரும்.

நச்சினார்க்கினியர்

இது விலக்கும் வரையறையும் கூறுகின்றது.

இ—ள் : ஒகரமும் முன் சொன்ன எகரம்போலத்தானே ஈறாவதன்றி மெய்களோடு இயைந்து ஈறாகாது, நகர வொற் றோடு அல்லாத இடத்தில் ; எ—று.

எ—டு : நொ கொற்றா, 'நொ அலையல் நின் ஆட்டை நீ' என வரும்.

ஏ ஓ ஞகர மெய்யுடன் ஈறு ஆகாமை.

73. ஏ ஓ எனும் உயிர் ஞகாரத்து இல்லை. (40)

ஆ. மொ.

இல.

These vowels *e* and *o* are not found wtth ṉ (at the end of words).

க. சு.

The vowels *e* (and) *o* do not occur with n (finally).

இளம்பூரணர்

இதுவும் வரையறை.

இ—ள் : ஏ ஓ எனும் உயிர் ஞகாரத்து இல்லை —ஏ ஓ என்று சொல்லப்படும் உயிர் (தாமே நின்றும் பிற மெய்களோடு நின்றும் ஈறாவதன்றி) ஞகாரத்தோடு ஈறாவதில்லை.

தாமேயாதல் முன்னே காட்டப்பட்டன (மொழி. 39) பிற மெய்களோடு ஈறாவனவற்றுள் வழக்கிறந்தன ஒழிய இறவாதன வந்த வழிக் கண்டு கொள்க.

நச்சினார்க்கினியர்

இது, சில உயிர் சில உடலோடேறி முடியாதென விலக்கு கின்றது.

இ—ள் : ஏ ஓ என்று கூறப்பட்ட இரண்டு உயிரும் தாமே நின்றும் பிற மெய்களோடு நின்றும் ஈறாதலன்றி ஞகாரத்தோடு ஈறாதல் இல்லை ; எ—று.

எனவே, ஏனை உயிர்கள் ஞகாரத்தோடு ஈறாம் என்றவாறா யிற்று.

எ—டு : உரிஞ உரிஞா, உரிஞி, உரிஞீ, உரிஞு உரிஞூ, இவை எச்சமும் வினைப் பெயரும் பற்றி வரும். அஞ்ஞை, மஞ்ஞை இவை பெயர். ஏனை ஐந்தும் விலக்கப்பட்டன. உரிஞோ என்பது 'கடிசொல் இல்லை' (தொல்—சொல் எச்ச. 56) என்பதனாற் கொள்க.

உ ஊ நகர வகரங்களுடன் ஈறு ஆகாமை.

74. உ ஊ காரம் நவவொடு நவிலா. (41)

ஆ.மொ.

இல.

'u' and ū have no company with ṉ and v (at the end of words) respectively.

க.சு.

U and ū will not be uttered (finally) with v (or) n.

இளம்பூரணர்

இதுவும் வரையறை.

இ—ள்: உ ஊகாரம் நவவொடு நவிலா—உ ஊகாரங்கள் (தாமே நின்றும் பிற மெய்களோடு நின்றும் பயில்வதன்றி) நகர வகரங்களோடு பயிலா.

தாமே யீறாதல் மேலே காட்டப்பட்டன. பிற மெய் களோடு ஈறாமவற்றுள், வழக்கிறந்தன வல்லாதன வந்த வழிக் கண்டு கொள்க. 'நவிலா' என்றதனாற் சிறுபான்மை நொவ்வும் கவ்வும் என (உகரம்) வகரத்தோடு ஈறாதல் கொள்க. இன்னும் இதனானே சிறுபான்மை நகரத்தோடு வரவு உண்டேனும் கொள்க.

நச்சினார்க்கினியர்

இதுவும் அது.

இ—ள்: உகர ஊகாரங்கள் தாமே நின்றும் பிறமெய்களோடு நின்றும் பயில்வதன்றி, நகரவொற்றோடும் வகரவொற்றோடும் பயிலா; எ—று.

எனவே ஏனை உயிர்கள் நகர வகரங்களோடு வருமாயின.

எ—டு: நகரம் 'பொருந' என வினைப் பெயராகியும், நா, நீ, நே எனப் பெயராகியும், நை, நொ, நோ என வியங் கோளாகியும் வரும். 'பொருநை' என்றும் காட்டுப. வகரம், உவ, வே என வியங்கோளாயும், உவா, செவ்வி, வீ, வை எனப் பெயராயும் வரும். ஒருவ, ஒருவா, ஒருவி, ஒருவீ, ஔவை என்றும் காட்டுப. ஈண்டு விலக்காத ஏனை உயிர்களோடு வந்த நகர வகரங்கள் அக்காலத்து வழங்கின என்று கோடும், இவ்விதி யால். இனி 'நவிலா' என்றதனானே வகர உகரம் கதவு துரவு குவவு புணர்வு நுகர்வு நொவ்வு கவ்வு எனப் பயின்று வருதலும் கொள்க.

வேங்கடராகுலு ரெட்டியார்

வரவு, செலவு, 'புன்கண் உடைத்தாற் புணர்வு' என வழக் கினும் செய்யுளினும் உகரவீறாய சொற்கள் உளவாகலின், வகரத்தொடு கூடி உகாரம் ஈறாகாது என்பது பொருந்துவ தன்றால் எனின், அதற்கு விடை:

ஆசிரியர், "இவ்வெழுத்துக்கள் ஈறாகா என்று விதந்தோதி விலக்குதலின், அவர் காலத்தில் வகர உகரவீற்றுச் சொற்கள் இல் என்பது தேற்றம். கனவு, அரவு என்பன போல்வன ஆகார வீற்றனவே அது "குறிதயனிறுதி..." (உயிர்மய 32) என்னுஞ் சூத்திரத்தான் அறியப்படும். இனி, புணர்பு, சார்பு, சேர்பு, சோர்பு, அளபு, தளர்பு எனப் புவ்வீற்றுச் சொற்கள் பிற்காலத்தில் புணர்வு, சார்வு, சேர்வு, சோர்வு, அளவு, தளர்வு என வுவ்வீற்றனவாயும் வழங்குதலின், வுவ்வீற்றனவாகக் காணும் ஏனைய சொற்களும் முற்காலத்தில் புவ்வீற்றனவாய் வழங்கினவையாகும் என்று கோடலே அமைதி.

இவ்வாறு பகரத்தை வகரமாக ஒலிக்கும் இயல்பினானே, வடமொழிச் சொற்களிலும் பகரம் வகரமாக ஒலிக்கலாயிற்று. உதாரணமாக—கோபம்—கோவம், ஆபத்து—ஆவத்து, தபஸ்—தவம், ஆதபன்—ஆதவன், பாதபம்—பாதவம் முதலாயின பல காண்க. இனி, இவ்வுகரம் விகுதியே யாகலின், இதனை ஆசிரியர், சொல்லின் ஈற்றதாகக் கருதினாரல்லர் என்று கொள்ளலும் அமையும்.

ஆசிரியர் நச்சினார்க்கினியர் 'நவிலா' என்றதனானே வகரவுகரம் கதவு, துரவு, குவவு, புணர்வு, நுகர்வு, நொவ்வு, கவ்வு எனப் பயின்று வருதலும் கொள்க' என்றார்.

அரசஞ் சண்முகனார் இச்சூத்திரத்தை நிரல் நிறையாகக் கொண்டு, உகரத்தொடு நகரமும், ஊகாரத்தொடு வகரமும்

வாரா எனப் பொருள் கூறியுள்ளார். (செந்தமிழ் தொகுதி 1. பக் 101) அவ்வாறாயின் நகரம் உகரத்தொடு கூடி வாராமை வேண்டும். ஆகலின் 'பொருநுக் கடிது' என்பதில் உள்ள நுவ்வீறு புணர்ச்சிக்கண் வந்ததாகலின் கொள்ளற் பாலதன்று எனல் வேண்டும்.

சிவலிங்கனார்

சுப்பிரமணிய சாஸ்திரியாரும், வெள்ளை வாரணனாரும் அரசஞ்சண்முகனார் கூறியதையே உடன்பட்டனர். வெங்கடராசுலு ரெட்டியார், 'பொருநுக் கடிதுஎன்பதில் உள்ளது நுவ்வீறு' என்பது பொருந்தாது. பொருந் என்பதே சொல்; அது 'கடிது' என்பதுடன் சேரும்போது உகரமும் வல்லெழுத்தும் பெறும் என்பது விதியாதலின் 'பொருநு' என வந்தது.

ஆசிரியர் தொல்காப்பியரே வரவு தரவு செலவு களவு என்னும் சொற்களை ஆண்டுள்ளார். வேங்கடராசுலு ரெட்டியார் அவை வரபு தரபு செலபு என்று ஆசிரியர்காலத் திருந்திருக்கலாம் எனக் கருதுகிறார்

நூ என்பதை எள் என்னும் பொருளில் சூடாமணி நிகண்டு ஆண்டுள்ளது பிற்கால வழக்கு.

கேரளப் பல்கலைக் கழக விரிவுரையாளர், மா. இளைய பெருமாள் "உச்சகாரம் உப்பகாரம் ஆகியவற்றைப் போன்று குற்றுயிரையடுத்து நகர வகரங்கள் உகர ஊகாரங்களோடு சேர்ந்து தமிழ்ச் சொற்களின் இறுதியில் வருவதில்லை" என்று பொருள் கூறுவர்.*

நு, நூ, வு, வூ இவ்வெழுத்துக்களை இறுதியாக வுடைய சொற்கள் தமிழில் இல்லை என்பது நூற்பாவின் கருத்தாக அமையினும் தரவு வரவு செலவு முதலிய வுகரவீற்றுச் சொற்கள் காணப்படுதலின் இந்நூற்பாவின் கருத்தைப் பலர் பலவாறு கூறினர். வை. தங்கமணி என்பார், இந்நூற்பாவையேற்காமல்,

> **உ ஊ காரம் நவ்வொடு நவிலா**
> **ஊகா ரம்மே வவ்வொடு வாரா**

என்பதுதான் தொல்காப்பிய நூற்பாவாக அமைந்திருத்தல் வேண்டும்; இதுவே முழுமையான கருத்துடையதாகும் எனத்

---

* இளவேனில் தொகுதி 2. பக்கம் 114. இளங்கோ மன்ற வெளியீடு, கேரளப்பல்கலைக் கழகம், திருவனந்தபுரம். (1973)

தாம் எழுதிய (டாக்டர் ஏ. என். பெருமாள் மூலம் அனுப்பி வைத்த) கட்டுரையில் குறிப்பிட்டார். இக்கருத்து அப்படியே ஏற்றுக் கோடற்குரியதாகும்.

'உச்சகாரம் உப்பகாரம் ஆகியவற்றைப் போன்று குற்றுயிரையடுத்து நகர வகரங்கள் உகர ஊகாரங்களோடு சேர்ந்து தமிழ்ச் சொற்களில் இறுதியில் வருவதில்லை' என்று கொள்ளும் பொருளும் ஏற்பதற்கில்லை. ஆசிரியர்

தெவுக்கொளற் பொருட்டே (உரி. 47)

எனத் தெவு என்னும் குற்றுயிரையடுத்த வுகரவீற்று உரிச் சொல்லையாண்டுள்ளார் என்பது நோக்கத்தக்கது.

'உ ஊகாரம் நவவொடு நவிலா' என்பதை நிரல்நிறையாகக் கொண்டால் நூ என்பது இறுதியில் வரும் என்றாகும். நூ இறுதிச் சொல் தமிழில் இல்லை. 'உ ஊகாரம் நவ்வொடு நவிலா' என்பது மட்டில் கொண்டால் வூகார இறுதிச் சொல் உண்டு என்பது பெறப்பட்டுக் குற்றமாம். எனவே தங்கமணி கருத்து மிகப் பொருத்தமாகும்.

சகர உகரம் இரு மொழிக்கு ஈறு ஆதல்.

75. உச்ச காரம் இருமொழிக்கு உரித்தே. (42)

ஆ. மொ.

இல.

'Su' stands at the end of two words only.

க. சு.

There are only two words ending in—cu.

இளம்பூரணர்

இதுவும் ஒரோவழி வரையறை.

இ—ள் : உச்சகாரம் இரு மொழிக்கு உரித்து—உகரத்தோடு கூடிய சகரம் இரு மொழிக்கு அல்லாது (பல மொழிக்கு) ஈறாகாது.

எ—டு : உசு, முசு எனவரும். [1]பசு என்பது ஆரியச் சிதைவு.

சு. வே : 1. பசு என்பதோ எனின் அது

நச்சினார்க்கினியர்

இது சகார உகாரம் பல சொற்கு ஈறாய் வாராது; இரு சொற்கு ஈறாம் என்று வரையறை கூறுகின்றது.

இ—ள்: உகரத்தோடு கூடிய சகாரம் இரண்டு மொழிக்கே ஈறாம்; எ—று.

எனவே பன்மொழிக்கு ஈறாகா என்றவாறாயிற்று. 'உரித்தே' என்னும் ஏகாரம் 'மொழிக்கே' எனக் கூட்டுக.

எ—டு: உசு—இஃது உளுவின் பெயர். முசு—இது குரங்கினுள் ஒரு சாதி. பசு என்பதோ வெனின் அஃது ஆரியச் சிதைவு. கச்சு, குச்சு என்றாற் போல்வன குற்றுகரம். உகரம் ஏறிய சகரம் இரு மொழிக்கு ஈறாம் எனவே ஏனைய உயிர்கள் ஏறிய சகரம் பன்மொழிக்கு ஈறாமாறாயிற்று. உச, உசா, விசி, சே, கச்சை, சோ எனப் பெயராயும், துஞ்ச, எஞ்சா, எஞ்சி, மூசி, மூசு என எச்சமாயும் வரும். அச்சோ என வியப்பாயும் வரும். இன்னும் இவை வழக்கின்கண் பலவாமாறும் உணர்க.

குறிப்பு:

பசு என்பது ஆரியச்சிதைவு என்பதைவிட ஆசிரியர் காலத்தில் வழங்கப்படவில்லை எனக் கூறின் பொருந்தும் என்பர் சுப்பிரமணிய சாஸ்திரியார்.

பகர உகரம் ஒரு மொழிக்கே ஈறு ஆதல்.

76. உப்ப காரம் ஒன்றுஎன மொழிப
இருவயின் நிலையும் பொருட்டு ஆகும்மே. (43)

ஆ. மொ.

இல.

'Pu' stands at the end of one word (only) which gives the double meanings of active and passive voices.

க. சு.

It is said that there is (only) one (occurrence) of - Pu; it will give 'active' or 'causative' meaning.

இளம்பூரணர்

இதுவும் மொழிவரையறையும் மொழியது [1]பொருள்பாடும் உணர்த்துதல் நுதலிற்று.

சு. வே: 1. பொருள் வேறுபாடும்

இ—ள் : உப்பகாரம் ஒன்று என மொழிப—உகரத்தோடு கூடிய பகரம் ஒரு மொழிக்கு ஈறாம் என்று சொல்லுவர், இருவயின் நிலையும் பொருட்டு ஆகும்—அதுதான் தன்வினை பிறவினை என்னும் இரண்டிடத்தும் நிலைபெறும் பொருண்மைத்தாம்.

எ—டு : தபு எனவரும். இது படுத்துச் சொல்ல 'நீ சா' எனத் தன்வினையாம். எடுத்துச் சொல்ல[2] 'நீ ஒன்றனைச் சாவி' எனப் பிறவினையாம்.

நச்சினார்க்கினியர்

இஃது ஒரு சொல் வரையறையும் அஃது ஓசை வேற்றுமை யால் இரு பொருள்தரும் எனவும் கூறுகின்றது.

இ—ள் : உகரத்தோடு கூடிய பகரம் ஒருமொழிக்கல்லது பன்மொழிக்கு ஈறாகாதென்று கூறுவர் புலவர்; அதுதான் தன் வினை பிறவினை என்னும் இரண்டிடத்தும் நிலைபெறும் பொருண்மைத்தாம்; எ—று.

எ—டு : தபு எனவரும். இது படுத்துக்கூற 'நீ சா' வெனத் தன்வினையாம். எடுத்துக் கூற 'நீ ஒன்றனைச் சாவப்பண்' எனப் பிறவினையாம். உப்பு, கப்பு என்றாற் போல்வன குற்றுகரம். உகரத்தோடு கூடிய பகரம் ஒன்றெனவே ஏனை உயிர்களோடு கூடிய பகரம் பன்மொழிக்கு ஈறாய்ப் பல பொருள் தரும் என்றா ராயிற்று. 'மறந்தப துப்பா' என எச்சமாயும், நம்பி, செம்பூ, பே, பொதும்பை எனப் பெயராயும், போ என ஏவலாயும் வரும். இவற்றைப் பிற சொற்களோடும் ஒட்டுக. ஏனை ஈகார பகரம் இடைக்கராய் வழங்கும்.

சுப்பிரமணிய சாஸ்திரியார்

ஈண்டு இருவயின் நிலையும் என்பதற்குத் தன்வினை பிற வினை என்னும் இரண்டிடத்தும் என உரைகாரர்கள் கூறினர். அவ்வாறு பொருள்கொள்ளற்கு,

> "இது செயல் வேண்டும் என்னுங் கிளவி
> இருவயின் நிலையும் பொருட்டா கும்மே
> தன்பா லானும் பிறன்பா லானும்" (சொல். 243)

என்ற சூத்திரமாகும் எனத் தோன்றுகின்றது. அச்சூத்திரப் போக்கை நோக்கின் ஈண்டும், "தன்பாலானும்..." என்ற ஓரடி இருந்திருத்தல் கூடுமோ என்ற ஐயம் உண்டாகின்றது.

2. நீசாவிப்பி

இளம்பூரணர் இதுபடுத்துச் சொல்ல "நீசா எனத் தன்வினை யாம்... பிறவினையாம்" எனக் கூறினர். படுத்துச் சொல்லுதலும் எடுத்துச் சொல்லுதலும் மொழியின் ஒரு பகுதியிலா மொழி முழுவதுமா என ஐயம் உண்டாகிறது. எடுத்தலும் படுத்தலும் உதாத்தம் அநுதாத்தம் என்றவற்றின் பொருளில் வந்தன என்பது பொருத்தமாகத் தோன்றவில்லை (வட மொழியில் உதாத்தம் அநுதாத்தம் இவற்றை ஒலிப்பதுபோல் தமிழ் மொழியில் சொற்களை ஒலித்தல் காணேம்) ஆயினும் வீர சோழிய ஆசிரியரும், பிரயோக விவேகநூலாரும் அவ்வாறு கூறியுள்ளனர்.

குறிப்பு :

இந்நூற்பாவினால் ஆங்கிலத்திற்போல பண்டைத் தமிழி லும் அசையழுத்தம் (Accent) ஒரு சொல்லின் வகையையும் பொருளையும் வேறுபடுத்திற்றென்பதையறியலாம்—பாவாணர்.

ஈறு ஆகா உயிர் மெய் இன்ன வகையில் ஆம் எனல்

77. எஞ்சிய எல்லாம் எஞ்சுதல் இலவே. (44)

ஆ. மொ.

இல.

The remaining will not fail to appear when denoting themselves.

க. சு.

The remaining (vowels) have no restriction.

பி. இ. நூ:

நன் 121. தம் பெயர் மொழியின் முதலும் மயக்கமும்
இம்முறை மாறியும் இயலும் என்ப.
(முதல் எனவே ஈறும் கொள்ளவேண்டும்)

இல. வி. 35. தம் மரபு இசைப்பின் முதல் ஈறு இடைநிலை
அம்மரபு இல்லவும் ஆம்என மொழிப.

இளம்பூரணர்

இது மொழிக்கு ஈறாகா உயிர்மெய்யும் ஒரோவழி ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள் : எஞ்சிய எல்லாம் எஞ்சுதல் இல—மொழிக்கு ஈறாகாது நின்ற உயிர்மெய்கள் எல்லாம் தம் பெயர் கூறும் வழி ஈறாதற்கு ஒழிபு இல.

எஞ்சிய உயிர்மெய்யாவன : ஔகாரம் ககர வகாரங்களை ஒழிந்த மெய்யோ டியைந்த உயிர் மெய்யும், எகரம் எல்லா மெய் யோடும் இயைந்த உயிர்மெய்யும், ஒகரம் நகரம் ஒழிந்த மெய் யோடு இயைந்த உயிர்மெய்யும், ஏகார ஓகாரம் ஞகாரத்தோடு இயைந்த உயிர்மெய்யும், உ ஊகாரம் நகர வகரங்களோடு இயைந்த உயிர்மெய்யும் என இவை.

எ—டு : தம் பெயர்க்கு (ஈறு) ஆமாறு : வௌக் களைந்தார் எனவும், கெக் களைந்தார் எனவும், கொக் களைந்தார் எனவும், ஞேக் களைந்தார் எனவும், ஞோக் களைந்தார் எனவும், நுக் களைந்தார் எனவும், நூக் களைந்தார் எனவும், வுக் களைந்தார் எனவும, வூக் களைந்தார் எனவும் வரும். எல்லாம் என்றதனான், மொழிக்கு ஈறாய் நின்ற உயிர்மெய்களும் தம் பெயர் கூறும் வழியும் ஈறாம் என்று கொள்க. கக் களைந்தார், கா வலிது எனவும், அக் களைந்தார் ஆ வலிது எனவும் இல்வாறே ஒட்டிக் கொள்க. தன்னை உணர நின்ற வழி மொழிகட்கு இது கருவி யாக ஈற்றகத்து முடிவு ஒன்றின முடித்தலாற் கொள்க.

நச்சினார்க்கினியர்

இது முன்னர் மொழிக்கு ஈறாம் என்றவற்றுள் எஞ்சி நின்றன மொழிக்கு ஈறாமாறும் மொழிக்கு ஈறாகா என்றவை தம் பெயர் கூறுங்கால் மொழிக்கு ஈறாமாறும் கூறுகின்றது.

இ—ள் : கவ வொடியையின் (எழு. 70) என்னும் சூத்திரத் தாற் பதினோருயிரும் பதினெட்டு மெய்க் கண்ணும் வந்து மொழிக்கு ஈறாம் என்ற பொது விதியிற் பின்னர் விசேடித்துக் கூறியவற்றை ஒழிந்தனவும் மொழிக்கு ஈறாவதற்கு ஒழி வில ; மொழிக்கு ஈறாகாதென்ற உயிர்மெய்களுந் தம் பெயர் கூறும் வழி ஈறாதற்கு ஒழிவில; எ—று.

எல்லாம் என்றது 'சொல்லின் எச்சம் சொல்லியாங் குணர்த்தல்' என்னும் உத்தி. உம்மை விரிக்க. ஈண்டு எஞ்சிய வென்றது முன்னர் உதாரணங் காட்டிய ஞகரமும் நகரமும் வகரமும் சகரமும் பகரமும் ஒரு மொழிக்கும் ஈறாகாத ஙகரமும் ஒழிந்த பன்னிரண்டு மெய்க்கண்ணும் எகரமும் ஒகரமும் ஔகாரமும் ஒழிந்த ஒன்பதுயிரும் ஏறி மொழிக்கு ஈறாய் வருவனவற்றையென்று உணர்க.

எ—டு : வருக, புகா, விக்கி, புகீ, செரு, புகூ, ஈங்கே, மங்கை, எங்கோ எனவும், கட்ட, கடா, மடி, மடீ, மடு, படூ, படை

எனவும், (இதற்கு ஏகார ஓகாரங்கள் ஏறிவருவன உளவேற் கொள்க). மண்ண, எண்ணா, கண்ணி, உணீ, கணு, நண்ணூ, மண்ணை எனவும் (இதற்கு ஏகார ஓகாரங்கள் ஏறிவருவன உளவேற் கொள்க), அத, புதா, புதி, வதீ, அது, சைதூ, தந்தை, அந்தோ எனவும் (இதற்கு ஏகாரம் ஏறிவருவன உளவேற் கொள்க) கம, நென்மா, அம்மி, மீ, செம்மு, கொண்மூ, யாமை, காத்தும் வம்மோ எனவும் (இதற்கு ஏகாரம் ஏறிவருவன உளவேற் கொள்க) செய, காயா, கொய்யூ, ஐயை, ஐயோ, எனவும் (இதற்கு இகர ஈகார உகர ஏகாரங்கள் ஏறிவருவன உளவேற் கொள்க), வர, தாரா, பரி, குரீ, கரு, வெரூ, நாரை எனவும் (இதற்கு ஏகார ஓகாரங்கள் ஏறிவருவன உளவேற் கொள்க), சில, பலா, வலி, வலீ, வலு, கொல்லூ, வல்லே, கலை எனவும் (இதற்கு ஓகாரம் ஏறிவருவன உளவேற் கொள்க.) தொழ, விழா, நாழி, வழீ, மழு, எழூ, தாழை எனவும் (இதற்கு ஏகார ஓகாரங்கள் ஏறிவருவன உளவேற் கொள்க) உள, உள்ளா, வெள்ளி, குளீ, உளு, எள்ளூ, களை எனவும் (இதற்கு ஏகார ஓகாரங்கள் ஏறி வருவன உள வேற் கொள்க) கற்ற, கற்றா, உறி, உறீ, மறு, உறூ, கற்றை, எற்றோ எனவும் (இதற்கு ஏகாரம் ஏறி வருவன உளவேற்கொள்க) நன, கனா, வன்னி, துனீ, முன்னு, துன்னூ, என்னே, அன்னை, அன்னோ எனவும் வரும். இவற்றுட் பெயராயும் வினையாயும் வருவன உணர்க. இவற்றுட் ககர னகரங்கள் விலக்காத ஒன்பதும் வந்தன. ஆக ஈறு நூற்று நாற்பத்து மூன்றும் உதாரணமில்லாத பதினெட்டும் ஆக நூற்று அறுபத் தொன்று. ஙகரம் மொழிக்கு ஈறாகா தென்பது பெரும் பாண்மையாதலிற் கூறிற்றிலர். இனி ஙகரமும் ஔகாரமும் ஏறாத மெய் பதினைந்தும் எகரமும் ஒகரமும் ஏகாரமும் ஓகார மும் உகரமும் ஊகாரமும் ஏறாத மெய்களும் தம்பெயர் கூறுங் கால் மொழிக்கு ஈறாமாறு; ஙப்பெரிது, சௌ அழகிது, ஞௌ தீது எனவரும். ஏனையவற்றோடும் இவ்வாறே ஒட்டுக. கெக் குறைந்தது, கொத்தீது, ஞெவழகிது. ஞொத்தீது, நுந்நன்று, நூப்பெரிது, வுச்சிறிது, ஊப்பெரிது என எல்லாவற்றையும் இவ்வாறே ஒட்டுக. இன்னும் எல்லாம் என்றதனானே கந்நன்று, ஆ நன்று என மொழிக்கு ஈறாவனவும் தம் பெயர் கூறும் வழி ஆம் என்று கொள்க.

வேங்கடராசுலு ரெட்டியார்

உயிர் ஔ எஞ்சிய என்னும் சூத்திர முதல் இச்சூத்திரம் வரையும் கூறியவாற்றான், மொழிக்கண் ஈற்றில் நிற்கும் எழுத்துக்கள் நூற்றறுபத் தொன்றாகும் அவையாவன;

உயிரெழுத்துக்கள்

எழுத்துவரிகள்	வரும் எழுத்துகள்		நச்சினார்க்கினியருக்கு முன்னர் வழக்கிறந்தவை
உயிர்	வரியில்	11	....
ககர	,,	10	....
சகர	,,	9	....
ஞகர	,,	7	....
டகர	,,	9	டெ, டொ
ணகர	,,	9	ணெ, ணொ
தகர	,,	9	தே
நகர	,,	8	நி
பகர	,,	9	....
மகர	,,	9	மே
யகர	வரியில்	9	யி, யீ, யு, யே.
ரகர	,,	9	ரே, ரோ
லகர	,,	9	லொ
வகர	,,	8	வோ
ழகர	,,	9	ழெ, ழொ
ளகர	,,	9	ளே, ளோ
றகர	,,	9	றெ
னகர	,,	9	....
	ஆக	161	20

இவற்றுள் கௌ, வௌ, நொ, ஞு, பு இவ்வெழுத்துக்கள் ஐந்தொழிய மற்றை நூற்றைம்பத்தாறெழுத்துக்களும் பல மொழிகளில் ஈறாவன என்பது மேலைச் சூத்திரங்களான் அறியப் படும், ஒன்று அல்லது இரண்டு மொழிகளில் மட்டும் ஈறாய் நிற்கும் எழுத்துக்களை ஆசிரியர் விதந்தோதியிருத்தலின். இக்காலத்தில் இவற்றுட் பல எழுத்துக்கள் மொழியீற்றில் வரக் காண்கிலேம். பல எழுத்துக்கள் ஈற்றில் நிற்றலும் அருகிய வழக்காகவே காண்கின்றது. ஆசிரியர் நச்சினார்க்கினியர், உதாரணம் இல்லாத பதினெட்டும் என்று எழுதியிருத்தலின் அவர் காலத்தின் முன்பே பல ஈறுகள் வழக்கிறந்தன என அறியப்படும் (உ ஊ காரம் என்னும் சூத்திரத்தின் உரையில் நி, வோ இவற்றிற்கு உதாரணம் காட்டிற்றிலர். ஆதலின், உதாரணம் இறந்தமை 20 ஆயின).

இச்சூத்திரத்திற்கு 'மொழிக்கு ஈறாகாது நின்ற........ ஈறாதற்கு ஒழிபில' என்றும், 'எல்லாம் என்றதனான்......ஈறாம் என்று கொள்க' என்றும் உரையாசிரியர் உரைத்தார். நச்சினார்க்கினியர், 'எஞ்சியவும் எஞ்சுதலில்; எல்லாம் எஞ்சுதலில்' என்று பிரித்துக் கூட்டி, 'விசேடித்துக் கூறிய...... ஈறாதற்கு ஒழிபில' என்று பொருள் கூறினார். இவ்வாறு பிரித்துக் கூறுதல் வேண்டுவதன்று. 'எஞ்சிய எல்லாம்' என்பதற்கு (விசேடித்துக் கூறாது) 'ஒழிந்தவையெல்லாம்' என்பதே நேரான பொருள். சகர ஞகர நகர வகரங்களோடு இவ்விவ்வுயிர்கள் ஈறாகா என்று விலக்கினாற்போல ஏனை மெய்களுக்கும் கூற வேண்டுதல் முறையாகலின், அம்மெய்யெழுத்துக்களோடு மேல் விலக்கிய எ, ஒ, ஔ ஒழிந்த உயிர்கள் கூடி ஈறாகும் என இச் சூத்திரத்தாற் கூறினார் என்று கோடலே அமைதி. சூத்திரத்துச் சொற் கிடக்கையும் நோக்கற்பாலது. ஆயின், 'மொழிக்கு ஈறாகாதனவும் தம் பெயர் கூறும்வழி ஈறாகும்' என்பதும் உணர்த்தல் வேண்டுமால் எனின், அஃது ஆசிரியர்க்குக் கருத் தாயின், 'முதலாவேன தம் பெயர் முதலும்' என்றாங்கு, 'ஈறாகாதன தம் பெயர்க்கீறாம்' என்று சூத்திரம் செய்திருப்பர். அன்றியும் 'ளஃகான முன்னர்' என்றாற் போல மொழிக்கு முதலாகாதன தம் பெயர் கூறும் வழி முதலாதல் போல மொழிக்கு ஈறாகாதன தம் பெயர்கூற ஈறாகி வருதற்கு ஆட்சியிலது.

குறிப்பு

தம் பெயர் கூறும் வழி மொழிக்கு ஈறாகாதனவும் ஈறாம் என்பதற்குத் தொல்காப்பியத்தில் ஆட்சியில்லையென்றாலும் மொழி முதலில் வராதனவும் தம்பெயர் கூறும் வழி டப்பெரிது என மொழிக்கு முதலாம் என உதாரணம் காட்டுவது போலவே 'பெரிதுடெ' என உதாரணம் காட்டுதல் அமையும் என்னலாம்.

மொழியிறு ஆம் மெய்கள்.

78. ஞணநம னயரல வழள என்னும்
அப்பதி னொன்றே புள்ளி யிறுதி. (45)

ஆ: மொ.

இல.

ñ, ṉ, ṇ, m, n, y, r, l, v, ḻ and ḷ are the only eleven consonants which end words,

க.சு.

Only the eleven consonants ñ, ṇ, n, m, ṉ, y, r, l, v, ḻ, ḷ can occur finally.

பி.இ.நூ.

வீர. 8 : ஈறு மகர ணகரங்கள் தாமும் இடை யினத்தில் ஏறும் வகரம் ஒழிந்து ஐந்தும்...... ஈற்றெழுத்தாம்.

நேமி. 8 : உடல் மென்மையின் மூன்று அயர்வில் இடையினங்கள் ஆறு......மொழி கட்கு ஈறாம்.

நன். 107 : ஞண நமன யரல வழள மெய்......ஈறே.

இல. வி. 28 : ஞண நமன யரல வழள மெய்......ஈறே.

இளம்பூரணர்

இது தனி மெய்களுள் மொழிக்கு ஈறாவன கூறுதல் நுதலிற்று.

இ—ள் : ஞ ண ந ம னயரல வ ழ ள என்னும் அப்பதி னொன்றே—ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள என்று கூறப்பட்ட அப் பதினொன்றுமே, புள்ளியிறுதி—புள்ளிகளில் மொழிக்கு ஈறாவன.

எ—டு : உரிஞ், மண், பொருந், [1]திரும், பொன், வேய், வேர், வேல், தெவ், [2]வீழ், வேள் என வரும். [3]னகாரத்தை ஈற்று வையாது மகரத்தோடு வைத்தது அதன் மயக்க இயைபு நோக்கி என்றுணர்க.

நச்சினார்க்கினியர்

இது முன்னர் உயிர் ஈறாமாறு உணர்த்திப் புள்ளிகளுள் ஈறாவன இவை யென்கின்றது.

இ—ள் : ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள என்று கூறப்பட்ட பதினொன்றுமே புள்ளிகளில் மொழிக்கு ஈறாவன; எ—று.

சு. வே : 1. உரும்
2. வேழ்
3. னகரம்

எ—டு : உரிஞ், மண், பொருந், திரும், பொன், வேய், வேர், வேல், தெவ், வீழ், வேள் எனவரும். ணகாரம் ஈற்றுவையாது மகரத்தோடு வைத்தது வழக்குப் பயிற்சியும் மயக்க இயையும் நோக்கி.

பிறகுறிப்புகள் :

"குற்றியலுகரம் மொழியின் ஈற்றில் நிற்றல், அதன் இலக்கணம் கூறிய சூத்திரத்தால் போந்ததாதலின் ஈண்டுக் கூறினாரல்லர்" என்பர் வேங்கடராசுலு ரெட்டியார்.

"இறுதிவரும் மெல்லெழுத்துக்கள் அனைத்தையும் முதலிலும் இடையெழுத்துக்கள் அனைத்தையும் அதன் பின்னரும் கூறுதல் ஆசிரியர்முறை என்பது புள்ளிமயங் கியலான் நன்கு உணரப்படும்" என்று கூறி மகரத்தோடு ணகரம் வைத்த தற்குக் காரணம் காட்டுவர் சுப்பிரமணிய சாஸ்திரியார்.

நகர மெய் இருமொழிக்கு ஈறாதல்

79. உச்ச காரமொடு நகாரஞ் சிவணும். (46)

ஆ. மொ.

இல.

'n' follows 'su'

க. சு.

'n' agrees with 'cu' (in occurring finally in two words)

இளம்பூரணர்

இதுவும் மொழி வரையறை.

இ—ள் : உச் சகாரமொடு நகாரம் சிவணும்—உகரத்தோடு கூடிய சகாரத்தோடே நகாரம் பொருந்தி அஃது இருமொழிக்கு ஈறாயவாறு போலத் தானும் இருமொழிக்கு ஈறாம்,

எ—டு : பொருந், வெரிந் என வரும்.

நச்சினார்க்கினியர்

இது மேற் பொதுவகையான் ஈறாவனவற்றுள் வரையறைப் படுவது இது என்கின்றது.

இ—ள் : உகரத்தோடு கூடிய சகரம் இருமொழிக்கு ஈறாயவாறு போல நகர ஒற்றும் இருமொழிக்கல்லது ஈறாகாது; எ—று.

எ—டு : பொருந், வெரிந் எனவரும்.

குறிப்பு

"நகாரந் தானும் இருமொழிக்குரித்தே எனச் சூத்திரஞ் செய்யாது இவ்வாறு ஆசிரியர் ஏன் சூத்திரித்தார் எனின், அக்காலத்தில் ஏடு முதலியவற்றில் நூல்கள் எழுதப்பட்டமையானும், பெரும்பான்மையும் படிப்போர் அவற்றை மனப்பாடஞ் செய்தமையானும், அதற்கு முன் உள்ளவற்றையும் பின் உள்ளவற்றையும் ஞாபகப்படுத்திக் கூறும் முறை சிறந்ததெனக் கருதி ஆசிரியர் அவ்வாறு கூறினர் என்க." என்பர் சுப்பிரமணிய சாஸ்திரியார்.

ஞ கார மெய் ஒரு மொழிக்கு ஈறு ஆதல்.

**80. உப்ப காரமொடு ஞகாரையும் அற்றே
அப்பொருள் இரட்டாது இவணை யான. (47)**

ஆ. மொ.

இல.

'n' follows 'pu' but gives no double meanings.

க. சு.

ñ is like 'pu' but (unlike it) has no double meaning.

இளம்பூரணர்

இதுவும் மொழிவரையறை.

இ—ள் : உப் பகாரமொடு ஞகாரையும் அற்று—உகரத்தோடு கூடிய பகரத்தோடு ஞகாரமும் [1]அத்தன்மைத்தாய் ஒருமொழிக்கு [2]ஈறாம், இவணையான அ பொருள் இரட்டாது-[3]இவ்விடத்துத் தன் பொருள் அவ் உப்பகாரம் போல இருபொருள் படாது.

எ—டு : உரிஞ் எனவரும்.

ஞகாரம் ஒரு மொழிக்கு ஈறாதலின் [4]நகரத்தின்பின் கூறப்பட்டது.

சு. வே : 1. அத்தன்மைத்தாம்
2. ஈறாகும்
3. அவ்விடத்து
4. பகரத்தின் (இதுதவறு)

நச்சினார்க்கினியர்

இதுவும் அது.

இ—ள் : உகரத்தோடு கூடிய பகரத்தோடு ஞகரமும் ஒத்து ஒரு மொழிக்கு ஈறாம்; இவ்விடத்து ஞகாரத்தின் கண்ணுன அப்பொருள் பகரம் போல இருபொருட் படாது; எ—று.

எ—டு : உரிஞ் என வரும். ஞகாரம் ஒரு மொழிகு ஈறாகலின் நகரத்தின் பின் கூறினார்.
இவ்வணை என்னும் ஐகாரம் அசை.

வகர மெய் நான்மொழிக்கு ஈறு ஆதல்.

81. வகரக் கிளவி நான்மொழி யீற்றது. (48)

ஆ. மொ.

இல.

'v' stands at the end of four words.

க. சு.

the sound 'v' stands at the end of four words.

இளம்பூரணர்

இதுவும் மொழிவரையறை.

இ—ள் : வகரக் கிளவி நால்மொழி ஈற்றது—வகரமாகிய எழுத்து நான்குமொழி ஈற்றதாம்.

எ—டு : அவ், இவ், உவ், தெவ் எனவரும்.

நச்சினார்க்கினியர்

இதுவுமது.

இ—ள் : வரகமாகிய எழுத்து நான்கு மொழியின் ஈற்ற தாம்; எ—று.

எ—டு : அவ், இவ், உவ், தெவ் எனவரும். கிளவி ஆகுபெயர், எழுத்துக் கிளவியாதற்கு உரித்தாமாதலின்.

வேங்கடராசுலு ரெட்டியார்

நன்னூலாரும் இந்நான்கு மொழிகளைக் கொண்டுள்ளார். ஆயின் வீரசோழிய நூலார்,

ஈறு மகர ணகரங்கள் தாமும் இடையி னத்தில்
ஏறும் வகரம் ஒழிந்தைந்தும் ஈரைந் தெழிலுயிரும்
..
கூறுந் தமிழினுக் கீற்றெழுத் தாமென்பர் கோல்வளையே
(சந்திப். 8)

என்னுங் காரிகையால் உயிர் எழுத்துக்களுள் (எ, ஒ ஒழிந்த) பத்தும், மெல்லெழுத்துக்களுள் ண், ம், ன் இம்மூன்றும், இடை எழுத்துக்களுள் வகரம் ஒழிந்த ஐந்தும் ஈற்றில் நிற்கும் என்று கூறினார். நேமிநாத நூலார்.

"உயிரின்கண் ஒன்பான் உடன் மென்மை யின்மூன்
றயர்வில் இடையினங்கள் ஆறும்—நயனுணர்ந்து

நன்மொழிகட் கீற்றெழுத்தாம் என்றுரைப்பர்......" (நேமி. 8.) என்று கூறியுள்ளார். மெல்லெழுத்துக்களுள் ஞ், ந் இவ்விரண் டனை இருவரும் விலக்கினர். வகரத்தை நேமிநாதம் உடையார் விலக்கிற்றிலர், ஔகாரத்தை வீரசோழியமுடையார் விலக்கிற் றிலர்; ஆயின், அவர் (வீரசோழிய நூலார்) வகரத்தை விலக் கியது அமைவுடையதாகத் தோன்றவில்லை.

லீலா திலகம் என்னும் மலையாள (மணிப்பிரவாள) இலக்கண நூலில்,

'ஓர்ங்நித்யம்'

என்னும் சூத்திரத்தின் விருத்தியில் 'உகாரத்தின் முன் உயிரெழுத்து வந்தால் நியமமாக உகரமே வரும்...மரு + உண்டு = மருவுண்டு, வடுவுண்டு; காண்மூவது 'போவுவதோ வென்ற வாறே' என்று ஓகாரத்தின் முன்னரும் வகரம் வரும். ஆயின், மருவ், வடுவ் என்று வகர வீறாயுள்ள சொற்களே, உண்டு என்பதனொரு சேர்ந்து மருவுண்டு வடுவுண்டு என்றாயின என்ன லாகாதோ எனின், அவ்வாறன்று. அவ் இவ் தெவ் என்று வகர வீற்றுச் சொற்கள் மூன்றேயுள. 'வகரக்கிளவி நான் மொழி யீற்றது' என்ற எழுத்ததிகாரச் சூத்திரத்தில் அவை மாத்திரமே காட்டப்பட்டுள்ளன. அதில் உவ் என்றது பாண்டிய பாஷையில் (செந்தமிழில்)மட்டுமே உளது; பொதுவானதன்று' என்று எழுதி யிருத்தலின் (பழைய) மலையாள மொழியிலும் வகரவீற்றுச் சொற்கள் உண்மை அறியப்படும்.

அவ் இவ் தெவ் என்னுஞ் சொற்கள் தமிழ் இலக்கியங்களில் இன்றும் வழங்குகின்றன. ஆதலின், வீரசோழிய நூலார் வகரம் ஈற்றில் நில்லாது என்றது பொருந்தாமை நன்கு அறியப்படும்.

அஃறிணைக்கண் னகர ஈற்று மொழிகள்

82. **மகரத் தொடர்மொழி மயங்குதல் வரைந்த**
னகரத் தொடர்மொழி ஒன்பஃது என்ப
புகர்அறக் கிளந்த அஃறிணை மேன. **(49)**

ஆ. மொ.

இல.

Linguists say that there are nine words which belong to nauter gender where 'n' will not change place with 'm'.

க.சு.

It is said that there are nine words which belong without doubt to the non-personal gender in which n occurs finally without having the chance of being subtituted by 'm.'

பி. இ. நூ.

வீர. 25. லண ளண மனக்கள்
ஒன்றுக்கொன்று ஆவனவே.

நேமி. 24. வந்து உறழும் மன.

நன், 122. மகர விறுதி அஃறிணைப் பெயரின்
னகரமோடு உறழா நடப்பன உளவே.

இல. வி. 30. னகர இறுதி அஃறிணைப் பெயருள்
மகரமோடு மயங்கி வருவனவும் உளவே

முத்து. 144 அஃறிணைப் பெயர்ச்சொல் இறுதி மகரம்
னகரமாம் ஒரே வழி நாடுங் காலே.

குறிப்பு

இங்குக் குறிப்பிடும் அஃறிணைப் பெயரின் ஈறு னகரம் எனத் தொல்காப்பியம் கூற நன்னூலும் முத்துவீரியமும் மகரம் என்றது காண்க.

எதிர் பொருள் உணர்த்தல் என்றஉத்திற்கு மேற்கோள்
—(தொல். பொருள் 665. பேராசிரியர்)
நன்னூல் நூற்பா 121-ல் மயிலைநாதர் மேற்கோள்.

இளம்பூரணர்

இதுவும் ஒரோவழி மொழிவரையறை.

இ—ள்: புகர் அறக்கிளந்த அஃறிணை மேன—குற்றம் அறச் சொல்லப்பட்ட அஃறிணையிடத்து, மகரத் தொடர்மொழி மயங்குதல் வரைந்த—மகரவீற்றுத் தொடர்மொழியோடு மயங்காதென்று வரையறுக்கப்பட்ட, னகரத் தொடர்மொழி ஒன்பஃ தென்ப—னகரவீற்றுத் தொடர்மொழி ஒன்பதென்று சொல்லுவர்.

எ-டு: நிலன் நிலம், பிலன் பிலம் என்றாற்போல்வன மயங்குவன.

இனி மயங்காதன[1] உகின், செகின், விழன், பயின், அழன், புழன், குயின், கடான், வயான் எனவரும்.

இவற்றுள் திரிபுடையன களைக. ஒன்பஃது என்னும் ஆய்தம் செய்யுள்விகாரம். அஃறிணை என்றது ஈண்டு அஃறிணைப் பெயரினை.

நச்சினார்க்கினியர்

இதுவும் அது, வரையறை கூறுதலின்.

இ—ள்: குற்றமறச் சொல்லப்பட்ட அஃறிணைப் பெயரிடத்து மகரவீற்றுத் தொடர்மொழியோடு மயங்காதென்று வரையறைப் பட்ட னகர வீற்றுத் தொடர்மொழி ஒன்பதென்று கூறுவர் ஆசிரியர்; எ—று.

ஆய்தம் விகாரம்.

எ-டு: எகின், செகின், விழன், பயின், குயின், அழன், புழன், கடான், வயான் எனவரும். எகின் எகினம் என்றாற்போல வேறோர் பெயராய்த் திரிவனவும் சந்தியால் திரிவனவுமாய் ஈற்றுள் திரிபுடையன களைந்து ஒன்பதும் வருமேற் கண்டு கொள்க. நிலம் நிலன், பிலம் பிலன், கலம் கலன், வலம் வலன், உலம் உலன், கடம் கடன், பொலம் பொலன், புலம் புலன், குளம் குளன், வளம் வளன், இத்தொடக்கத்தன தம்முள் மயங்குவன. வட்டம், குட்டம், ஓடம், பாடம் இவை போல்வன மயங்காதன. வரையறை னகரத்தின் மேற் செல்லும். 'மயங்கா' எனவே மயக்கமும் பெற்றாம்.

சு. வே: 1. எகின்

சுப்பிரமணிய சாஸ்திரியார்

(பொருள்) குற்றமறச் சொல்லப்பட்ட அஃறிணைப் பெயருள் மகரவீற்றுத் தொடர்மொழியாக மயங்காத னகர வீற்றுத் தொடர்மொழி ஒன்பது எனக்கூறுவர் (புலவர்)

'இறுதி' என்ற சொல் 78ஆவது சூத்திரத்தினின்று அதிகரிக்கப் பட்டு "மகரத் தொடர்மொழி" "னகரத் தொடர்மொழி" என்ற சொற்களின் மகரம் னகரம் என்றதன் பின்னர்க் கொள்ளப் பட்டது. இச்சூத்திரத்துள் "அஃறிணைமேன" எனப் பொதுப் படக் கூறப்படினும், அஃறிணைப் பெயரினையே கொள்ளல் வேண்டும்" என்றனர் இளம்பூரணர். அவ்வாறு கூறுதற்குக் காரணம் வினைகளின் ஈற்றின் னகாரம் மகாரமாக மயங்கின் ஆடூஉவறி சொல்லினைக் குறிக்காது.

இச்சூத்திரத்தால் அறியக் கிடப்பன சிலவாகும். ஆசிரியர் 'புகரறக்கிளந்த' என்ற அடைமொழியைக் கூறுதலின், அவர் காலத்தே னகரவீற்றுத் தொடர்மொழி மகரவீறாக மிகுதியாக மயங்கிற்று என்பதொன்று. தொடர்மொழி என்றமையின் அவர் காலத்து ஈரெழுத்தொரு மொழியில் அம்மயக்கம் இல்லை என்பது மற்றொன்று. னகரத் தொடர்மொழி மயங்குமேயன்றி மகரத் தொடர்மொழி னகரத் தொடர்மொழியாக மயங்குத லின்று என்பது மூன்றாவது.

நச்சினார்க்கினியத்தில் "வட்டம், குட்டம், ஓடம், பாடம் இவைபோல்வன மயங்காதன. வரையறை னகரத்தின் மேற் செல்லும்" என்ற தொடர் உளது. 'மேற்செல்லு மாகலான்' என்ற பாடம் இருப்பின் பொருள் தெளிவாய்ப் புலப்படும்.

வேங்கடராகலு ரெட்டியரார்

அஃறிணைப் பெயருள் னகரவீற்றுத் தொடர்மொழிகளுள் ஒன்பது பெயர்கள் ஒழிய மற்றைப் பெயர்கள் எல்லாம் மகர வீற்றுத் தொடர்மொழியாய் மயங்கும் என்பது இச்சூத்திரத்தின் பொருள். இதனால், பண்டைக் காலத்தில் அஃறிணையில் தொடர்மொழிப் பெயர்கள் பல னகரவீற்றனவாய் இருந்தன என்பதும், பின்னர் அவற்றை மகரவீறாக வழங்கலாயினர் என்பதும், அவ்வாறு மகரவீறாகக் கொள்ளாமல் விடப் பட்ட பெயர்கள் ஒன்பதே என்பதும் அறியப்படும். அவ் வொன்பது பெயர்கள் எகின், செகின், விழன், பயின், குயின், அழன், புழன், கடான், வயான் என்பன என்றனர் உரையாசிரி யர்கள். ஆயின், இவைபோன்று மகரத்தோடு மயங்காத பெயர்கள்

